BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்
ORU PAPER

Paper - 05 Issue - 108 27 Saturday December 2008

இலவசம்

நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...
**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052




1 Day Service
**Colour Poster மற்றும் Banner உடன் தேவையா ?**
Minimum Quantity அளவு இல்லாமல் வேண்டிய அளவு எண்ணிக்கையில் அச்சிட்டுக்கொள்ளலாம்
தொடர்புகளுக்கு : 077 7274 0876
57, Boundary Road, Walthamstow London, E17 8NQ
CAR TEC Graphics

**SANGAMAM JEWELLERY**
இலவசம்
£500க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
தமிழர்களின் பாரம்பரிய வேலைப்பாட்டை எம் கைவண்ணத்தில் பார்த்து மகிழுங்கள்
OPEN ALL 7 DAYS, 10.00 AM - 7.00 PM.
377A Rayners Lane, Pinner, HA5 5EN Tel: 020 8429 7221

உங்கள் பொன்னான வாழ்வை என்றென்றும் உயர்த்திக் காட்டும் பொன் நகைகளின் மதிப்பை அபி தரும் கவர்ச்சியான நகைகளில் மட்டுமல்ல
**ABI DIAMOND**
சிறந்த தரத்திலும் விலையிலும் நீங்கள் பெற்றுக் கொள்ள எப்போதும் மறவாதீர்கள்!
Tel: 020 8423 0055
305 Northolt Road, South Harrow, HA2 8JA

**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing: Buying and Selling Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration
TOOTING: 10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG Tel: 020 8772 4900
COLLIERS WOOD: 2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

**ABBEY TRAINING.NET**
Off Licence / Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் Personal Licence & Premises Licence எடுத்து தருவோம்
வகுப்புகள் NCPLH Certificate Course Life in the UK
NESS & Co.
Immigration, Conveyancing, Licencing, Family Disputes & Others
Call: S.Thavanessan (NESS)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

**GAITHIRI NATHAN & CO.**
SOLICITOR & COMMISSIONER FOR OATHS
Practising Since 1983 in UK
FOR QUALITY LEGAL SERVICES
- COMMERCIAL & RESIDENTIAL CONVEYANCING
- LIQUOR LICENSING & PLANNING APPLICATIONS
- IMMIGRATION, NATIONALITY, ENTRY CLEARANCE APPLICATIONS, WORK PERMIT & HSMP
- WILLS & PROBATE
- DIVORCE & FAMILY (NON LEGAL AID) & MORE
Aquarius House
87, Ealing Road, Wembley, HA0 4BN
Tel: 02089037217 | 02087951558
Fax: 02089030052 | Emergency:07956124179

**RAJ LAW SOLICITORS**
உங்களுக்கு என்ன இடர் வந்தாலும் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்
This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters
- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal
- Serious Crime, Murder/Attempted Murder
We speak Tamil, French and Creole
Experts in Criminal Defence Service (UK)
M: 07947 641 876
T: 020 8516 7730/020 3133 0000
Trident Business Centre, 89, Bickersteth Road, Tooting Broadway, London SW17 9SH
24 hour police station emergency service

**CLOCKWISE PROPERTY SERVICES**
SALES | LETTINGS | MANAGEMENT | MORTGAGE | INSURANCE
LETTINGS & MANAGEMENT
- Free valuation & Advice
- Legal Documentation
- Full tenent referencing
- Inventory Preparation.
- Regular inspections
- Rental collection.
- Competitive fees
SALES [FREE APPRAISAL]
- Competitive fees
- Friendly service
FINANCIAL SERVICES
- Commercial & Residential
- Remortgage
- Buy to let
- Secured loans
415 B London Road, Mitcham, Surrey CR4 4BJ
E: info@clockwiseproperty.co.uk
W: www.clockwiseproperty.co.uk CALL 020 8646 0891

**FREE Courses @ TR TEC**
Jan2009 முதல் Alperton, Gants Hill & Tooting மூன்று கிளைகளிலும் இலவச
ESOL English, Computers & Computing, Basic Accounting – Classes
AAT Courses-Foundation, Intermediate & Technicians Levels
And 11+ Exam, SATS-KS2, Maths, Accounts Classes
மேலதிக விபரங்களுக்கு
020 8672 4005 | 020 8903 8121
e-mail: admin@trtec.org
aat
TR TEC பயிற்சித்துறையில் 18 ஆண்டுகள் அனுபவமிக்க தமிழர் நிறுவனம்

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்

அனைவருக்கும்

எமது கிறிஸ்மஸ், புதுவருட, தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் மற்றும் அனைத்து விதமான மரக்கறி வகைகள் அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள உங்கள் நினைவில் என்றும் இருக்க வேண்டிய இடம்

**SPICEWAY SUPER MARKET**
**21, 23 KINGSTON ROAD**
**SOUTH WIMBLEDON**
**SW19 1JX**
**TEL : 020 8540 5526**

வாடிக்கையாளர் நலன் கருதி தைப்பொங்ககல் தினம் வரை Spiceway Super Market இல்

மாபெரும் மலிவு விற்பனை !

சகல விதமான மளிகைப் பொருட்கள்
கடல் உணவு வகைகள்
பழங்கள் மரக்கறி வகைகள்
Frozen Foods
(£10 க்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு)

10% விலைக்கழிவு



அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் முந்துங்கள் !

SPICEWAY SUPERMARKET

கருத்துக்களுக்கும் தொடர்புகளுக்கும் : senthuranel@hotmail.co.uk




## தமிழோடு கலக்க வேண்டாம்.

*ஒரு பேப்பர்* (12-12-2008) பார்த்தேன். அட்டைப் படத்தில் ஊரில் ஒரு 'Grand Ma' எனப் போட்டிருந்தது. தமிழ்த் தேசியம் என்பது தமிழ் மண் மீட்புப் போர் மட்டுமல்ல. தமிழ் மொழி, கலை, பண்பாடும் அதில் உள்ளடக்கம். வீணாக தமிழோடு ஆங்கிலத்தையும் வடமொழியையும் கலக்க வேண்டாம்.

*- நக்கீரன், கனடா*

## எள்ளல் என்றாலும் அசத்தல்

புலத் தமிழர்களிடையே தமிழ் மொழிப் பயன்பாடு அருகி வருவதையும் ஆங்கிலக் கலப்பு அதிகரித்து வருவதையும் அட்டைப் பட வசனத்தில் எள்ளல் தொனியில் அழகாய் தந்திருந்தீர்கள்.

சில நாட்களில் உங்கள் அட்டைப்பட வசனங்கள் புரிவதில்லை. அல்லது பொருள் இருப்பதில்லை. ஆனால் கடைசி இதழின் படமும் வசனமும் அருமை

*- நிசாந்தி, வெம்பிளி*

## அறிவிருக்கா?

சென்ற முறை சற்று மாறுதலுக்காகப் பகுதியில் சேயோன் அவர்கள் ஒரு விடயத்தைக் கிளறியிருந்தார்.

அழகாக எழுதப்பட்டிருந்த அந்தக் கட்டுரையின் இறுதியிலே தமிழர்களுக்கு இரண்டு நாடுகள் வேண்டும் என்று குறிப்பிட்டதன் மூலம் சமயோசிதமற்ற முறையிலும் காலத்திற்குத் தேவையற்ற விதத்திலும் அந்தப் பத்தியை முடித்திருக்கிறார்.

தற்போதைய அரசியல் சூழலை மனதிற்கொண்டு ஆக்கங்கள் எழுதப்பட்டால் நல்லதல்லவா?

*- யோகன்*

## தகவல் களஞ்சியம் ஒரு பொக்கிசம்

உமா மஹாலிங்கம் அவர்கள் *ஒரு பேப்பர்* ரில் எழுதும் எல்லாத் தகவல் களஞ்சியங்களும் ஒவ்வொரு பொக்கிசங்கள். தவறாமல் அதை வாசித்துப் பயன்பெறும் வாசகி நான். சென்ற முறை கைகளில் படியும் கணக்கில்லாக் கிருமிகள் வாசித்துப் பெரும் திகில் அடைந்தேன். எத்தனை தரம் நாம் அவசரத்தில் கை கழுவாமல் சாப்பிட்டு அம்மாவிடம் அடி வாங்கி இருப்போம். ஆனால் இன்றைய குழந்தைகள் இவற்றைச் செவிமடுப்பதாக இல்லை.

கை கழுவி விட்டுச் சாப்பிட்டாலே கிருமி தொற்றும் என்றால் கை கழுவாமல் சாப்பிடுபவர்களின் நிலையை நினைக்கவே வயிற்றைக் கலக்குகிறது.

இப்படியான தகவல்களைத் தரும் போது அதற்கான தீர்வையும் தந்தால் இன்னும் நல்லாக இருக்கும்

*- சிந்துஜா, ஸ்காபுரோ*

## ஒபாமா இலங்கையின் ஜனாதிபதியானால் ..

உங்கட கற்பனை நல்லாத்தான் இருக்கு. ஆனால் இது நடக்கிற காரியமா? சிங்கள கிறிஸ்தவரே அங்கு ஜனாதிபதியாக முடியாது இதுக்கிள்ளை இந்தாள் என்னென்டு ஜனாதிபதியாகிறது?

வேணுமெண்டா அவர் பராக் பண்டார நாயக்கா எண்டு தன்ரை பேரை மாத்திக்கொண்டு எல்லாவல மெத்தானந்த தேரையின் காலில் விழுந்தால் நடக்கக் கூடும்.

*- இளங்கோ, ஹரோ*

## லதாவிற்கு வாழ்த்துக்கள்

ஈழத்துக் கவிஞர் லதாவிற்கு சிங்கப்பூரில் இலக்கிய விருது கிடைத்த செய்தியை அறிந்ததில் மகிழ்ச்சி.

இவரைப் போல இலை மறை காயாக இருக்கும் எம் இளம் படைப்பாளிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வாருங்கள்.

*ஒரு பேப்பர்* வாயிலாக எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் லதாவிற்குச் சொல்லும் அதே வேளை மேலும் மேலும் நல்ல படைப்புக்களைத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்

*- சிந்து, பரிஸ்*

## ரகுவை ஏன் மறந்தவையள்?

வழக்கமாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஆட்கள் கொல்லப்பட்டால் லண்டனிலை ஒரு கும்பல் அஞ்சலிக் கூட்டம் நடாத்திறவையள்.

கிழக்கின் விடிவெள்ளிகளிலை ஒன்று, ரீஎம்விபியின் தலைவர் ரகு என்கிறவர் கொல்லப்பட்டு ஒரு மாதமாகிறது. ஆனால் கூட்டம் நடாத்திகிற அசுமாத்தம் ஒன்றையும் காணேல்லை.

வழமையா ஒப்பாரி வைத்து மாரடிக்கிற பிராஜேஸ் பாலா, கூட்டத்திற்கு தலைமை வகிக்கிற பொய்நேசன், சீட்டு சிவலிங்கம், மைக்குக்கு அலையிற கெங்கா இவையள் எல்லாம் என்ன செய்கிறார்கள்? எல்லாரும் இப்ப ரீஎம்விகே க்கு சப்போர்ட் பண்ணியினமா?

*- வாதவூர் திவாகரன்*

## சற்று ஆறுதல்

லண்டன் மாவீரர் தினந் தொடர்பான சேயோனின் ஆக்கம் அபாரம். அதிலும் அன்றைய தினத்துடன் அத்தனையும் முடிந்து விடுமா என்ற அங்கலாய்ப்பு நியாயமானதாகவும் பலரும் சிந்திக்க வேண்டியதாகவும் அமைந்திருந்தது.

இந்த ஆக்கம் தாயகம் குறித்துச் சிந்திப்பவர்களுக்கு கட்டாயம் ஆறுதலாக அமைந்திருக்கும் என்று நம்பலாம்

*- ஹரிகரன், சவுத்ஹோல்*

## அறுவையல்ல அமிர்தம்

இந்தியா ரொம்ம நல்லவங்கப்பா என்ற அறுவைப் பகுதி ஆக்கத்தை வாசித்து ரசித்தேன்.

ஒரு வேண்டுகோள். இந்த ஆக்கத்தை தமிழகத்தில் எமக்காகக் குரல் கொடுக்கும் தலைவர்களின் பார்வைக்குச் சேர்த்து விடுங்கள்.

காரணம் அவர்கள் உரையாற்றும் மேடைகளில் இதனையும் சேர்த்துக் கொள்வார்கள். சில விடயங்களை நகைச்சுவை கலந்து சொல்லும் போது மக்களும் ஏற்றுக் கொள்வார்கள்

*- சேகர், ரூட்டிங்*

## அந்த நாள் ஞாபகம்

ஊரின் வாசம் நம்மையெல்லாம் ஊருக்கே அழைத்துச் சென்று பசுமையான நினைவுகளை அப்படியே நம் மனக்கண் முன் கொண்டுவருகிறது.

திருக்கார்த்திகை விளக்கீடு பற்றியும் பந்தம் கொளுத்தியது பற்றியும் வீட்டு வாசலில் வாழைக் குற்றியில் தீபம் ஏற்றியது பற்றியும் எழுதி எம்மை அந்த நாள் ஞாபகத்தில் மிதக்க வைத்து விட்டார்.

*- விசாகன், ஒட்டாவா*

*ஒரு பேப்பர்* தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் **020 7043 4314**.

ஆ—ர்



வாசகர் கடிதம்

# துன்பத்தில் சிரிக்காதீர்

தங்கள் பத்திரிகையில் வெளிவந்துள்ள மும்பை தாக்குதல் பற்றிய செய்திகள் படித்தோம். அதிர்ச்சி அடைந்தோம். பொதுமக்கள் இறந்ததை உங்களது எழுத்தாளர்கள் கேலிச் சித்திரமாகப் படைத்திருக்கிறார்கள். அதை நீங்களும் பதித்து உள்ளீர்கள். வெட்கப்பட வேண்டிய காரியம் இது.

எவ்வளவு அடிச்சாலும் தாங்குவதற்கு உரிய சக்தி எங்களிடம் இருப்பது குறித்து தாங்கள் நினைவுபடுத்தியதற்கு நன்றி. நாங்கள் அஹிம்சாவாதிகள். தாங்குவோம். ஜெயிப்பது மட்டும் எங்கள் இலக்கு. அஹிம்சை எங்கள் தாரக மந்திரம். சுதந்திரம் பெற்றுத் தந்த அரசியல் தந்திரம்.

தீவிரவாதம் என்றும் ஜெயிப்பதில்லை என்பதை உலகறியும். இந்தியா மட்டுமல்ல மிகப்பெரிய நாடுகள் முதல் மிகச் சிறிய நாடுகள் வரை தீவிரவாதப் பிரச்சினைகளை எதிர்கொண்டு தான் வருகின்றன.

தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். தருமம் மறுபடி வெல்லும். ஒரு நாள் வெள்ளைப் பூக்கள் மலரும் என்பதில் ஐயமில்லை. எனவே எழுதுவதில், சிந்தனையின் போக்கைத் தவற விடாதீர்கள். வெள்ளைப் பூக்கள் மலர நீர் ஊற்றாவிடினும் வேர் பறிக்காதீர்கள்.

*- துரை தம்பிராசன்*

# ஆப்பிழுத்த குரங்கின் நிலை

சிறிலங்காவின் அரசியலில் சென்ற வாரம் பரவலாகப் பேசப்பட்ட விடயம் உயர்நீதிமன்றத்திற்கும் அரசிற்கும் இடையிலான அதிகாரப் போட்டியாகும்.

எரிபொருளின் விலையை உடனடியாகக் குறைக்கும் படி உயர் நீதிமன்றம் விடுத்த அறிவிப்பை இதுவரை தட்டிக் கழித்து வரும் மஹிந்த அரசு அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து குழப்பமான நிலையில் இருப்பதாகத் தெரிகிறது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பைப் புறந்தள்ளி விட்டு பாராளுமன்றத்திற்கே சட்டவாக்கல் அதிகாரங்கள் இருக்கின்றன என்று வாதிடுவதற்கும் அவர்கள் தயாராகி விட்டார்கள்.

இந்த நேரத்தில் சில காலங்களுக்கு முன்னர் கொழும்பு அரசியலில் நடந்தேறிய ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கும்படி உயர்நீதிமன்றம் ஒரு உத்தரவைப் பிறப்பித்ததைத் தொடர்ந்து கண்மூடித் திறப்பதற்குள்ளாகவே அவ்வாறு செய்யப்பட்டு கிழக்கு மாகாணத்திற்கு தனியாக ஆளுநரும் நியமிக்கப்பட்டார்

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய இன்று முன்னாளாகிப் போன அன்னாள் அமைச்சர் பெர்னாண்டோ பிள்ளை உயர்நீதிமன்ற முடிவிற்கு எதிராக எம்மால் எதுவும் செய்ய முடியாது என்று கையை விரித்தார்.

அப்படியானால் இன்று மட்டும் எப்படி அரசாங்கத்தால் உயர்நீதிமன்ற உத்தரவை மீற முடிந்தது?

*- கலையரசன்*







# Natural Herbal Medicine

**GURUJI**

**S.L SAHADEVA RAJA (KANNAN)**

ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியசாலை கைநாடி பார்த்து உங்கள் சகலவிதமான நோய்களையும் இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்து வைக்கப்படும்.

நாடி பிடித்துப்பார்த்தல் **இலவசம்**

இந்தியாவில் 8 தலைமுறையாக வைத்தியம் செய்தவர்கள் இப்போது லண்டனிலும் ! சந்தர்ப்பத்தை தவற விடாதீர் !!

ஆஸ்த்மா, தோல்வியாதி, புற்றுநோய், நீரிழிவு, இரத்த அலர்ஜி, மாதவிடாய்ப் பிரச்சினை, குடற்புண், மூலநோய், முடி உதிர்தல், மூட்டு நோ, தலைவலி, பக்கவாதம், நரம்பியல், ஞாபகமறதி, தும்மல், அலர்ஜி, எக்சிமா, பயம் மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும் இயற்கை மூலிகை வைத்தியப்படி பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியம் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்

Come and meet the Group Leader tribalAdivasi Herbal Medical practitioner and get relief from all kinds of diseases,illness diagnoised only by pulse reading,Giving wonderfull natural herbal treatment,Also Herbal Treatment for mor than 360 kinds diseases with out any side effects Asthma, Allergy, Diabetes, Arthritis (Join Pain), Fear, Memory Loss, Menstrual Problem, Ulcer, Dermatitis, All Type Piles, Kidney Stone, Cancer, Paralysis, Neuropathy, Nerous Weakness, Hair Fall, Ezema , Blood Allergy ,Headaches .

Evershine Dry Cleaner (Upstairs) 123 Mitcham Road, Tooting, London, SW17 9PE Near By Tesco

**MOB: 07918 995 631 & 07529 400 523**

ஒரு பேப்பர்
ORU PAPER

SATURDAY, DECEMBER 27, 2008, ISSUE 108

## சவால்களை எதிர்கொள்வோம்!

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில், தாம் சிறிலங்கா அரசுக்கு ஆதரவு தெரிவித்து வருவதாக, பிரித்தானிய வெளிவிவகார துணை அமைச்சர் பில் ரம்மல் தெரிவித்திருக்கிறார். பிரித்தானிய பாராளுமன்றத்தில், இலங்கைத் தீவில் இடம்பெறும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான விவாதத்தில், உரையாற்றிய அவர், விடுதலைப் புலிகள் மனிதவுரிமை மீறல்களைப் புரிந்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் அவர் சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதவுரிமை மீறல்கள் பற்றி, எதுவும் தெரிவிக்கவில்லை.

உள்நாட்டில் பயங்கரவாதத்தை முறியடிக்கிறோம் என்ற போர்வையில், முழு அளவிலான இனவழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் சிறிலங்கா அரசினை தட்டிக்கொடுப்பதாக அவரது உரை அமைந்துள்ளது. போரில் சிறிலங்கா அரசு வென்றுவிடும் என்ற நம்பிக்கையும் அந்த உரையில் வெளிப்பட்டது. அமைச்சர் தரத்திலுள்ள ஒருவர் என்கிற வகையில் திரு. ரம்மலின் கருத்துக்களை, பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்பாடாக எடுத்துக் கொள்ள முடியும். கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக் அவர்களும், இது போன்ற கருத்துக்களை தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.

நீண்ட காலமாகவே, சிறிலங்கா அரசுக்கு, உலக, பிராந்திய வல்லரசுகள் ஆதரவளித்து வந்துள்ளபோதும், இப்போது தமது ஆதரவினை வெளிப்படையாகவே தெரிவித்து வருகிறார்கள். இது ஈழத்தமிழ் மக்களின் உளவுரனை உடைக்கிற செயற்பாடே தவிர வேறெதுவுமில்லை. வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள் நேரடியாக போர்முனைக்கு சென்று அவதானிப்புகளை மேற்கொள்வது போன்ற செய்திகளை பகிரங்கப்படுத்துவதனையும் இதன் தொடர்ச்சியாகவே கருத வேண்டியுள்ளது.

அறம்சார்ந்த வெளிநாட்டுக் கொள்கைகளை பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் இந்நாடுகள், சிறிலங்கா அரசிற்கு இராணுவ உதவிகளை, வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் வழங்கி வருகின்றன. இதனால் எமது தேசிய விடுதலைப் போராட்டம் பல பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. இருப்பினும் இந்நிலையை நன்கு உணர்ந்?துகொண்ட எமது மக்கள், தமது அபிலாசையை அடைந்துவிடுவதில், முன்னரைவிட உறுதியானவர்களாக இருக்கிறார்கள்.

சிறிலங்கா அரசாங்கம் குறித்த இலக்கை அடைய முடியாமல் திண்டாடும் இன்றய நிலையில், அதன் ஆதரவு சக்திகள், புத்தாண்டிலும், எம்மீது மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடும், எனினும் அவற்றை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள தயாராவோம்!

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*இவ்வாண்டின் இறுதிப் பேப்பரில் சந்திக்கிறோம். இருந்தாலும் அதுக்கிள்ளை வருசம் முடிஞ்சிட்டுது என்று ஆச்சரியப்பட்டு, ஆண்டு முழுக்க நடந்ததுகளைப் பற்றி அறுக்காமல் விசயத்திற்கு வருவம்.*

*கடந்த பேப்பரின் அட்டையிலிருந்த வாசகங்கள் அந்த மாதிரியிருந்தது. எப்பிடி இந்த ஐடியாக்கள் உங்களுக்கு வருகுதோ எனப் பலர் தொலைபேசியிலும், மின்னஞ்சலிலும் ஆச்சரியம் தெரிவித்தனர். மகிழ்ச்சியாய் இருந்தம். ஆனால், ஒரு சிலர் அதிலை இருந்த 'Grand Ma' என்ற இங்கிலிஸ் சொல்லை பாத்திட்டு, நாங்கள் தமிழை அழிக்கிறம் எண்டு பிழை கண்டு பிடிச்சிருக்கினம். நாங்கள் இப்பிடி சில இங்கிலிஸ் சொற்களை கலக்கிறது வழக்கம்தான். இதிலை பெருமையாய் சொல்லிறதுக்கு ஒண்டுமில்லை, எங்களுக்கு தெரிஞ்சது அவ்வளவுதான்.*

*ஆனால் அந்த அட்டைப் படம் மூலம் சொல்ல வந்த விசயத்தை சரியா விளங்கிக் கொள்ளாமல், எங்கடை நெத்திக் கண்ணை திறந்தாலும் (அப்பிடி ஒண்டு எங்களிட்டை இல்லை எண்டது இவைக்கு எங்க தெரியப்போகுது), குற்றம் குற்றமே எண்டு முழங்கித் தள்ளியிருக்கிறார்கள்.*

*இளசுகளுக்காக இரண்டு பக்கங்களை அடுத்த பேப்பரிலிருந்து மீண்டும் சேர்த்துக் கொள்ளலாம் என இருக்கிறம். உங்களது ஆக்கங்களை உரிய நேரத்திற்கு அனுப்பி வைச்சு அந்த பக்கங்களுக்கான ஆசிரியர்களை ஊக்கப்படுத்துங்கோ.*

*முன்பு குறிப்பிட்டதுபோல், 'ஒரு விழா' வினையும் அது தொடர்பான போட்டியளையும் இந்த வருசம் நடாத்த முடியேல்லை. அடுத்த வருசம் பார்ப்பம் போட்டியளுக்காக நீங்கள் அனுப்பிய ஆக்கங்களை மீளப்பெற விரும்பினால் எங்களுக்கு அறியத் தாருங்கோ. இதாலை உங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்திறம்.*

*இது விடுமுறைகாலம், ஊரின் நினைவுகள் வாட்டினாலும், ஏதோ முடிஞ்சளவு மகிழ்ச்சியாய் கொண்டாடுங்கோ. நாங்களும் விடுமுறை எடுக்க இருக்கிறம். அதாலை பணியகத் தொலைபேசியை புதுவருசம் வரைக்கும் தூக்க மாட்டம். அடுத்த பேப்பர் ஜனவரி 9ம் திகதி வெளிவரும்.*

*பொருளாதார சரிவுகளுக்கு மத்தியில், விளம்பரங்களை தந்து, பேப்பரை தொடர்ந்து வெளியிட உதவிவரும் வர்த்தக நண்பர்களுக்கும், வாசக அன்பர்களுக்கும், ஒரு பேப்பர் குடும்பத்தின் சார்பில் விடுமுறை கால வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ளிறம்.*

*பின்ன பிறகு சந்திப்பம்*

*ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்*

# Eastern Mirage

Few months ago the Government of Sri Lanka claimed to have liberated the Tamil East from the "clutches of the barbaric terrorists" and promised a peaceful and prosperous future for the people there. Everyone from American diplomats to Indian journalists predicted the demise of Tamil nationalism, end of violence and tranquillity in the East.

What has happened to this "Eastern Resurgence" (or Neganahira Navodaya, the officially spun Sinhalese word)?

According to most independent observers and researchers things have got worse during the last three months. According to a local Non Governmental Organisation (NGO), freedom of movement for Tamil civilians is as worse as previous war years. This particular NGO is scared to officially publish its report because doing so will result in the unofficial closure of its operations by the Sri Lankan authorities or even worse.

We received its report however and one of the striking points in this report, is the arbitrary nature of the way the East is run. Let us look at some of the high lights.

## Standing prohibitions

* Tamils from the Vanni are unofficially forbidden to stay in the East.

* Tamils are forbidden to enter areas of state aided Sinhalese colonisation areas such as Dehiwatte.

* Tamils are forbidden to enter Trincomalee through Vaakarai-Moothoor area.

* Tamils are forbidden to enter their farmlands along Tharavai-Vadamunai (rich farmland area that lies in the Batticaloa hinterland).

Tamils from the Vanni are unofficially forbidden to stay in the East.

* Tamils are forbidden to enter any villages, lands and beaches along the 'high security zones' (not just inside 'high security zones').

* Tamils who are not residents of the villages and towns of the coastal area of Batticaloa, are forbidden from overnight stays there.

* Tamils are forbidden to enter the 'historical Buddhist' areas (even if their own lands are inside these areas).

* Tamils are forbidden to enter government administrative sites such as local courts, in a vehicle.

* Children under age 16 are forbidden to leave the majority of Tamil villages without a special identity card and parental escort.

* Tamils with permits to leave the East are forbidden to use the crossings used by Sinhalese.

* Tamils of Batticaloa hinterlands are forbidden to transfer merchandise and cargo through internal checkpoints to Ampara.

## Periodic prohibitions

* Residents of the Batticaloa hinterland and the refugee camps are forbidden to travel to the rest of the East and the South.

* People of a certain age group – mainly men from the age of 16 to 40 – are forbidden to leave the refugee camps at all at night.

## Travel permits required

* An identity card.

* A special permit by the military authorities.

* A permit for medical treatment in Southern hospitals (The applicant must produce an invitation from the hospital, his complete medical background, and proof that the treatment he is seeking cannot be provided in the hospitals in the East).

* A special military issued travel permit to pass through Vaakarai checkpoints.

* A merchant's permit to transfer goods.

* A permit to farm in Vaakarai requires a form from the land registry office, a title deed, and proof of first-degree relations to the registered property owner.

* A special identity card for children under 16.

* A special identity card issued by the Sri Lankan Navy for fishing.

## Checkpoints and barriers

* There are more than a hundred manned military and paramilitary checkpoints in and around Batticaloa municipality area alone.

* There are on average a hundred mobile checkpoints a week along Kalmunai-Trincomalee road.

* There are five hundred obstacles placed between roads and villages, including concrete cubes, earth ramparts, iron gates, and more than thirty kilometers of fences along main roads.

Main roads closed to Tamil civilians, officially or in practice

* Vaakarai- Moothoor Road in more than twenty places.

* Chenkalady- Badulla road in more than twenty places.

* All the roads to State aided Sinhalese settlement areas.

Soapart from severe restrictions on freedom of movement, rampant killings of civilians, arbitrary arrests and disappearances of Tamil civilians the East is 'resurging'. It is good news. Isn't it?

Let's refresh our memory. It all started February 2008, when the Sri Lankan President promised to remove restrictions on freedom of movement "I intend to personally supervise it," he told reporters, "so that the civilians would feel the relief". This lofty plan was quietly dropped the next day when the military authorities in the East opposed the plan to dismantle military checkpoints.

The International Community tells us that Sri Lanka is an example of a liberal democracy worth preserving. But in a democracy, the government sets the policy, the army carries it out. In other kinds of regimes, the army sets the policy, the government nods. So which regime is Sri Lanka's really?

For the Tamils living in the East of Sri Lanka and outside the whole 'resurgence of East' is nothing but a lie? The much abused Eastern Tamils haven't felt any relief whatsoever, but have been cynically cheated once again.

# இன அழிப்பின் உச்சத்தை மூடி மறைக்கும் எத்தனங்கள்

உதயன்

## ஆசிரியர் தலையங்கம்

'இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகின்றனர் எனக் கூறப்படுவதில் எந்தவித உண்மையுமில்லை.'

- இவ்வாறு மலேசியாவில் போய் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் ஜே. வி. பியின் எம்.பியும் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரன்.

இலங்கையின் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தும் மேலாண்மைத் திமிரிலும் பௌத்த - சிங்களப் பேரினவாத மமதையிலும் மிதக்கும் ஒரு கட்சியின் முந்தானையில் தொங்கிக் கொண்டிருப்பவரிடம் - அவர் தம்மையும் ஒரு தமிழனாக அடையாளப்படுத்திக் கொண்டாலும் கூட - இத்தகைய கருத்தைத்தான் எதிர்பார்க்க முடியும்.

பேரினவாதத்தினால் பெரும் இனவழிப்பை எதிர்கொண்டு, வரலாற்றில் மிகவும் மோசமான அழிவுகளை சந்தித்தபடி, சொல்லொணாத் துன்ப, துயரங்களில் சிக்குண்டு துவண்டுபோய்க் கிடக்கின்றது ஈழத் தமிழினம்.

'இந்த நாட்டின் வரலாற்றிலேயே இப்போதைய மஹிந்த அரசைப் போல கொடுமையான - கொடூரமான - அரசைத் தமிழர்கள் சந்தித்ததேயில்லை' - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் கூறுகின்றமை போன்று பேரழிவு நாசங்களை இந்த அரசின் கைகளில் சிக்கித் தமிழினம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால்,ஜே.வி.பியின் எம்.பியான சந்திரசேகரனோ மலேசியாவுக்குப் போயிருந்து கொண்டு, இலங்கையில் தமிழருக்கு எதிராக இனப்படுகொலை நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை என்று நியாயம் பிளக்கின்றார்.

'இனவழிப்பு' என்பது வெறுமனே இனம் சார்ந்த மக்களைக் கொன்றொழிப்பது மட்டுமல்ல. அந்த இனம் தனித்துவமான தேசமாக - தேசியமாக - தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான அடிப்படைக் கட்டுமானங்களை இலக்குவைத்து அழிப்பதையும் கூட அது உள்ளடக்கும்.

**இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுகின்றமையைத் தாங்க முடியாமல் தமிழகம் இன்று கொதித்துக் கொந்தளித்து, கிளர்ச்சியுற்று நிற்கின்றது. தமிழகம் எங்கும் எழுச்சிகள், எதிர்வினைகள் பெருகியுள்ளன.**

பௌத்த - சிங்களப் பேரினவாத அரச ஒடுக்குமுறை, இலங்கைத் தீவில் தமிழர்கள் ஒன்றுபட்ட ஒரு தேசியக் கட்டமைப்பாக விளங்குவதற்கு அடிப்படையாக உள்ள ஒவ்வொரு ஆதாரத்தையும் இலக்கு வைத்துத் தாக்கி அழித்து வருகின்றது.

மொழி உரிமை, கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை, தாயகத் தனித்துவத்தைப் பேணும் நில உரிமை, பொருளாதாரத்தைப் பேணும் உரிமை என்று ஒவ்வொன்றாகப் பறித்து வந்த அடக்குமுறை நடவடிக்கை இன்று தமிழர்களின் வாழ்வியல் உரிமைகளையே கேள்விக்கு உள்ளாக்கி அவர்களைப் பேரவலப்பட வைத்திருக்கின்றது.

இப்படிப் பல்பரிமாண அரச ஒடுக்குமுறையின் விளைவாக இலங்கைத் தீவில் தனித்துவமான தேசிய இனம் என்ற தனது அடையாளத்தைப் பறிகொடுத்துப் பரிதவிக்கும் அளவுக்குத் தமிழினம் சிதறி, நலிவுற்று, தள்ளாடுகின்றபோது, தன்னைத் தமிழர் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இலங்கையில் இனப்படுகொலையோ அல்லது இனவழிப்போ இடம்பெறவேயில்லை என்று வாதிப்பது வேதனைக்குரியது.

பேரினவாதக் கட்சி ஒன்றின் முந்தானையில் தொங்கிக்கொண்டு - ஒட்டிக் கொண்டு - அரசியல் நடத்தும் ஒருவரிடமிருந்து இதைத்தான் எதிர்பார்க்க முடியும். இப்படியான கூற்றைத்தான் நாம் செவிமடுக்க முடியும்.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுகின்றமையைத் தாங்க முடியாமல் தமிழகம் இன்று கொதித்துக் கொந்தளித்து, கிளர்ச்சியுற்று நிற்கின்றது. தமிழகம் எங்கும் எழுச்சிகள், எதிர்வினைகள் பெருகியுள்ளன.

தமிழகத்தில் அரசியல்வாதிகள் மட்டுமல்லர், சமூகத்தின் சகல அங்கங்களைச் சேர்ந்தவர்களும் இலங்கையில் அவலப்படும் தங்களின் இரத்த உறவுகளுக்காக வீறுகொண்டு நிற்கின்றனர்.

நடிகர்கள், கலைஞர்கள், வர்த்தகர்கள், வசதியுள்ளவர்கள் என்றுமட்டுமல்ல - சிறையில் உள்ள கைதிகள், ஏழைகள், அரவாணிகள், வலது குறைந்தோர் என சமூகத்தின் சகல மட்டங்களைச் சேர்ந்தோரும் - ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகத்தில் கொதித்தெழுந்து தமது உணர்ச்சிப் பிரவாகத்தை வெளிப்படையாகக் காட்டுகின்ற சூழ்நிலையில், தம்மை இந்திய வம்சாவளிப் பிரஜை என அறிமுகப்படுத்திக் கொண்டே ஈழத் தமிழர்களின் அவல நிலையை மூடி மறைக்கும் விதத்தில் - அவர்கள் இனப்படுகொலை ஆபத்தில் இல்லை என்று சந்திரசேகரன் எம்.பி. கூறுகின்றமை வேதனைக்குரியதே.

புலிகளுக்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையே இலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. அரச கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் வகைதொகையின்றி இடம்பெறும் காணாமல் போதல்கள், கடத்தல்கள், சட்ட விரோதப் படுகொலைகளில் இருந்து - வன்னியில் வல்வளைப்புக்குள் சிக்கியிருக்கும் தமிழர்களுக்கு எதிரான பொருளாதாரத் தடை முதல் அப்பிரதேசங்கள் மீது நடத்தப்படும் கண்மூடித்தனமான யுத்தத் தாக்குதல்கள் வரை - அனைத்துக் கொடூரங்களுமே தமிழினத்துக்கு எதிரான இனவழிப்புச் செயற்பாடுகளின் அங்கங்களே. இதனைப் பேரினவாதிகளுக்கு காவடி தூக்கும் அரசியல்வாதிகள் தமது வாய்ச்சவடால் மூலம் மூடி மறைத்து விட முடியாது.

பழையன கழியட்டும்

புதியன பிறக்கட்டும்

தமிழீழம் வாழ்விலே

புத்தொளி பரவட்டும்

OBITUARY

# Maampalam Swamy, an Eelam Patriot



By: Usha S Sri-Skanda-Rajah

It is with a deep sense of loss and sadness that we mourn the sudden passing away of a great Eelam patriot Maampalam Swamy in New Jersey, USA on 14, December 2008. A passionate advocate of peace, freedom and dignity, he worked indefatigably to bring to the forefront the prolonged pain and suffering of his people in Tamil Eelam and to draw international attention to the genocide in Sri Lanka. He was a committed humanist first and his compassion extended to all humanity. He will remain a legendry figure to his people, the people he had helped to uplift.

Whilst studying Theology in India he worked to improve the quality of life of the poorest of the poor in Tamil Nadu. Fondly referred to as Kulanthai (Baby) Swamy he is still remembered with much affection and gratitude there, his photo adorning the homes of the many people he had helped. When he visited the area after 35 years the whole village was ecstatic, giving him a rousing reception that showed that they never forgot.

He was proud of his Tamil heritage. While as an assistant parish priest in the church of "Our Lady of Refuge" in Jaffna he was one of the pioneers in the Catholic Church who celebrated the "Pongal Festival" held annually in mid January as a "Tamil Festival" integrating this very Tamil custom and tradition into the Tamil Christian way of life. The "Pongal Festival" has now been accepted and adopted as the "Tamil New Year" in Tamil Nadu by all Tamils regardless of their religious background.

He strived to erase the pernicious practice of class and caste divisions prevailing among Tamils. By encouraging all youth to work together through sports and other activities he helped to break these barriers in the Catholic Church where normally separate pews were allocated to the high caste "elite".

When serving in the Mannar district under the government's land alienation scheme for educated youth he not only helped both educated young men and women to obtain land but also under a "youth cooperative scheme" he arranged for them to learn agriculture and farming methods to help cultivate the land and was instrumental in improving the lot of Tamil youth.

In 1977 with government help he helped settle internally displaced plantation workers affected by the pogrom against Tamils in a purpose built village which he helped to create called "Valan Nakar" complete with medical and transport facilities enabling them to live in a peaceful and secure environment.

Maampalam Swamy believed in preserving the Tamil identity for posterity and as an eloquent speaker he clearly articulated these thoughts and ideas effectively. His charismatic personality and sincerity of purpose won him the respect and veneration of the Tamil people. He was committed to democracy and non-violence and was a strong proponent of the concept of the right to self-determination for Eelam Tamils, actively championing the cause of Eelam independence.

While living in the US Maampalam Swamy became a prolific writer, poet and lyricist, his writings were based on the Tamil language, the Tamil freedom struggle and its history. He wrote "Azham Vizhuthugal" and "Maampookal" and wrote the lyrics and produced the song "Vedda Vedda Thazhaikum" in memory of tsunami victims. As a testament to the love he had for his people and to their freedom he recently released a CD named 'Viduthalaiyin Vasalil" (at the gateway of freedom) and was in the midst of writing another book at the time of his untimely demise.

Maampalam Swamy returned to Sri Lanka and to his native Tamil Eelam in the aftermath of the tsunami in December 2004. He served in the worst affected areas, providing counselling and relief to people traumatized by the effects of decades of war and by a massive South Asian tsunami that directly hit the island of Sri Lanka from the East causing maximum devastation to Tamil areas. Since the promised massive international humanitarian aid was not reaching the worst affected people of the North and East, he worked ceaselessly upon his return to the US to ensure that any humanitarian aid, he and others secured from the Tamil Diaspora reached the actual victims.

A man of compassion and peace equally concerned for the welfare of both the Tamils and Sinhalese he was deeply troubled by the war in his native Tamil Eelam.

He will be sorely missed by not only Eelam Tamils all over the world but others he has touched and inspired just simply in his daily life.

His life's work will serve as a beacon of light for all freedom activists and humanists alike.

ஒரு பேப்பர் ORU PAPER

**ஒரு பேப்பர்**
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

*ஆசிரியர் குழு:*
*பிரித்தானியா*
**சேயோன் - அ.இரவி**
**அகிலன் - மயூரன்**

*கனடா*
**தயா - மணி**

*பிரான்ஸ்*
**சிறி**

*ஜேர்மனி*
**சபேசன் - சாந்தி**

*சுவிஸ்*
**சயந்தன்**

*பொறுப்பாசிரியர்*
**- கோபி -**

*மக்கள் தொடர்பு*
**பாலா**

*விளம்பரம்*
**கௌரி - சசி - நிஷா - சுபா**

*அச்சு*
**குமார் (ஜெர்மனி)**

*வடிவமைப்பு*
**jasmine studio**

*முகப்பு வடிவமைப்பு*
**seven zero graphics**

*விளம்பர வடிவமைப்பு*
**ரஜீவன் - மாயா**

*தமிழ் எழுத்துரு உதவி*
**சுரதா யாழ்வாணன்**

*நிதி – நிர்வாகம்*
**முருகானந்தன்**

*வழங்கல்*
**உதயகுமார்-ராஜு-கரன்**



**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)

| | |
|---|---|
| லண்டன் | 020 7043 4310 |
| பாரீஸ் | 01 7289 8165 |
| சுவிஸ் | 043 500 0277 |

தொலைநகல் (Fax)
020 7043 4312

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*

**பணிமனை முகவரி**
**Oru Paper**
**45'B' Crusoe Road**
**Mitcham CR4 3LJ**
**Surrey**

*மின்னஞ்சல்:*
**info@orupaper.com**

*இணையம்:*
**www.orupaper.com**



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# இனி வரும் நாட்கள்

இனிவரும் நாட்கள் எமக்கானவை. இதயம் நெகிழ, நெஞ்சம் மகிழ, அந்த நாட்கள் நமக்காக வருகிறது. பட்ட துயர்கள், பரிதவித்துத் திரிந்த நாட்கள், கெட்டு அழிந்து போன தாழ்வு, கேட்பாரற்ற வாழ்வு, எத்தனை எத்தனை. வதங்கிய வாழ்வு, நசுங்கிய நாட்கள், சருகினில் பற்றிய தீயாய் பொழுதுகள் எரிந்தன.

சொல்லொணாத் துயர்கள், துடிக்க வைத்த துன்பங்கள், வெல்லவே முடியாதோ என்ற வாழ்வு, விழலாகிப் போய் விட்ட உணர்வு இவையே நம் வாழ்வில் நாம் கண்ட மிச்சம். இவற்றைச் சொல்லிச் சொல்லி துயர் பெருக்குவதல்ல இப் பத்தியின் நோக்கம். வெல்ல முடியாது என்றிருந்த வாழ்வை விளம்புவதும் அல்ல.

இனி வரும் நாட்கள் எமக்கானவை என்ற துள்ளிக் குதிப்பு. துடித்து எழுந்த உணர்வு. அள்ள அள்ளக் குறையா ஆனந்தம். அட வாழ்வை வென்று விட்டோமே என்ற பெருமிதம். இப்படியெல்லாம் நாட்கள் வரும். அதனால் தான் இனிவரும் நாட்கள் எமக்கானவை என்கின்றோம்.

இதனை நாம் சும்மா சொல்கின்றோமா? புளுகுகின்றோமா? பொய்யுரைக்கின்றோமா? இல்லை, இல்லவே இல்லை. அப்படிச் சொல்வதனால் எமக்கு என்ன நன்மை வந்து விடப் போகின்றது? இன்னும் சொன்னால் வீணான காலத்தில் வைக்கும் நம்பிக்கைகள் அவ நம்பிக்கைகளையே அதிகம் வளர்க்கும். இந்த நம்பிக்கைகள் பொய்த்துப் போனால் இனி எதிலும் நம்பிக்கை வைக்க முடியாத சூழல் ஏற்படும். என்றாலும் இவற்றைத் தெரிந்து கொண்டு தான் இவற்றைச் சொல்கின்றோம். இனிவரும் நாட்கள் எமக்கானவை.

வரலாறு அப்படித் தான் சொல்கின்றது. வாழ்நிலை யதார்த்தம் அதனைத் தான் சொல்கின்றது. உலகில் எங்கணும் அதுதான் நிகழ்ந்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் போர் புரிய முயற்சிக்கின்றனர். அதனால் மேலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றனர். அச்சமயம் அவர்கள் இன்னும் இன்னும் என ஓர்மம் ஆகின்றனர். அந்த ஓர்மம், அந்த உணர்வு ஈற்றில் வெற்றியைத் தருகின்றது. பின்னர் வரும் நாட்கள் அவர்களுக்காகின்றது. இதுவே இதுவரை நிகழ்ந்த வரலாறு.

இதனையே இப்போது எடுத்து இயம்பினேன். இனிவரும் நாட்கள் எமக்கானவை. அதனை நாம் சும்மா சொல்லவில்லை. சுமார் இருபத்து இரண்டாயிரம் மாவீரர்கள் விதையாகி இருக்கிறார்கள். அவர்கள் வெறும் வித்தாகினார்களா? இல்லையே! மேலும் விளைவதற்கு பல்லாயிரமாய்ப் பெருகுவதற்கே அவர்கள் விதையானார்கள். இன்னும் எத்தனை எத்தனை இழப்புக்கள். சொல்லொணாத் தியாகங்கள். இவை தானே இனிவரும் நாட்கள் எமக்கானவை என்று ஆக்கின

# சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

சிங்கள அரசு ஒடுக்கு முறையை மேலும் மேலும் தீவிரமாக்குகின்றது. சர்வதேசம் நம்மைக் கைவிடுகின்றது. இந்த வேளையில், உலகு எங்கும் வாழும் 8 கோடித் தமிழரே எமக்கு உற்ற துணையாக இருக்கின்றனர். எமக்காக எத்தனை இன்னல் வரினும் ஏற்றிடத் தயாராக உள்ளனர். நாங்கள் தனித்தவர்கள் அல்லர். எமக்கு ஏதும் நிகழ்ந்தாலும் ஏன் என்று கேட்க பலர் உள்ளனர் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்படுகின்றது. இந்த இடத்தில் நாம் வேறு சில விடயங்கள் குறித்து எடுத்து இயம்ப வேண்டியுள்ளது.

இந்தியாவின் பார்ப்பனிய சக்திகள் எமது போரை வலு மூர்க்கமாக எதிர்க்கின்றன. ஜெயலலிதா, சுப்பிரமணிய சுவாமி, சோ போன்ற பார்ப்பனிய சக்திகளின் எதிர்ப்பு ஒரு வகையானது. எவ்வகை நியாயத்திற்கும் தர்மத்திற்கும் புறம்பாக குரூர மனத்துடனான எதிர்ப்பு அது.

மறு வளமாக இந்து என். ராம், ஞாநி, வாசந்தி போன்ற பத்திரிகையாளர்களின் எதிர்ப்பில் ஜனநாயகம், பயங்கரவாத எதிர்ப்பு என்ற சாயம் பூசப்பட்டு இருக்கும்.

வாசந்தி சமீபத்தில் 'தீராநதி' என்ற சஞ்சிகையில் எழுதுகின்றார்; 'மிகப் பயங்கர மனித உரிமை மீறலுக்கு ஆளான ஆபிரிக்க அமெரிக்கர்கள் பங்கரவாதிகளாக மாறவில்லை' என்றும் இப்போது அதே இனத்தைச் சேர்ந்த ஒபாமா அமெரிக்க ஜனாதிபதி ஆனதைக் குறிப்பிட்டு , ஈழத்திலும் தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடாமல் ஜனநாயக வழியில் தங்கள் எதிர்ப்பைக் காட்டலாம் என்றும், ஒரு காலத்தில் தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்றும் சாரப்பட எழுதுகின்றார்.

வாசந்தி போன்ற பார்பனிய சக்திகளுக்கு நாம் பதில் அளிக்கத் தேவையில்லை. இவ்வாறான தேச விடுதலைப் போர் நிகழும் காலத்தில் சில அடைக் கோழிகள் கொக்கரித்துக் கொண்டு தான் இருக்கும். அவற்றை நாம் கவனத்தில் எடுக்கத் தேவையில்லை.

வேறொன்று தான் இந்த இடத்தில் சில கேள்விகளை எழுப்புகின்றது. இஸ்லாமியர் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்ற சில இந்து அமைப்புகள் நமது விடுதலைப் போரை ஆதரிக்கின்றன. ஈழத் தமிழரில் பலர் இந்துக்களாக இருப்பதே இவ் ஆதரிப்புக்கான காரணம். இன்னும் இதனை நேரடியாகச் சொன்னால் இந்துத் தமிழரை பௌத்த சிங்களவர் அழிக்கின்றார்கள். அதனால் தமிழரின் போராட்டத்தை இந்துக்கள் என்பதனால் அந்த அமைப்புக்கள் ஆதரிக்கின்றன.

ஒரு புறம் ஓர் இனம் மீது ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகின்ற இந்த அமைப்புக்கள் மறுபுறம் ஒடுக்கப்படுகின்ற ஓர் இனத்துக்காகப் பரிந்து பேசுகின்றன.

இந்த முரண்நிலையை நாம் எப்படி விளங்கப் போகின்றோம் அல்லது எப்படி எதிர் கொள்ளப் போகின்றோம். இவை எம்முன் உள்ள கேள்விகள். இக் கேள்விகளை வாசகர் முன் பரப்பி விடுகின்றேன்.

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் இவை பற்றி மேலும் கதையாடுவோமே.

# புத்தாண்டுத் தீர்மானங்கள்

மலரும் ஒவ்வொரு புத்தாண்டிலும் நாம் ஒவ்வொருவரும் ஒரு உறுதி எடுத்துக் கொள்கிறோம். சில தீர்மானங்கள் செய்து கொள்கிறோம்.

'இந்த ஆண்டு சொந்தத் தொழிலைத் தொடங்கப் போகிறேன்.'

'இந்த ஆண்டு மேற்படிப்புக்காக வெளிநாடு செல்லப் போகிறேன்.'

'இந்த ஆண்டு எனது கனவு வீட்டைக் கட்டப்போகிறேன்.'

'இந்த ஆண்டு உலகம் புகழும் மகத்தான கதை ஒன்றை எழுதப் போகிறேன்.'

'இந்த ஆண்டு அளவோடு சாப்பிட்டு கொடி போல உடலை வைத்துக் கொள்ளப் போகிறேன்.'

இப்படி நாம் ஒவ்வொருவரும் ஒரு தீர்மானம் செய்கிறோம். நல்ல தீர்மானங்கள். நல்ல நோக்கம்.

அடுத்த ஆண்டு தொடங்கும் போது பார்த்தோமானால் இதே தீர்மானங்களை மீண்டும் சொல்லிக் கொள்கிறோம்.

அதாவது இந்த ஆண்டு முழுவதும் நாம் எடுத்துக் கொண்ட குறிக்கோளில் நாம் முன்னேறவில்லை. அதை அடைய நாம் எதையும் சாதிக்கவில்லை. ஆங்கிலத்திலே சொல்வார்கள். 'மீண்டும் முதல் படியில்!' என்று. முதல் படிக்கே திரும்பத் திரும்ப வந்தோமானால் நாம் எப்படி முன்னேறுவது?

ஒரு அமைச்சர் மரம் நட வந்தார். மரம் நட்டார். தண்ணீர் ஊற்றினார். ஒரு சந்தேகம் வந்தது. 'நான் நடும் மரத்தை பத்திரமாக பாதுகாத்து வளர்ப்பீர்கள் அல்லவா?' என்று கேட்டார்.

'அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். ஒவ்வொரு ஆண்டும் எந்த அமைச்சர் வந்தாலும் இங்கே தான் நடுகிறார். நாங்கள் தண்ணீர் ஊற்றிக் கொண்டுதான் இருக்கிறோம்!' என்று சொன்னார்கள்.

எப்படிக் கதை?

செடி நடும்போது மாத்திரம் தண்ணீர் ஊற்றினால் செடி எப்படி வளரும்? எப்படி வளர்ந்து மரமாகும்? இதுதான் பலருடைய கதை!

வேகம் இல்லை. வெகு தீவிரமாக ஆர்வத்துடன் தீர்மானம் செய்கிறோம். வைராக்கியத்துடன் சொல்லிக் கொள்கிறோம். 'நாளையிலிருந்து நான் புது மனிதன்' என்று. ஓரிரு நாள் அந்த நினைப்பு நம்முடன் இருக்கிறது. ஆனால், நாம் தொடர்ந்து புது மனிதனாக ஆக, கவனத்துடன் இருப்பதில்லை. முதலில் இருந்த வேகம் இப்போது நம்மிடம் இருப்பதில்லை. ஆரம்ப சூரத்தனத்துடன் சரி. பிறகு முயற்சிகளை விட்டு விடுகிறோம்.

நாம் எங்கே தோற்றுப் போகிறோம்? எதனால் தோற்றுப் போகிறோம்?

நம்மிடம் சுய கட்டுப்பாடு இல்லை. தொடர்ந்த ஈடுபாடு இல்லை. குறிக்கோள் கடைசிவரை நிற்பதில்லை. கண்காணிப்பு இல்லை. கவனம் வேறு எதில் எல்லாமோ சென்று நமது குறிக்கோளை திசை திருப்பி விடுகின்றன. நம் கவனமெல்லாம் முயற்சி இன்றி, ஆர்வமின்றி, ஆற்றலின்றி, உழைப்பின்றி, மங்கி மடிந்து விடுகிறது. இதுதான் குறிக்கோளை எட்ட முடியாததற்கு காரணம்.

## சுயக்கட்டுப்பாடு

ஒரு பெரிய விருந்து, ஒரு நல்ல அறிஞரை அழைத்திருந்தார்கள். சாப்பிடும் முன் அவரைப் பேசச் சொன்னார்கள். அவர் ஒரே ஒரு கேள்வியைக் கேட்டார். 'நீங்கள் எல்லாரும் மனிதர்கள் போல சாப்பிட விரும்புகிறீர்களா? அல்லது மிருகங்கள் போல சாப்பிட விரும்புகிறீர்களா?'

'மனிதர்கள்! மனிதர்கள்!' என்றார்கள், அமர்ந்திருந்தவர்கள்.

அவர் சொன்னார்: 'மிருகங்கள் தங்களுக்குப் போதுமென்று எண்ணியதும் சாப்பிடுவதில்லை! நிறுத்திக் கொள்கின்றன.'

அறிஞர் என்ன சொல்கிறார்?

மனிதன் தேவையினால் உந்தப்படுவதில்லை. ஆசையினால் உந்தப்படுகிறான். தேவையினால் உந்தப்படுபவன் கட்டுப்பாடுடையவன். ஆசை என்பது மேலும் மேலும் வேண்டும் என்ற எண்ணத்தை வளர்ப்பது. ஆசைக்கு எங்கே முடிவு?

எனவே தான் சொல்லுகிறேன் - வாழ்வின் மிக முக்கியமான பாடம் நாம் சுயக்கட்டுப்பாட்டைக் கற்றுக் கொண்டோமா என்பதுதான்.

உங்களை நீங்கள் கட்டுப்படுத்திக் கொள்ள முடியுமா? 'காலையில் 5 மணிக்கு எழுவேன்' என்று சொல்வதிலிருந்து 'வயிற்றை லேசாக வைத்துக் கொள்வேன், போட்டு அடைக்க மாட்டேன்' என்று சொல்வது வரை உங்களிடம் சுய கட்டுப்பாடு இருக்கிறதா?

இதெல்லாம் நம் சொந்த விஷயங்கள். நாம் விரும்பினால் நடத்திக்காட்ட முடியும். நாம் மனது வைத்தால் செய்து காட்ட முடியும். நாம் பாடுபட்டால் இதையெல்லாம் நமது நல்ல பழக்கங்களாக ஆக்கிக் கொள்ள முடியும்.

சுயக்கட்டுப்பாடு இல்லாத மனிதன் தறிகெட்டு ஓடும் குதிரைக்குச் சமானம். அதேபோல சுயகட்டுப்பாடற்ற - சட்டங்களை மதிக்காத சமுதாயம், வாழத் தகுதியற்றது.

சுயகட்டுப்பாடும் எடுத்த முயற்சியிலே உறுதியும் இருந்து விட்டாலே இந்த வருடத் தீர்மானத்தை அடுத்த ஆண்டு எடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. மாறாக புதிய தீர்மானத்துடன் புத்தாண்டை எதிர்கொள்ளக் கூடியதாயிருக்கும்.

இந்த ஆண்டு உங்கள் இலட்சியங்கள், கனவுகள் நிறைவேற சுயகட்டுப்பாட்டுடனும் உறுதியுடனும் முயற்சி செய்யுங்கள்.

*- வி. உதயமூர்த்தி*

# போரின் போக்கைத் தீர்மானிக்கும் கிளிநொச்சி சமர்

சிறிலங்காப் படைகள் எப்பாடுபட்டாவது கிளிநொச்சியை இந்த ஆண்டுக்குள் கைப்பற்றி விட வேண்டும் என்பதில் கடும் முனைப்பாகப் போரிட்டு வருகின்றன.

நத்தார் தினத்தை முன்னிட்டு போர் நிறுத்தம் செய்யச் சொல்லி கிறிஸ்தவ ஆயர்களிடம் இருந்து வந்த கோரிக்கையையும் நிராகரித்து விட்டு சிறிலங்கா அரசு கடுமையான தாக்குதலை கிளிநொச்சியை நோக்கி தொடுத்து வருகின்றது.

ஏற்கனவே மாவீரர் தினமாகிய நவம்பர் 27க்குள் கிளிநொச்சியை கைப்பற்றி விடுவதாக சிறிலங்கா அரசு சபதம் செய்திருந்தது. சிங்கள இனவாத அமைப்புகளும் கிளிநொச்சியை கைப்பற்றிய படையினருக்கு வாழ்த்துத் தெரிவித்து சுவரொட்டிகளை தயார் செய்து வைத்திருந்தன.

நவம்பர் 26 அன்று சில சிங்கள ஊடகங்கள் கிளிநொச்சிக்குள் சிறிலங்காப் படைகள் நுழைந்து விட்டதாகவும், அடுத்த நாள் அந்த வெற்றிச் செய்தியை அறிவிப்பதற்காக சிறிலங்கா அரசு அதை ரகசியமாக வைத்திருப்பதாகவும் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தன. கிளிநொச்சியை சிறிலங்காப் படையினர் கைப்பற்றி விட்டனர் என்று அப்பொழுது பல சிங்கள மக்கள் நம்பவும் செய்தனர்.

ஆனால் இன்று வரை சிறிலங்காப் படைகளால் கிளிநொச்சியைக் கைப்பற்ற முடியவில்லை. கைப்பற்ற முடியவில்லை என்பதோடு பிரச்சனை முடிந்து விடவில்லை. சிறிலங்காப் படைகளின் புதைகுழியாக கிளிநொச்சி மாறி வருவதுதான் சிறிலங்கா அரசை பெரும் சிக்கலுக்குள் தள்ளி விட்டிருக்கின்றது.

**மிகவும் வயது குறைந்த படையினரை முன்களத்திற்கு கொண்டு வந்து பலி கொடுக்கின்ற வேலையை சிறிலங்கா அரசு செய்யத் தொடங்கியிருக்கின்றது.**

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரில் சிறிலங்காப் படையினர் பெரும் ஆளணி வளத்தை இழந்து போயுள்ளனர். வன்னிச் சமரில் காயமடையும் படையினரின் தொகை மிக மிக அதிகமாக இருக்கின்றது. கிளிநொச்சி வரை முன்னகர்வதற்காக சிறிலங்காப் படையினர் கொடுத்த விலை மிகப் பெரியது.

பொதுவாக உலகின் மற்றைய நாடுகளில் நடைபெறும் சண்டைகளில் கொல்லப்படும் படையினரை விட காயமடையும் படையினரின் தொகை மூன்று மடங்குக்கு உள்ளேயே இருக்கும். ஆனால் சிறிலங்காவில் கொல்லப்படும் படையினரை விட காயமடையும் படையினரின் தொகை பத்து மடங்கு அதிகமாக இருக்கின்றது.

சிறிலங்கா அரசு கைப்பற்றிய இடங்களை தக்க வைப்பதற்கும், புதிய இடங்களைக் கைப்பற்றுவதற்கும் தேவையான ஆட்பலம் இல்லாமல் திண்டாடுவது அப்பட்டமாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

வலிந்த சண்டைகளுக்கு அனுபவம் அற்ற புதிய படையினர் களம் இறக்கப்படுகின்றனர். அதுவும் மிகவும் வயது குறைந்த படையினர்களை முன்களத்திற்கு கொண்டு வந்து பலி கொடுக்கின்ற வேலையை சிறிலங்கா அரசு செய்யத் தொடங்கியிருக்கின்றது.

அத்துடன் சிங்கள பெண் சிப்பாய்களும் களமுனைக்கு அனுப்பப்படுகின்றார்கள். பல ஆண்டுகளாகவே சிறிலங்காப் படையில் பெண்கள் உண்டு. ஆனால் அவர்கள் பெண் புலிகள் போன்று சண்டை அனுபவம் உடையவர்கள் அல்ல. பின்தள உதவிகளையும், பராமரிப்புகளையும், வீதிப் பரிசோதனைகளையும் மேற்கொள்வதே இதுவரை அவர்களின் வேலையாக இருந்து வந்தது. தற்பொழுது ஆட்கள் போதாத காரணத்தினால் அவர்களையும் சிறிலங்கா அரசு போர் முனைக்கு அனுப்புகின்றது.

சிறிலங்கா அரசின் அனுபவமும் ஆற்றலும் மிக்க படையினர் பலர் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்த சண்டைகளில் கொல்லப்பட்டும் காயமடைந்தும் களமுனையில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு விட்டனர்.

மறுபுறம் விடுதலைப் புலிகள் தமது சிறப்புப் படையணிகளை பலமான முறையில் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். இந்த முக்கியமான அம்சம் எதிர்கால சண்டைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது.

சிறிலங்காப் படையினர் ஆட்பலம் இல்லாத நிலையில் நிற்கின்றனர் என்பது வேறொரு விடயத்திலும் வெளிப்பட்டது.

சிறிலங்காப்படையினர் சில வாரங்களிற்கு முன்பு மாங்குளத்தையும், நெடுங்கேணிக்கு அருகில் அமைந்துள்ள கஜபாபுரத்தையும் கைப்பற்றிய பின்பு வன்னியில் தென்பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் வெளியேறிவிட்டார்கள். ஒரு பெரும் நிலப்பரப்பில் இருந்து விடுதலைப் புலிகள் பின்வாங்கிய பின்பும் சிறிலங்காப் படையினர் அப் பகுதிக்குள் இன்று வரை நுழையவில்லை.

**அரசியல் அலசல்**

**வி.சபேசன் (ஒரு பேப்பர் - ஜெர்மனி)**

தெற்கு வன்னியிலும் பரவி நிலைகொண்டால் மேலும் ஆட்பலத்தை இழக்க வேண்டி ஏற்படும் என்பதனாலேயே சிறிலங்காப் படையினர் அங்கு நுழையாமல் நிற்கின்றனர். கிளிநொச்சியில் அடிவாங்குகின்ற நேரங்களில் மட்டும் அப் பகுதியில் காலாற நடந்து விட்டு, ஏதாவது ஒரு கிராமத்தின் பெயரைச் சொல்லி, அதைக் கைப்பற்றி விட்டதாக சிறிலங்காப் படையினர் அறிக்கை விடுக்கின்றனர்.

கடந்த வாரம் சிறிலங்காப் படையினர் கிளிநொச்சியில் கடும் இழப்பை சந்தித்த பிற்பாடு, இரண்டு நாட்கள் கழித்து நெடுங்கேணியை கைப்பற்றியதாக சிறிலங்க அரசு அறிவித்ததும் இந்த வகையானதே.

அதே வேளை சிறிலங்காப் படைகள் தற்பொழுது மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி செல்லும் வீதியில் (ஏ34) ஒலுமடுவைக் கைப்பற்றி மேலும் சில கிலோமீட்டர்கள் தூரம் முன்னேறியுள்ளனர். அதே போன்று முல்லைத்தீவில் இருந்த சில கிலோமீட்டர்கள் தொலைவில் உள்ள முள்ளியவளையிலும் சிறிலங்காவின் 59வது படையணி முன்னேறி உள்ளது.

**சிறிலங்கா அரசு கைப்பற்றிய இடங்களை தக்க வைப்பதற்கும், புதிய இடங்களைக் கைப்பற்றுவதற்கும் தேவையான ஆட்பலம் இல்லாமல் திண்டாடுவது அப்பட்டமாகத் தெரியத் தொடங்கியுள்ளது.**

கிளிநொச்சியைக் கைப்பற்றும் சண்டைகள் மிகக் கடுமையாக உள்ளதால், சிறிலங்காப் படைகள் ஒட்டுசுட்டானைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கலாம். அல்லது முல்லைத்தீவைக் கைப்பற்றவும் முயலலாம். ஆனால் கிளிநொச்சியைப் போலவே முல்லைத்தீவு சண்டைகளும் அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

கிளிநொச்சியில் மிகப் பெரிய மண் அணைகளை அமைத்து தற்காப்புச் சண்டைகளை விடுதலைப் புலிகள் நடத்தி வருகின்றார்கள். குஞ்சுப் பரந்தனில் இருந்து இரணைமடுவரை 'ட' வடிவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மண் அணைகளை உடைக்க முடியாமல் சிறிலங்காப் படைகள் திணறிக் கொண்டிருக்கின்றன.

கடந்த வாரம் செவ்வாய்க் கிழமை சிறிலங்காப் படைகள் பல்முனையில் கிளிநொச்சியை நோக்கி நடத்திய நகர்வுகள் அனைத்தும் விடுதலைப் புலிகள் நடத்திய ஆகோரமான பதிலடியால் முறியடிக்கப்பட்டன. கிளாலியில் மேற்கொண்ட முன்னகர்வும் முறியடிக்கப்பட்டது. 200 வரையான படையினர் கொல்லப்பட்டும், 450இற்கும் மேற்பட்ட படையினர் காயங்களுக்கும் உள்ளாகினர்.

50இற்கும் மேற்பட்ட படையினரின் உடலங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. கிளாலியில் ஒரு படையினன் உயிரோடு பிடிக்கப்பட்டான். இந்த வன்னிச் சமரில் இதுவரை சிறிலங்காப் படையினர் விடுதலைப் புலிகளின் உடலங்களைக் காட்சிப்படுத்திய நிலை ஒரு நாளில் தலைகீழாக மாறிப் போய் விட்டது.

சிறிலங்காப் படையினரின் பல முனை நடவடிக்கை முறியடிக்கப்பட்டிருந்தாலும், இரணைமடுவால் முன்னேறிய படையினர் இரண்டு கிலோமீட்டர் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். ஆனால் மூன்று நாட்கள் கழித்து சனிக் கிழமை அன்று விடுதலைப் புலிகள் அப் பகுதியை ஒரு வலிந்த அதிரடித் தாக்குதல் மூலம் மீட்டெடுத்தனர்.

வன்னிச் சமர் ஒரு புதிய வடிவம் எடுக்கத் தொடங்கியிருப்பதை இந்த நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் சிறிலங்காப் படையினர் தாக்குதலை ஆரம்பித்த பின்பு அவர்கள் பல இடங்களை வல்வளைப்புச் செய்துள்ளனர். ஆனால் எங்கும் அவர்கள் கிளிநொச்சியைப் போன்று ஒரு எதிர்த் தாக்குதலை சந்திக்கவில்லை. அத்துடன் இழந்த பகுதிகளை மீட்டெடுக்கும் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தியதாகவும் செய்திகள் இல்லை.

**மிகக் கடுமையான சண்டைகளை செய்யக் கூடிய அனுபவம் வாய்ந்த சிறப்பு அணிகளை விடுதலைப் புலிகள் ஏதோ ஒரு திட்டத்திற்காக பாதுகாத்து வருகின்றார்கள்**

ஆனால் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் மிகக் கடுமையான முறியடிப்புத் தாக்குதலை நடத்துகின்றனர். இழந்த முன்னரண்களை பதில் தாக்குதல் நடத்தி மீட்டெடுக்கின்றனர். இந்த வலிந்த தாக்குதல்களுக்கு இதுவரை பயன்படுத்தாத புதிய படையணிகளையும் விடுதலைப் புலிகள் களமிறக்குகின்றனர்.

இரணைமடுவில் வலிந்த தாக்குதலில் ஈடுபட்ட போராளிகள் தாம் சண்டைக்காக நீண்ட நாட்கள் காத்திருந்ததாக கூறுகின்றார்கள். சண்டைக்கான உத்தரவு வந்ததும் மிகவும் உற்சாகத்துடன் சண்டை செய்ததாகவும், ஆரம்பத்தில் சிறிலங்காப் படைகளின் எதிர்ப்பு கடுமையாக இருந்ததாகவும், ஆயினும் கடும் தாக்குதலை நடத்தி அவர்களை அடித்து விரட்டியதாகவும் கூறுகின்றார்கள்.

மிகக் கடுமையான சண்டைகளை செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த சிறப்பு அணிகளை விடுதலைப் புலிகள் ஏதோ ஒரு திட்டத்திற்காக பாதுகாத்து வருகின்றார்கள் என்பது அந்தப் போராளிகளின் கூற்றில் இருந்து புலப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் கடுமையான முறியடிப்புத் தாக்குதலை எதிர்கொண்டாலும், சிறிலங்காப் படைகள் இந்த வாரம் திங்கட் கிழமை மீண்டும் ஒரு பல்முனை நகர்வை மேற்கொண்டன. இதிலும் சிறிலங்காப் படைகளுக்கு கடும் இழப்பு ஏற்பட்டது. பல முனைகளில் சிறிலங்காப் படைகளின் முன்னகர்வு முறியடிக்கப்பட்டது. ஆனால் குஞ்சுப்பரந்தனில் சிறிலங்காப் படையினர் ஒரு குறிப்பிட்டளவு தூரம் முன்னேறியுள்ளனர். அப் பகுதியில் தொடர்ந்தும் சண்டைகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

கிளிநொச்சியை சிறிலங்காப் படைகளால் கைப்பற்ற முடிகிறதோ இல்லையோ, அங்கே தற்பொழுது நடந்து வருகின்ற சமரில் சிறிலங்காப் படையணிகள் சந்திக்கின்ற சேதம் எதிர்காலத்தில் சிறிலங்காப் படைகளின் ஆற்றலில் பெரும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். அதுவே போரின் போக்கையும் தீர்மானிக்கும்.

*அகிலமே திரண்டு எதிர்த்தாலும்*

*ஆயிரம் தடைகள் போட்டாலும்*

*இலட்சியக் கனவினை ஒருபோதும்*

*இழந்திடத் தமிழினம் துணியாது*

ஒரு பேப்பர

ORU PAPER

# Tamil National Liberation Movement and Neocolonialism

**By Nakulan**
FOR ORUPAPER

The international community relevant to the armed conflict in Sri Lanka consists mainly of the governments of India, of countries in Western and Northern Europe and in North America (USA) and of Australia. The first priority of these governments with respect to Sri Lanka is to ensure the defeat of the Tamil National Liberation Movement. To this day they have so far condoned, and will continue to condone the genocide of the Tamils rather than support the independence of Tamil Eelam.

Genocide comes easily to the international community, which has liquidated half a million children in Iraq over the past eight years and is cheerfully continuing the slaughter in that country and elsewhere, smartly and simply dismissing the killing, as collateral damage.

These countries are so busy and adamant that they would never accept that the peaceful and entirely non-violent struggle of the Tamil people for their birth rights since 1956 has been reciprocated with naked terrorism by successive Sinhalese governments. A series of virulent pogroms engineered by the Sinhalese rulers against innocent and defenceless Tamils have killed thousands.

Since 1983 the Sri Lankan government and its armed forces have declared war on the Tamil people and unleashed military terror in order to subjugate them by seer force.

In order to maintain their oppressive rule over the Tamils the Sinhala occupation army has committed and continue to commit horrendous human rights violations in the form of murders, extra-judicial killings, disappearances, rapes, and torture with total impunity. This is why the 1983 genocidal programme is viewed as a reflection of the mindset of the Sri Lankan state. It was a demonstration that the Sri Lankan state meant to teach the Tamil people 'a damn good lesson', if they were not prepared to submit themselves or be subordinates.

The so-called international community, which remained silent to State terrorism in Sri Lanka and didn't want to stop it all these decades, in the guise of upholding sovereignty of countries, now tries to stamp out a genuine struggle as terrorism and provides all assistance to a repressive State.

The international community is also actively seeking to weaken the Tamil National Liberation movement. Declaring LTTE as a "terrorist organisation", levelling allegations of "recruiting child-solders", and persecuting Tamil associations abroad, as "front organisations" of the LTTE are some of the better-known tactics.

When people commit unlawful acts against their fellow citizens, we call it terrorism. When a government commits acts of violence and repeatedly perpetrates crimes against its own people, what label does one attach to it? What name do we give to a government that terrorises its own people? Just when is terrorism not terrorism? Terror lists are only one part of the global move to combat terrorism. The counter-terrorism has become an excuse used by some governments to expel certain organisations, or to harass them in other ways.

**An Adjournment Debate on Sri Lanka in the British Parliament.**

A perusal of the statement given by The Minister of State, Foreign and Commonwealth Office, hon. Mr.Bill Rammell, member for Harlow, at the 'adjournment debate' on Sri Lanka on 18 December 2008, clearly shows how the British Government conniving with India is aiding and abetting the Sri Lanka government in its military repression of the Tamil human beings under the guise of "combating terrorism".

[ Ref; House of Commons Hansard Debates for 18 Dec 2008, www. publications .parliament.uk.

*"...the lack of access by non-government organizations and the media to the conflict zone makes an objective assessment of the conflict impossible, to put it bluntly. Many alarming reports have emerged, speculating the events to which both parties' activities confirm with the international humanitarian law. These reports need a sober and measured analysis based on the evidence available, and I will try to provide that.*

*Concern for civilians in Sri Lanka and the primary responsibility of the Government of Sri Lanka to protect them, means that the LTTE's role in the conflict is sometimes overlooked. It is important not to forget that the LTTE is a ruthless terrorist organization, which is responsible for serious human rights abuses against civilians throughout Sri Lanka.*

*The LTTE has no democratic mandate to represent the Tamil population. It is reported to recruit civilians, including children, into its ranks forcibly, to extort food and money from an already impoverished people, to abduct and kill Tamil civilians, who disagrees with its views or methods and break all norms of international law by preventing civilians from leaving conflict areas, effectively holding them as human shield. The LTTE has conducted a terrorist campaign across the whole of Sri Lanka for nearly three decades, deliberately targeting thousands of individual civilians, as well as assassinating Government figures.*

*The UK condemns those activities and recognises the Government of Sri Lanka's democratic right to fight Terrorism. But the Government of Sri Lanka are to be successful in the fight, they ultimately need to address the causes of terrorism, which are at the heart of the problem.*

*.....We continue to argue that achieving a political solution now would be fundamentally in the Sri Lankan Government's interests. It would undermine the LTTE by demonstrating that they are not the sole representative of the Tamil people, and it would diminish their support in Sri Lanka and overseas".]*


Tamils, especially who are in the UK are thoroughly disappointed by the attitude, ignorance and unfairness of the hon. Minister. May be the minister had to say these in order to accommodate India's interest.

Let the hon. Minister for a start have bite on an English apple and realize that the LTTE and the Tamils are like the skin and the flesh of the fruit, simply you can't separate them, they are one and the same.

The concept of lobbing is paramount to the Tamil Nation and the Tamil Diasporas at this critical juncture in our path to liberation. The fact that we are criticizing the International Community for inaction, inertia and partiality towards the Sri Lankan government's atrocities is the lack of lobbing in the international arena. British Tamils Forum has to work hard and remember that the key word in defining lobbing is influence, which is again defined as "power of producing effects by invisible or insensible means".

The task before the Tamils living abroad is enormous. They should strive in every possible way to provide relief for, and rehabilitate the Tamil people affected by the war. At the same time they must unflinchingly strengthen the military capability of our great freedom fighters.



"Weakness Gone.. Energy On.."
இது உறுதி - இன்றைய இரவ இனிமையானது - இனிவரும் இரவுகளும்
மூலிகையில் தயாரிக்கப்பட்ட மாத்திரை ஆண்மை விருத்திக்கான தைலம் இது.
"Recharge Your Life" ஆண்களின் நண்பன் Performance Enhancer for Men
Mascula Massage Oil for Men
மஸ்குலா மசாஜ் ஒயில்
எண்ணெய் Massage மூலம் ரத்த ஓட்டத்தை அதிகரித்து புத்துயிரூட்டி மீண்டும் சக்தி கொடுத்து ஆண்மையைப் பெருக்கி இளமையாக்கும் அரிய மருந்து.
£ 20
To Tone Up The Under-developed Penile Muscles & Nerves of Male Sex Organ For Improved Performance

Herbal 1-Top Capsules
கேர்பல் வன் டொப் கப்சியூல்ஸ்
உலகத்தின் அனைத்து ஆண்களாலும் விரும்பப்பட்ட ஆண்மை அதிகரிக்கும் ஒரே நிவாரணி. £ 30
• ஆண்மைக் குறைவு • உடலுறவு பலவீனம் • அனைத்தும் ஒரே மருந்தில்
Herbal 1-Top Capsules for Male Problems & Impotence Management

HEART CARE

£ 10 கார்ட் கெயார் கப்சியூல்ஸ்
• இதயத்தை பலப்படுத்த
• இதய அழுத்தத்தை சீராக்க
• இரத்த ஓட்டத்தை சீராக்க

AVAILABLE FROM YOUR LOCAL CHEMIST NATIONWIDE
Bristol 60 Almavale Road, Clifton, Tel : 011 7973144
Birmingham
1. Spark Hill, 491 Startford Road, Tel: 0121-4720174
2. 115 Soho Road, Handsworth, Tel: 01215512444
Bradford 127, Great Horton Road, Tel: 0845 257 0181
Coventry
1. 5 Station St. West, Tel: 0871 310 6443
2. 304, Walsgrave Road, Tel: 02476 454523
Derby 299 Normanton Road, Tel: 01332 366644
Gravesend 2 Living Stone Rd, Tel: 01474 365140
Glasgow 405 Great Western Rd, Tel: 0141 3395979
Hayes 788 Uxbridge Road, Tel: 020 8848 4612
Hounslow 322 Great West Road, Tel: 020 8577 7436
ILLFORD:
1. Eden Pharmacy, 79-85 Goodmayes Rd. Tel: 020 85973477
2. Munro Pharmacy, 303 Green Street, Tel: 020 8471 2575
3. Weston Pharmacy 3 St Stephen Parade (Near Post office), Green Street, Tel : 020 8470 5858
Kingsbury 511 Kingsbury Road, Tel : 020 8204 8731
London 82A Baker Street, Marylebone, Tel : 020 7935 9667
Leyton 694 High Road, Tel : 020 8558 5416
Leeds 255-257 Roundhay Road, Tel: 0113 2490557
Leicester 68 Hartington Road, Tel: 0116 253 7985
Luton 453 Dunstable Road, Tel: 01582 572523
NORBURY - 301 Northborough Road Tel : 020 8764 1629
NorthHampton 4 Kingsley Park Terrace, Tel: 0160 471 3297
Reading 104a Oxford Road, Tel : 0118 9572687
Slough 400 Farnham Road, Tel : 01753 517263
SouthHall
1. Gill Chemist, 31-33 King Street, Tel: 020 8571 1555
2. Dokal Cash & Carry, 133-135, Southall Broadway, Tel: 020 8574 1647
Tooting 246 Upper Tooting Rd, Tel: 020 8672 5417
Wembley
1. 282 Ealing Road, Tel: 020 8902 5047
2. 182 Ealing Road, Tel: 020 8902 0173
3. 210 Ealing Road, Tel : 020 8902 4698
WolverHampton 311 Dudley Road, Tel: 01902342 000

டயானில் பென்டா கப்சியூல்ஸ்
Dianil Penta Capsules

இனிப்பு சிற்றுண்டிகளை ஏன் தவிர்க்க வேண்டும்?
சர்க்கரை வியாதிக்கோர் அரிய இயற்கை மூலிகை மருந்து
கணைய சுரப்பிகளை தூண்டி இன்சுலின் ஓமோனை சுரக்க வைப்பதன் மூலம் சர்க்கரை நோயினால் வரும் அனைத்துப் பாதிப்புகளிலிருந்தும் விடுபட ஒரு புதிய நிவாரணி. £ 10

LIVER CARE

£ 10

BRAIN CARE

£ 10

கிமாலயன் வொண்டர் கார்லிக்
Himalayan Wonder Garlic

உங்கள் உடம்பில் கொழுப்பைக் குறைத்து கலங்களுக்கு புத்துயிர் அளிக்கும். இமய மலையின் இயற்கை சூழ்நிலையில் விளைந்த மாசடையாத பூண்டு.
இதயநோய், கொழுப்பு நோய் நிவாரணி. £ 10
Supports anti-clotting mechanism in arteria and veins.

Pentax Hair Tonic
பென்ரக்ஸ் கெயர் டொனிக்

வழுக்கைத் தலையர்களுக்கு ஒரு வழி
• தலை வழுக்கை
• தலை முடி உதிர்தல்
• தலைமுடி சன்னமாதல்
• அலோபேசியா (aloepacia) நோய் அனைத்தும் குணமாக்கலாம் £ 10

PURE SHILAJEET

WELL-BEING
£ 10

Contact: Mr. J.B. Singh 0781 541 9103 * Dr. R.N. Sharma (B.A.M.S. M.D. (Ayurvedic)
Pentavox (UK) Ltd, P.O. Box 409, Northolt UB5 9AJ Middx. Tel: 020 8423 8800, 07815 419 103
e-mail: info@pentavoxuk.com * Online Shopping: www.pentavoxuk.com
Postage & Packaging Free over order worth £30
"Distributors/Stockist required all over UK & Europe"

# எப்பவோ முடிந்த கதை



அருபாயன்
*(ஒரு பேப்பருக்காக)*

கடந்த வாரம் அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, ஜப்பான், பாகிஸ்தான், பங்களாதேஸ், மாலைதீவு ஆகிய ஏழு நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் (Defence Attaches) வன்னி சிறிலங்கா இராணுவத் தலைமையத்திற்கும், பெயர் குறிப்பிடப்படாத களமுனைப் பகுதி ஒன்றுக்கும் விஜயம் செய்ததாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டிருந்தது.

இச் செய்தியானது ஓர் பரவலான உடனடி எதிர் வினையொன்றை தமிழ்த் தேசிய ஊடகங்களில் கிளப்பி விட்டுள்ளது. அதாவது இந்த ஏழு நாடுகளின் பிரதிநிதிகளின் வன்னிக்களமுனை விஜயமானது, தமிழர் தரப்பில் ஆத்திரம், அதிருப்தி மற்றும் கலவர உணர்வு என்பவற்றைத் தோற்றுவித்துள்ளது.

குறிப்பாக சிறிலங்கா இராணுவம் களமுனையில் பின்னடைவுகளைச் சந்தித்து வரும் இவ்வேளையில் வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளின் வன்னிக் களமுனைப் பிரசன்னமானது ஏதோ 'செய்தி' சொல்வதற்கானது என்று பரவலான ஓர் கருத்து நிலவுகின்றது.

இச்சம்பவம் தொடர்பான தமிழ் ஊடகங்களின் பிரதிபலிப்புகளை உன்னிப்பாகக் கவனித்தால், இந்த நாடுகளை அவை சிறிலங்காவின் 'மூலோபாயப் பங்காளிகள்' (strategic partners) என்று குறிப்பிடப்படுவதை அவதானிக்கலாம்.

அடிப்படையில் இப்பத்தியில் நான் சொல்ல முற்படுவது இராசதந்திரம், மூலோபாயம் பற்றியதான காய்தல் உவத்தல் இன்றிய ஓர் பார்வையும், ஈழத்தமிழர்கள் புதிதாக வருந்தும் வகையில் ஏதும் நடந்திருக்கிறதா என்பது பற்றிய சில கருத்துக்களும்.

## மூலோபாயம் [Strategy]

'போர் தொடர்பான மூலோபாயம் என்பது அதில் எவ்விதம் பங்கெடுத்துக் கொள்வது பற்றியது' என பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மன் இராணுவ அறிஞர் Carl Von Clausewitz குறிப்பிடுகிறார்.

**கிழக்கு மாகாணப் பிரதேசத்தில், அமெரிக்கா ஏற்கனவே தனது வளங்கள், சந்தைகளுக்கான இராசதந்திர, பொருளாதார காய் நகர்த்தல்களை ஆரம்பித்து விட்டது.**

இதனையே, 'இராணுவ நடவடிக்கை மூலம் மற்றய தரப்பை வெற்றி கொள்வது எனும் விடயத்தில், மூலோபாயம் என்பது, பொருளாதாரம், இராசதந்திரம், அதிகாரத்துடனான உளவியல் உபாயங்கள், வெளிநாட்டுக் கொள்கை போன்றவற்றை வினைத்திறனுடன் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பிரயோகிப்பது பற்றிய ஒருங்கமைந்த மொத்த திட்டம் என்பதை தவிர வேறொன்றுமில்லை' என இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த Robert Osgood என்ற அமெரிக்க அரசறிவியல் அறிஞர் விளக்கியுள்ளார்.

கடந்த இருநூற்றாண்டுகளில் மூலோபாயம் பற்றிய சிந்தனைகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டு இருப்பதை மேற்கூறிய வாசகங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். அதாவது தனித்து இராணுவப் பலம் அல்லது போர் அச்சுறுத்தல் என்பனவற்றிற்கு அப்பால், பொருளாதாரம், இராசதந்திரம், மற்றும் உளவியல் ரீதியான வழிகளில் ஒரு தேசத்தின் வெளியுறவுக் கொள்கைப் பிரயோகத்தை பலப்படுத்துவதன் ஊடாக தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் ஆகும்.

இவ்வகையான பின்னணியில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளின் மூலோபாயச் செல்நெறி பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

அமெரிக்காவின் கடந்த வருடத்திற்கான மொத்தப் பாதுகாப்புச் செலவீனம் உலகில் உள்ள ஏனைய நாடுகள் அனைத்தினதும் மொத்தப் பாதுகாப்புச் செலவீனத்திற்குச் சமானமானதாகும். அமெரிக்கா ஏன் இவ்வாறான ஓர் பலம் பொருந்திய இராணுவத்தை வைத்திருக்க வேண்டும்?

**உலகில் எத்துணை சிறிய நிலப்பரப்பாக இருப்பினும் அப்பகுதி அமெரிக்காவின் தலைமையிலான மேற்கு நாட்டு வர்த்தகத்திற்குத் திறந்து விடப்பட வேண்டும் என்பதுதான் இருபத்தோராம் நூற்றாண்டின் உலக நியதியாகும்.**

'இரண்டாம் உலகப்போருக்கு பின்னர், அனைத்துலக மட்டத்திலான பாதுகாப்பு, நாடுகளின் உறுதிப்பாடு, ஆகியவற்றை பேணும் விடயங்களில் அமெரிக்காவே முதன்மைச் சக்தியாகத் திகழ்கிறது. முன்னர் சோவியத் ஒன்றியத்துடனான பனிப்போர் காலத்திலிருந்தது போலவே, தற்போது சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான முயற்சிகளிலும், அமெரிக்கா தனது இராணுவ, இராசதந்திர, பொருளாதார அணுகுமுறைகளை கையாண்டு வருகிறது.

அமெரிக்காவின் தேசிய நலன்களும், எதிர்கால அமெரிக்காவின் சுபீட்சம் பற்றிய அகப்பார்வையும் இந்த முனைப்பின் உந்து சக்தியாக விளங்குகின்றன.

அமெரிக்காவின் அணியில் உள்ள நாடுகளின் நலன்களும் கவனத்தில் எடுக்கப்படுவதனால், இத்தகைய ஆபத்துகளிலிருந்து நட்பு நாடுகளைக் காப்பாற்றுவதும் அதன் நலன் சார்ந்ததாக அமைகின்றன.

அதே போல், உலக சமாதானமும், தமது அணியில் உள்ள நாடுகளிற்கிடையாலான மோதல்களைத் தவிர்ப்பதும், அவற்றின் பொருளாதார வளரச்சிக்கு முண்டு கொடுப்பதும், அமெரிக்கா உலக சந்தையில் ஆதிக்கம் செலுத்துவதற்கும் அவசிமாகவுள்ளது.'

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2008 இற்கான தேசிய பாதுகாப்பு மூலோபாய அறிக்கையிலிருந்தான மேற்கூறிய வாசகங்கள், புதிய சந்தைகள் மற்றும் மூலவளங்களுக்கான அமெரிக்காவின் தணியாத தாகத்திற்காக அமெரிக்கப்படையினர் இரத்தம் சிந்துவதற்கும் தயாராகவுள்ள நிலைமையை தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

சிறிலங்கா இராணுவத்தினால் கைப்பற்றப் பட்ட கிழக்கு மாகாணப் பிரதேசத்தில், அமெரிக்கா ஏற்கனவே தனது வளங்கள், சந்தைகளுக்கான இராசதந்திர, பொருளாதார காய் நகர்த்தல்களை ஆரம்பித்து விட்டது.

அடிப்படையில் உலகின் எந்தப் பாகத்திலும் எத்துணை சிறிய நிலப்பரப்பாக இருப்பினும் அப்பகுதி அமெரிக்காவின் தலைமையிலான மேற்கு நாட்டு வர்த்தகத்திற்குத் திறந்து விடப்பட வேண்டும் என்பதுதான் இருபத்தோராம் நூற்றாண்டின் உலக நியதியாகும்.

இந்தியாவின் தற்போதைய மூலோபாயச் சிந்தனை பற்றிப் பார்ப்போமானால், அது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைப் பலப்படுத்துவதற்கும், நில ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் உரிய புறச் சூழலைத் தான் பிரதான மூலோபாய நோக்காகக் கொண்டுள்ளது.

இந்த வருடம் லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் பிரசித்தி பெற்ற மூலோபாயக் கற்கைகளுக்கான சர்வதேச கற்கை நிறுவனம் (IIS) நடாத்தும் வருடாந்த பிராந்திய பாதுகாப்பு உச்சி மாநாடு சிங்கப்பூரில் நடைபெற்றது.

அத்தோடு புதுதில்லியில் 'இந்தியா வளர்ந்து வரும் வல்லரசு' என்ற தலைப்பில் மேற்கூறிய நிறுவனத்தினால் ஓர் மாநாடு நடாத்தப்பட்டது. இம் மாநாடுகளிலே இந்தியாவின் பிரதிநிதிகள் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு,

'இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, எமது சமூகங்களிடையேமிகுந்த நம்பிக்கையுடனான எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள போதும், இந்தியாவின் அண்டை நாடுகள் விடயத்தில் இந்நிலை காணப்படவில்லை.

சில நாடுகளோ பயங்கரவாதப் பிரச்சனையினால் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன. இது இந்தியாவை பொறுத்தவரை கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகவே உள்ளது. அவை நாடுகளால் மேற்கொள்ளப்படும் வன்முறையோ இல்லையோ, அதன் எதிரொலியாக இந்தியா பாதிப்பிற்கு உள்ளாவது இந்தியாவை கலவரப்படுத்துகிறது.

அண்டை நாடுகளுடன் வரலாற்று ரீதியாகவே இந்தியா முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. ஆகையால் எல்லைகளையிட்டான பிரச்சனை போன்றே அரசியல் ரீதியான சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.'

- சிவ்சங்கர் மேனன், இந்திய வெளியுறவுச் செயலர் புதுதில்லி மாநாட்டில் கூறியுள்ளார்.

'இந்தியக் கண்ணோட்டத்தில் உலகினைப் பார்த்தால், வெஸ்ட்பார்லியன் முறைமை அருகி வருவதும், உலகின் வலுச்சமநிலை புதிய சக்திகளுடன் பகிர்ந்து கொள்ளப் படுவதும் அவதானிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இந்நிலமையை, பொருத்தமான பெயர் கொண்டு அழைக்க முடியாமையால் சுருக்கமாக 'உலக மயமாக்கல்' என்கிறோம்.

*(தொடர்ச்சி 34ம் பக்கத்தில்)*

SRI MUTTU MARIYAMMAN JYOTHIDAM



ஸ்ரீ முத்துமாரி
அம்மன் ஜோதிடம்

ஜோதிடர் பரத்ராஜ்
சாஸ்திரிகள்
Astro-Palmist

RRR Cash & Carry
309 -311 London Road, West Croydon, Surrey,
CR0 3PA

Opening Hours: 9.00 a.m - 8.00p.m all 7 days.

SPOKEN LANGUAGES: TAMIL, HINDI, & ENGLISH.

Your Secret matters will be maintain confidently

உலகத்தில் உள்ள சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை, தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுவார். கணவன் மனைவி சண்டை, பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை, தொழில், உத்தியோகம், விசா பிரச்சனைகள், இப்படி பல்வேறான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். செய்வினை, பில்லி, சூனியத்தால் பாதிப்பு, பொறாமையின் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் ஓட்டப்படும். கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கு பலன் சொல்லிவிடாது தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் எப்போதும் கொழிக்க உதவும் லட்சுமி பூஜை செய்து தருகிறோம்.

An expert pandit at service. Past, Present and Future of your life, will be read over to you from your Numerology, Face reading, Palm reading & Horoscope reading Prediction in Business, Education, Job, love, Marriege, Family problem children, Divorse, Court problems, Visa requirements, Sickness, Promotion abroad Money, Removal All types of black magic and evil things by performing prayers.



Contact :- 0794 6599472 / 0794 6599402

# பலவந்தக் கலியாணம்



மனித உரிமைகளை அங்கீகரித்து உலகநாடுகள் பிரகடனப்படுத்திய சாசன மாவது ஆண்டு நிறைவை நினைவு படுத்தும் இவ்வேளையில், தனிப்பட்ட ஒரு நபர் தனது உரிமையைக் காக்க முடிகிறதா என்ற கேள்வி பலமாக எழுந்துள்ளது.

நாகரிகமடைந்த நாடுகளிலும் சரி, பின் தங்கிய நாடுகளிலும் சரி, மனித உரிமைகள் மீறப்பட்டே வருவது அன்றாடம் வரும் செய்திகளாகும்.

முன்னொரு காலத்தில் அடிமைகளாக அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்பட்ட கறுப்பின மக்களின் வாரிசாக வழிவந்த பராக் ஒபாமா இன்று அதே அமெரிக்க நாட்டின் சகல அதிகாரங்களும் கொண்ட அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை, மறுக்கப்பட்ட மனித உரிமையின் குரல் உலகெங்கும் கேட்க வழிவிட்டுள்ளது.

மேற்கூறிய செய்தி, கேட்பதற்கு இனிமையாக இருந்தாலும், கேட்க முடியாத செய்திகள் இன்னமும் ஒழிந்து தான் இருக்கின்றன.

1-12-2008 இரவு 7.00 மணிக்கு B.B.C மூலமாக ஒளிபரப்பப்பட்ட, பலவந்தமான கல்யாணங்கள் பற்றிய ஆவணப் படத்தை தற்செயலாகப் பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. இதில் எடுத்துக் காட்டப்பட்ட சம்பங்கள் மனதைப் பிழிந்தபோது மனித உரிமைகளின் அடித் தளமே ஆட்டங்கொண்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இந்த ஆவணப்படம் குறிப்பாக இளவயதுப் பெண்களின் அவல நிலையைச் சித்தரித்ததோடு, பாகிஸ்தானில் நிகழ்ந்த சில சம்பவங்களையே மையமாக வைத்து தொகுக்கப் பட்டுள்ளது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

ஐக்கிய இராச்சியத்தின் குடியுரிமை கொண்ட இளம் வயதுப் பெண்கள், பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டு அங்கு அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாக பலவந்தக் கல்யாணங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.


இக் கொடிய பிணைப்பிலிருந்து மீளவழி தெரியாமல் தத்தளித்த பெண்களுக்கு, உதவிக் கரம் நீட்டி, அவர்களை மீட்டு பழையபடி தமது பிறப்பிடத்திற்கே வந்துசேர, பாகிஸ்தானில் இயங்கும் British தூதரகத்தின் ஒரு பிரிவாக Forced Marriage Unit (FMU) மிகவும் சாதுரியமாக இயங்கி வருகிறது.

இந்த விசேட பிரிவின் செயற்பாடுகள் மூலம், கடந்த வருடம் மாத்திரம் 131 பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணம் கிடைத்துள்ளதாக மின் அஞ்சல் வழியாக அறிய முடிகிறது.

இக்குழுவில் கடமையாற்றும் சிறந்த அனுசரணையாளர்களில், ஈழத்தமிழர் பரம்பரையில் பிறந்து வளர்ந்து, பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் தீபன் செல்வரட்ணம் என்பவரும் ஆர்வமாகக் கடமையாற்றுவதை அந்த ஆவணப் படத்தில் காணக் கிடைத்தது.

இவருடைய பெற்றோர் மட்டுமல்லாமல், ஈழத்தமிழர்களே புழகாங்கிதமடைவதோடு, அவருடைய பணி மென்மேலும் வளர்ந்து, பெண் இனத்தின் அடிமைத் தளைகளை அறுத்தெறிய வாழ்த்துவோம்.

## கடல் மீன் பிடித்தலில் கட்டுப்பாடு



வேலைப்பழு காரணமாக வீட்டில் சமைக்க நேரமின்றி, மக்டொனால் போன்ற வேக உணவு நிலையங்களையே தஞ்சமாக நம்பி இருக்கும் குடும்பங்களுக்கு அதிர்ச்சி தரும் தகவல் ஒன்று.

மக்டொனல்ஸ் உணவுச்சாலைகளில் மிகப் பிரபல்யம் அடைந்துள்ள மீன் உணவுகளுக்கு தேவைப்படும் Walleye Pollock என்ற வகை மீன்கள் உற்பத்தியில் அருகிவரும் சமாச்சாரம் கண்டறியப்பட்டுள்ளது.

வட அத்திலான்ரிக் சமுத்திரத்தில் விளைச்சலாகும் இம்மீன்வகை சமீபகாலமாகக் குறைந்து வருவதை விஞ்ஞானிகளும் Green peace இயக்கமும் தங்கள் ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்துள்ளனர்.

இதன் காரணமாக இவர்கள் இவ்வகை மீன்பிடிப்பை வருடமொன்றிற்கு 500,000 தொன் அளவுக்கு கட்டுப்படுத்துமாறு, அமெரிக்க மீன் பிடித்துறையை வற்புறுத்தியுள்ளார்கள்.

இவர்களுடைய கோரிக்கையை ஆராய்ந்த அமெரிக்க மீன்பிடித்துறை அடுத்த ஆண்டு முதல், இந்த வெள்ளை நிற மீன்வகையைப் பிடித்துக் கொள்ளும் நிறையில் 18 விகிதம் குறைக்குமாறு, மீன்பிடியாளர்களை நிர்ப்பந்தித்துள்ளது.

ஆகவே, அடுத்த ஆண்டளவில் 815, 000 தொன்கள் வரைதான் வெள்ளை நிற மீன்கள் பிடிக்கப்படும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2005ம் ஆண்டில் பிடிக்கப்பட்ட வெள்ளைநிற மீன்களின் நிறை 1,500,000 தொன்கள் என மதிப்பிடுகையில், அடுத்த ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மீன் பிடிப்பின் கட்டுப்பாடு, மீன்பிடித் தொழிலாளர்களை வெகுவாகப் பாதிக்கக் கூடும் என அபாயச் சங்கு ஊதப்பட்டுள்ளது.

மீன்பிடித்துறையின் சரித்திரத்திலேயே பெரிய தொரு வீழ்ச்சியை எதிர்நோக்கும் மீன் பிடித் தொழிலாளர்களுக்காக கவலைப்படும், கடல்வழGreen peace இயக்குனர் John Hocevar மறுமுனையில் அழிந்துவரும் கடல்வள மீன்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க இத்தகைய தவிர்க்க முடியாத தீர்மானங்களை வரவேற்பதாகக் கூறியுள்ளார்.

வெள்ளைநிற மீன்களைப் பயன்படுத்தி மக்டொனால் விற்பனை நிலையங்களில் சுவைபடத் தயாரிக்கப்படும் Filet - O - Fish என்ற உணவுப் பண்டத்திற்கு தட்டுப்பாடு வராமல் இருக்க வேண்டுமென, மீன் உணவுப் பிரியர்கள் விரும்புவது நியாயமே.

இயற்கையின் மாற்றத்தை எவராலும் தடுக்க முடியாது என்பதுடன் அருகி வரும் உயிரினங்களைக் காப்பாற்ற வேண்டியது சூழலை நேசிப்பவர்களின் கடமையல்லவா?

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அழிக்கவும் விளம்பரம் வேண்டும்.

ஒரு பேப்பர்

**ELC Solicitors** Understanding your needs...

அனைவருக்கும் கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

**சட்டத்தரணிகளின் அடிப்படைத் தகைமைகள் என்ன?**

- வாடிக்கையாளர்களின் நலனில் முதற் கவனம்.
- பல மொழிகளில் தேர்ச்சி.
- எப்போதும், எவரிடத்தும் பாரபட்சம் பாராத நேர்மை.
- தகுதி, திறமை, மதிப்புமிக்க உயர்தரம்.
- வெற்றி ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாதவர்கள்.

இத்தனைத் தகைமைகளும் கொண்ட சட்டத்தரணிகள் இருக்கும் ஒரு நிறுவனம்.

**Don't just take our word for it ...**

"...This is to say a big thank you for your fast and professional way of dealing with my case. I think the service was excellent - I will definitely use you in the future and recommend the company to family & friends."

- *Karen Sommers*

As a well established firm whose reputation precedes us, superior client care is at the heart of our philosophy.

Our highly skilled, multi-lingual team provide honest and impartial advice, seeking always to act in your best interests.

We are Law Society Lexcel accredited, an honour bestowed on only 4% of law firms nationwide.

**LEGAL AID AVAILABLE FOR FAMILY/MATRIMONIAL MATTERS INCLUDING DIVORCE & ANCILLARY RELIEF, DOMESTIC VIOLENCE AND CHILDREN MATTERS**

அனைத்து விதமான immigration பிரச்சனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**SPECIALISTS IN:**

- Residential Conveyancing
- Re-mortgages
- Commercial Conveyancing
- Family Law
- Debt Recovery
- Civil Litigat ion
- Immigration

**COMPETITIVE PRICES - EXPERT ADVICE - QUALITY SERVICE**

**CALL US TODAY!**

**0800 027 8977**

ELC Solicitors

Understanding your needs...

St James House
105-11 3 The Broadway
West Ealing, London W13 9BE

www.elcsolicitors.com

# மருத்துவர் க.இந்திரகுமாரின் மறைவு - எழுத்துலகின் இழப்பு



நவஜோதி ஜோகரட்ணம்
*(ஒரு பேப்பருக்காக)*

ஆற்றல் மிகுந்த தமிழ், ஆங்கில எழுத்தாளராகவும், நூல் ஆசிரியராகவும், பத்திரிகையாளராகவும், நடிகராகவும் பன்முக ஆற்றல் கொண்ட மருத்துவர் க. இந்திரகுமாரின் மறைவு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகும்.

1970 இன் இறுதிக்காலங்களில் இலங்கைக் கொம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான பி. இராமநாதன் அவர்களின் இல்லத்தில் நான் அவரைச் சந்தித்த நாளிலிருந்து என் அன்புத் தந்தை அகஸ்தியருடன் கொம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அடிக்கடி வந்து கலந்துரையாடிய காலங்கள் வரை அவரின் இடதுசாரி சிந்தனையை நன்கு உணர்ந்திருந்தேன்.

யாழ் இந்துக்கல்லூரியிலிருந்து கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு தெரிவான இந்திரகுமார் தன் மருத்துவ படிப்பை முடித்தபின் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராகப் பணி புரிந்தார்.

அக்காலத்தில் அவர் கொம்யூனிஸ்ட் கட்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார்.

தீமிதிப்புப் பற்றிய விஞ்ஞான பூர்வமான கருத்துக்களை முன்வைத்து 'Fire Walking – The Burning Facts' என்ற அவரது ஆங்கில நூல் அப்போது மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்திய நூலாகும்.

இதே காலகட்டத்தில் மருத்துவத் துறை சாந்தவராக இருந்தாலும் விண்வெளித் துறையில் இவர் காட்டிய ஆர்வம் அறிவு பூர்வமானதாகும். 'யூரி கஹாரின் விண்வெளி ஆய்வு மையம்' என்ற பெயரில் அவர் குறித்த தகவல் மையம் ஒன்றைச் செயற்படுத்தி வந்தார்.

'மண்ணில் இருந்து விண்ணுக்கு' என்ற தலைப்பில் விண்வெளி யாத்திரை குறித்து வீரகேசரியில் தொடராக வெளிவந்து கொண்டிருந்த அவரது கட்டுரை பின்னர் நூலாக வெளிவந்து, இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதினைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய செயற்பாட்டாளராகவும் இந்திரகுமார் பணியாற்றியிருக்கிறார்.

தமிழில் விண்வெளித்துறை பற்றிய ஆய்வுத்துறைக்கு முன்னோடியாக நின்று இவர் ஆக்கியுள்ள படைப்புக்கள் மிக முக்கியமானவை.

'விண்வெளியில் வீரகாவியங்கள்: பூர்வீக மும்ம் முன்னோடிகளும்' என்ற தலைப்பில் விண்வெளிப் பயணங்களும் அது தொடர்பான முன்னோடி நடவடிக்கைகளும் பற்றிய சுவையான விஞ்ஞானக் குறிப்புக்கள், விளக்கப் படங்களுடன் இலகு தமிழில் இவர் எழுதிய நூல் தமிழக அரசின் விருதினையும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். முதல்வர் மு.கருணாநிதி இப்பரிசினை சென்னையில் வழங்கி கௌரவித்திருந்தார்

செங்கை ஆழியான் எழுதிய 'வாடைக்காற்று' நெடுங்கதை, இயக்குநர் பிறேம்நாத் மொறாயஸின் நெறியாள்கையில் படமாக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு வெளியான இந்தத் திரைப் படத்தில் மரியதாஸ் என்ற பாத்திரத்தை ஏற்று இந்திரகுமார் மிகச் சிறப்பாக நடித்திருந்தார். லண்டனில் தயாரிக்கப்பட்ட என். ராதாவின் 'சித்திரா' தொலைக்காட்சி தொடர் நாடகத்திலும் நடித்திருக்கிறார்.

லண்டனுக்குப் புலம்பெயர்ந்த பின்னரும் அவரது எழுத்துப்பணி தொடர்ந்த வண்ணமே இருந்தது. 'மேகம்' என்ற சஞ்சிகையை நடாத்தினார். ஒரு சில இதழ்களே வெளிவந்த 'விடுதலை' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டார். 'காலைக்கதிர்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் பணி புரிந்திருக்கிறார்.

பின்னாளில் தீவிர தமிழ்த் தேசிய ஆதரவாளராகத் திகழ்ந்த டாக்டர் இந்திரகுமார் தமிழகத்தில் பழநெடுமாறன் போன்ற தமிழ்த் தேசிய தலைவர்களுடன் மிக நெருக்கமான உறவு கொண்டிருந்தார். உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் முக்கிய செயற்பாட்டாளராக இந்திரகுமார் இயங்கியிருக்கிறார்.

இறுதி நாட்களில் மறைந்து போன லெமுரியாக் கண்டம் பற்றிய ஆய்வில் அவர் தீவிரமான அக்கறை காட்டி அது பற்றி விஞ்ஞான பூர்வமாக எழுதுவதற்கு பெரிதும் உழைத்து வந்திருக்கிறார்.

இதற்குப் பெருமளவு ரஷ்ய நூல்களை ஆராய்ந்து பெரும் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார். டயானா குறித்து 'டயானா வஞ்சித்தாரா? வஞ்சிக்கப்பட்டாரா?' என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல் சுவாரசியமான நூலாக பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

ஈழவர் திரைக் கலாமன்றத்தின் முக்கிய நிர்வாக உறுப்பினராக இந்திரகுமார் பணியாற்றியிருக்கின்றார்.

ஈழத்து அரசியலில் ஜி.ஜி. பொன்னம்பலத்திலிருந்து, 1070-77 காலப்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் நியமன உறுபினராகிதபால் தந்தி அமைச்சராகவிருந்த செல்லையா குமாரசூரியர், இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த பீற்றர் கெனமன் போன்ற முக்கிய அரசியல் தலைவர்களுடன் நேரடி தொடர்பு கொண்டவராகவும், இலங்கை அரசியலின் முக்கிய காலகட்டங்களின் சாட்சியமாகவும் அவர் இருந்திருக்கிறார்.

பல்வேறு துறைகளிலும் தனது ஆற்றலைப் பொறித்த மருத்துவர் இந்திரகுமாரின் மறைவு எழுத்துலகிற்கு ஒரு பேரிழப்பு.

## சிந்தனைத் துளிகள்

நீ எதனைச் செய்யப் போகிறாய்
என்பதை வைத்து நீ உன்னை எடை
போடுகிறாய்

நீ என்ன செய்தாய் என்பதை
வைத்தே மற்றவர்கள் உன்னை எடை
போடுகிறார்கள்


***

சாதிக்கத் தெரியாதவர்கள் போதிப்பதில்
நேரத்தைச் செலவிடுகிறார்கள்

***

பிறப்பால் தொடரும் உறவுகளை விட
நடத்தையால் தொடரும் உறவுகளே
உன்னதமானவை





வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்கள்

# *Asian Paradise*

Chinese, Sri Lankan & South Indian Food
Restaurant & Take Away

**Free Home Delivery**



**Outside Catering for Parties & Weddings**

**Opening Hours**


Monday- Tuesday 12.00pm – 11.00
Friday – 2.00pm – 11.30
Saturday – Sunday 12.00pm – 11,30pm

**Telephone Orders welcome**

HALAL

**Tel : 020 8952 7892**

851 Honeypot Lane, Stanmore
Middlesex, HA7 1AR



---

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது கிறிஸ்மஸ், புதுவருடநல்வாழ்த்துக்கள்


இலங்கை இந்திய உணவு வகைகள்மற்றும் மரக்கறிவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

TRANSFOOD IMPORTERS & DISTRIBUTORS
Ackerstasse, 30 & 33
40233 Dusseldorf
Germany

We are the distributors of
TRS, NIRU, Ahaa....







**We are specialised in Fresh Fruits and Vegetables from Asia and Africa**

**Telephone: 0211- 1795599 / 0211 – 3677277**
**Fax: 0211 – 1793067**
**Mobile: 0172 – 9819755 / 0172 – 2053664**


நம்பிக்கையும், நல்ல மதிப்பும் நிறைந்த "TRANSFOOD IMPORTERS & DISTRIBUTORS" உங்கள் எல்லா தேவைக்கும் நாடுங்கள்.

TROPICAL FOOD
THIEBOLDSGADDE 105
50767 KOLN
Telephone: 0221 8699520
Fax: 0221 8699521
E-mail: transfood@yahoo.com

# ஈழத் தமிழரின் வலியும் வேதனையும் எங்களுக்கும் புரியும்

## - தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறை

## - திருநங்கைகள் கூட்டமைப்பு




கோபி
*(ஒரு பேப்பர்)*

இன அழிப்பிற்கு உள்ளாகி வரும் ஈழத் தமிழரின் வாழ்வுரிமையை வலியுறுத்தி தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட் டங்கள் தனித்து அரசியற் கட்சிகளால் தூண்டி விடப்படும் ஒரு விடயமாக சிலர் கற்பிதம் செய்கிறார்கள்.

அரசியல்வாதிகளின் குரல் மேலோங்கிக் காணப்படுவதால், அடித்தள மக்களின் உணர் வுகள் அறியப்படாமலிருக்கின்றன. அண்மை யில், வெவ்வேறு தமிழக அமைப்புகள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டங்களை நடாத்தியிருக்கின்றன, அவை அரசியல் சாராத அமைப்புகள் என்ற வகையில் அப்போராட் டங்கள் அவர்கள் பிரதிநித்துவப்படுத்தும் மக்களின் குரலாகவே அமைகின்றது. அதற்கு சான்று பகிரும் வகையில், போராட்டங்களை நடாத்திய இரண்டு அமைப்புகள் பற்றிய சில தகவல்களை இங்கு தருகிறோம்

### தகவல் தொழில் நுட்பத் துறையினர் (IT industry)

'OMR சாலையில் டபுள் பெட்ரூம் பிளாட் வாங்குவது பற்றி திட்டமிடுகிறோம் நாம். மேலிருந்து விழும் குண்டுகளிலிருந்து தங் களைக் காத்துக் கொள்வதற்காக குடிசைக ளிலிருந்து வெளியேறி காடுகளில் தஞ்சம் புகுகிறார்கள் அவர்கள்.

இரவு கொசுக்கடியிலிருந்து தப்பிக்க என்ன வழி என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் நாம். பகலில் கடிக்க வரும் பாம்புகளிலிரு ந்து தப்பிக்கும் வழியறியாது அடர்ந்த வனங் களில் நித்தம் இறக்கிறார்கள் அவர்கள்.

அடுத்த வேளை KFC Chicken-ஆ அல்லது Pizza Hut-ஆ என்று நண்பர்களுடன் பேசுகி றோம் நாம். நாளைக்காவது ஒரு வேளை உணவு கிடைக்குமா என்று சொந்த நாட்டில் அகதிகளாகத் தவிக்கிறார்கள் அவர்கள்.

பொங்கலுக்கு ஊருக்குப் போக இரண்டு மாதங்களுக்கு முன்பே Online Reservation செய்கிறோம் நாம். எப்போது தாய்நாடு போவோம் என்பது குறித்து யாதொரு நம்பிக்கையுமின்றி அகதிகளாக உலகெங்கும் சிதறிக் கிடக்கிறார்கள் அவர்கள்.

சத்யம் சினிமா, MGM ரிசார்ட், சனிக்கிழமை இரவு கொண்டாட்டங்கள் என சுகமாய் வாழ் கிறோம் நாம். ஒவ்வொரு நொடியைக் கழிப்பதும் போராட்டமாய் வாழ்கிறார்கள் அவர்கள்.

நாமும் தமிழர்கள், அவர்களும் தமிழர்கள் எனில், அவர்களுக்காக என்ன செய்யப் போகிறோம் நாம்?

செய்ய வேண்டியது ஆயிரம் இருப்பினும், சிங்கள பேரினவாத அரசுக்கு எதிரான நமது எதிர்ப்பை, ஈழத்தமிழர்களுக்கான நமது ஆதர வைத் தெரிவிக்க ஒரு நாள் உண்ணாவிரதம் இருப்போம், வாருங்கள் நண்பர்களே!'

இவை டிசம்பர் 13ம் திகதி தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பத்துறையினர் நடாத்திய உண்ணா நிலைப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்து வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் காணப்பட்ட வேண்டுகோள்.

தமிழ் நாட்டில் தகவல் தொழில் நுட்பத் துறையினரின் பெற்றுள்ள முக்கியத்துவம் யாவரும் அறிந்ததே. மத்தியதர வர்க்கத் தினைச் சேர்ந்த ஒட்டு மொத்த மக்களும் அதன் திசையையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள இளையோரின் கனவும் நினைவும் அதுவாகவே இருக்கிறது. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதில் மட்டுமல்ல உலக தொழில்நுட்ப அரங்கில் தமிழனின் அடையாளத்தையும் அவர்கள் பதித்து வைத்திருக்கிறார்கள்.

மற்றைய துறை ஊழியர்களுடன் ஒப்பிடும் போது அதிக வருவாயை பெற்றுக் கொள்ளும் இவர்கள் சமூகநலனில் அக்றையின்றி பண மீட்டுவதிலும், அதனைச் செலவு செய்வதிலும் மாத்திரம் குறியாக இருக்கிறார்கள் எனக் குற்றம் சாட்டுபவர்களும் இருக்கிறார்கள்.

முன்பு ஒரு தடவை தமிழகத்து மக்களின் ஆதரவு நிலை பற்றி, எனது நண்பர் பாலா எழுதிய கட்டுரையைப் படித்து விட்டு, கருத் தெழுதிய இந்தியப் புலனாய்வுத்துறையில் பணிபுரிந்து இளைப்பாறிய கேணல் ஹரிகரன் அதனை முற்றாக மறுத்திருந்தார். தமிழ்நாட்டு மக்கள் தகவல் தொழில் நுட்பத்துறையின் மூலம் பணமீட்டுவதில் குறியாயிருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு ஈழத்தமிழர் பற்றி எவ்வித அக்கறையும் இல்லை என அவர் வாதிட்டிருந் தார். ஆனால் நிலமையின் தாற்பரியத்தை அவர் புரிந்து வைத்திருக்கவில்லை என்பதற்கு இந்த தகவல் தொழில் நுட்பத்துறையின் போராட்டம் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

பொதுவாகவே செய்திகளை விரைவாக அறிந்து கொள்ளும் தகவல்துறையினர் இவ்விதம் உணர்வு பூர்வமாகச் செயற்படு கிறார்கள் என்றால், தமிழ்நாட்டில் மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களாக இருக்கும் திருநங் கைகளும் தங்களது அமைப்புகள் மூலம் உண் ணாவிரதம், ஒப்பாரிப்போராட்டம் என தமது உணர்வுகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

### திருநங்கைகள் (அரவாணிகள்)



டிசம்பர் 8ம் திகதி சென்னையில் திருநங் கைகள் கூட்டமைப்பினால் நடாத்தப்பட்ட ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டங்களை முன்னின்று நடாத்திய பிரியா பாபு அவர்களை தொடர்பு கொண்டு, அவர்களது போராட்டம் பற்றிக் கேட்டேன். எனது பேசும் மொழியை புரிந்து கொண்டு அவர் முதலில் கேட்டது நீங்கள் ஈழத்தமிழரா என்பதுதான்.

இந்திய வம்சாவளியான பிரியா பாபுவின் தந்தை மலையகத்தில் தோட்டத் தொழிலாளி யாக பணிபுரிந்தார். சிறிமா- சாஸ்திரி ஒப்பந் தத்தின் விளைவாக அவரது பெற்றோர்கள் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட இரண்டு வயதுக் குழந்தையாக பெற்றோருடன் தமிழகத் திற்கு வந்தார். பிறப்பில் ஆணாகப் பிறந்து பெண்ணாக பால் மாற்றமான அவர், தற்போது அரவாணிகள் சமூக முன்னேற்ற சங்கம் (Social Integration and Development for Aravanis) என்ற அமைப்பின் தலைவியாக இருக்கிறார். அவருடனான எனது உரையாடலை இங்கு பதிவு செய்கிறேன்.

*ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் திருநங்கைகள் வாழும் தமிழ்நாட்டில் அவர்களது உரிமைகள் பாதுக்கப்படுகின்றனவா?*

அரசாங்கம் இப்போது அரவாணிகளுக்கு நிறைய உதவிகளைச் செய்கிறது. 2004ல் அரவாணிகளுக்கு வாக்குரிமை வேண்டும் என நீதிமன்றில் ஒரு ரிட்மனு தாக்கல் செய்திருந் தோம். அதன் பயனாக இப்போது எங்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. அது போலவே ரேசன் கார்டு (பங்கீட்டு அட்டை) உட்பட பல அரச உதவிகள் அரவாணிகளுக்கு கிடைக்கிறது. அரசாங்கத்தின் கவனமும், ஊடகங்களின் கவனமும் இப்போது எங்கள் மீது விழுகிறது. நாங்களும் நிறைய எழுத ஆரம்பித்துள்ளோம். நான் 'அரவாணிகள் சமூக வரைவியல்' என்றொரு நூலை எழுதினேன். வேறும் சில அரவாணிகளும் புத்தங்கங்களை எழுதியிருக்கிறார்கள். ஊடகங்களும் எங்களைப் பற்றி நன்றாக எழுதி வருகிறார் கள். ஆதலால் ஓரளவுக்கு எங்களுக்கான அங்கீகாரம் இப்போது கிடைத்திருக்கிறது என்று கூறலாம். இப்போது அரவாணி ஒருவர் இந்திய நிர்வாக சேவையில் நுழைவதற்கான பரீட்சைக்கு தயார் படுத்திக் கொண்டு இருக் கிறார். நிறைய அரவாணிகள் திரைப்படத்துறை, நடனத்துறை போன்றவற்றில் பணிபுரிகிறார் கள். இணையத்தள வடிவமைப்பிலும் வேலை வாய்ப்புகள் பெற்றிருக்கிறார்கள்.

*ஈழத்தமிழர் விடயத்தில் உங்களுக்கு எப்படி அக்கறை ஏற்பட்டது?*

நாங்களும் சமுதாயத்தில் ஒரு அங்கம் என்ற வகையில் எங்களைச் சுற்றி நடப்பவை பற்றி எங்களுக்கு அக்கறையும் ஈடுபாடும் இருக் கிறது. நாங்களும் தொலைக்காட்சி பார்க்கி றோம், செய்திகள் படிக்கிறோம். அந்த வகை யில் ஈழத்தமிழ் மக்களின் நிலைபற்றி அறிந்து வைத்திருக்கிறோம். பொதுவாக அரவாணிகள் இது போன்ற விடயங்களை மிகவும் உன்னிப் பாக அவதானித்து வருவார்கள்.

ஒரு போராட்டத்தை ஒழுங்கு செய்யும் அளவுக்கு எங்களிடம் நிதி வசதிகள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருந்தும் நாங்களும் எங்களது உணர்வுகளை காட்டு வதற்காக இந்தப் போராட்டங்களை ஒழுங்கு செய்தோம். அரவாணிகள் தங்களுடைய உரிமைகளுக்காக மட்டும்தான் போராடு வார்கள் என்ற எண்ணம் மற்றவர்களுக்கு இருந்தது. அப்படியல்ல என்பதனையும் இப் போராட்டங்கள் மூலம் நிருபித்துள்ளோம். ஒரு சமூகம் ஒடுக்கப்படுகிறது என்றால் அதன் வலியையும் வேதனையும் அரவாணி களைப் போல் வேறுயாராலும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. வாழும் இடத்திலிருந்து இடம்பெயர வேண்டியிருப்பது போன்ற துயரங் களை அரவாணிகளும் எதிர்கொண்டு வருகி றார்கள். அந்த வகையில் ஈழத்தமிழரின் துய ரும், வேதனையும் எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது, அதனால் இவ்விடயத்தை கையில் எடுத்து போராடுவதாக முடிவெடுத்தோம்.

*உங்களுடைய அமைப்பு பற்றி ..*

தமிழ் நாடு பூராவும் இருக்கும், ஒன்றரை இலட்சம் அரவாணிகளை பிரதிநிதிப்படுத்தும் வகையில் மாவட்ட ரீதியில் குறைந்தது இர ண்டு அமைப்புகளாவது இருக்கின்றன. இவ் வமைப்புக்கள் கூட்டாகச் சேர்ந்தே ஈழத் தமிழர் களுக்கு ஆதரவாக உண்ணாநிலைப் போராட் டத்தையும், ஒப்பாரிப் போராட்டத்தையும் முன்னெடுத்தோம்.

*ஈழத்தமிழர்கள் படும் துயரம் தொடர்பாக நீங்கள் கொண்டிருக்கும் அனுதாபம் என்ப தற்கு அப்பால், அவர்களது உரிமைகள் தொடர் பாக, அவர்களது உரிமைப் போராட்டம் தொடர்பாக என்ன கருத்துக் கொண்டிருக் கிறீர்கள்?*

எங்களது போராட்டத்தின் முக்கிய குறிக் கோள் போரை நிறுத்துவது. போரினால் எதனையும் தீர்த்துவிட முடியாது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நடுநிலையாளர்களின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தை நடாத்து வதன் மூலம் தீர்வினைக் காண வேண்டும். ஈழத்தமிழர்கள் தங்களது சொந்த மண்ணில் எல்லா வாழ்வுரிமைகளுடன் வாழவேண்டும் என்பதுதான் எங்களது வேண்டுகோள்.

*உங்களது நடவடிக்கையின் அடுத்த கட்டம்?*

எங்களது போராட்டத்தின் தொடர்ச்சியாக கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டு வருகிறோம்.



ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிட நிலையம்

SRI KARUMARI AMMAN JOTHIDA NILAYAM

பண்டிதர் அர்ஜுன் ரெட்டி சாஸ்திரி

EELAM ENTERPRISES

164B, Mitcham Road, London SW17 9NJ
(Near Selvarajah Gold House)
Contact: PANDIT A ARJUN REDDY SASTRY
**Mob.: 07529 723 111, 07529 723 118**

Seven days a Week from 10.00 am. Till 10.00 pm.



மெய்யன்பர்களே,

30 வருட அனுபவம் நிறைந்த பண்டிதர், கருமாரி அருள் கொண்டு கைரேகை மூலம், முகநாடிமூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் - கணவன் மனைவி ஒற்றுமை, குழந்தைப் பாக்கியம், கைரேகை, திருமண யோகம், தொழில், வியாதிகள், வியாபாரம், லட்சுமீகர விடயம், காதல், கல்யாணம், கோட்டு வழக்குகள், வாகனப் பொருத்தம், வீட்டு வாஸ்த்த, கண் திருஷ்டி ஆகிய அனைத்தும். தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். முந்திர தந்திரம், செய்வினைகள் போன்றவை ஹரி ஓம் மந்திரத்தினால் பரிகாரம் செய்யப்படும்.

Pandit A Arjun Reddy Sastry



Through face – palm reading "Hore-scope" Date of birth, Numerology: So, come and consult him once. He will solve and guide all your problems like health, business, marriage, education, carrier/job, abroad, promotion, land. Court, birth of children, visa and family problems etc. He has done protection things for house, house vasthu, shop and personal matters etc. English, Tamil, and Hindi are the Languages of contact.

Confidentiality will be maintained for your secret matters.

# FINE ARTS EDUCATION DEVELOPMENT COUNCIL
# UNITED KINGDOM
## INTERNATIONAL FINE ARTS EXAMINATION - 2009

Application Form

### FINE ARTS EDUCATION DEVELOPMENT COUNCIL - UNITED KINGDOM

International Fine Arts Examination - 2009

***APPLICATION FORM - UK Candidates***

**Examination by Professionally Qualified and Experienced Teachers.**
*(Fine Arts Examination in the UK & Europe)*

**Examination Date:** 01-03-2009

TITLE: Dr/Mr/Mrs/Miss/Master  DATE OF BIRTH: ____ / ___ / ____

Surname (Parent )_______________________________________________

First Name: ____________________________________________________

*e-mail Address*: __________________ @ __________________

Address: ____________________________________________

____________________________________________

____________________________________________

Post Code:  Tel No:

**Practical & Theory**

**ALL GRADES**

From 1- 7, Diploma and Post Diploma

**Application Closing Date**

01-02-2009

| No | Subject | Grade | Theory / Practical | Teacher / School | Fees |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | *Total Amount* | |

பாடங்கள்: பரதநாட்டியம், புல்லாங்குழல், மிருதங்கம், வீணை, வயலின் வாய்ப்பாட்டு, இசை விசைப் பலகை (keybord)

**Venue - UK**

Heston Community School
Heston road, Heston.
Middlesex, TW5 OQ5

Contact

**020 3084 4978**
**079 3090 4902**
**079 5627 7718**

| GRADE | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| FEES | £10.00 | £12.00 | £15.00 | £18.00 | £20.00 | £20.00 | £20.00 | |
| Grade 8 - Diploma - " " | | | | £50.00 | | | | |
| Post Diploma - " " | | | | £75.00 | | | | |

***Note: (1) - Late fees £5.00 per subject (2) - No refund of examination fees or change of date, will be made under any circumstances.***

***ALL PAYMENTS SHOULD BE MADE BY CHEQUE / BANKERS DRAFT / POSTAL ORDER payable to:*** **HTKK**

*Please forward the completed application form with the appropriate fee to:*
*THE CO-ORDINATOR, FEDC, 95, Millfarm crescent, Hounslow, Middlesex. TW4 5PJ*

மாணவர்களின் விண்ணப்பப்படிவத்துடன் மாணவரின் ஆசிரியர் தனது பாணிக்கேற்ற பாடத்திட்டத் திற்கமைய முழு அடவுகளும் கற்பிக்கப்பட்டதை எழுத்து மூலம் உறுதி செய்ய வேண்டும்.

*Applicants are kindly requested to contact the co-ordinator if admission card is not received by 22nd Feb 2009*

Please send stamped self - addressed envelope (A5 Size) to send you admission card.

# மன்மோகன் சிங்கும் கருணாநிதியும் பதில்கூற வேண்டிய கேள்விகள்

**பழ. நெடுமாறன்**
*(தமிழ்குரலில்)*

இந்தியாவிலிருந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் ஆபிரிக்காவைச் சேர்ந்த சோமாலியா கடற்பகுதியில் இந்தியக் கடற்படை வீரசாகசம் புரிந்துள்ளது.

இந்தியக் கடற்படையில் உள்ள ஐ.என்.எஸ். தபார் எனும் போர்க்கப்பல் சோமாலியா கடற்கொள்ளையரின் தாய்க் கப்பலை சுட்டு மூழ்கடித்துள்ளது.

சோமாலியாவை ஒட்டியுள்ள ஏடன் கடல் பகுதியில் கடற்கொள்ளை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது. இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 200 க்கும் மேற்பட்டோரின் சரக்குக் கப்பல்கள் கடத்தப்பட்டுள்ளன.

மிகப்பெரிய தொகைகளை பெற்றுக் கொண்ட பிறகே பல கப்பல்களை கடற் கொள்ளையர்கள் விடுவித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்திய கப்பல்களும் பிற நாட்டுக் கப்பல்களில் வேலைப்பார்த்த இந்திய மாலுமிகளும் கூட கடற்கொள்ளையரின் தாக்குதலுக்குத் தப்பவில்லை.

இந்த சூழ்நிலையில் இந்திய அரசு தமது கடற்படையைச் சேர்ந்த மிகப்பெரிய போர்க்கப்பல் ஒன்றை அந்தப்பகுதிக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுத்தது. இத்துடன் நிற்கவில்லை. மேலும் ஐ.என்.எஸ். வீரட் என்னும் விமானம் தாங்கிக் கப்பலையும் அப்பகுதிக்கு அனுப்பியுள்ளது. மேலும் நான்கு போர்க்கப்பல்களை அங்கு அனுப்பவும் இந்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

'சோமாலியா கடற்கொள்ளையர்கள் சரக்குக் கப்பல்களை கடத்துவதேடு நிற்கவில்லை. அந்தக் கப்பலில் உள்ள மாலுமிகளையும் பிற பணியாளர்களையும் அடிமைகளாக்கி க் கொள்வது, சித்திரவதை செய்வது, இனப் படுகொலை செய்வது போன்ற அட்டூழியங் களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். எனவே அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது' என இந்திய கடற்படைத் தளபதிகளில் ஒருவர் கூறியுள்ளார்.

இந்திய கடலோரங்களை காவல் காக்கும் கடற்படையாக மட்டும் விளங்காமல் ஆழ் கடலில் சென்று எதிரிகளை தாக்கும் அளவிற்கு நமது கடற்படை புதிய வடிவம் கொள்ள வேண்டும் என பலகாலமாக கடற்படை தலைமை இந்திய அரசை வலியுறுத்தி வருவதன் அவசியத்தை சோமாலியா கொள்ளையர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் உறுதி செய்துள்ளது.

ஏற்கனவே 2006 ஆம் ஆண்டில் லெபனானில் நடைபெற்ற உள்நாட்டு போரில் சிக்கிக் கொண்ட இந்தியர்களை பத்திரமாக மீட்பதற்காக ஏவுகணைகள் பொருத்தப்பட்ட இந்திய கடற்படை கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டு வெற்றிகரமாக இந்தியர்கள் மீட்கப்பட்டனர்.

சோமாலியா கடற் பகுதியில் வீர சாகசம் புரியும் இந்திய கடற்படை மன்னார் வளைகுடாப்பகுதியில் ஆமையாக, ஊமையாக அடங்கிக் கிடக்கிறது.

உலகின் 5 ஆவது வலிமைவாய்ந்த கடற் படையாக திகழும் இந்திய கடற்படை ஆழ்கடலில் கூட எதிரிகளை வென்றடக்கும் வலிமையும் திறமையும் படைத்தது என மார் தட்டிக் கொள்கிறது. ஆனால் சின்னஞ்சிறிய சிங்களக் கடற்படை கடந்த 25ஆண்டு காலமாக தொடர்ந்து தமிழக மீனவர்களை கொன்று குவிக்கிறது. அதைத் தடுக்கவும் நமது மீனவர்களை காப்பாற்றவும் கடமைப்பட்ட இந்திய கடற்படை செயலற்றுக் கிடக்கிறது.

சோமாலியா கடற் கொள்ளையர்கள் செய்து வரும் இனப்படுகொலை, சித்திரவதை போன்றவற்றை சிங்கள வெறியர்கள் தமிழக மீனவர்கள் மீது நடத்தி வருகிறார்கள். சோமாலியா மீது பாயும் இந்தியக் கடற்படை சிங்களவரிடம் பதுங்குகிறது.

தமிழ்நாட்டில் 13 கடலோர மாவட்டங்கள் உள்ளன.

இம்மாவட்டங்களில் 590 மீனவ கிராமங்கள் கடலை மட்டுமே தங்கள் வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்து வருகின்றன.

**சோமாலியா கடற்கொள்ளையர்கள் செய்து வரும் இனப்படுகொலை, சித்திரவதை போன்றவற்றை சிங்கள வெறியர்கள் தமிழக மீனவர்கள் மீது நடத்தி வருகிறார்கள். சோமாலியா மீது பாயும் இந்தியக் கடற்படை சிங்களவரிடம் பதுங்குகிறது.**

1000 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த நெடிய கடற்கரையில் நாகப்பட்டினத்திலிருந்து குமரி வரை 750 கிலோ மீற்றர் தூரமாகும்.இந்தப் பகுதியில் 5 இலட்சம் மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

அதேபோல எதிர்க்கரையில் இலங்கையின் கிழக்குப்பகுதியில் சிலாபத்திலிருந்து பருத்தித் துறை வரை 700 கிலோமீற்றர் நீளம் உள்ள கடற் கரையோரமாகவும் அருகிலுள்ள தீவுகளிலும் 3 இலட்சம் தமிழ் மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த இருகரைகளிலும் சுமார் 8 இலட்சம் தமிழ் மீனவர்கள் வாழ்கிறார்கள்.

தமிழகக் கரையோர மீனவர்கள் ஆண்டுக்குத் தோராயமாக 3 இலட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் தொன் கடல் உயிரினங்களையும் இலங்கைத்தமிழ் மீனவர்கள் ஆண்டுக்குத் தோராயமாக 2 இலட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் தொன் கடல் உயிரினங்களையும் பிடிக்கின்றனர்.

இந்தியாவில் மொத்த மீன் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 21 சதவீதமாகும். இந்தியாவின் மொத்தக் கடற்பரப்பில் சிறுப்குதியே தமிழகத்தில் அமைந்திருந்தாலும் மீன் உற்பத்தியில் தமிழகம் முன்நிற்பதன் காரணம் நமது மீனவரின் தளராத முயற்சியும் அயராத உழைப்புமே தமிழக மீன் உற்பத்தியில் பெரும் பங்கை அளிப்பவர்கள் இராமேஸ்வரத்தை ஒட்டி வாழும் மீனவர்களே.

**இந்தியாவின் இறையாண்மை சிங்களக் கடற்படையால் அப்பட்டமாக மீறப்பட்ட போது அதைத் தடுக்கும் துணிவோ அல்லது நமது குடிமக்களைக் காப்பாற்றும் திறமையோ இல்லாமல் இந்திய கடற்படை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.**

ஆனால், கடந்த 25 ஆண்டுகாலமாக இவர்களின் நிலைமை என்ன? நமது மீனவர்கள் கடலில் தங்களின் தொழிலைச் செய்ய முடியவில்லை. இலங்கையில் வாழும் தமிழ் மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கக்கூடாது என சிங்கள அரசு தடை விதித்துள்ளது. மொத்தத்தில் இரு கரையிலும் வாழும் மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

1983 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை இந்த 25 ஆண்டு காலத்தில் நமது மீனவர்கள் மீது சிங்கள கடற்படை சுமார் 300 தடவைக்கு மேல் தாக்குதல் நடத்தியுள்ளது. 400 க்கும் மேற்பட்ட நமது மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1000 க்கும் மேற்பட்ட மீனவர்கள் படுகாயமடைந்துள்ளனர். பலநூறு கோடி ரூபா பெறுமதியான மீனவர்களின் படகுகளும் வலைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனாலும், இந்தியக் கடற்படையும் கடலோரக் காவல்படையும், சிங்கள கடற்படையினரின் அத்துமீறல்களைத் தடுக்கவோ, நமது மீனவர்களைக் காப்பாற்றவோ எதுவும் செய்யவில்லை.

அதே வேளையில் இலங்கையின் தென் கிழக்குக் கோடியில் வாழும் 2 இலட்சம் சிங்கள மீனவர்கள் எவ்வித தடையுமில்லாமல் இந்திய கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடித்துச் செல்கின்றனர். இந்திய கடற்படையோ அல்லது கடலோரக் காவல்படையோ அவர்களை விரட்டியடிக்க எதுவும் செய்யவில்லை.

தமது கடற்பகுதியில் நமது மீனவர்களைத் தாக்கிய சிங்களவர்கள் அத்துமீறி தனுஷ்கோடியில் உள்ள ஓலைக்குடா என்னும் மீனவ கிராமத்தில் புகுந்து குடிசைகளையெல்லாம் கொளுத்தி மீனவர்கள் சிலரைச் சுட்டுக் கொன்றனர். அவர்களின் படகுகளும் வலைகளும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இந்திய மண்ணுக்குள்ளேயே நுழைந்து இந்திய குடிமக்களையே தாக்கும் துணிவு சிங்களவருக்கு ஏற்பட்டது.

இந்தியாவின் இறையாண்மை இவ்வாறு அப்பட்டமாக மீறப்பட்ட போது அதைத் தடுக்கும் துணிவோ அல்லது நமது குடிமக்களைக் காப்பாற்றும் திறமையோ இல்லாமல் இந்திய கடற்படை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. கடந்த 25 ஆண்டு காலத்தில் இந்திய எல்லைக்குள் அத்துமீறிய சிங்கள கடற்படை வீரர்கள் ஒருவரைக் கூட இந்திய கடற்படையினர் சுட்டதுமில்லை, சிறைப்பிடித்ததுமில்லை.

1983 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரங்கள் நடைபெற்ற போது தங்களின் சொந்தப் படகுகளில் குடும்பங்களுடன் ஏறி தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்களுக்குச் சொந்தமான 500 க்கும் மேற்பட்ட படகுகளை இந்தியக் கடற்படை பறிமுதல் செய்தது. அவைகளெல்லாம் இப்போது சிதிலமாகி அழியும் நிலையில் உள்ளன.

வீடுகளை இழந்து சொந்த மண்ணில் வாழ வழியில்லாமல் உயிர்களைக் காக்க தமிழகம் நோக்கி ஓடிவந்து தஞ்சம் புகுந்த அகதித் தமிழர்களின் படகுகளைப் பறிமுதல் செய்வதில் வீரம் காட்டிய இந்தியக் கடற்படை அத்துமீறிய சிங்கள கடற்படையின் ஒரு சிறு கப்பலைக் கூட இதுவரை பறிமுதல் செய்ததில்லை.

31.5.07 அன்று இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் சென்னைக்கு வந்து தமிழக முதலமைச்சர் கருணாநிதியிடம் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு தமிழக மீனவர்களை இனி சிங்கள கடற்படை சுடாதென உறுதி கூறினார்.

அதன் பிறகு 14.10.08 அன்று தமிழக முதலமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க உரிய நடவடிக்கைகளை இந்திய அரசை வற்புறுத்தும் வகையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அவரும் இலங்கை அதிபருடன் பேசி இனித் தமிழக மீனவர்கள் தாக்கப்படமாட்டார்கள் என வாக்குறுதி அளித்தார். ஆனாலும் இன்னமும் தாக்குதல்கள் தொடர்ந்தும் நடக்கின்றன.

சோமாலியாக் கடலில் வீரசாகசம் காட்டும் இந்திய கடற்படை, மன்னார் கடலில் முடங்கிக் கிடப்பது ஏன்? அதன் கரங்களைக் கட்டிப்போட்டது யார்? கொல்லப்படுபவர்கள் தமிழர்கள் தானே என்ற அலட்சியம் காரணமா?

இந்தக் கேள்விகளுக்கு பிரதமர் மன்மோகன் சிங்கும் தமிழக முதலமைச்சர் கருணாநிதியும் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர

INSIGHT SYSTEM



வெளிவந்து விட்டது. Life in the UK பாட வழிகாட்டி– அதன் தமிழ் மொழி பெயர்ப்பு மற்றும் 2000க்கும் மெற்பட்ட பயிற்சி வினாக்கள் அடங்கிய CDக்கள்.

- பிரஜாவுரிமை பெறுவதற்க்குரிய LIFE IN THE UK வகுப்புக்கள்
- கம்பியூட்டர் வகுப்புக்கள்
- ESOL ஆங்கில வகுப்புக்கள்

மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த செவை.

மேலும் Home Office விண்ணப்ப படிவங்;கள் பூர்த்தி செய்தல் மற்றும் அது சம்பந்தமான ஆலொசனைகள்.

பிறப்பு திருமண இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் செய்தல் பொன்ற செவைகளும் ஆரம்பம்..

தொடர்புகளுக்கு: 0790 88 66 300

# Tamil Nadu's Political Leadership Barking Up The Wrong Tree



*Karunanithi*



*Vaiko*



*Jeyalalitha*



*Rajapakse*



*Sarath Fonseka*



*Manmohan Singh*

**By M.G. Devasahayam**
THE STATESMAN

"The Indian Government would never influence Sri Lanka to restore the ceasefire and it would not listen to the political "jokers" of Tamil Nadu." So goes the free-wheeling interview to Colombo's Sunday Observer by Sri Lanka's foot-in-the-mouth Army Commander Lt. General Sarath Fonseka.

This has left the Tamil Nadu political leadership red in the face and they are demanding the expulsion of the Sri Lankan High Commissioner from New Delhi if the General does not tender an unconditional apology.

Perhaps the political leadership is barking up the wrong tree. If events of the past are any indication Gen Fonseka would not have made these derisive remarks without the blessings of the security cum foreign establishment of the Government of India. It looks as if the General has conveyed exactly what this "establishment" wanted to communicate to the political leadership of Tamil Nadu!

How else does one interpret the callous and cavalier attitude of the Prime Minister and Foreign Minister to the repeated pleadings of the political parties and state legislature in Tamil Nadu to halt the horrendous war and the resultant miseries heaped on the Tamil minorities in Sri Lanka? What is worse, each time such a request goes to New Delhi, the hot line to Colombo seem to buzz only to communicate the opposite message!

There are two specific instances. Soon after the Tamil Nadu Assembly passed an unanimous resolution in October threatening en masse resignation of MPs if the Government of India failed to halt the war and the atrocities in Sri Lanka, New Delhi's "security cum foreign establishment" post-haste dispatched a high-power team to Colombo comprising Ambassador NN Jha, former State Governor and High Commissioner for India in Sri Lanka, Ambassador KPS Menon, former Foreign Secretary, who at one time served in Sri Lanka, Dr Ravni Thakur, a specialist in International Relations and Joint Secretary, Foreign Affairs Cell, All India Congress Central Committee and Dr Seshadri Chari, an economist specialising in international trade and past editor of Organiser, the official journal of the BJP. In a hurriedly convened seminar of neo-liberals in Colombo on 22 October, this delegation declared: **"While the DMK was a small party in the ruling UPA, its politicians do not speak for the whole of Tamil Nadu. The recent sll party conference called by the DMK was boycotted by the major political parties of Tamil Nadu as well as by the national parties. Statements by one political party could not be taken as representative of the entire political spectrum." These worthies went on to assure the Sri Lankan Government that "the Indian centre was for a no-interference policy on Sri Lanka. It would not prevail on Sri Lanka to halt military operations because "it was for tackling terror head -on". This then was the fate of the "resignation episode".**

This time around following the meeting of MPs delegation and all-party delegation led by the chief minister himself the message from New Delhi's "security cum foreign establishment" has come blunt but indirect from the Sri Lankan Army Chief: "You are all a bunch of jokers. Our agenda is different, do not waste our time." If some of the politicians who were part of these delegations are to be believed, the body language and mannerism adopted by the Prime Minister and Foreign Minister during the meetings also conveyed a similar message. The promise of sending the Foreign Minister to Colombo as early as possible was only a decoy employed by these bigwigs!

In his interview to the Canadian daily National Post a couple of months back Gen Fonseka had said: "I strongly believe that this country belongs to the Sinhalese but there are minority communities and we treat them like our people… We being the majority of the country, 75 per cent we will never give in and we have the right to protect this country… We are also a strong nation … They can live in this country with us. But they must not try to, under the pretext of being a minority, demand undue things." The sum and substance of this provocative statement by Sri Lankan Army Chief is that the Tamils there should either learn to live as second-rate citizens or go away to other countries (meaning India!).

Instead of repudiating this venom in strong terms, President Rajapakse indulges in philosophical skullduggery by enunciating a 4D principle: "The current military operations being carried out to build the environment required to free our own Tamil brothers and sisters from the cruel grip of terror and implement a just and enduring political solution based on the four "Ds" – Demilitarisation, Democratisation, Development, and Devolution."

Asked to explain the order of this 4D, the President was candid: "Without demilitarisation first, you won't be able to achieve anything. No democratisation, no development, no devolution. It is useless to give them devolution when they are not ready to accept it or you can't implement it." Indeed a strange and skewed logic to implement a 'just and enduring political solution!' Destroy first and then build! This kind of chicanery just will not work. To understand the core conflict in Sri Lanka one has to go back to the resolution unanimously adopted at the first national convention of the Tamil United Liberation Front held at Vaddukoddai on May 14, 1976 chaired by its founder SJV Chelvanayakam MP.

Salient grievances outlined in the Resolution pertained to "placing the stamp of inferiority on Tamils and the Tamil Language"; "denying to the Tamils equality of opportunity in the spheres of employment, education, land alienation and economic life in general"; "systematically cutting them off from the mainstream of Tamil cultures in South India while denying them opportunities of developing their language and culture in Ceylon" and "imposing on the Tamil Nation a constitution drafted, under conditions of emergency without opportunities for free discussion".

## No interaction

After over three decades, all these issues are still alive while war is raging leading to death, destruction, untold hardships and grave humanitarian crisis and there has been no meaningful interaction in the island to build a consensus on any national issue.

There is urgent need to adopt a multi-pronged approach to address the Sri Lankan conflict, which has not been amenable to peaceful resolution so far. This must be done by adopting the following steps:

* De-escalation of war and military disengagement.

* Demilitarisation of the ethnic conflict.

* Ceasefire.

* Resumption of negotiations leading to an abiding settlement acceptable to all communities.

Till some months ago President Rajapakse was willing to adopt this course. But the "Sri Lankan eagles" in cohort with the "security cum foreign establishment" in New Delhi seem to have drifted him towards adopting an attitude of intransigence to the detriment of peace and security both in Sri Lanka and India.

*The writer is a former IAS officer of the Haryana cadre.*

## An Appeal
## Emergency Fund for Vanni People

The Tamils Heath Organisation (UK) (THO-UK) is launching a Christmas Appeal to raise the much urgently needed funds to support the healthcare needs in the Vanni region of Sri Lanka.

The humanitarian crisis faced by Tamils in Sri Lanka has seen little respite in recent years, with the ongoing war and recent flooding, the situation seems to be going from bad to worse.


It is estimated that more than 230,000 IDPs remain in the Vanni. Schools had been closed and students are studying in temporary sheds and under trees. Report says that 9,556 students do not attend Schools. More than 50% of public do not have toilet facilities. War victims need artificial limbs and many different walking aids. There is spread of Communicable diseases like Malaria and Dysentry. Food is in short supply.

Heavy monsoon rain and floods have added to the misery of the population. There are no INGO's left in Vanni to carry out the much needed relief support since September when the Government instructed all international NGOs to relocate away from the conflict zone. THO (UK) is appealing urgently for funds and has given the following telephone number to contact for donations.

**Call: 020 3393 6650**

அனைத்து வகையான இலங்கை
இந்திய உணவுப் பொருட்கள்,
கடலுணவு வகைகள், பசுமையான
மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப்
பொருட்கள், மளிகைப்பொருட்கள்
பாத்திர வகைகள், தமிழ்,
இந்தி சினிமா DVD, CD, VHS
போன்றவற்றை தரமாகவும் நியாயமான
விலையிலும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நம்பிக்கையுடன் நாட வேண்டிய இடம்

அனைத்து உள்ளங்களுக்கும் இனிய கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்கள்



கடல் கடந்து வாழ்கின்ற
உங்கள் உறவுகளுக்கு
பணம் அனுப்புவதற்கும்
அழையுங்கள்....
020 8905 7765

MARUTHI CASH & CARRY
15 - 17 Queensbury Station Parade Queensbury HA8 5NR
Tel: 020 8952 66 55 | 020 8381 3442 | Fax: 020 8905 7546

# Human rights - What human rights?

By Metis
GROUNDVIEWS.ORG

We never had human rights in the past, at least not in the sense we know it today. We probably had a better record of animal rights in our glorious past before 1505 when foreign aggressors corrupted our ancient culture. True those other countries too had practiced similar or even worse forms of torture. But the difference is that they don't glorify their past.

The Human Rights declaration of 1948 was signed by the members of the UN. We signed it but with what commitment. Oaths, affirmations and treaties are signed to be routinely violated. The first serious violations were in the 1980s. But Human Rights- original definition which animated HR movement centered on the twin concepts of freedom of self-determination and freedom from tyranny. These ideals find their purest expression in the belief that all human beings have the elemental rights to free speech and a free press, to worship in the manner of their choice and to associate with those of like mind, to own property and to move within and across national borders, to receive equal treatment and due process under the law, and to participate in the government. The rule of law must be distinguished from the arbitrary rule of man. Nelson Mandela said "The rule of law refers to a structural exercise of rule as opposed to the idiosyncratic will of kings and princes. Even where the latter may express itself benevolently, the former is morally & politically superior" We were used only to the arbitrary rule of our kings and nobles. Never mind the so-called 'Dasa Panatha' or the Ten Commandments that the ruler was supposed to follow.

We violated the rights of the Tamil people from 1956 onwards. They were "foreign guests who had exceeded their stay". Never mind if Vijaya and his men were themselves intruders who practiced deception against Kuveni and her tribe who were foolish enough to trust them. Ever since then we as a nation have deceived and betrayed others. The British called it native cunning where the word of honour counts for nothing.

Abductions, kidnappings and extra-judicial killings - the so-called white van syndrome has engulfed us. Terrorist suspects have no human rights. The militarily organized practice of torture, the sexual abuse, and all other abuses of men and women, clandestine incarcerations and forced disappearances, are perhaps new in our history. Those lawyers who take up their cases have to be hounded out, bombed and terrorized. Terrorist suspects have no human rights. Any form of torture goes. National security is more important than their human rights.

When are the people and their representatives going to wake up and realize that the country is governed by war criminals who are hell bent on ushering in a police state?

When are the people and their representatives going to wake up and realize that the country is governed by war criminals who are hell bent on ushering in a police state? Yeats bemoaned an era when the best lacked all conviction, while the worst were full of passionate intensity. Today, the Establishment blusters and hectors. Gotabaya and Sarath Fonseka scold and forebodes, the President struts and smirks. Meanwhile, the giant, timid chorus listens politely to the deafening silence of the outraged-and the mad march of war goes on.

The peasants - that segment of society traditionally known to be foolish and naïve, cheer every so-called battle victory. The middle classes and professionals through suspension of all critical faculties and indifference to the truth, defy logic and evidence by supporting the war despite 200,000 languishing in camps exposed to the elements which are presently raging and roaring.

It's as true here in today as it was in 19th century England, and its message explains how to understand and view our affairs of state. Virtually everything we see or hear outside our own personal communications, are determined by the interests of the Government. A Sri Lankan is someone who has sworn an oath of allegiance to the Constitution. It contains a chapter on Fundamental Rights. Right now we have citizens who don't even understand what that document is.

Sometimes you look around and wonder how things could have gone so wrong so quickly. The militarily organized practice of torture, the sexual abuse, and all other abuses of men and women, clandestine incarcerations and forced disappearances, are new in our history. We are purveyors of violence, torture, abductions and killings. Death and misery are our principal weapons in the war against a section of the people whom we consider our own.. Everything is for sale here, even men's tormented souls-at least, those who still possess them.

Sri Lanka are said to be eight in the order of merit for genocide. The state of our nation is in the grip of anomie - meaning 'a lack of the usual social or ethical standards'. This word is derived from the Greek term 'anomos' which means "lawless". It is obligatory that we ask ourselves how and why we have arrived at such a state.

## But who cares.

The fact of the matter is we have a government that will do what it wants to do for the next few years," "The worst is yet to come. It's sort of like we're essentially powerless [and] just play it out."

We are fast descending into a Dark Age that has engulfed many a civilization not only in the distant past but also in more recent times. Jane Jacobs describes a Dark Age as a 'culture's dead end', where even the memory of what was lost was also lost. This phenomenon is fast engulfing all levels of society and unless it is stopped in its tracks and reversed forthwith we are indeed doomed.

# Santa, Court vacations and a window to Kilinochchi

Kusal Perera
SERENDIBINC.COM

The government's unofficial and voluntary voice the JHU, had its paternal monk who specializes on ancient ruins, Venerable Medhananda on State owned Independent Television Network (ITN) and its radio channel "Lakhanda" on Thursday morning accusing all who sided with the price reduction of petrol as "traitors" and bootlickers of separatist Tigers. "the government's income to fund the war is what they want to take away." preached the monk in a spiteful voice. The JHU monk said the high petrol prices in the local market despite falling world prices was what gave the government money to fight the war to save the unitary State.

Thank god for them, thought Azdak. The crude oil prices dropped down by almost 100 US dollars from 147.02 US dollars per barrel for them to fight the war.

Petrol wasn't the only thing that kept people guessing through the week. Will SB have his chance to contest elections? Azdak argued he would. His FR petition to the Supreme Court would not have been allowed leave to proceed, if not, said Azdak at a friend's place. He perhaps didn't want SB's name back in the voter's registry. Few calls to many influential personalities including another pleasing Buddhist monk confirmed SB is out of trouble. "Wait till tomorrow" the influential high priest told. "Theruwan Saranai" he blessed before leaving the call. This after all is "Lord Buddha's Land" and the monks should be able to do many things.

What the people had stopped guessing is the day "Kilinochchi" would fall completely. With confusing reports in a more confused media, Kilinochchi was just a window pane away, closer than Russia was, to Sarah Palin from Alaska. Now for over a month, the window doesn't shut, nor does Kilinochchi fall. By Wednesday last week, fighting around Kilinochchi had seen very "stiff resistance by the enemies", according to military parlance. The damages were high too making it a "Black Tuesday". While the numbers don't come through independent sources, the smuggled figures claimed over 170 soldiers had died in battle, while around 480 were injured as against 45 to 50 Tiger cadres killed. The LTTE had rained mortar and shells with abundance, said sources close to the government establishment.

Again the Indians have played it against the government, argued Azdak and wasn't taken seriously by those who believe India, that's Delhi, supports elimination of Tigers, no matter who does it. But India also wants that "no matter who" to play it on their note. Or else, the Indian navy sleeps and the Tigers smuggle arms, was Azdak's thinking. "Political jokers" in Tamil Nadu also have a stake in the pie, said Azdak. Defence columnists during the week end speculated over LTTE having gained fire power in an unusually high pitch. So, Kilinochchi would be just beyond the window for some more time to come and the dead cert forecast of wiping the Tigers clean before the year is out, well....2009 is only a week away.

Meanwhile the state owned Rupavahini Corporation which made news with Dr. Mervyn leaving its premises with humility after being 'kambussed' by the employees some months ago, hit headlines again, this time throwing its Chairman out of the premises on Thursday. They demanded reinstatement of 05 interdicted trade union leaders and their annual bonus without a reduction. On Thursday they added another demand and wanted the Minister to sack the Chairman. Whatever his doctorate, Athugala has all the qualities to be a Chairman under this regime said an employee friend to Azdak. "He has nothing called shame."

At least Dr. Mervyn has something in him. He at least promised Courts he would behave better and not intimidate or obstruct any media anymore. The promise was costly though. He was asked to pay 750,000 rupees for damaging the video camera of the Sirasa photo journalist. What's 750,000 for Mervyn who has "Kudu Lal" (always) by his side, asked Azdak closing this week and wondering what it would be to write the final column for the year 2008, that comes after Christmas. Till then, its Boun Natale! Feliz Navidad! Happy Christmas! to all Serendibinc friends.



NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

# ஊதுகிற சங்கை ஊதிவிட்டேன்

**க. இராமநாதன்**
*(ஒரு பேப்பருக்காக)*

நாம் பட்டாலும் பட்டோம் கடும் துன்பம்தான் பட்டோம். வீட்டினை இழந்தோம், வாசலை இழந்தோம், நடு வீதியில் நிற்கவும் நாதி அற்றுப் போனோம். எறிகணைகள் வந்து விழுகின்றன. மரநிழலில் குந்துவதற்கும் மழை விடுகிறதாய் இல்லை. மேலாக உயிர் இழப்புக்கள் எத்தனை? கை வேறு, கால் வேறு, தலை வேறு, நெஞ்சு வேறு கூட்டியள்ளி குவிக்க வேண்டி இருக்கின்றதே உடலங்களை.

இதுதான் இன்றைய வன்னியின் நிலை. இவை பற்றி எல்லாம் எத்தனை முறை ஒப்பாரி வைத்தோம். ஓலமிட்டுக் கதறினோம். இந்த மக்களுக்காக வேறு ஏதும் காரியம் நாம் செய்தோமா? செய்தோம். இந்த மக்களிற்கு ஏதும் உதவி செய்வதற்காக பல அமைப்புக்கள் பல கலைநிகழ்ச்சிகள் நடாத்துகின்றார்கள் தானே? தென் இந்தியாவிலிருந்து சின்னத் திரை, பெரியதிரைக் கலைஞர்களைக் கூட்டி வந்து, அவர்களை ஆட விட்டு, பாடவிட்டுக் கலைச் சேவை புரிகின்றார்களே, அவற்றுக் கெல்லாம் நாள் தவறாமல் நாம் போனோம். ஏன் போனோம்?

ஒரு கல்லிலே இரண்டு மாங்காய். இந்தச் சின்னத்திரை, பெரிய திரை நடிகர், நடிகைகளின் தரிசனமும் கிடைக்கின்றது. வன்னி மக்களின் ஒருவாய்ச் சோற்றுக்கு வழியுமாகிறது, அல்லது வழியும் பிறக்கிறது. எத்தனை பெருந்தன்மையுடன் நாம் பத்து பவுண்டையோ இருபது பவுண்டையோ குடும்பத்துக்கு என்டு முப்பது பவுண்டையோ கை கூசாமல் கொடுக்கின்றோம். ஏன்? எம் மக்கள் அல்லல் படக் கூடாது என்ற ஒரு காரணத்திற்காகத்தான்.

அத்துடன் எம் கடமை முடிகின்றது. கை கழுவி விடுகின்றோம். அப்புறம் எமக்கு எத்தனை சோலிகள், எத்தனை வேலைப் பிராக்குகள். இரண்டு கிழமை போயிருக்காது தேவன் போன் அடிக்கிறான் "என்ன மச்சான் போகலையோ? வன்னி மக்களுக்காக ஏதோ ஆட்டம் பாட்டமாம். தமிழ் நாட்டிலை இருந்து குலுக்கிக் கொண்டு வாறாளவையாம் வெளிக்கிடன் போவம். அவளவளையும் பார்க்கிறதாகுது, வன்னி மக்களுக்கும் உதவுற தாகுது..."

இத்துடன் முடிவதில்லை. இது தொடர் கதை. எப்படியோ நாங்கள் அனுப்புற காசு வன்னி மக்களுக்குப் போகிறது. அப்படித்தான் நாம் நம்புகிறோம். அத்துடன் நம் கடமை முடிந்து விடுகிறது. இனி பெற்றோல் ஷெட்டில நிண்டு மாய வேண்டியதுதான். அல்லது ஏதோ கடையிலையோ, லோன்றியிலயோ நின்று தும்படிக்க வேண்டியதுதான்.

நாங்கள் கொடுத்த காசுக்கு என்ன நிகழ்கின்றது. அந்தக் காசு வன்னிக்குப் போகின்றதா? போகின்றது என்றால் எவ்வளவு போகின்றது? எப்படிப் போகின்றது? (அதைச் சொல்ல முடியாவிட்டால் விடுங்கள்) இப்படி ஏதும் நாங்கள் கேள்வி கேட்கின்றோமா?

இப்படி நிகழ்ச்சி நடாத்துகின்ற ஒருவர் கணக்கு வழக்குகளை எட்டிப் பார்த்தேன். இரண்டு கணக்கு விபரங்கள் என்னை இடறியது. ஓரிடத்தில் குறிப்பிட்டு இருந்தார்? பெற்றோல் (petrol) செலவு 150 பவுண்ஸ், இன்னோர் இடத்தில் குறிப்பிட்டு இருந்தார் எரிபொருள் (fuel) செலவு 570 பவுண்ஸ்

எனக்குள் சில பல கேள்விகள் எழுந்தன. பெற்றோல் எரிபொருள் இல்லையா? எரிபொருளுக்குள் பெற்றோல் வராதா? தேங்காயெண்ணெய், இலுப்பையெண்ணெய், குத்து விளக்கு, திரி இவைகள் தான் எரிபொருள்களா? எனக்கு ஒன்றுமாக விளங்கவில்லை.

இவர்கள் செய்பவற்றுள் எனக்கு எது தான் விளங்கியது? என்னைப் போன்ற பாமரர்களுக்கும், படுபாவிகளுக்கும் இப்படி நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் இரண்டு காரியம் செய்ய வேண்டும். இரண்டும் அதி முக்கியமானது.

ஒன்று, வன்னி மக்களுக்கோ, வாகரை மக்களுக்கோ, வதை படுகிற எந்த மக்களுக்கோ நிதி சேகரிக்கிறோம் என்று நிகழ்ச்சி நடாத்துவீர்களாயின் நிகழ்ச்சி முடிந்த பின் தெளிவாகக் கணக்குகளை பொதுசனத்திற்கு முன்னே வையுங்கள்.

என்னிடமிருந்து நீங்கள் ஒரு சதம் பெற்றாலும் அதற்குக் கணக்குக் காட்ட வேண்டிய கடமை உங்களுக்கு உண்டு. கணக்குக் கேட்கும் உரிமை எனக்கு உண்டு. நீங்கள் ஆளுக்கு ஆள் மாறி மாறி முதுகு சொறிவதற்காக, பொன்னாடை வாங்குவதற்கு எங்கள் பணத்தைப் பயன்படுத்த மாட்டீர்கள் என்று எனக்கு ஒரு நிச்சயமும் இல்லை. எனவே தெளிவாகக் கணக்கைக் காட்டுங்கள். காட்ட வேண்டிய இடத்தில் காட்டி விட்டோம் என்று சாட்டுச் சொல்ல வேண்டாம். காட்டினால் சில சங்கடங்கள் வரும் என்று சமாளிக்கவும் வேண்டாம்.

இரண்டு, எம் தேச மக்களுக்கு நிதி சேகரிக்க வேண்டும் என்று கலை நிகழ்ச்சி நடாத்துகிறீர்கள் என்றால் எம் மக்களைக் கொண்டே கலை நிகழ்ச்சிகளைத் தயாரியுங்கள். அது தான் ஒரு கல்லில் இரண்டு மாங்காய். அல்ல, பல மாங்காய்கள். அதுதான் உணர்வுபூர்வமான கலை நிகழ்வாக இருக்கும். எம் கலைஞர்களை வளர்த்து விட்டதாக இருக்கும். சீரழிவுக் கலாசாரம் எம்மிடையே புகாமல் இருக்கும். இன்னும் பல கலைஞர்கள் அதை நோக்கி மேல் எழுவார்கள். இன்னும் உள்ளன மாங்காய்கள்.

பாரீசில் சென்ற பொங்கல் நிகழ்வைப் பார்த்தேன். எவ்வளவு மகிழ்வாக இருந்தது. அத்தனை கலை நிகழ்சசிகளும் எம்மவர் தயாரிப்புகள்.

இங்கும் (லண்டனிலும்) வழமையாக பொங்கல் விழா நடக்கின்றது. இம்முறையும் வரப் போகின்றது. விளம்பரங்களைப் பார்க்கவே விசர் பத்துகிறது. தென்னிந்தியாவில் இருந்து வரும் பல கலைஞர்களுக்கு ஈழம் என்றாலே என்னவென்று தெரியாது, அவர்களுக்கு நாம் லண்டன் ஊரையும் காட்டி, சாப்பாட்டையும் போட்டு, காசையும் அள்ளிக் கொட்டிக் கொடுக்கப் போகின்றோமா?

இவ்வளவும் யாருடைய பணத்தில் செய்யப் போகின்றோம்? தும்படித்துத் துவண்டவனின் பணத்திலா செய்யப் போகின்றோம்? மாஞ்சு மாஞ்சு செத்தவனின் பணத்திலா செய்யப் போகிறோம்? இது நியாயமா? இது தர்மமா? இது அடுக்குமா?


ஏதோ ஊதுகிற சங்கை ஊதிவிட்டேன். மிச்சம் மீதி எல்லாம் உங்கள் கையில்...

## தயாராயிரு சேவலே!

கொழுத்து வளர்ந்த காரணத்தினாலேயே
இயற்கை மரணம்
உன சொந்தமில்லாமல் போகிறது
தற்கவனம் அதிகம் கொண்ட உன்
கண்களுக்கு
உன்னைத் தேடி இரையிடுபவரின்
சுயநலம் மட்டும் புரிவதில்லை
உன்னை அறுக்கையில் கண்ணை மூடி
பாசத்தைக் கொட்டும் வளர்ப்பு உறவுகளும்
சப்புக் கொட்டி நிற்கும் தயாராக குழம்பு
கொதிக்கையில்
எதற்கும் என் கூட்டத்தில் சொல்லிவிட்டுத்
தயாராயிரு
இன்று கருக்கலில் உன் கூவலே
இறுதியானதாகக் கூட இருக்கலாம்

– கோகுலன்

அன்பர்கள் நண்பர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள்!



Authentic and effective Kerala ayurvedic treatments Highest Quality Treatment with affordable prices in a friendly & quite environmen

- Treatment by highly experienced therapists
- Treatment is designed around your individual health needs
- Only natural herbal medicines are used
- No side effects at all

50% Discount for Oru Paper Readers Only

Rejuvenation programs available



இங்குள்ள வைத்திய முறைகளால் உங்கள் வியாதி குணமடையவில்லையா? இனி என்ன செல்வதா? இலங்கைக்குப் போவமா? இந்தியாவிற்கு போவமா? என்று ஏங்கும் நோயாளிகள், ஒரு தடவை மட்டும் தொலைபேசியில் அழையுங்கள். பல மன உளைச்சல்களும் கவலைகளும் தீரும்.

Male & Female therapists avaliable

Can speak to us in Tamil, Hindi, English or Malayalam

Treatment rooms provided with Steam Sauna & Shower

Our wide range of treatments
- back pain
- joint pain
- arthritis
- sleeplessness
- stiffness
- migraine
- frozen shoulder
- high blood pressure
- obesity
- pulled muscles
- trapped nerve
- paralytic conditions
- stress and strain

OPEN 7 DAYS A WEEK

Kerala AYURVEDA
1 Odeon Parade, Sudbury Heights Avenue, Greenford / Sudbury Town, UB6 0NA
Tel: 020 8902 1104 / 020 8902 1707
www.kahc.co.uk
Free Parking Facility Available

Medicines & Equipments Directly imported from Kerala's reputed Ayurveda Pharmaceuticals.

# படம் பார்... பாடம் படி...

இப்பொழுதெல்லாம் எங்கும், எதிலும் படம் என்றாகி விட்டது. கசெற்றில் படம், டிவிடியில் படம், ரிவியில் படம், என்று வீடுகளுக்கே படம் வந்து விட்டது போக, கார், பஸ், விமானம் என்று வாகனங்களில் படங்கள் எங்களைத் துரத்துவது போதாதென்று, சட்டைப்பைகளிலும் படங்கள் ஒலியெழுப்பி கூச்சலிடுகின்றன. அதாவது போன்களிலும் கமலஹாசன் அசினைத் துரத்துகிறார்.

கதை இப்படி இருக்க, எங்கள் சின்ன வயதில், நாங்கள் திரைப்படம் பார்த்த கதை சொன்னால் கிறிஸ்துவுக்கு முன்பா அல்லது பின்பா நடந்தது என்று கேட்பீர்கள். அவ்வளவு பழைய காலம் என்றாகி விட்டது. நானும் என் நண்பர்களும் விடலைப் பருவத்தில் நிறையப் படம் பார்த்ததினால் படிப்பில் கோட்டை விட்டோம் என்று எங்கள் வீட்டுக்காரருக்கு பெரிய குறை. ஆனால் அவர்கள் இப்போது பார்த்துத் தள்ளும் சீரியல்களுக்கு கணக்கில்லை. நாங்கள் ஒழுங்காகக் கதைக்காமல், எங்கள் 'பிசி'யில் திரிய, அவர்கள் படங்களே கதியென்று கிடக்கிறார்கள்.

ஆதிகாலத்தில் திரைப்படங்கள் காண்பிக்கப்பட்ட போது 'இது பிசாசின் வேலை' என்று மக்கள் ஓடி ஒளிந்தார்களாம். அதன் எச்சசொச்சமாக, பொதுவாக எங்கள் வீட்டுப் பெரியவர்களும், திரைப்படம் பார்ப்பதை தாழ்வாகவே நினைத்தார்கள். இருந்தாலும் பக்திப் படங்களை அவர்களும் ரகசியமாக பார்க்கவே செய்தார்கள்.

முருகன், கிருஷ்ணர், சிவபெருமான், லட்சுமி திரையில் வரும்போது கன்னத்தில் போட்டுக்கொண்டு, தியேட்டர் இருட்டுக்குள் கரம் கூப்பத்தான் செய்தார்கள். இப்போதும் அது இருக்கிறது. 'நம்ம தலை', 'தளபதி' என்றெல்லாம் திரையில் கண்டவுடன் கூவி, பாலாபிசேகம் செய்து, கற்பூரம் கொழுத்துகிறார்களே. ஆட்கள்தான் மாறிவிட்டார்கள். இந்த கடவுள் நம்பிக்கைகளெல்லாம் விட்டுப் போகவில்லை.

அந்நாட்களில், மிக அபூர்வமாக எங்கள் வீட்டில் ஏதாவது சந்தோசமான வேளையில் படம் பார்க்கிற கதை வரும். யாரோ சொன்னதைக் கேட்டு அப்பா ஏதோ ஒரு படத்தைப் பற்றி சிலாகித்துப்பேசவும், நானும் தம்பிமாரும் உடனேயே கவனமாகக் கேட்டுக் கொண்டு, உசாராக நிற்போம்.

தொடர்ந்து 'அந்தப் படம் எங்கள் சின்ன ரவுணில் ஓடுகிறது.. நாளைக்கு போவோமா' என்று அப்பா கேட்கவும், நாங்கள் உள்ள தெய்வங்களுக்கெல்லாம் மனதிற்குள் கற்பூரம் கொழுத்தி, தீபம் காட்டுவோம். அம்மா சம்மதிக்க வேண்டுமே. அம்மா சம்மதித்து விட்டால் பிறகென்ன, சந்தோசமென்ற சந்தோசந்தான்.

அடுத்தநாள் வரை, அம்மாவோ, அப்பாவோ என்னெ ன்றால் எண்ணையுடன் நிற்போம். கரும்பென்றால் சாறுடன் நிற்போம். ஓடியோடி எல்லா வேலையும் நடக்கும். அனேகமாக இரவு இரண்டாம் காட்சிக்குத்தான் நாங்கள் போவது வழக்கம். மற்றவர்களுக்கு நாங்கள் படம் பார்க்கப்போவது தெரியாமல் இருக்க வேண்டுமென்பதுதான் அப்பாவின் விருப்பம். ஆனால், நானும் தம்பிமாரும் எங்கள் கூட்டாளிகளுக்கு ஏற்கெனவே சொல்லிப் பெருமையடித்திருப்போம். அவர்கள் மூலம் அவரவர் வீடுகளுக்கு செய்தி போயிருக்கும்.

கார் என்ற சங்கதி ஒன்றுமில்லை. பொடி நடைதான். எங்கள் வீட்டின் பின்புற புழுதி ஒழுங்கையால் நடந்து, அடுத்துவரும் வயல்வெளியை குறுக்கறுத்துப் போனால், தார் போட்ட றோட்டில் ஏறலாம். தார்றோட்டில் ஏறி நடக்கும்போது, படம் பார்க்கப் போகிறோம் என்ற சந்தோச மிகுதியினால், வெறும் பாதங்களை றோட்டில் அடித்து ஒலியெழுப்பி நடந்து, அப்பாவிடம் 'பேசாமல் வாங்கோடா' என்று பேச்சும் வாங்குவோம். அதன்பிறகு கொஞ்ச நேரம், இருட்டுக்குள்ளால் அமைதி ஊர்வலம் நடக்கும்.

கடைசி, கடைசியாக ரவுணை அண்மித்து, முடக்கு திரும்ப, தியேட்டர் வெளிச்சத்தினால் சந்தியே பிரகாசமாக ஜொலிக்கும். கூடவே எங்கள் நடையும் துரிதகதியில் நடக்கும். நாங்கள் தியேட்டருக்கு போகும் நேரத்தில், அனேகமாக முதல்காட்சி முடிந்திருக்காது. கடைசிக் காட்சியில் எம்ஜீஆர் வீரப்பாவுடன் மலை உச்சியில் வாள்சண்டை போட்டுக்கொண்டிருக்கும். 'டணாங்.. டணாங்' சத்தம் கேட்கும். அது முடிந்ததும், அவரோடு பாட்டுப் பாடிக்கொண்டு போவதற்கு றெடியாக, பானுமதி, தியேட்டரின் பக்கத்து திரைக்குள் நிற்பார். (அப்படித்தான் நாங்கள் நினைத்திருந்தோம்.)

தியேட்டரின் பின்கதவின் இடுக்கின் ஊடாக, மின்னல் கீற்றுகள் போல சில காட்சிகளும், விசிலடிகளும் எங்களைப் பரவசப்படுத்த, மேலே ஒட்டியிருக்கும் போஸ்டர்களை 'ஆ'வென்று பார்த்து நிற்போம். கதவுகள் திறக்க, 'திமுதிமு' வென்று கூட்டம் வெளியில் வரும். எங்களை இழுக்காத குறையாக அழைத்துக்கொண்டு அப்பாவும், அம்மாவும் தியேட்டரின் முன்பக்கத்தில் வரிசையாக வைத்திருக்கும் குறோட்டன் மரப்பக்கமாகச் செல்வார்கள்.

படம் முடிந்து வருபவர்களில் எங்கள் ஊர்க்காரர் யாராவது இருந்து எங்களை கண்டுவிட்டாலும் என்றுதான் இந்த முன்னேற்பாடு. பார்த்தவர்களில் சிலர் காட்சிகளை மீளாய்வு செய்து, சிரித்து மகிழ்ந்து கொண்டு போக, இன்னும் சிலர் எங்களுக்கு கேட்கவென்பதுபோல உரத்து 'படம் அவ்வளவு திறமில்லை' என்று தங்கள் பாட்டில் விமர்சனம் செய்து கொண்டு போவார்கள். இந்த விமர்சனங்களால் பாதிப்புற்ற அப்பா, 'என்ன செய்வோம்' என்பதாக அம்மாவை பார்க்கும் பார்வையில், நாங்கள் பயப்பிராந்தியடைந்து, சற்று சிணுங்கத் தொடங்க -

'பரவாயில்லை.. இவ்வளவு தூரம் வந்திட்டம்.. பார்த்திட்டுப் போவம்'

என்று சொல்லி அம்மா எங்கள் வயிற்றில் பாலை வார்ப்பார்.

## கடந்தது நடந்தது

எழுதியவர்: **கே.எஸ். பாலச்சந்திரன்**

அதற்குப் பிறகு அப்பாவின் 'மூட்' மாறிப்போகும். சற்றுச் சினத்துடனேயே தங்களுக்கு இரண்டு கதிரை ரிக்கெற்றுகளும் (செக்கண்ட் கிளாஸ்), தம்பிமாருக்கு அரை ரிக்கெற்றுக்களும் எடுப்பார். எனக்கு கலரி ரிக்கெற் வேணும் என்று அடம் பிடிப்பேன். திரைக்கு கிட்ட இருந்தால் வடிவாகப் பார்க்கலாம் என்பது எனது எண்ணம். திரையில் வரும் நட்சத்திரங்களெல்லாம் தொட்டுவிடும் தூரத்தில் இருப்பார்கள்.

என்னிடம் கலரி ரிக்கெற்றைத் தந்து 'நித்திரை கொண்டிடாதை' என்று சொல்லி அனுப்பி வைப்பார். நான் நித்திரை கொள்ள நினைத்தாலும் கலரி வாங்கில்களில் நிரந்தரமாகத் தங்கியுள்ள மூட்டைப்பூச்சிகள் தொடர்ந்து எனது ஆசனப்பகுதியில் ஊசிபோட்டு நித்திரையைக் குழப்பிக் கொண்டேயிருக்கும் என்பதை அப்பா அறியவில்லை.

படம் ஆரம்பித்து இடைவேளைவரை வலு உசாராக இருந்து பார்த்துக் கொண்டிருப்பேன். ஆனால் ஒரே ஒரு சங்கதிதான் எனக்கு அந்த நாட்படங்களில் பிடிக்காதது. எடுத்ததுக்கெல்லாம் பாட்டுப் பாடுவது. கவலை வந்தால் பாட்டு. சந்தோசம் வந்தால் பாட்டு. நித்திரை கொண்டாலும் கனவில் பாட்டு. விழித்தவுடன் ஒரு பாட்டு. கதாநாயகன் கதாநாயகியைப் பார்த்து பாடுவார். சிலவேளை விதிவிலக்காக வில்லனைப் பார்த்துப் பாடியே அவரை சித்திரவதை செய்வார். (அந்தப்பாட்டை விட சித்திரவதை வேறென்ன இருக்கப் போகிறது)

இவையெல்லாம் போதாதென்று குதிரையும் ஒரு படத்தில் பாடியது. அதைப் பார்த்து விட்டு, தமிழ்ப் பாடச் சோதனையில் - யானை பிளிறும், சிங்கம் கர்ஜிக்கும், புலி உறுமும் என்ற வரிசையில் குதிரை கனைக்கும். சிலவேளைகளில் பாடும் என்று எழுதி, ஆசிரியரிடம் அடிவாங்கிய அனுபவம் எனக்குண்டு.

இந்த ரோதனைகளையெல்லாம் நான் பொறுத்துக் கொண்டிருந்து இடைவேளை வந்தவுடன் வெளியே ஓடுவது, தியேட்டருக்கு அருகில் உள்ள தேனீர் கடைக்காரர் விற்கும் எண்ணெய் ஊறும் சுண்டல், வடை அல்லது சூசியம் என்பனவற்றை அப்பாவைக் கொண்டு வாங்குவதற்காகத்தான். படங்களில் 'கிளைமாக்ஸ்' எப்போது வருகின்றதென எங்களுக்கு அக்கறையில்லை. இந்த சுண்டல், சூசியம்... இத்யாதி தின்பண்டங்கள் கைக்கு வரும்காலம்தான் நாங்கள் (நானும், தம்பிமாரும்) படத்திற்கு வந்ததின் 'கிளைமாக்ஸ்'.

இடைவேளைவரை தான் இந்த மூட்டைகளின் தொல் லைகள் எல்லாம். அதற்குப் பிறகு அவை நித்திரை யாகிப் போய்விடும் என்றல்ல. நாங்கள்? நித்திரை யாகிப் போய் விடுவோம். படம் முடிந்து, வெளிச்சம் வந்ததின் பிறகு, அம்மா தூங்கி வழியும் தம்பிமாரை தட்டி எழுப்பிக்கொண்டு நிற்க, அப்பா என்னைத்தே தடி கலரிக்கு வந்தால், நான் வாங்கிலில் நீட்டி, நிமிர்ந்து அனாதரவாக படுத்திருப்பேன். 'இதுக்கோ.. படம் பார்க்க வந்தனி' என்று காசு செலவழிந்து போன கோபத்துடன், 'கொறகொற' வென்று இழுத்துக்கொண்டு போய் வெளியில் விடுவார்.

இரண்டாம் காட்சி முடிந்தகையுடனே, சந்தியில் இருந்த வெளிச்சம், தியேட்டரில் இருந்துதான், அதற்கான மின்சாரம் கிடைப்பதினால் அணைக்கப்பட்டிருக்கும். கும்மிருட்டில் மீண்டும் எங்கள் நடை தொடரும்.

நித்திரையில் கால்கள் தடுமாற, நானும் தம்பிமாரும் பாதையை விட்டு விலகி, அருகில் உள்ள வேலியோரமாகப் போய், அப்பாவின் அதட்டலில் திடுக்கிட்டு, கொஞ்சத்தூரம் நேராக நடப்போம். ஆனால் மறுபடியும், மறுபடியும்... எப்போது வீடு சேர்ந்தோம் என்று எங்களுக்கே தெரியாது.

**Tuition for A-Levels, GCSE, Key Stages**
**Mathematics, Further Maths, Physics**
*Group and One-to-One Classes by Qualified Engineer, an experienced Teacher.*
*Contact Mob:* **0798 5680 995**

பிரித்தானிய ஐரோப்பிய தகவல் ஏடு
**தமிழ் ஓலைகள்**
www.tamilpages.org
020 8543 2126 / 0771 800 3838/ 0771 800 3839


**Painfree Clinic**

- NHS அழைப்பிற்காக காத்திருந்து அலுத்து விட்டதா ?
- கை, கால், கழுத்து, முதுகு வலியுடன் நெடுநாள் அவஸ்த்தையா ?
- மொழி பிரச்சினையால் உங்கள் வலியை முழுமையாக உணர்த்த முடியவில்லையா ?
- நமக்காக ஒன்று அருகில் இருந்தால் நன்று என நீங்கள் நினைப்பது எங்களுக்கு கேட்டது, . . .

அதனால் Bromley இல் ஒரு புதிய Physiotherapy சிகிச்சை அறை (வீட்டுச் சூழலில்)

மருத்துவமனை செல்கிறோம் என்ற எண்ணம் தோன்றா வண்ணம் முழுவதும் வீட்டுச் சூழலிலே !

உடனே முன்பதிவு செய்யுங்கள் நலம் பெறுங்கள் தொடர்புகளுக்கு:
07903501336 07794424147




**PERMA**
**INTERNATIONAL SHIPPING LTD**
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
**தொடர்புகளுக்கு: சிவம்**
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: **020 8646 5222**, Mobile: **07939 550397**

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________

Address : ____________

____________

____________

Postcode: ____________

Telephone: ____________

Email: ____________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £25 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# நத்தார்

பாகம் 63

இது நத்தார் காலம் தமிழுக்கு இந்தச் சொல் உரியதல்ல. ஆனாலும் கிறிஸ்துமஸ்ஸை நாம் நத்தார் என்றே கூறுகிறோம். ஆங்கிலத்தில் 'நேட்டல் என்ற சொல் பிறப்பைக் குறிக்கும். கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் காலமாதலால் நேட்டல் நத்தாலாகி பின்னர் நத்தாராகியிருக்க வேண்டும். தமிழில் இவ்வாறு சொற்கள் மருவி வேறு உருவை எடுப்பது வழக்கம். சில சமயங்களில் அத்தகைய மருவல் மிக வினோதமான முறையிலும் மாறிவிடுவதுண்டு. நான் சிறு வயதில் படித்தவோர் விடயத்தை இங்கு தருகிறேன்.

சென்னையில் 'பாபர்ஸ் பாலம்' என்று ஒன்று உள்ளது. ஆரம்பத்தில் அங்கிருந்த ஹமில்ட்டன் என்னும் ஒரு ஆங்கில அதிகாரியின் நினைவாக அந்தப் பாலத்திற்கு 'ஹமில்டன் பாலம்' என்றே பெயர் சூட்டப்பட்டது. ஆனால் அந்தச் சொல் மக்களின் வாயில் நுழையவில்லை. காலப்போக்கில் ஹமில்ட்டன் பாலத்தை 'அம்பட்டன்' பாலமென்று அழைக்கத் தொடங்கி விட்டார்கள். ஆங்கிலப் பெயர் தமிழுக்கு மாற்றப்பட்டதோடு நின்றிருந்தாற் பரவாயில்லை மீண்டும் அது ஆங்கிலத்திற்கு மாறி எல்லோராலும் அம்பட்டன் பாலம் 'பாபர்ஸ்' பாலமென்று அழைக்கப்படத் தொடங்கி விட்டது. டாக்டர் ரா. பி சேதுப்பிள்ளையவர்களின் அலையும் கலையுமென்னும் அக்காலத்தைய பாடநூலொன்றில் இச்செய்தி காணப்படுகின்றது.

சரி நத்தாருக்கு வருவோம். நத்தாரை நினைக்கும்போது ஊர் நினைவுகள் ஞாபகத்துக்கு வருகின்றன. நத்தார் இரவு முழுவதும் எமது கிறிஸ்தவ உறவினர்களோடும் நண்பர்களோடும் கிறிஸ்மஸ் கறோல் பாடுவதற்காக பக்கத்து ஊர்களுக்கெல்லாம் நடந்து சென்று கிறிஸ்தவர்களின் வீட்டுக் கதவுகளைத்தட்டி கிறிஸ்து பிறந்த செய்தியைக் கூறும் கீதங்களை இசைப்போம். நாங்கள் வருவோமென்று அவர்கள் தயாராகக் காத்திருப்பார்கள். பலகார வகைகள் நிறையச் செய்து வைத்திருப்பார்கள்.

பரம்பரை ஆண்டிகளான கிறிஸ்தவ நண்பர்களும் பஞ்சத்தாண்டிகளான நாங்களும் ஒன்று கூடுவது வீடு வீடாகச் சென்று நத்தார் பலகாரங்களை ஒரு பிடி பிடிக்கத்தான். சில வேளைகளில் உறங்கிக் கொண்டிருக்கும் சைவ வீடுகளைத் தவறுதலாகத் தட்டி ஒருவாறு சொறி சொல்லித் தப்பித்தோம் பிழைத்தோமென்று வந்ததுமுண்டு.

## அலசுவரம்

அலசுபவர் : மட்டைக்கிளப்பான்

கல்முனையில் பரங்கியர் இன நண்பர் ஒருவரிடம் கறோலுக்கு அடிக்க 'பொங்கோஸ்' வாங்கப் போனபோது அவர் வளர்த்த வான்கோழிகளைக் கண்டு நத்தார் காலத்தில் வான்கோழி இறைச்சி சமைக்கலாமென்று தீர்மானித்தோம். அவரிடம் வான்கோழியொன்றைக் கேட்போது சரி, பிடித்துக் கொண்டு போங்களென்று சொல்லிவிட்டார். நானும் நண்பனும் வான்கோழியை நெருங்கியபோது எங்களிருவரையும் அது துரத்தித் துரத்திக் கொத்த ஆரம்பித்துவிட்டது. அதன் பிறகு வான்கோழி இறைச்சியின் மீதிருந்த ஆசையும் போய்விட்டது.

அந்த ஞாபகம் நெஞ்சிலெப்போதும் இருந்தது. ஒளவையார் எழுதியதாகக் கூறப்படும் பாடலொன்றும் நினைவிலிருந்தது. அதனால் எனது முதற் கவியரங்கக் கவிதையில் வான்கோழி மீதிருந்த வெறுப்பைக் கொட்டினேன்.

'கானமயிலாடியதைக் கண்ட பொல்லாக்
கடைகெட்ட வான்கோழி சிறகு தூக்கி
மோன நடம் ஆடியதைப்போல நானும்
முளைத்துள்ளேன் புதியதொரு
கவிஞனாக'

என்று அந்தப் பாடல் வரிகள் தொடர்கின்றன.

'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானுமதுவாகப் பாவித்துத் – தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற்
போலுமே
கல்லாதான் கற்ற கவி' என்று ஒளவை
பாடியதாகக் கூறப்படுகிறது.

ஒளவை வாழ்ந்த காலத்தில் வான்கோழிகள் தமிழ் நாட்டில் இருக்கவில்லையென்றும் ஐரோப்பியர் இந்தியாவுக்கு வந்த மிகப் பிற்பட்ட காலத்திலேயே வான்கோழிகளும் கொண்டு வரப்பட்டனவென்றும், ஆகவே ஒளவையின் வான்கோழிப்பாடல் வேறு யாராலோ பாடப்பட்டு ஓர் இடைச்செருகலாக ஒளவையின் பாடல்களுக்குள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் ஓர் கருத்து நிலவுகிறது.

வான்கோழி என்னும் பெயர் தமிழில் அதற்கு ஏன் உருவாயிற்று என்பது புரியவில்லை. அவற்றால் பறக்க முடியாது. பறக்கும் கோழிகளாயிருந்தாலாவது வான் கோழியென்ற பெயர் பொருத்தமாயிருக்கலாம். சாதாரண கோழிகளைவிட அவை பெரியவை. கொஞ்சம் வன்முறையைக் கையாளக் கூடியவை. ஆதலால் அந்தக் கோழிகள் முதன் முதல் கொண்டு வரப்பட்டபோது அதனை வளர்க்க முற்பட்டவர் வாங்கிய கொத்தில் அதற்கு வன்முறையைக் கையாளும் வன்கோழியென்று பெயரிட்டு அதுவே மருவி வான்கோழியாயிற்றோ தெரியவில்லை.

பாபர் பாலமும், வான்கோழியும் இத்தகைய பெயர் மருவுதலால் எவ்வாறு கருத்தழிந்து போயிருக்கின்றன என்று பாருங்கள்.

வான்கோழிகளை ஆங்கிலத்தில் ரேக்கி என்பார்கள். அதாவது துருக்கியைக் குறிக்கும் சொல். துருக்கி ஆசியாவும் ஐரோப்பாவும் இணைந்திருக்கும் நாடு. இந்தியாவுடன் நிலத்தொடர்பு மிருப்பதால் மிக முற்பட்ட காலத்திலேயே வான்கோழிகள் துருக்கியரால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டுமிருக்கலாம்.

வான்கோழிகள் மிக அழகானவை. குறிப்பாகச் சேவல்கள் பேடையைக் கவரச் சிறகு விரித்து நடனமாடும் தன்மை கொண்டவை. இயற்கையிலேயே நடனமாடும் இயல்பு கொண்ட அவை எதற்காக மயிலைப் பார்த்து நடனமாடவேண்டும். மேற்கண்ட கவிதையை எழுதிய ஒளவையாருக்கோ அல்லது வேறு யாரும் கவிஞருக்கோ வான்கோழி மீது ஏன் இத்தகைய வெறுப்பு. அதனை ஏன் அப்படி இழிவுசெய்தார் என்று புரியவில்லை. சிலவேளை அவரும் நன்றாக அதனிடம் கொத்து வாங்கினாரோ தெரியவில்லை. வான்கோழிகளைக் கொன்று தின்பதை மிருக வதையை எதிர்ப்போர் கண்டிக்கிறார்கள். நத்தார் காலங்களில் கணக்கு வழக்கின்றி அவ் அழகிய பறவைகள் கொல்லப்படுகின்றன.

பாவிகளை ரட்சிப்பதற்காக இம்மண்ணில் தேவகுமாரனாய் அவதரித்து 'உன்னை ஒருவன் ஒரு கன்னத்தில் அடித்தால் நீ அவனுக்கு மறுகன்னத்தையும் நீட்டு, பட்டயத்தைத் தூக்காதே பட்டயத்தைத் தூக்கியவன் பட்டயத்தினாலே அழிவானென்று' அகிம்சா தத்துவத்தை உலகிற்குப் போதித்த யேசுசுதன் பிறந்த நாளில் கணக்கற்ற விதத்தில் உயிர்க்கொலை செய்து அவர் பிறந்த நாளின் மகத்துவத்தை இன்று உலகம் பாழடிக்கிறது.

உணவுக்காக எதையாவது கொன்று தின்றுதானாக வேண்டும். ஆனாலும் ஒரு குறித்த இன ஜீவன்களை இதற்காகவே வளர்த்துக் கொன்று தின்பது சரிதானா? அவற்றிற்கு மட்டும் சிந்திக்கும் ஆற்றல் இருந்தால் இந்த நத்தார் காலத்தை அவை எவ்வளவு தூரம் வெறுக்கும் என்று சிலர் வாதிடுகிறார்கள்.

கண்ணதாசனின் யேசு காவியத்தில் யேசு சிலுவையில் அறையப்பட்டபோது காட்டு விலங்குகளெல்லாம் கதறின என்கிறார். ஆனால் உண்மையில் அவர் பிறந்த நன் நாளைக் கொண்டாட கணக்கற்ற விதத்தில் வாயில்லா ஜீவன்களைக் கொல்கிறார்கள். புண்ணிய நாளாக அனுஷ்டிக்கப்படவேண்டிய நத்தார் கேளிக்கை விழாவாக மாற்றப்பட்டுவிட்டது.

மனிதன் தனக்கேற்ற விதத்தில் எல்லாவற்றையும் மாற்றிக்கொள்கிறான்.

- தொடரும்.


## Do you run a business?

## Do you employ staff?

## Do members of public have access to your business premises?

*Give **Ragarfield** Insurance Brokers a call to arrange a no obligation quotation for your business / property insurance and if you like the competitive rates we can arrange, you may qualify for free access to a lot of features advising you comprehensively on*

- **Health & Safety**
- **Risk Management**
- **Legal Expenses**

**Covers for shops and businesses can be arranged with excesses as low as**

**£50** for Glass Claims
for Money Claims
for Frozen Food Claims
and for Goods in Transit Claims

Discounts are also available if you have the following

**Alarm, CCTV, Roller Shutters, Claims free experience, Staff living above the shop**

## ஆபத்து வருமுன் ஆவண செய்யுங்கள்!

நீங்கள் ஏதும் வியாபாரம் செய்கின்றீர்களா? உங்கள் நிலையத்தில் பணியாளர்களை அமர்த்தியுள்ளீர்களா?

உங்களது ஸ்தாபன காப்புறுதித் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள். எமது சேவையினை ஏற்கும் பட்சத்தில் உங்கள் வியாபாரம் சம்பந்தமான கூடுதல் அறிவுரைகளை இனாமாகப் பெறுவதற்கு சாத்தியம் உண்டு.

உங்கள் அனைத்து காப்புறுதித் தேவைகளுக்கும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய 35 வருட அனுபவம் கொண்ட முறைக்கேற்றபடி தொழில் புரியும் (Professionlism ) நிபுணர்களாகிய எம்மை நாடுங்கள்.

பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் மிகக் குறைந்த கட்டணத்தில எங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ள அழையுங்கள்.

Most Trades are considered including the following

| | |
|---|---|
| **Supermarkets** | **Builders Merchants** |
| **Grocers** | **News Agents** |
| **Off Licenses** | **Boutiques** |
| **DIY & Hardware** | **Heating & Plumbing** |
| **Fish & Chips** | **Retail & Wholesale** |
| **Restaurants** | **Manufacturers** |
| **Clothing Retail** | **Wholesalers** |
| **Hairdressers** | **Production** |
| **Beauty Saloons** | **Distribution** |

## Need Van Insurance?

We can arrange best available rates and also Protect your **No Claims Bonus** from 1 year onwards.

## Have 3 or more vehicles?

We have access to exclusive motor fleet products and can arrange cover with any driver {17+ without any higher excesses} and many more features.

**Ragarfield** can source you great insurance products on excellent terms, to cover **EVERYTHING** that your business needs

We've been around for a While. For 35 years. So we have first rate relationships with leading insurers all over the marketplace.

இன்றே அழையுங்கள்.

Talk to us now...

Tel: **01474 32 88 88**

**Ragarfield Limited**
Insurance & Mortgage Brokers
31 Milton Road Gravesend Kent DA12 2RF
Authorized & Regulated by Financial Services Authority

***Your business insurance can also be extended to include the contents in the flat above if required***

# KIDS

## THE ASS AND HIS SHADOW

A traveler hired an Ass to convey him to a distant place. The day being intensely hot, and the sun shining in its strength, the Traveler stopped to rest, and sought shelter from the heat under the Shadow of the Ass. As this afforded only protection for one, and as the Traveler and the owner of the Ass both claimed it, a violent dispute arose between them as to which of them had the right to the Shadow. The owner maintained that he had let the Ass only, and not his Shadow. The Traveler asserted that he had, with the hire of the Ass, hired his Shadow also. The quarrel proceeded from words to blows, and while the men fought, the Ass galloped off.

**In quarreling about the shadow we often lose the substance."**

## THE OAK AND THE REEDS

A very large Oak was uprooted by the wind and thrown across a stream. It fell among some Reeds, which it thus addressed: "I wonder how you, who are so light and weak, are not entirely crushed by these strong winds." They replied, "You fight and contend with the wind, and consequently you are destroyed; while we on the contrary bend before the least breath of air, and therefore remain unbroken, and escape."

**Stoop to conquer.**

## THE FISHERMAN AND THE LITTLE FISH

A fisherman who lived on the produce of his nets, one day caught a single small Fish as the result of his day's labor. The Fish, panting convulsively, thus entreated for his life: "O Sir, what good can I be to you, and how little am I worth? I am not yet come to my full size.

Pray spare my life, and put me back into the sea. I shall soon become a large fish fit for the tables of the rich, and then you can catch me again, and make a handsome profit of me." The Fisherman replied, "I should indeed be a very simple fellow if, for the chance of a greater uncertain profit, I were to forego my present certain gain."

## THE HUNTER AND THE WOODMAN

A hunter, not very bold, was searching for the tracks of a Lion. He asked a man felling oaks in the forest if he had seen any marks of his footsteps or knew where his lair was. "I will," said the man, "at once show you the Lion himself." The Hunter, turning very pale and chattering with his teeth from fear, replied, "No, thank you. I did not ask that; it is his track only I am in search of, not the Lion himself."

**The hero is brave in deeds as well as words.**

## TONGUE TWISTER

**So 'twas better Betty Botter**

**bought a bit of better butter.**

**Six thick thistle sticks. Six thick thistles stick.**

**Is this your sister's sixth zither, sir?**

**The sixth sick sheik's sixth sheep's sick.**

**A big black bug bit a big black bear,**

**made the big black bear bleed blood.**

**Toy boat. Toy boat. Toy boat.**

**One smart fellow, he felt smart.**

**Two smart fellows, they felt smart.**

**Three smart fellows, they all felt smart.**

## JOKES

Student: Can you tell me mam, why would a room go to a doctor?

Teacher: You stupid! Anyway, what is the answer?

Student: Very simple! Because it has always got window-pane!

Question:What is the fullform of maths.

Anwser:Mentaly affected teachers harrasing students

Sir:How can you tell a hawk has good eye sight?

Raj:Because I have never seen a hawk wearing spectacles

Teacher: Now , Sam , Tell me frankly do you say prayers before eating ?

Student: No sir , I don't have to my mom is a good cook

Teacher:What happened in 1869?

Student:Gandhi ji was born.

Teacher:What happened in 1873?

Student:Gandhiji was four years old.

Teacher:Ramya and Shilpa!,why are you late for school,today?

Shilpa:Madam,I lost a one rupee coin and was searching for it.

Teachear:Ramya,what about you?

Ramya:Madam,,I was not able to move beacause I was hiding that coin under my feet.

Teacher: Now children , if I saw a man beating a donkey and stopped him then what virtue would I be showing ?

Student : BROTHERLY LOVE

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner: ***Keerthana Muralikumar (Age 5), Edmonton.***

Last week's runners up -
***Raagavi Satkunanathan (Age 7)*** *London*
***Isabelle Santhiapillai (Age 8)*** *Catford*
***Ayshvaan Thevarajah (Age 7)*** *Kenton*
***Mayooran Navaratnam (Age 6)*** *Eastham.*

## QUOTABLE QUOTES

**"The toughest thing about success is that you've got to keep on being a success."**
***- Irving Berlin***

**" Your friend is the man who knows all about you and still likes you."**
***- Elbert Hubbard***

**" The man who has never made a fool of himself in love will never be wise in love."**
***- Theodor Reik***

## AMAZING FACTS

- A monkey was once tried and convicted for smoking a cigarette in South Bend, Indiana
- There are six million parts in the Boeing 747-400.
- The first TONKA truck was made in 1947
- In the U.S., over one million gallons of cosmetics, drinks, and lotions are sold (that contain aloe in them) per year
- Sugar Bear (the mascot for Golden Crisps cereal) was born in 1963
- The Tonle Sap River in Cambodia flows north for almost half the year and then south for the rest of the year
- Japanese research has concluded that moderate drinking can boost IQ levels
- For more than 3,000 years, Carpenter ants have been used to close wounds in India, Asia and South America
- Baskin Robbins plain vanilla ice cream is the number one selling flavour and accounts for a quarter of their sales
- Elizabeth Taylor has appeared on the cover of Life magazine more than anyone else
- The typical lead pencil can draw a line that is thirty five miles long
- The word "toy" comes from an old English word that means "tool."
- Smokers are twice as likely to develop lower back pain than non-smokers

## Nothing but the truth

- Change of habit cannot alter Nature.
- Do not attempt to hide things which cannot be hid.
- He is wise who is warned by the misfortunes of others.
- The value is in the worth, not in the number.
- Do not attempt too much at once.
- No one truly forgets injuries in the presence of him who caused the injury.
- Harm seek. harm find.
- Evil companions bring more hurt than profit.
- Do not be in a hurry to change one evil for another.
- Little liberties are great offenses.


## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| V | P | C | M | U | L | L | A | I | X |
| A | M | T | U | K | K | K | L | M | R |
| A | A | D | P | A | A | L | A | I | V |
| N | L | F | T | D | A | N | G | U | F |
| A | A | U | N | A | D | B | R | A | I |
| M | I | N | W | L | U | S | O | H | I |
| Q | Y | Z | A | I | B | I | L | M | A |
| D | P | E | O | E | N | I | L | M | A |
| P | O | D | E | L | J | E | U | A | R |
| S | M | R | D | V | F | T | N | G | E |


**Hidden Words:**
**Subject: Types of Area**
KAADU, KADAL, VAANAM, MULLAI, PAALAI, MALAI

*Submitted by:*
*Kasthuriya Kamalakannan (Age 7) Romford.*

## DOT... TO... DOT...








## DID YOU TELL THE WORLD THE TRUTH ABOUT THE TAMILS?

***(After Sydney Carter's song 'When I Needed A Neighbour were you there')***

When the Tamils needed help, were you there,
were you there?
When the Tamils needed help, were you there?
And the creed and the colour and the name won't matter,
were you there?

They were hungry and thirsty, were you there,
were you there?
They were hungry and thirsty, were you there?
And the creed and the colour and the name won't matter,
were you there?

They were cold and displaced, were you there,
were you there?
They were cold and displaced, were you there?
And the creed and the colour and the name won't matter,
were you there?

When they needed a shelter, were you there,
were you there?
When they needed a shelter, were you there?
And the creed and the colour and the name won't matter,
were you there?

When they needed a healer, were you there,
were you there?
When they needed a healer, were you there?
And the creed and the colour and the name won't matter,
were you there?

Wherever you travel, did you tell the world the truth?
Did you speak about the suffering of the Tamils?
And the creed and the colour, and the name won't matter
– you speak out!

***(On behalf of the starving, shelter-less Tamils in the North East of Sri Lanka)***

*Tamil Centre for Human Rights - TCHR*
*23 December 2008*

## RIVER TALK

**By Brishti Bandyopadhyay**

The rivers were a disgruntled lot. They had started out as tiny clear streams high up in the mountains and meandered through valleys and plateaus and plains. Their waters had swollen up during monsoons and had then reduced to a trickle during summer. But on the whole, they had flourished.

And now, at the end of their journey, they had to merge with the sea. They would lose their precious freedom forever.

And yet, they couldn't stop themselves from flowing, could they? So they flowed till they reached the sea. "This is too unfair!" they said sadly to each other. "It's bad enough that we have to merge. It is worse that our sweet and drinkable water becomes terribly salty and tasteless when we merge with the sea."

The sea heard the rivers and looked amused, "If that's the way you feel, I see no point why you should join me at all. Go away, and enjoy your cool, sweet waters b yourself."

Of course, there was no way the rivers could do that. Even if by some miracle they could change their course and not flow into the sea, their very survival was at stake. For, very few rivers lasted on their own without uniting with the sea. Most dried up and died. What use was independence if one did not live to enjoy it?

So the rivers made peace with their situation and flowed into the sea.





**Maths and English After-school Programmes**

Every day KUMON helps children of all ages and abilities to realise their true potential. KUMON can help your child progress with their maths and English studies, boost their confidence and help them shine.

***Kumon programmes:***

- Work at a pace tailored to your child's needs
- Give their confidence a real boost
- Develop invaluable study habits and concentration
- Establish a solid foundation for academic success
- Complement the school curriculum

**Merton Kumon Center**
South Mitcham Community Association
Cobham Court, Haslemere Avenue
Mitcham CR4 3PR
**Shuba:0208 224 2157 | 07513409941**
Email : metron@kumoncenter.co.uk

KUMON kumon.co.uk
**Mondays & Thursdays 4-6 pm**
Bus No : 200, Bus stop : Phipps Bridge road
Tram stop : Phipps Bridge

**மலிவு விலையில் அரிசி**

கைக்குத்தல் அரிசி -10Kg - £9.99
தஞ்சாவூர் பொன்னி - 10Kg - £9.99
அமெரிக்கன் புழுங்கல் - (Jolly Boy) - 10.Kg £9.99

72, North Street, Romford
RM1 1DA, London

தொடர்புகளுக்கு : 079 3245 6464

**COMPUTER REPAIRS**




**'கொம்பியூட்டர்' திருத்த வேலைகள்**

- உங்களது கணனியில் 'வைரஸ்' புகுந்து விட்டதா?
- அது சரிவர வேலை செய்யவில்லையா?
- உதிரிப் பாகங்களை மாற்ற வேண்டுமா?

சகல விதமான கொம்பியூட்டர் பிரச்சனைகளுக்கும் எம்மை நாடுங்கள். விரைவில் அவை திருத்தித் தரப்படும்.

தொலைபேசி: **020 7043 4316**
***45B, Crusoe Road, Mitcham, CR4 3LJ***

# NEW LONDON COLLEGE

New London College

ஐக்கிய ராச்சியத்தில் உள்ள மிகவும் பிரசித்தமானதும்,
அதிக சித்திகளை பெற்றதுமான கல்லூரி.

பிரித்தானிய பிரஜா உரிமைக்கும், நீண்ட நாட்கள் தங்கி
படிப்பதற்கும், ஏற்ற பாடத் திட்டம்
நீங்கள் ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழி பேசுபவர்களா ?

You will have to pass the ESOL Citizenship Test and submit the Certificate along with your application to the Home Office

We are an Authorised Test Centre with a proven track record

**WE TRAIN YOU UNTIL YOU PASS**

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations — Authorised Centre for Skills for Life
TRINITY COLLEGE LONDON
City & Guilds — Approved Centre

- ACCA / CIMA / CAT
- SAGE Accounting/Payroll
- Business Management
- Human Resource
- Hotel Management
- Tourism Management
- Travel Agency Management
- Air Ticketing
- IT - ORACLE

**English Language Courses & Tuitions**

1 Martindale Road, Hounslow, London, TW4 7EW
(Opp. HOUNSLOW WEST Tube Station)
www.newlondoncollege.co.uk

Call Now
**020 8570 7766**

virgin atlantic abe CIMA ACCA iam BAC ACCREDITED ilm CTH ncfe ORACLE

---

Fares correct at the time of publication 22nd Dec 08

LYCAFLY.com
Travel the world for Less

# MERRY CHRISTMAS AND A HAPPY 2009

from London Heathrow

# COLOMBO

from £425

Return flights including taxes

Want to try something new ?
Login to
www.LycaCruise.com

**CALL US**
**0208 902 1040**
Free Phone 0800 012 0500

Bombay
Delhi
from £320

Chennai
from £360

www.Lycafly.com

All fares Return Incuding taxes.
Subject to availability.
Conditions may apply

IATA ABTA


வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது
கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்கள்
Niru BRAND
Chicken Curry Sauce
Niru BRAND
100% NATURAL
Madras style
Chicken Curry Sauce
Ready to Cook
Introductory Offer
BUY 1
GET 1
FREE
HOME MADE
READY TO COOK
HOT & SPICY
JUST ADD CHICKEN & COOK
Introducing...
READY TO COOK
SAUCE
Introductory Offer
BUY 1
GET 1
FREE
Also available:
KERALA FISH SAUCE
CHICKEN CURRY SAUCE
PEPPER CHICKEN SAUCE
CHETTINAD FISH CURRY SAUCE
MUTTON SAUCE
VEGETABLE BRIYANI GRAVY

# KARMAL SERVICES

தமிழ் நாடு செல்வோருக்கு ஓர் நாணயமான சேவை!



மருத்துவத்திற்கோ அல்லது உல்லாசப்பிரயாணத்
தேவைக்கோ செல்வோர்க்கு உகந்த சேவை

- தரமான தங்குமிட வசதி
- சாரதியுடன் சுவுய வாகன வசதி
- தேவையற்ற செலவை அகற்றி - தகுந்த இது சம்பந்தமான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்
- திருமணம் போன்ற விழாக்களுக்கான முழு ஏற்படுகள் செய்து தரப்படும்
- சுற்றுலா ஏற்பாடுகள், ஆன்மீக ஸ்தலங்களுக்கு கூட்டிச்செல்லும் வசதியும் செய்து தரப்படும்
- இன்னும் வேறு சேவைகள்

நம்பிக்கையான நாணயமான சேவைக்கு அழையுங்கள்

SRI : 075 2939 9745

ஸ்ரீ விநாயக சுவாமி ஜோதிட நிலையம்


## SRI VIJAYALAKSHMI AND SANTHOSH KUMARSWAMIJI TOGETHER


36 வருடம் அனுபவம் நிறைந்த திருச்சியில் இருந்து முதல் முறை வருகை தந்தள்ள விஜயலக்சுமி அம்மாள் அவர்களுடன் திரு சந்தோஸ் குமாரசுவாமி இருவரும் விநாயகர் துணைகொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப்பார்க்கப் படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, திருமண யோகம், தொழில், வியாபாரம், லக்சுமீகர விடயம், காதல், கல்யாணம், கோட் வழக்குகள், வாகனப்பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். மந்திர தந்திரம் அகற்றிக் கொடுக்கப்படும்

36 year experience. You will come to know about your Past, Present and Future by hand prediction, horoscope, intending persons may contact for job, family matters, husband and wife relationship, love, Education, Business, Choice of stones, Marriage, Sickness, Promotions, Family problems, Children problems, visas, abroad, money etc. Witch craft will e cleared by performing poojas and Devi Upasanas, lakshmi pooja, prayera and protection from enemies' spoken language: Tamil, Hindi, and English.

Address : **REX CASH XCHANGE**
320, London Road,West Croydon CR0 2TJ (Opposite Best Food)

**Mob: 075 3536 0055 / 075 3536 0066**

Opening Hours : 9.30am to 8.00pm 7 days a week



வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ், புதுவருட, நல்வாழ்த்துக்கள்

# Xmas & New Year Offer !

- **Neem :** Book 2 Full Body Massage and Get the third one for HalfPrice.(£100)
- **Jyothirgamaya :** 5 Days Panchakarma Orientation Therapy and get a £40 Gift Voucher Free.(£250)
- **Olive :** Book 3 Full Massage and Get a £40 Gift Voucher free (£120)
- Book 2 full body massage and get third for half price
- Many exciting gift Vouchers for the new year

**Ayurprastha Offers**

- Constitution analysis by our doctors
- Disease Identification
- Complimentary Therapy
- Follow up

**Treatment Specialties**

- Joint disorders
- Eczema
- Stress and Depression
- Obesity

Ayur Prastha

KERALA AYURVEDIC CLINIC
ayurprastha

505 London Road, Thornton Heath
Surrey, CR7 6AR

**Booking and Appointments: 020 8684 7574 / 08447780052**

croydon@keralaayurvedam.co.uk
www.keralaayurvedam.co.uk

# Tamils in Need

**300,000 internally displaced people in the Vanni region of Sri Lanka.**

***Need your urgent humanitarian help***

**Fund raising event on DEEPAM & GTV Television, IBC & SUNRISE radio**





# கண்ணீர் வெள்ளம்
# Floods of Tears

## 25-12-2008 - 02-01-2009

TO DONATE RING

## 084 55 277 155 / 020 3393 6650

or visit : www.tamilshealth.com
www.floodsoftears.com

தீபம், GTV தொலைக்காட்சி, ஐபிசி, சன்ரைஸ்
வானொலிகளின் ஆதரவுடன் வன்னியில் வெள்ளத்தால்
இடம் பெயர்ந்த மக்களிற்கான நிவாரண நிதி.


**TAMILS HEALTH ORGANIZATION - UK**

Charity No. 1112612

தீபம் IBC GTV SUNRISE RADIO

# MUMBAI 26/11

## அமெரிக்காவால் ஆசிர்வதிக்கப்பட்ட பயங்கரவாதம்!



**வினவு**
*(வினைசெய்யில்)*

மும்பைத் தாக்குதலுக்காக ஆங்கில ஊடகங்கள் சாமியாடுவது இதுவரை நிற்கவில்லை. வருமானவரி கட்டும் பணக்கார இந்தியர்களுக்கே பாதுகாப்=பில்லை, என்ன அநீதி என்று கொதிக்கிறார் பணக்கார இந்தியர்களின் விருந்து வைபவங்களை பத்தியாக எழுதும் ஷோபா டே. உடைந்து கிடக்கும் கண்ணாடித் துண்டுகளின் மத்தியில் நின்றவாறு ஆவேசமாக ஆடுகிறார் என்.டி.டி.வியின் பர்கா தத். வருமானவரி கட்டும் முதலாளிகள் அந்த வரியை பாமர மக்களின் மேல் மறைமுக வரியாய் சுமத்துகிறார்கள் என்ற அடிப்படை அறிவு கூட இல்லாத அந்த அம்மணிக்கு எவ்வளவு ஆணவம்? ஏன், வருமான வரி கட்டாத இந்தியர்களின் உயிர் என்றால் அவ்வளவு இளப்பமா? அவர்களுக்குப் பரிச்சயமான மேட்டுக்குடி மும்பையில் விழுந்த சிறு கீறலைக்கூட அவர்கள் தாங்குவதற்குத் தயாராக இல்லை.

தாஜ், ஒபராய் விடுதிகளில் உயிரிழந்து, அடிபட்ட முதலாளிகளுக்கு ஆறுதல் சொல்லும் விதத்தில் சிவராஜ் பாட்டீல் உள்துறை பொறுப்பிலிருந்து மாற்றப்பட்டு ப. சிதம்பரம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். இதில் நிதியமைச்சகத்தை பிரதமரே வைத்துக் கொண்டிருப்பது அந்நிய முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியதோடு, மும்பைத் தாக்குதலால் சீர்குலைந்த பங்குச் சந்தை மீண்டும் எழுந்திருக்கிறதாம். அவர்களது பாதுகாப்புக்காகக் கவலைப்பட்டுச் செய்யப் படும் மாற்றங்கள் கூட அவர்களது பங்குச் சந்தை பாதிக்காதவாறு செய்ய வேண்டுமாம்.

மும்பை போன்ற நகரங்களில் இது போன்ற சிறிய தாக்குதல்கள் சகஜம் என்று கருத்துரைத்து ஊடகங்களிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட மராட்டியத்தின் துணை முதல்வர் ஆர். ஆர். பாட்டீல் வேறு வழியின்றி ராஜினாமா செய்திருக்கிறார். விலாஜிராவ் தேஷ்முக்கும் ராஜினாமா கடிதத்தை காங்கிரசு மேலிடத்திற்கு அனுப்பிவிட்டதாகவும் முடிவு அவர்கள் கையில் எனத் தெரிவித்திருக்கிறார். தற்போது இவரது விலகலையும் காங்கிரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதுபோக காங்கிரசுக் காரிய கமிட்டியில் எல்லோரும் உணர்ச்சி வசப்பட்டு விவாதித்தார்களாம். அவர்களுக்கு புரவலராக இருக்கும் முதலாளிகளுக்கு ஒரு ஆபத்து என்றதும் காங்கிரசின் மனசாட்டி துடிக்கிறது. ஏ.கே.அந்தோணி, பிரணாப் முகர்ஜி, இறுதியில் மன்மோகன் சிங்கும் தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகுவதாகக் கூறினார்களாம். இறுதியில் சிவராஜ் பாட்டீலை மட்டும் இப்போதைக்கு விடுவித்து ஊடகங்களின் வாயை அடைக்க முடிவு செய்திருக்கிறார்கள்.

முன்னெப்போதுமில்லாத அளவுக்கு தார்மீகப் பொறுப்பு இப்போது மட்டும் நினைவுக்கு வரவேண்டிய அவசியமென்ன? காங்கிரசு கூட்டணி அரசு பதவிக்கு வந்த 2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரை நடந்த 25,000ம் குண்டுவெடிப்புக்களில் 7000 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கு முந்தைய பா.ஜ.க கூட்டணி அரசு ஆட்சியிலிருந்த போதுநடந்த 36,259 குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 11,714 பேர் கொல்லப்பட்டனர். அப்போது எங்கே போனது இந்த தார்மீகப் பொறுப்பு?

2001 குஜராத் இனப்படுகொலையில் 2000த்திற்கும் மேற்பட்ட இசுலாமிய மக்கள் கொடூரமாக சங்க பரிவார குண்டர்களால் கொல்லப் பட்டனரே அப்போது மோடியோ, அத்வானியோ, வாஜ்பாயியோ ஏன் ராஜினாமா செய்யவில்லை? மோடியின் தலைமையில் இந்துமதவெறிக் கும்பல் நடத்திய இந்த இனப்படுகொலையை கொலைகாரர்களின் வாக்குமூலத்திலிருந்தே தெகல்கா ஏடு அம்பலப்படுத்திய போதும் இவர்களை யாரும் ஒன்றும் புடுங்க முடியவில்லையே?

முதலாளிகளின் உயிருக்குள்ள மதிப்பு இசுலாமிய மக்களுக்கில்லையா? அவர்கள் என்ன ஆடுமாடுகளா? இன்றைய இந்தியாவின் குண்டுவெடிப்புகளுக்கு அச்சாரம் போட்ட 93 மும்பைக் கலவரத்தை எடுத்துக் கொள்வோம். ஆயிரத்திற்கும் மேற்பட்ட இசுலாமிய மக்களைக் கொன்று குவித்த இந்த கலவரத்தை தனது 300 ஆண்டு வரலாற்றில் மும்பை கண்டதில்லை. பிரிவினைக்குப் பிறகு இவ்வளவு பெரிய கலவரத்தை நாடும் சந்தித்ததில்லை. உண்மையில் மும்பையில் நடந்த பயங்கரவாதம் இதுதான். இன்றைய பயங்கரவாதங்களுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பதும் இதுதான்.

92 டிசம்பர் ஆறாம் தேதியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு மும்பையில் அதைக் கொண்டாடும் முகமாக சிவசேனா மகா ஆரத்தி என்ற புதிய பண்டிகையை அறிமுகப்படுத்தியது. தெருவில் கும்பலாக நின்று கொண்டு முசுலீம் துவேச முழக்கங்களை முழங்கிக் கொண்டு ஆரத்தி எடுத்தவாறு இந்து மதவெறி மும்பை முழுவதும் தீயாய் பரப்பப்பட்டது. இதை அறுவடை செய்ய இந்துமதவெறியர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகத் தயாரிப்புடன் காத்திருந்தனர். மும்பைப் புறநகர் ஒன்றில் தொழிற்சங்க மோதலுக்காக இரு சுமை தூக்கும் தொழிலாளர்கள் கொலை செய்யப் பட்டவுடன் சிவசேனா அதற்கு மதச்சாயம் பூசி கலவரத்தை துவக்கியது.

**பாகம் 2**

மூன்று இலட்சம் பிரதிகள் விற்கும் சிவசேனாவின் சாம்னா நாளிதழில் பால் தாக்கரே இசுலாமியர்களைக் கொல்லுமாறும் இனிவரும் நாட்கள் நம்முடையவை எனவும் பகிரங்கமாகக் கலவரத்தைத் துவக்குமாறு ஆணையிட்டார். ஜனவரி 7 முதல் 20 வரை இரண்டு வார காலம் மும்பை சிவசேனா பிணந்தின்னிகளின் நகரமாகியது. உ.பியிலிருந்து ரொட்டித் தயாரிப்புத் தொழிலுக்காக வந்த முசுலீம் தொழிலாளிகள், மரவியாபாரம் செய்து வந்த கேரளாவின் மாப்ளா முசுலீம்கள், உ.பி, பீகாரின் சுமைதூக்கும் முசுலீம் தொழிலாளிகள் யாரும் தப்பவில்லை. அன்றைய மும்பையின் மக்கள் தொகை ஒருகோடியே 26 இலட்சமென்றால் அதில் முசுலீம்களின் தொகை 14 இலட்சம். இதில் நான்கு லட்சம் முசுலீம் மக்கள் மும்பையை விட்டு வெளியேறினர். 40,000 பேர் அகதிகள் முகாமில் தஞ்சமடைந்தனர்.

ஹிட்லரின் நாசிக் கட்சியின் பாணியில் முசுலீம் வீடுகளுக்கு பெயிண்டால் அடையாளமிட்டு ஆள் அடையாளம் தெரியக்கூடாது என்பதற்காக ஏரியா மாறி சிவசேனா குண்டர்கள் இராணுவம் போல தாக்கினர். தாடிவைத்தவர்கள், சுன்னத் செய்திருக்கிறார்களா என்று திறந்து பார்த்து அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டவர்கள், மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற முசுலீம்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் தாக்கப்பட்டனர். அனாதை இல்லங்களில் உள்ள குழந்தைகளைக் கூட முசுலீம் குழந்தைகளா என்று பெயர் கேட்டு அடித்திருக்கின்றனர். சிவசேனாவை எதிர்த்து எழுதிய ஒருசில மும்பைப் பத்திரிகைகளும் பால்தாக்கரேவின் குண்டர்களால் தாக்கப் பட்டன. தாராவியிலிருந்த முசுலீம்களோடு தமிழ் மக்களும் கூட இந்தக்கலவரத்திற்காக நகரை விட்டு வெளியேறி தமிழகம் வந்தனர்.

மும்பைப் போலீசு சிவசேனாவின் பாதுகாப் புப் படையாக பணிபுரிந்தது. இன்றைக்கு தீவிரவாதிகளுடன் சமர்புரிந்தவர்கள் அன்று இந்து போலீசாக மட்டும் செயல்பட்டனர். அன்று முதலமைச்சராக இருந்த நாயக்கோ, பிரதமராக இருந்த நரசிம்ம ராவோ யாரும் ராஜினாமா செய்யவில்லை என்பதோடு சிவசேனாவின் அட்டூழியங்களுக்கு ஒத்தூதிக் கொண்டிருந்தனர். அரசுக் கணக்குப்படி 500 முசுலீம்களும், பத்திரிகைகளின் கணக்குப்படி ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்தக் கலவரத்தில் கொல்லப்பட்டனர். எல்லோருக்கும் வாழ்வளித்து மாநகரக் கலாச்சாரத்திற்கு முன்னோடியாக இருந்த மும்பை இந்துமத வெறியால் அப்போதுதான் பிளவுண்டது. முதன்முறையாக பணக்கார முசுலீம்களும் கலவரத்தில் தாக்கப்பட்டனர். இப்போது தாஜ் ஓட்டலுக்காக கண்ணீரைத் தாரைவார்க்கும் மேட்டுக்குடி குலக்கொழுந்துகள் எதுவும் அன்று இரத்தக் கறைபடிந்த மும்பை தனது அழகை இழந்துவிட்டதென வருத்தப்படவில்லை. வருத்தப்பட்டுப் பாரமும் சுமக்கவில்லை. அப்படிச் சுமந்திருந்தால் அவர்களது புண்ணியத் தலமான தாஜ் ஓட்டலுக்கு நேர்ந்த களங்கத்தை தவிர்த்திருக்கலாமே?

மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் வற்புறுத்தலால் பின்னாளில் காங்கிரசு அரசு 93 மும்பைக் கலவரம் குறித்து விசாரிக்க ஸ்ரீகிருஷ்ணா கமிஷனை நியமித்தது. சிவசேனாவின் மிரட்டலான சூழ்நிலையையும் மீறி நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா குற்றமிழைத்த தாக்கரேக் கட்சியினரையும், போலீசு அதிகாரிகளையும் அடையாளம் காட்டினார். ஆனாலும் இந்தக்கமிஷனின் அறிக்கை இன்றுவரை குப்பைக் கூடையில் தூங்குவது தான் கண்ட பலன். கலவரத்தைத்தான் தடுக்கவில்லை, கலவரத்தின் குற்றவாளியைக் கூட கைது செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கு யார் தார்மீகப் பொறுப்பேற்பது?

நாரிமன் இல்லத்தில் இசுரேலியர்களைத் தீவிரவாதிகள் தாக்குகிறார்கள் என்றதுமே இசுரேலிய அரசின் வற்புறுத்தலுக்கேற்ப அமெரிக்க அரசு கமாண்டோ படை அனுப்பட்டுமா என்று இந்திய அரசைக் கேட்டது. உடனே பிரனாப் முகர்ஜி இந்த நாட்டை 61 ஆண்டுகளாக ஆண்டு வருகிறோம், எங்கள் பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக்கொள்ளும் வல்லமையை பெற்றிருக்கிறோம், அமெரிக்க உதவி தேவையில்லை என்று ரோஷத்துடன் பேட்டியளித்தார். இந்த மானம் குஜராத், மும்பைக் கலவரங்கள் நடக்கும் போது எங்கே போயிற்று? பத்தாண்டு காலத்தில் இந்தியா முழுவதும் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட போது காங், பா.ஜ.க அரசின் வேளாண் துறை அமைச்சர்கள் எவரும் ராஜினாமா செய்வது இருக்கட்டும், ஒரு சொட்டு கண்ணீர் கூட விடவில்லையே? இவ்வளவு பேர் இறந்து போனதால் வராத ரோஷம் தாஜ் ஓட்டலின் பாரைக் காலி செய்த உடன் பொத்துக் கொண்டு வருகிறதே?

இன்றைக்கு ஒன்றுக்கு மூன்று தாக்கரேக்கள் மராட்டியத்தில் வலம் வருகிறார்கள். மருமகன் ராஜ் தாக்கரே தனி சமஸ்தானத்தை உருவாக்குவதற்கு அப்பாவி பீகாரி தொழிலாளிகளையும், மாணவர்களையும் தனது வானரப்படையால் தாக்கி வருகிறார். அப்போது கூட அவர் மீது நடவடிக்கை எடுக்க எவ்வளவு பயம்? 2008 இல் இதுதான் நிலைமை என்றால் 93 இல் எப்படி இருந்திருக்கும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இருப்பினும் அன்றைக்கு அப்பாவி முசுலீம்களை வேட்டையாடிய தாக்கரேக்கள் இப்போது துப்பாக்கியுடன் வந்தவர்களைப் பார்த்து வெலவெலத்துப் போயிருக்கிறார்கள் என்பதும் உண்மைதான். மும்பைத் தாக்குதல் குறித்து பெரிய தாக்கரே தனது சாம்னா பத்திரிக்கையில் ஒன்றும் சீறக் காணோம். இதை பார்க்கும் போது இந்து மதவெறியர்களால் உற்றார் உறவினரைப் பறிகொடுத்த ஒரு முசுலீம் இளைஞன் தீவிரவாதம்தான் தீர்வு என்று யோசிக்கமாட்டானா என்ன?

இந்து மதவெறியர்களின் கலவரங்கள்தான் தீவிரவாதத்தின் தோற்றுவாய். இந்தத் தோற்றுவாயை வேரறுக்காமல் புதிய சட்டம் - புலனாய்வுப் பிரிவு - போலீசுப் படை தீவிரவாதத்தின் அபாயத்திலிருந்து இந்தியாவைக் காப்பாற்றி விடுமா?

*- தொடரும்*

We have been helping our client to make the most of their money for over 35 years. How have we been able to stay in business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they deserve.

- We are truly independent and can provide advice across the whole market.
- Our service focuses on your needs and meeting your financial goals.
- We provide ISA portfolios to match all types of investors.
- We provide comprehensive Inheritance Tax solutions, potentially saving 40% tax.

*ARM Associates* can promise you an expert, individually-tailored and cost-effective service. Whether you need specific advice or comprehensive financial planning, we can help.

**ARM Associates**

Professional Investment Advisers

*For a free initial chat, to discuss your requirements, please call:*

**Mr P.Srinivasan** CertPFS
**Mr Suhan Srinivasan** (Dip PFS, Economics BSc)
Tel: **020 8763 2221** / Fax: **020 8763 2220**
Email: **sri@srinivasan.co.uk** / Web: **www.srinivasan.co.uk**
**32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH.**

Authorised and Regulated by the Financial Services Authority.
The value of investments may fall as well as rise.

# சிவத்தக் கன்னம் மட்டும் தான் சிவக்குமா?

சயந்தன்
(ஒருபேப்பர்)

சத்தியமாக தஞ்சாவூரை ஆங்கிலத்தில் டன்சூர் என அழைப்பார்கள் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர் சொல்லும் வரை! ஆனால் அவருக்கு கூட அதில் பெரும் சந்தேகம் இருக்குமாப்போல முகபாவனைகள் உணர்த்தின. இத்தனைக்கும் அவர் அங்கே தான் பிறந்திருக்கிறார்.

சென்ற வாரம் ரயில் பயணமொன்றில் அருகிருந்து சிநேகமாய்ப் புன்னகைத்த அவர்

“இந்தியாவா” என ஆங்கிலத்திலேயே கேட்டார். பெரும்பாலும் அவர் இந்தியராகவே இருப்பார் என்பது என் அனுமானமாயிருந்ததால் “இல்லை. சிறிலங்கா” என்றேன். முன்பொரு தடவை சில வட இந்தியர்களுக்கு “நான் இந்தியாதான் மெட்ராஸ்” என அறிமுகப் படுத்தி விட்டு, பயணம் முழுவதும் இந்தி தெரியாமல் இந்தியனாயிருப்பதன் அவமானத்தை அவர்கள் விளங்கப் படுத்திக் கொண்டே வர, அறுவையை அனுபவித்துக் கொண்ட அனுபவத்திற்கு பிறகு, ரிஸ்க் எடுக்க விரும்புவதில்லை.

மீளவும் எனது தாய்மொழி என்ன என்று கேட்டார். தமிழ் என்றேன். தானும்தான் என்றார். தசாவதாரம் படத்தில் நாயுடு கமல் யாரும் தெலுங்கர்களைச் சந்திக்கும் போதொலிக்கும் பின்னணி இசை எனக்குள் ஒலிக்கத் தொடங்க, ஆர்வ மிகுதியால் “அப்ப தமிழிலேயே கதைக்கலாம்” என வாயெல்லாம் பல்லாகச் சொன்னேன்.

“ஊப்ஸ்.. எனக்கு கொஞ்சம் விளங்கும். பேச முடியாது. சின்ன வயசிலேயே லண்டனுக்கு பெற்றோரோடு சென்று bla bla bla bla…” அவர் ஆங்கிலத்தில் தொடர்ந்தார். எனக்கொரு ஏமாற்றமும் இல்லை. அதுவுமல்லாது எனக்கும் இங்கிலிசு தெரியும் என எப்படியாம் காட்டுவது : )

அவர்தான் “தான் டன்சூர்” (அல்லது அதே மாதிரியான ஒரு ஒலி) என்றார். முதலில் கொஞ்சம் குழம்பித்தான் போனேன். சட்டென்று பொறிதட்ட “தஞ்சாவூர்” என்றேன். “யா யூ கொட் இட்” என்றார்.

இருவார காலமாகத்தான் இங்கு அவர் தங்கியிருக்கிறார். வேலையில் இடமாற்றம். பயணத்தில் “இங்கே சுவிசில் கள்ளர்கள், தீயவர்கள், இன வெறி காட்டுபவர்கள் என அடையாளப் படுத்தப்பட்டோர் அதிகம் தங்கும் இடங்கள், என பிரிப்புக்கள் உண்டா” என அவர் கேட்டார். லண்டனில் உண்டாம். அவுஸ்ரேலியாவிலும் திருடர்கள் ஜாக்கிரதை என்ற எச்சரிக்கையிடப்பட்ட பகுதிகளைப் பார்த்திருக்கிறேன். நடு இரவொன்றில் திருடர்கள் திரத்த, நானும் மச்சானும் உயிரை கையில் பிடித்துக் கொண்டு ஓடிய கதையொன்றும் உளது.

* * *

சுவிற்சர்லாந்தில் நிற வேறுபாடு காட்டும் மக்கள், அதனூடான புறக்கணிப்புகள் எதனையும் ஆழமாக அலசும் நோக்கம் இங்கில்லை எனக்கு. ஆனால் சில பல சந்தர்ப்பங்களில், அவர்களில், அவர்களின் வார்த்தைகளில் அவை வெளித்தெரியத்தான் செய்கின்றன. பஸ்சில் கறுப்பருக்கு முன்னால் அமர முடியாத, அமரும் இடத்தில் கட்டுள்ள, சில பழசுகள் இன்னும் இருக்கிறார்கள்.

அண்மையில் தேர்தல் கட்சியொன்று சுவிஸ் முழுவதும் ஒட்டியிருந்த போஸ்டர்கள் பரவலாக சர்ச்சையைக் கிளப்பியிருந்தது. நாகரீகம், மனிதாபிமானம், மட்டை, மண்ணாங்கட்டி என்ற இவர்களின் பீற்றுதல்களில் பெரும் ஏளனத்தை எனக்குள் உருவாக்கின அவை. சில வெள்ளையாடுகள், சுவிஸ் என்ற தேசத்திலிருந்து கறுப்பு ஆடு ஒன்றை உதைத்துத் தள்ளுவது போல அமைந்திருந்தது ஒரு சுவரொட்டி. அடுத்ததில் கொட்டிக் கிடக்கும் சுவிஸ் பாஸ்போட்களை, கறுப்பு, வெளுப்பு, பழுப்பு, சொக்லேட் என பல கைகள் பொறுக்கியெடுக்கின்றன. அதை நிறுத்துக என்ற மாதிரியானது அடுத்த சுவரொட்டி.

தன் தேசிய இனத்தின் வேலை வாய்ப்பு உட்பட பல வசதிகள் மற்றோரால் பறிக்கப்படுவதை, பங்கிடப் படுவதை அனுமதிக்க முடியாது என்ற கோணங்களில் இதற்கான நேர் வினைகளும் ஆற்றப்பட்டன. அந்த ஆய்வுகளை விட்டு விடலாம்.

* * *

நானும் நண்பரும் காரினை பார்க் செய்ய வேண்டியிருந்தது. அதற்கான நுழைவாயிலில் நமக்கு முன்னால் இன்னொரு கார். உள்ளே ஒரு வயதான பெண்மணி. அறுபதுகளைத் தொடும் வயது அவருக்கு இருக்கலாம். ஒன்றிரண்டு நிமிடங்களாக அவர் காரினை முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. நமக்கு வெட்டிப் பிடுங்கும் அவசரம் எதுவும் இல்லைத்தான். ஆனாலும் இள வயதல்லவா? அந்தரித்த வயது!

சரியோ தவறோ வாகனத்தின் Hornஐ அடித்துவிடுகிறார் நண்பர். அடுத்து வந்த நிமிடங்கள் ஜாலியானவை. முன்னால் காரிலிருந்து இறங்கி குடு குடுவென நடந்து வந்தார் அந்த மூதாட்டி. பெரும் போர் ஒன்று மூளப் போகிறதென நாங்களும் தயாரானோம். அதிலும் ஜெர்மன் மொழியில் சண்டையிடுவதானால் எனக்குத் தயார்ப்படுத்தச் சில நிமிடங்களாவது வேண்டும்.

அருகில் வந்தார் மூதாட்டி. கண்ணாடியைத் திறந்து விட்டு “என்னணை” என்பது போலப் பார்த்தோம். “உதெல்லாத்தையும் கொண்டு போய் சிரிலங்காவில வைச்சுக்கொள்” என்று முதலாவது குண்டைப் போட்டார். “என்ன ஏது ஏன்.. எதுக்கு” என்று திக்குமுக்காடிப் போய்த் தெளிவதற்குள் அடுத்த குண்டு. “நானும் கொழும்பெல்லாம் போய் வந்த ஆள்த்தான். அங்கை ட்ரபிக்கில ஒரு மணித்தியாலம், ரண்டு மணித்தியாலம் எண்டெல்லாம் நிக்கும் போது, உன்னாலை பொத்திக் கொண்டு நிற்க முடிந்தது தானே. இப்ப இதில ஒரு நிமிடம் நிற்க முடியாதோ உன்னால?”

கிழிஞ்சுது. நானும் நண்பரும் திருப்பித் தாக்கிற எண்ணமெல்லாத்தையும் கைவிட்டு விட்டு சமாதானமாகப் போகலாம் என்று நல்லெண்ணத்தைக் காட்டினோம். “சரியணை. ஆச்சி. நாங்கள் சும்மா பம்பலுக்கு. மன்னிச்சுக்கொள்ளணை. போனை போனை” என்றோம். அதற்கிடையில் பின்னாலும் சில வாகனங்கள் சேர்ந்து விட அவர் சென்று காரை எடுத்து வழி விட்டார். இறங்கிய பிறகும் அவர் சத்தமிட்டுக் கொண்டுதான் இருந்தார்.

நாங்கள் உட்சென்று விட்டோம். ஒரு அரைமணி நேரம் சென்றிருக்குமோ? மீளவும் வெளியே வந்து கார் அருகில் செல்ல எங்கிருந்துதான் வந்தாவோ தெரியவில்லை. நினைச்சு நினைச்சு அழும் குழந்தையைப் போல! ஒரு ஒற்றைச் சத்தத்தை தாங்க முடியாதவராய்..

எங்கள் மீதிருந்த கோபம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிநாட்டுக் காரர்கள் மீது திரும்பியது. எல்லா வெளிநாட்டுக்காரர்களும் திருடர்கள், காட்டுமிராண்டிகள் என்ற ரீதியில் அவர் சத்தமிட்டுக் கொண்டிருந்தார். எல்லா வெளிநாட்டுக் காரர்களையும் வெளியே வீச வேண்டும் என்று அந்த வார்த்தையை அவர் உதித்த போதுதான், அந்தச் சிக்கல் ஒரு வரலாற்றுத் திருப்புமுனையைச் சந்தித்தது. அந்தப் பக்கத்தால் சென்று கொண்டிருந்த யாரோ ஒருவருக்கு (அனுமானத்தினடிப்படையில் யூகோஸ்லாவிய நாட்டுக்காரர்) அந்த வார்த்தைகள் உறைப்பினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். (நமக்கு மீன் குழம்பு, நண்டுக்கறி, இறைச்சிக்கறி இவை தவிர்ந்த வேறெதுவும் உறைப்பினைத் தருவதில்லையென்பதை சொல்லியா தெரிய வேண்டும். )

திடீரென பிரச்சனை இன்னொரு பரிணாமத்தை எடுத்து அந்த யூகோஸ்லாவிய நாட்டுக் காரருக்கும், அந்த மூதாட்டிக்குமிடையிலான பிரச்சனையாக உருமாறியது. “எப்படி எங்களை வெளியே வீசச் சொல்லுவாய்” என அவரும் “ஓம் நீங்கள் எல்லாம் திருடர்கள்” என மூதாட்டியும் சண்டை பிடிக்கத் தொடங்கினார்கள். சண்டையின் மூலகர்த்தாக்களான நானும், நண்பரும் புலிகளையும் இந்திய இராணுவத்தையும் மோத விட்டு ஒதுங்கிய சிறிலங்கா இராணுவம் போல இடத்தை விட்டு நைஸாக வெளியேறினோம்.

அந்தப் பெண்மணியின் மனதிற்குள் ஒரு சிங்கத்தைப் போல படுத்திருந்த வெளிநாட்டவருக்கு எதிரான உணர்வை நாங்கள் சீண்டி விட்டோம் என்பதைத் தவிர வேறு என்னத்தைச் சொல்வது?

* * *

இது வெர்ஜினியாவிற்கு நடந்த சம்பவம். அவரோடு கூடப் பணிபுரியும் ஒரு இளவயது வெள்ளையினப் பெண் சிரித்துச் சிரித்தே கேட்டிருக்கிறார். “இஞ்சை.. நாங்கள் வெள்ளையென்ற படியால எங்களுக்கு கோபம் வந்தால் முகமெல்லாம் சிவக்கும். அதை வைச்சு நாங்கள் கோபமாயிருக்கிறம் எண்டு கண்டு பிடிக்கலாம். ஆனா இப்ப நீங்கள் கோபமாயிருக்கிறீங்கள் எண்டால்.. எப்பிடி கண்டு பிடிக்கிறது. (அதாவது கறுத்த முகத்தில கோபத்தில சிவப்பது தெரியாது என்றது அவாவிட கவலை)

பதிலுக்கு வெர்ஜினி சொன்னது இதுதான்.

“உண்மைதான். உனக்கு கோபம் வந்தால் உனது கன்னம் சிவக்கும். எனக்கு கோபம் வந்தாலும் உனது கன்னம்தான் சிவக்கும்.”

“அது எப்பிடி” என்று ஆச்சரியத்தில் இரண்டு மூன்று நாட்களாக வெர்ஜினியாவை விசாரித்துத் திரிந்தாவாம் அவ.

*பின்குறிப்பு: வெர்ஜீனியா எனது மனுசி.*

**WEBSITE DESIGN**
**தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சி**

▶ நீங்கள் தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சியைப் பெற வேண்டுமா?

கிழமை நாட்களில் மாலை நேரத்தில் 3 மணி நேர பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன

5 வகுப்புகளில் பயிற்சி பெற்ற பின் நீங்களாகவே ஒரு இணையத் தளத்தை உருவாக்கும் ஆற்றல் பெறுவீர்கள்.

**இடத்திற்கு முந்துங்கள்**
பதிவு செய்வதற்கு
தொலைபேசி: **020 7043 4316**
*45B, Crusoe Road, Mitcham, CR4 3LJ*

**Painfree Clinic**



- **NHS** அழைப்பிற்காக காத்திருந்து அலுத்து விட்டதா ?
- கை, கால், கழுத்து, முதுகு வலியுடன் நெடுநாள் அவஸ்த்தையா ?
- மொழி பிரச்சினையால் உங்கள் வலியை முழுமையாக உணர்த்த முடியவில்லையா ?
- நமக்காக ஒன்று அருகில் இருந்தால் நன்று என நீங்கள் நினைப்பது எங்களுக்கு கேட்டது, . . .

அதனால் Bromley இல் ஒரு புதிய Physiotherapy சிகிச்சை அறை (வீட்டுச் சூழலில்)

மருத்துவமனை செல்கிறோம் என்ற எண்ணம் தோன்றா வண்ணம் முழுவதும் வீட்டுச் சூழலிலே !

உடனே முன்பதிவு செய்யுங்கள் நலம் பெறுங்கள் தொடர்புகளுக்கு:
**07903501336 07794424147**

பிரித்தானிய ஐரோப்பிய தகவல் ஏடு
**தமிழ் ஓலைகள்**
www.tamilpages.org
020 8543 2126 / 0771 800 3838/ 0771 800 3839

## Web developer

We are looking for Web Developer to join our small dynamic team to spear head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

**Essential skills:**

- XHTML
- CSS
- Dream Weaver
- Flash
- Graphic design packages like Adobe photoshop

Knwledge of scripting language is highly desirable.

Send your CV to *info@orupaper.com.*

## Application developer

The ideal candidate should have proven experince in application development in LAMP environment.

**Essential skills:**

- XHTML, Javascript and AJAX
- MySQL , Postgresql
- Apache
- PHP

Knowledge of other progrmming environment is an added advantage.

Send your CV to *info@orupaper.com.*

# தர்மகுமாரியின் நாட்டியம்



அண்மையில் தமிழகத்தினையும் தமிழீழத்தின் கிழக்குப் பகுதிகளையும் தாக்கலாமென்று அச்சப் பட்ட நிசா என்று பெயர் சூட்டப்பட்ட புயல் வலு விழந்து வங்கக் கடலைத் தாண்டிய செய்தியறிந்து கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விட்ட அதே வேளை, தமிழகத்தில் தர்மகுமாரி (வயது 58)என் பவர் புதிதாய் ஒரு புயலைக் கிளப்பி விடவே. தமி ழகத்துடன் தமிழீழம் மட்டுமல்ல உலகமெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அத்தனை பேரும் கொஞ்சம் அதிர்ந்து போய் விட்டிருந்தனர். தமிழகத்திலிருந்து வெளியாகும் குமுதம் ரிப்போட்டரில் இந்தியாவின் இடதுசாரிக் கட்சித் தோழர் மகேந்திரன் மீது தன்னிடம் பணம் வாங்கி ஏமாற்றினார் என்றும். மற்றும் பாலியல் ரீதியான குற்றச் சாட்டுக்களை தெரிவித்த தர்மகுமாரியின் செவ்வியைப் படித்த எனக்கு ஏற்கனவே இவரைப் பற்றி நான் படித்த சர்ச்சையான ஒரு செய்தி நினைவிற்கு வரவே இவரைப் பற்றிய விபரங் களை சேகரிக்கும் தேடலில் இறங்கினேன்.

தேடலைத் தொடங்கியதுமே குப்பைத் தொட் டியை கிழறத் தொடங்கியது போல் அவரது விபரங்களும் குப்பைகளாகவே வந்து கொண்டி ருந்தது. இவர் யாழில் கொக்குவில் கிராமத் தினைச் சேர்ந்தவர். தந்தை பெயர் முத்துக் குமாரசுவாமி. இவர் முன்னை நாள் புகையிரதத் திணைக்களத்தில் வேலை செய்தவர். இவரிற்கு ஏழு பெண்களும் மூன்று ஆண்களுமாக பத்துப் பிள்ளைகள். அவர்களின் பெயர்கள். ஆண்கள் ஆனந்தகுமார்,சிவகுமார்,ஸ்கந்தகுமார், (கண் ணன்)பெண்கள், ஜெயகுமாரி, சாந்தகுமாரி, விஜய குமாரி, அருண்குமாரி, சந்திரகுமாரி, சுகந்தகுமாரி, தர்மகுமாரி. இப்பொழுது இவர்களில் ஆனந்த குமார் என்பவர் மட்டும் ஒரு சிங்களப்பெண்ணை மணமுடித்து தென்னாபிரிக்காவில் வாழ்ந்து வருகிறார். மற்றையவர்கள் அனைவருமே இங்கிலாந்தில் வசித்து வருகின்றார்கள்.

தர்மகுமாரியும் நாகலிங்கம் என்கிற கணக் காளரை திருமணம் செய்து கொண்டு தென்னா பிரிக்காவில் குடியேறியிருந்தார். இருவரிற்கும் தர்சினி, சிவாந்தினி, பிரியாந்தினி, என்று மூன்று பெண் பிள்ளைகளும் பிறந்தது. இவர்களும் பிள்ளைகளை தமிழர் கலை கலாச்சார முறைப் படியும் கல்வி கற்க வைப்பதென முடிவெடுத்து நாகலிங்கம் தர்மகுமாரியையும் பிள்ளைகளையும் 96ம் ஆண்டு தமிழ்நாட்டில் கொண்டு போய் விட்டு விட்டு மாதா மாதம் பணம் அனுப்பிக் கொண்டிருந்தார்.

இப்படி இருக்கும் பொழுதுதான் இவர்களின் குடும்ப நண்பரான வைத்தியர் ஒருவருடன் தர்மகுமாரிக்கு (வயது 58) முதற் தொடர்பு ஏற்பட்டு அது கணவரிற்கும் தெரியவரவே இவர்கள் இருவரிற்குமிடையில் பிரச்சனைகள் தொடங்கி விட்டிருந்தது. இந்த வைத்தியர் இப் பொழுது கனடாவில் ஒரு பெண்ணை திருமணம் செய்து குடும்பமாக வாழ்ந்து வருகிறார்.

இப்படியே தொடர்ச்சியாக தமிழ் நாட்டில் இருந்த இடங்களிலெல்லாம் பல ஆண்களுடன் தொடர்புகள் பிரச்சனைகள் என்று பட்டியல் நீளுகின்றது. இவர் கொஞ்சம் வசதியான திருமண மான ஆண்களையே குறிவைத்து தொடர்புகளை ஏற்படுத்திவிட்டு பின்னர் அவர்களது மனைவி களிடம் சொல்லி விடுவேன் என்று மிரட்டி கறப்பதை கறந்து விடுவது இவரது பாணியாக இருந்திருக்கிறது.

## தோழர் மகேந்திரன் மீது திடீரென இப்படியொரு பாலியல் பணமோசடி என்று ஒரு நாட்டியத்தினை தர்மகுமாரி அரங்கேற்றியிருப்பதன் பின்னணியில் இலங்கைத் தூதரகத்தின் கைகள் தர்மகுமாரியை தழுவிக்கொடுத்திருக்கும் என்பது சந்தேகமில்லை.

அதுமட்டுமல்ல இவரால் குற்றம் சாட்டப்பட்ட மகேந்திரனின் ஊரான தஞ்சாவூரை சேர்ந்த ஒருவருடனும் தொடர்பு ஏற்பட்டு, அந்த நபரின் மனைவி மகேந்திரன் அவர்களிடமே பிரச்னையை தீர்த்து வைக்கும்படி போன விடயமும் நடந்து ள்ளது. இவையெல்லாம் இப்படியிருக்க தர்ம குமாரியால் குற்றம் சாட்டப்பட்டவரான இடதுசாரித் தோழர் மகேந்திரனுடன் தொடர்பு கொண்டு விபரங்களை கேட்டபொழுது அவர் சொன்னார் தர்மகுமாரி தனக்குத் தெரிந்த ஒருவரின் சிபாரிசுடன் என்னைச் சந்தித்திருந்தார்.

அவரது பிள்ளைகளின் படிப்பிற்காக பாடசா லையில் சேர்ப்பதற்காகவும் தங்குமிட வசதிகளிற் காகவும் சில உதவிகளை செய்து கொடுத்தேன் அவ்வளவுதான். அதன் பின்னர் இரண்டாயிரமாம் ஆண்டு தான் ஒரு வீடு வாங்க விரும்புவதாகவும் அதற்குரிய பணம் தன்னிடம் இருப்பதாகவும் தன க்கு விசாபிரச்சனை இருப்பதாலும் வெளிநாட்டவர் என்பதாலும் வீடு வாங்குவதில் சிக்கல் இருப்பதால் தனக்கு நம்பிக்கையான ஒருவரை அறிமுகம் செய்து உதவும்படி கேட்டிருந்தார்.

நான் அரசியல் பொதுவாழ்வில் இருப்பதால் இது போன்ற பணவிவகாரங்களில் தலையிட விரும்பாமல் மறுத்து விட்டேன். அதன் பின்னர் 2001ம் ஆண்டின் பின்னர் நான் அவரை சந்திக்கவே இல்லை என்றார்.

தர்ம குமாரியின் தந்தையான முத்துக்குமார சுவாமி அவர்கள் தற்சமயம் இலண்டனில் ஒரு முதியோர் காப்பகத்தில் இருக்கின்றார். நடந்த சம்பவங்கள் தொடர்பாக அவரது கருத்தினைக் கேட்கலாமென தொடர்பு கொண்ட பொழுது அவர் தான் இப்பொழுது எதுவும் சொல்லக் கூடிய நிலையில் இல்லையென தெரிவித்து விட்டார்.

அதே போல அவரது சகோதரர்களும் தங்களிற் கும் தர்மகுமாரிக்கும் இப்பொழுது எவ்வித தொடர்புகளும் கிடையாது எனவே எதுவும் சொல்ல விரும்பவில்லையென தெரிவித்து விட்டனர்.

ஆனால் தர்மகுமாரி தென்னாபிரிக்காவில் தன்னுடைய முத்த மகளான தர்சினியின் பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு தென்னாபிக்காவின் இலங்கைத் தூதரை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்த பொழுது தென்னாபிரிக்காவில் பல தமிழ் ஆர்வலர்கள் ஒன்று சேர்ந்து இலங்கைத் தூதருக்கு எதிரான ஒரு ஆர்ப் பாட்டம் ஒன்றினையும் நடத்தியிருந்தனர்.

தென்னாபிரிக்காவிலும் இந்தியாவிலும் இவர் இலங்கைத் தூதரகத்துடன் நல்லதொரு தொடர் பினை கொண்டிருந்தவராக உள்ளார். எனவே தான் தமிழ்நாட்டில் இன்று ஈழத் தமிழருக்கு ஆதரவு என்பது பெரும் தீயாகப் பரவி தமிழ் நாடு மட்டுமல்ல இந்தியாவின் மற்றைய மாநிலங்களிலும் தொற்றிக் கொண்டிருக்கும் இந்த வேளை அந்த ஆதரவுத் தீயை பற்ற வைப்பதற்காக முதல் தீக்குச்சியை உரசிப் போட்டவர்களின் முக்கியமான ஒருவராகக் கருதப்படும் இடதுசாரித் தோழர் மகேந்திரன் மீது திடீரென இப்படியொரு பாலியல் பணமோசடி என்று ஒரு நாட்டியத்தினை தர்மகுமாரி அரங்கேற்றியிருப்பதன் பின்ன ணியில் இலங்கைத் தூதரகத்தின் கைகள் தர்ம குமாரியை தழுவிக் கொடுத்திருக்கும் என்பது சந்தேகமில்லை.

அது மட்டுமில்லை இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து தன்னுடைய கட்சியில் உள்ளவர்களும் இதற்கு உடந்தை என்கிறார் மகேந்திரன்.

எல்லாம் சரி இப்படியொரு பாலியல் குற்றச் சாட்டென்று எழுந்திருக்கின்றதே வழமை போல ஏதாவதொரு இந்து மடம் அல்லது சாமியாரின் பெயர் அடிபடவில்லையே என்கிற குறையையும் தர்மகுமாரியே தீர்த்து வைத்துள்ளார்.

இவர் அண்மைக் காலமாக கோயமுத்தூர் அருகே பேரூரில் சாந்தலிங்க சுவாமிகள் என்ப ரால் நடாத்தப்படும் பேரூர் மடத்திலேயே தங்கி யிருந்து தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழி சைவ சித்தாந்தம் படித்ததாக சொல்லப் படுகிறது.

தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் விசா பிரச்சி னையை தீர்ப்பதற்காகவே இவர் தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்ததாகக் கூறப்படு கின்றது. அந்த மடத்திலும் பல ஆண் தொடர்பு களால் பிரச்சனைகள் எழுந்துள்ளதாக அந்த மடத்தின் உறுப்பினர்கள் சொல்கிறார்கள்.

தன்னுடைய மகளிற்கு பரத நாட்டியம் பழக்கு வதற்காக தமிழ்நாடு சென்றதாக தமிழ்நாட்டு பத்திரிகைகளிற்கு பேட்டியளித்த தர்மகுமாரி தானே ஒரு பாலியல் நாட்டியத்தினை அரங்கேற்றி விட்டு தற்சமயம் தென்னாபிரிக்காவிற்கு திரும்பிச் சென்று அங்கு உள்ள ஒரு இந்து மடத்தில் தங்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

*- சாத்திரி*

# பயோடேற்றா



பெயர்: நிர்மலா

முழுப்பெயர் : எப்பிடி எழுதிறது என்பதில் பிரச்சினை

வயது : ஓய்வு பெறவேண்டிய வயது (எல்லாவற்றிலும் இருந்து)

தொழில் : புலியெதிர்ப்பு.

பொழுது போக்கு : மனிதவுரிமை மற்றும் பெண்ணியம் பேசுவது, புதிதாய் பெரியாரிசம்.

சாதனை : தங்கை ராஜினியை புலிகள்தான் கொன்றார்கள் என்கிற ஒரே பொய்யை தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பது.

சோதனை : இவரின் பேச்சை எவருமே கணக்கில் எடுக்காதது

நண்பர்கள் : நித்தியானந்தன், ராகவன், மற்றும் சிலர்..

எதிரிகள் : ஏகப்பட்டவர்கள்... புதிதாய் ராஜேஸ்வரி

விரும்புவது : மேதாவியாய் காட்டிக் கொள்வதை

விரும்பாதது : விமர்சனங்களை

எதிர்பார்த்தது : புலிகளின் மகளிர் பிரிவுத் தலைமை (நிறை வேறவில்லை)

எதிர்பார்ப்பது : புலத்தில் புலியெதிர்ப்புத் தலைமை. (நிறை வேறப் போவதில்லை)

மறக்காதது : வெலிக்கடை மட்டக்களப்பு சிறைகளை

மறந்தது : மற்றையவர்கள் செய்த உதவிகளை

புலம்பல் : நான் உப்பு விக்கப் போனால் மழையடிக்கிது. மாவு விக்கப் போனால் காத்தடிக்கிது எண்டிற கதையாய் நான் எதை செய்யப் போனாலும் சரி வருதில்லை. “No More Tears Sister” எண்டொரு படமும் காட்டிப் பாத்தன். சரி வரேல்லை. அடுத்த படத்திலையாவது குத்துப் பாட்டும் சண்டையும் வைச்சு முயற்சி பண்ணிப் பாப்பம்.

*- சாத்திரி*


## அகதித் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டிருக்கின்றீர்களா?

**உங்கள் விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளீர்களா?**

**நாடு கடத்துவதற்காகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்களா?**

**“தமிழ் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றது”**

தஞ்சக் கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டு, திரும்பவும் நாடு செல்ல விரும்பாத தமிழர்களை – கட்டாய நாடு கடத்தலில் இருந்து நிற்பாட்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் (European Court of Human Rights) உங்கள் நாடு கடத்தலை ஐக்கிய ,ராச்சியத்திற்கு எதிராக தடை உத்தரவை பிறப்பித்து நிற்பாட்டி பிணையின்றி தடை முகாம்களிலிருந்து வெளியில் எடுத்து விடுவதில் முன்னனியில் நின்று வேலை செய்து கொண்டிருக்கும் தமிழ் கொமியூனிற்றியை உடன் அழையுங்கள்

**020 8444 6655.**

கடந்த 10 மாதங்களில் 130க்கும் அதிகமான தமிழர்களின் நாடு கடத்தலைத் தடுத்து, தடுப்புக் காவலில் இருந்து பிணையின்றி வெளியில் எடுத்து விட்டிருக்கின்றோம்.

இன்று 300க்கும் அதிகமான தமிழர்களை திருப்பி அனுப்புவதை தடை செய்யப்பட்டமைக்கு தமிழ் கொமியூனிற்றி தொண்டர் நிலையம்தான் முதற் காரண கர்த்தாவாக அமைந்துள்ளது.

மனச்சாட்சியற்ற, கண்ணியமற்றவர்களின் சேவையினால் பயந்த நிலையில் கவலை கொண்டுள்ளீர்களா?

**"யாமிருக்கப் பயம் ஏன்?"**

அழையுங்கள்:

**தமிழ்க் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றோம்**

**0208 444 6655**

*தமிழர் அறங்காவற் கட்டளை*

(இலக்கம்: 1117267)

**tamil community**

**“building a better community”**

CA House
28-30 Muswell Hill Broadway
London N10 3RT
Tel: 020 8444 6655
Fax: 020 8444 6244
Email: info@thamilcommunity.org
www.thamilcommunity.org

# பண்டார வன்னியனின் படை நடந்த காடு

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

வன்னி எங்கணும் கன மழைக்காலம். எறிகணை மழையையோ குண்டு மழையையோ எதனையும் சொல்லவில்லை. இயற்கையான மழை நாட்களைப் பற்றிச் சொல்கின்றேன். களிமண் தறையாக உள்ளது வன்னி மண். தூறிய மழைக்கு அது சேறு. கடும் மழைக்கு வெள்ளம் தேங்கி நிற்கும். கடும் மழைக்கு வேறொன்றும் நிகழும். குளம் கட்டுடைத்துப் பாயும். வெள்ளம் கரை புரண்டு ஓடும்.

இரணைமடுக்குளத்தை அப்போது பார்க்க வேண்டும். குளம் என்று அதனை யார் சொன்னார்? கடல்; பெருங்கடல். ஆர்ப்பாட்டம் செய்து எகிறிப் பாயவில்லை அலை. கிளுக் கிளுக் என்று தளம்பித் தளம்பிக் கிடக்கும். சிற்றலை ஒன்று வந்து கரையில் எம் கால் நனைக்கும். அவ்வளவேதான். ஆயினும் இரணைமடு குளம் அல்ல; மகா சமுத்திரம்.

முறிப்பை வேண்டும் என்றால் குளம் என்று சொல்லுங்கள். அதுவும் கடல்தான் என்று யாரும் சொன்னால் நான் மறுக்கப் போவதில்லை. எம் நிலம், எம் தேசம், எம் மக்கள் என்றால் எதைத் தான் நான் மறுக்கப் போகின்றேன்?

மழைக்காலத்தில் வன்னியின் காடுகளே குளமாக இருக்கும். வாய்க்காலில் வெள்ளம் பொங்கிப் பெருகும். 'நீ நெல்லை விதைத்து விடு மிச்சத்தை நான் பார்க்கிறேன்' என்றான் விஜயகுமார். என்னுடன் ஒன்றாக கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் ஆசிரியன். அதற்கு இரண்டு வருடங்கள் முன்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதல் வருட மாணவன். வாத்தி வேலையுடன் பனங்காமத்தில் கமம் செய்கின்றான்.

பனங்காமம் அவனது சொந்த ஊர். அவன் தந்தை அங்கு விதானை. விஜயகுமாரின் தந்தையின் சா வீட்டிற்கு பனங்காமத்திற்கு ஒரு முறை போனேன். சைக்கிள் பயணம். அந்தப் பயணமே 3, 4 மணித்தியாலம். இடையில் தேநீர் குடிக்கத் தானும் ஒரு கடை இல்லை. ஆனால் ஒரு பாதையில் பல தேநீர்க் கடைகள் இருந்தன.

கிளிநொச்சியிலிருந்து பனங்காமத்திற்குப் போவதற்கு மூன்று பாதைகள் இருந்தன. நெற்றிக்கு நேரே புறப்பட்டு கண்டி வீதியால் சைக்கிள் உழக்கினால் முறிகண்டிப் பிள்ளையாரைக் கும்பிடலாம். கும்பிட்டு, தேநீர் கடைக்குச் சென்று வடை தின்று பிளேன் ரீ குடிக்கலாம். ஒரு கச்சான் சரையும் வாங்கினால் பயணத்திற்குப் பெரும் உவப்பு. கண்டி வீதியிலிருந்து கொக்காவிலில் மேற்குப் பக்கமாகக் காட்டுக்குள் இறங்க வேண்டும். பொழுது பட்ட நேரம் போவது உசிதம் அல்ல. யானைக் கூட்டத்தைக் காணாமல் திரும்ப முடியாது. கண்டாலும் திரும்ப முடியாது.

காட்டுக்குள்ளால் செல்லும் பாதை ஏறும் இடங்கள் துணுக்காய், மல்லாவி, பாண்டியன் குளம், வவுனிக்குளம் என்றாகிறது. இருள் இல்லையென்றால் இங்கெல்லாம் தேநீர் குடிக்கலாம். கூடவே வருவது பாலி ஆறு. வா.ஐ.ச. ஜெயபாலன் 'பாலி ஆறு நகர்கிறது' என்று நல்லதொரு கவிதை எழுதி இருந்தார்.

'அமைதியாய்ப் பாலி ஆறு நகர்கிறது
பண்டாரவன்னியன் படை நடந்த அடிச்சுவடு
இந்நாளும் இம்மணலில் இருக்கவே செய்யும்'

வன்னிக் குளம் தாண்டி காட்டுக்குள் மீண்டும் விழ வருவது பனங்காமம். இந்தப் பனங்காமத்துக்குப் பிறகு பல முறை நான் போக வேண்டி வந்தது. முன்னர் சொன்ன அந்த வயல் விதைப்புக்காக.

பனங்காமத்துக்குப் போகும் மற்றும் இரண்டு பாதைகளை இனிச் சொல்கிறேன். ஒரு பாதை கிளிநொச்சியில் எங்கள் வீட்டிலிருந்து இடப்புறமாகப் போக வேண்டும். அது அக்கராயன் குளம் கண்டு போகிற பாதை. இடையில் இன்னொரு குளமும் காண வேண்டும். அது முறிப்புக் குளம். முறிப்புக்குளம் தாண்டி, கோணாவில் தாண்டி, காட்டு வழி காண்கின்ற பாதை அது. சுமார் மூன்று மணித்தியாலம் சைக்கிள் ஓட்டத்தில் யோகபுரம் ஏறி மல்லாவி மிதக்கலாம். இரவுக்கு இப்பாதை ஒரு போதும் ஆகாது. இரவுக்கு பனங்காமத்துக்கு எப்பாதை தான் ஆகும்?

மூன்று பாதைகள் என்றா சொன்னேன்? மூன்றாவது பாதை ஓரளவிற்கு இவற்றை மருவித்தான் போகும். ஆனால் ஆகலும் தூரிட்டுப் போய்விட்ட பாதை. அது மாங்குளம் சந்தி கண்டு மேற்கே திரும்பும் பாதையால் சென்றால் வருவது. மிகப் பாதுகாப்பான பாதை. அது இரவுக்கு அல்ல.

இந்தப் பனங்காமத்தில் மாரி காலத்திற்கும் பனிக் காலத்திற்கும் சேர்த்து வயல் செய்தேன். நான் எங்கே செய்தேன்? விஜயகுமார் தான் எனக்காகச் செய்தான். தனக்கொரு வயல் காணி. பக்கத்தில் எனக்கொரு வயல் காணி. வெள்ளிக்கிழமைகளில் பள்ளிக்கூடம் விட சைக்கிள் உழக்குவான். சனி ஞாயிறுகளில் வயலைக் கண்காணிப்பான். தேவையானவற்றைத் தான் செய்வான். சொல்லியும் செய்வான். திங்கட்கிழமை பாடசாலை வந்து விடுவான். வயலுக்குப் போகையில் சிறுத்தை ஒன்றைக் கண்டதாகச் சொன்னான். தன்னைக் கண்டவுடன் அது காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டது என்றான்.

நெல்லு விதைப்புக் காலத்தில் ஒருக்கால் போனேன். புல்லுப் புடுங்கிற காலத்துக்கும் போனேன். 'நல்லா விளைஞ்சு கிடக்கு. கட்டாயம் வந்து பார்' என்றான். அப்போதும் போனேன். அறுவடை நாளுக்கென்றும் போனேன். விஜயன் வீட்டு வளவிற்குள் யானைக் கூட்டம் வந்து துவம்சம் செய்த இரவும் நான் அங்கு நின்றேன். கல் வீடு அது என்பதனால் தப்பினோம்.

கோடை எரிக்கத் தொடங்கிய பங்குனி மாதத்தில் என் வயல் விளைச்சலின் மீதி என்று இருபதினாயிரம் ரூபா கட்டாகத் தந்தான். 1991ம் ஆண்டுக்கு அது பெரும் காசு. 'நாலு மூட்டை நெல்லும் கொண்டு வந்து இறக்கிறன்' என்றான்.

இவற்றை எல்லாம் நான் இப்போது ஏன் எழுதுகிறேன்? துணுக்காய், மல்லாவி, பாண்டியன் குளம், வவுனிக் குளம், யோகபுரம், கோணாவில், அக்கராயன் குளம், பனங்காமம். இந்த ஊர்கள் எல்லாம் என் நாவில் எவ்வளவு இனித்தன! யானைகளும் கூட்டம் கூட்டமாக சுதந்திரமாக உலாவித் திரிந்த காடுகள் அவை. யாவும் கைவிட்டுப் போகின்றனவா? இல்லை.

'பண்டார வன்னியனின் படை நடந்த காடு
பணியாது ஒரு போதும் ஈழவள நாடு'

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

## புத்தாண்டு எந்த மாதத்திலும் வரலாம்

பூமி அதன் பாதையில் (நீள்வட்டப்பாதை) கதிரவனை ஒரு முறை சுற்றிவர தேவைப்படும் 365¼ நாட்களையே உலகில் எல்லோரும் ஒரு ஆண்டு என்று கணிக்கின்றனர். பருவகாலங்களும் அதற்கொப்பவே மாறுகின்றன. பிறை மாதங்களை மையமாகக் கொண்ட இஸ்லாமிய ஆண்டு மட்டும் 354 நாட்களை மட்டும் உள்ளடக்கியதால் சீரற்று, மார்கழியிலோ ஆனியிலோ அல்லது ஏதோ ஒரு மாதத்திலோ தொடங்குகிறது.

அந்தந்த நாட்காட்டிக்கு ஒப்ப அந்தந்த ஆண்டு தொடங்குகிறது. கிரகவுரியன் ஆண்டு ஜனவரி 1ம் திகதி தொடங்குகிறது. ஜூலியன் நாட்காட்டியின்படி ஜனவரி 14ல் புத்தாண்டு வருகிறது. காரணம் அவர்களது ஜனவரி முதல் தேதி அன்றுதான். சீனர், வியத்நாமியர், தீபேத்தியர் ஆகியோரின் புத்தாண்டு ஜனவரியில் அல்லது பெப்ரவரியில் வருகிறது. மார்ச் 21ல் கதிரவன் நிலத்தின் நடுக் கோட்டிற்கு சரி மேலே நிற்பான். இந்நாளை, ஈரானியரும் வேறு சிலரும் புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள்.

ஏப்ரல் மாதத்தில் சில பிரிவினர் தவிர பரவலாக இந்தியா முழுவதும் சித்திரைப் புத்தாண்டே கொண்டாடப் படுகிறது. மார்வாடியர்களும் குஜராத்தியரும் முறையே ஒக்டோபரிலோ அல்லது நவம்பரிலோ வரும் தீபாவளி நாள் அன்றும் மறுநாளும் புத்தாண்டு கொண்டாடுகிறார்கள்.

முதலில் ஜனவரி 1ம் திகதி வரும் கிரகவுரியன் ஆண்டைப் பார்ப்போம். பூமி நேர் நிலையில் இல்லாமல் 23½ பாகை சரிந்துள்ள காரணத்தினால், கதிரவன் நிலத்தின் நடுக் கோட்டிற்கு தெற்காக 23½ பாகையில் உள்ள மகரக் கோட்டிற்கும், நிலத்தின் நடுக் கோட்டிற்கு வடக்காக 23½ பாகையில் உள்ள மகரக் கோட்டிற்கும் இடையில் வலம் வருவது போன்ற காட்சி, அதாவது ஒரு கோட்டிலிருந்து புறப்பட்டு ஆண்டு முழுமையடையும்போது அக்கோட்டையே திரும்பவும் சென்றடைவது போன்ற ஒரு நிலை உருவாகிறது. இதை கதிரவன் பாதை அல்லது அயனம் என்பார்கள். இந்த ஆண்டையே அயன ஆண்டு என்றும் அழைப்பார்கள்.

ஒரு புள்ளியிலிருந்து புறப்பட்டு வடக்கு தெற்கு பயணத்தின் பின் திரும்பவும் கதிரவன் வந்தடையும் காலத்தை துல்லியமாகக் கணித்து, போப்பாண்டவர் ஒருவர் (13வது கிரவுரி 1572-1585) உருவாக்கியதுதான் கிரகவுரியன் நாட்காட்டி. உலகின் தலைசிறந்த நாட்காட்டியாக இதைக் கொள்ளலாம். அவ்வளவுக்கு துல்லியமாக நாட்பிசகாது பருவகாலங்களுக்கு அமைவாக ஆண்டு கணிக்கப் படுகிறது. மார்ச் 21ல் கதிரவன் நிலத்தின் நடுக் கோட்டிற்கு சரி மேலே நிற்கும் நாளை புத்தாண்டாகக் கொண்டாடும் முறையிலும் நாட் பிசகாது. மாதங்களின் எண்ணிக்கை வித்தியாசப் பட்டாலும் கதிரவன் நிலத்தின் நடுக் கோட்டிற்கு சரி மேலே நிற்கும் நாளைஆண்டின் தொடக்கமாக்கியதால் இந்த நாட்காட்டியும் ஒரு சீரான நாட்காட்டிதான்.

அடுத்து சித்திரைப் புத்தாண்டைப் பார்ப்போம். இதுவும் பருவ காலங்களுடன் ஒத்து வருகிறது. ஆனால் நூற்றுக் கணக்கான ஆண்டுகள் என்று பார்கும் போது நாட்கள் பின் செல்கின்றன. இதற்கு சிறு விளக்கம் தருகிறேன். சித்திரையில் தொடங்கும் ஆண்டை விண்மீன் சம்பந்த ஆண்டு அல்லது நிராயன ஆண்டு என்று அழைப்பர். வேதசோதிட ஆண்டு என்றும் அழைப்பர். விண்மீன்கள் ஊடாக கதிரவன் பயணம் செய்யும் வட்டத்தை, மேடம் இடபம் என்று 12 வீடுகளாகப் பிரித்து சோதிட வட்டம் என்று அழைப்பார்கள். பூமியின் ஒரு பின்நோக்கிய தள்ளாடல் காரணமாக வேதசோதிட ஆண்டிற்கு 20 நிமிடம் கூடுதலாகத் தேவைப்படுகிறது. 72 ஆண்டுகளில் இது 1440 நிடங்கள் ஆகிறது, அதாவது ஒரு நாளாகிறது. கி.பி 285ல் (1723 ஆண்டுகளுக்கு முன்பு) மார்ச் 21ல்தான் சித்திரை முதலாம் திகதி வந்தது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏப்ரல் முதலாம் திகதியும் சித்திரை முதலாம் திகதியும் ஒரே நாளில் வந்தன. இவ்வாண்டு ஏப்ரல் 14ம் திகதிக்கு சித்திரைப் புத்தாண்டு சென்று விட்டது.

சித்திரைப் புத்தாண்டு என்பது கதிரவன் மேடராசிக்குள் நுழையும் முதல் நாள். அதேபோல் மகர ராசிக்குள் நுழையும் முதல் நாள்தான் தைப் பொங்கல். வான் நிகழ்வு என்று பார்த்தால், சித்திரைக்கு உள்ள அத்தனை தகைமையும் தைக்கும் உண்டு. கதிரவனின் வட பயணம் தொடங்குவதால் ஆண்டின் தொடக்கம் அதுதான் என்ற உணர்வும் எமக்கு ஏற்படுகிறது. ஆகையால் தைப் பொங்கல் நாளை புத்தாண்டாக ஏற்பது வரவேற்கத் தக்கது.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ், புதுவருட, நல்வாழ்த்துக்கள்

" Providing an Essential Service to the Sri Lankan Community "

**TRICO FREIGHT UK LTD**

தொடர்புகளுக்கு : 020 8888 8787



**TRICO**
TRICO FREIGHT UK LTD
555 Whitehart Lane, London. N17 7RP
www.tricofreight.com

**Catch our New Year vessels!**

*Ensure your loved ones will get their New Year gifts on time.*

| Loading | Sailing | Arrival |
| --- | --- | --- |
| 08/01/2009 | 11/01/2009 | 30/01/2009 |
| 22/01/2009 | 25/01/2009 | 13/02/2009 |
| 05/02/2009 | 08/02/2009 | 27/02/2009 |
| 19/02/2009 | 22/02/2009 | 13/02/2009 |

**Call us now, Book your space**


## புளிப்புப் பிடிச்ச சனம்

தமிழர் தாயகத்திலை எங்கடை சனம் படாத பாடு பட்டுக் கொண்டிருக்குது. இருக்க இடமில்லாமல் மழை தண்ணிக்குள்ளை, வான் குண்டு வீச்சுக்குள்ளை, பாம்புக்கடிக்குள்ளை, வாழ்வா சாவா எண்டு போராடிக் கொண்டிருக்குது.

இந்த விபரங்கள் எல்லாரும் அறிஞ்சது தான். ஆனால் புலம் பெயர் நாடுகளிலை கொஞ்சச் சனம் புளிப்புப் பிடிச்சுப் போய்த் திரியுது.

'அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்' எண்டும் 'கண்டறியாதவன் பெண்டிலைக் கண்டால் காடு மேடெல்லாம் கொண்டு திரிவான்' எண்டும் ஊரிலை சொல்லுறவை. அது உண்மைதான் எண்டது இப்ப எனக்கு விளங்குது.

என்னடா இவன் விசயத்தைச் சொல்லாமல் ஏதேதோ சொல்லிக் கொண்டு போறான் எண்டு நீங்கள் புறுபுறுக்கிறது கேக்குது. சரி விசயத்துக்கு வாறன்.

அண்டைக்கொரு சாமத்தியச் சடங்கொண்டுக்குப் போக வேண்டியதாப் போச்சுது. அட என்னடா வித்தகனும் உந்தக் கூத்துகளுக்கு எல்லாம் திரியிறானோ எண்டு நீங்கள் கேக்கிறது விளங்குது. அட நான் விருந்தாளியாப் போகேல்லை. ஒரு தொழிலாளியாப் போன னான். கமாரா எடுக்கிறவருக்கு லைற் பிடிக்கிற 'தலையாய' பணி எனக்குத் தரப்பட்டதாலை நான் கடமையே கண்ணாய் அவையள் வரச் சொன்ன 10 மணிக்கே ஆஜராகீட்டன்.

அட ஹோலே திறக்கேல்லை. உந்தக் குளிருக்குள்ளை ஆக்கள் வருமட்டும் நான் குந்திக் கொண்டிருந்தன். ஒரு மாதிரி 11 மணிக்குக் ஹோலைத் திறந்தினம். நானும் என்ரை முதலாளியுமா ( அது தான் camera man) வயருகளைப் பூட்டி வைச்சிட்டு முகட்டைப் பாத்துக் கொண்டிருந்தம்.

நேரம் 12 மணியாகிட்டுது. ஒரு 10 பேர் வந்திருந்தினம். சாமத்திய வீட்டுக் காறர் இன்னும் வரேல்லை. நான் அழைப்பிதழை எடுத்துப்பாத்தன். நிகழ்ச்சி 11 மணியிலை இருந்து 12 மணி மட்டுமுள்ள சுபநேரத்திலை நடக்கும் எண்டு போட்டுக் கிடந்துது. சாமத்திய வீட்டுக்காறர் வரேக்குள்ளை நேரம் 12.30. அதாவது சுபநேரம் முடிஞ்சு அரை மணித்தியாலம் ஆன பிறகு தான் உரியவையே வந்தினம்.

மெல்ல வீட்டுக் கறரை நெருங்கி அண்ணை சுபநேரம் முடிஞ்சு போச்செல்லோ எண்டு கேட்டன்.

"தம்பி உமக்கு விசயம் தெரியாது. உண்மையிலை சுப நேரம் பகல் 2 மணியிலை இருந்து 3 மணி மட்டும் தான். எங்கடை சனத்தைப் பற்றித் தெரிஞ்சு தான் 11 மணி எண்டு அடிச்சனாங்கள்"

அவர் ஒரு நக்கல் சிரிப்போடை சொன்னார். எனக்குப் பத்திக் கொண்டு வந்தது. அட அந்தக் கார்ட்டை மதிச்சு நேரந் தவறாமையை பின்பற்றிற ஆக்களின்ரை நிலை என்ன எண்டு நினைச்சுப் பாத்தன்.

பிறகு ஒரு மாதிரிச் சனமும் வந்து சேர நிகழ்வுகளும் தொடங்கிச்சுது. வீடியோவுக்குப் போஸ் குடுக்கச் சனம் போட்டி போட்டுது. அதுக்குள்ளை அந்தப் பிள்ளைக்கு அடிக்கடி குளிர்பானம் கொண்டு போய்க் குடுத்தினம் (அட வீடியோவிலை அடிக்கடி விழ இப்படியும் ஒரு ரெக்னிக் இருக்குதோ). அது வேண்டாம் வேண்டாம் எண்டு சொல்ல ஒரு மிடறு பருக்கிப் போட்டுக் கொண்டு போய் சிங்குக்குள்ளை ஊத்திச்சினம். இப்படி ஒரு 10 கிளாஸ் drinks சிங்குக்குள்ளை போச்சுது. ( ஒரு கிளாஸ் drinks இன்ரை விலை 20 டொலராம்)

சரி இது எல்லாத்துக்கும் அச்சாரம் வைச்சது மாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்தது. இந்தப் பத்தியை எழுதிறதுக்குக் காரணமும் அதுதான்.

நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்க இடையில் டமால் டமால் எண்டு ஒரு பெரிய சத்தத்தோடை ஒரு குழு உள்ளுக்கை நுழைஞ்சுது. அட, பஞ்சாபிய நடனக் குழு ஒண்டு தான் உள்ளை வந்தது. உவையேன் வருகினம் எண்டு நான் யோசிச்சு முடிக்கிறதுக்குள்ளாகவே அவையள் ஒரு பாட்டை காது அதிருற சத்தத்திலை போட்டுப் போட்டு ஆட வெளிக்கிட்டிட்டினம்.

### நெஞ்சு பொறுக்குதில்லையே

கொதிப்பவர் : **வித்தகன்**

என்ரை முகத்திலை தெரிஞ்ச கேள்விக் குறிகளைப் பாத்த அந்தப் பிள்ளையின்ரை மாமனார் சொன்னார் "உது தம்பி நாங்கள் ஸ்பெசலா எடுப்பிச்ச டான்ஸ் குரூப். கனடாவிலை முதல் முதல் எங்கடை விழாவிலை தான் உப்பிடியொரு நிகழ்வு நடந்து கொண்டிருக்கு"

அவரின்ரை முகத்தைப் பாக்கோணும். பெருமையும் பூரிப்பும் நிறைஞ்சு நிற்க வாயெல்லாம் பல்லாச் சொன்னார்.

அட தமிழ்நாட்டுக் கலைஞர்களைக் கூப்பிட்டுக் கூத்தாடினது பத்தாதெண்டு இப்ப பஞ்சாபிலை இருந்து சிங்குகளைக் கூப்பிடுற அளவுக்கு புலத் தமிழன் வளந்திட்டான் பாருங்கோ.

இதைப் பாத்துக் கொண்டிருந்த இன்னொரு 'புலன் பெயர்ந்த தமிழன்' தங்கடை நாட்டு விழாவுக்கு அராபியாவிலை இருந்து இசைக் குழுவைக் கொண்டு வரத்தான் போறான். அதையும் நாங்கள் ஆவெண்டு பாத்துக் கொண்டு இருக்கத்தான் போறம்.

சரி எப்பதான் நிகழ்ச்சி முடியும் எண்டு நான் எரிச்சலிலை நிற்க அந்தப் 'பன்னாடை' போக்கிற நிகழ்வு தொடங்கிச்சுது.

அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த மிருதங்க, தவில் கலைஞர்கள், பஞ்சாபிய நடனக் கலைஞர்கள் எண்டு பொன்னாடை போத்து முடிய என்ரை முதலாளியையும் (camera man) கூப்பிட்டிச்சினம். அவரும் வாயெல்லாம் பல்லாப் போய் போர்த்துவிச்சார். பிறகு பாத்தா அந்த விழா நடந்த ஹோல் உரிமையாளரையும் கூப்பிட்டுப் போத்தினம்.

போற போக்கைப் பாத்தால் சமையல் பண்ணினவை சப்பிளை பண்ணினவை எண்டு எல்லாருக்கும் போத்திற காலம் வரப் போகுது போலை கிடக்குது.

அட காசு இருக்கிறவை செய்தால் உனக்கு என்ன எண்டு நீங்கள் கேக்கிறது விளங்குது. உந்தக் கூத்துகளைக் காசை வைச்சுக் கொண்டு செய்யிறவையும் இருக்கினம் தான். ஆனால் காசில்லாத ஆக்களும் கடன் பட்டு உந்தக் கொண்டாட்டங்களைச் செய்து போட்டு பிறகு 2 வேலை 3 வேலை எண்டு அலையிறதை நான் கண்டிருக்கிறன். ஏன் நீங்களும் கட்டாயம் கண்டிருப்பியள்.

இல்லைத் தெரியாமல் தான் கேக்கிறன், ஏன் இந்த ஆடம்பரம்? ஏன் இந்த அநியாயச் செலவு? ஏன் இந்த அந்நியக் கலாசார மோகம்? ஆராவது தெரிஞ்சவையள் சொல்லுங்கோ!

## பழங்கள்ளு

வழுதி
*(ஒரு பேப்பருக்காக)*

### நாலும் இரண்டும்

'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்று ஒரு பழமொழி தமிழில் உண்டு. ஆலங்குச்சியும் வேப்பங்குச்சியும் பல்லு ( தீட்ட, விளக்க, மினுக்க) க்கு உறுதி. அது மெத்த விளங்குகின்றது. சரி, இந்த நாலும், இரண்டும் என்றால் என்ன? அது பற்றித் தான் இந்தப் பளங்கள்ளு கொஞ்சம் பேசுகிறது.

சங்ககாலத்துத் தமிழர் வாழ்வில் சில சீரழிவுகள் உண்டு எனச் சிலர் கருதினர். இச் சமயத்தில் சமண, பௌத்த மதங்கள் தமிழர் வாழ்வில் புகுகின்றன. அவை தமிழர் மத்தியில் அறத்தை வலியுறுத்துகின்றன. அவ்வாறு அறத்தை வலியுறுத்த எழுந்த நூல்களுள் இரண்டு முக்கிய மானவை. அவை நாலடியார், திருக்குறள்.

நாலடியார் நான்கு வரிகளாலும் திருக்குறள் இரண்டு வரிகளாலும் ஆனவை. அதுதான் 'நாலும் (நாலடியார்) இரண்டும் (திருக்குறள்) சொல்லுக்கு உறுதி' என்றனர்

திருக்குறளை எழுதியவர் யார் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. ஆனால் நாலடியார் எழுதியவர் யார் என்பது எவருக்கும் தெரியாது. நாலடியாரும் திருக்குறளைப் போலவே அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பாலையும் கொண்டது. ஆயினும் 133 அதிகாரங்களை 1330 பாடல்களாக கொண்டது குறள். நாலடியார் 40 அதிகாரங்களுக்கு 400 பாடல்களைக் கொண்டது.

நாலடியாரின் சிறப்பை உணர்வதற்கு ஒன்று இரண்டு பாடல்களை உதாரணமாகக் கொள்வோம்.

அறன் வலியுத்தல் என்னும் அதிகாரம் அறத்தை வலியுறுத்துவதாக அமைகின்றது. அறம் என்பது இல்லறம், துறவறம் என இருவகைப்படும். ஒரு நாலடியார் பாடல் இதோ!

'இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்.

இப்பாடலின் பொருள் இன்றைக்கோ நாளைக்கோ என்றைக்கோ என்று நினையாது பின்னாலே நிற்கின்றான் யமன் என்று நினைத்து பாவச் செயல்களைச் செய்யாது நீக்குங்கள். மாண்புமிக்க, மேன்மையான அறிவுடையார் கூறிய அறத்தைக் கூடியமட்டும் செய்யுங்கள்

இவ்வாறு அறத்தை வலியுறுத்துவது போல கல்வியின் பெறுமதியையும் நாலடியார் வலியுறுத்துகின்றது. அதற்கான ஒரு நாலடியார் பாடலைப் பார்ப்போமா?

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டு அழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.

இப்பாடலின் பொருள்: மயில் முடியின் அழகும் மடிப்புக் கலையாத ஆடையினது கரையின் அழகும் மஞ்சள் பூசிய அழகும் அழகல்ல. மனதின் கண் நாம் நற்குணமுடையோர் என்று கருதுகின்ற நடுவுநிலமையில் இருந்து விலகாத கல்வி அறிவினால் உண்டாகும் அழகே அழகு.

இப்பாடலின் ஊடாக கல்வியின் சிறப்பு சொல்லப்படுகின்றது. இப்பாடல்கள் யாவும் எப்போது எழுதப்பட்டது என்றால் இற்றைக்கு ஆயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன்னர். ஒன்றை கவனத்தில் இருத்துவோம். தமிழ் அழகான, செழிப்பான, வளமான மொழி. இத்தகைய வளம் இன்று நேற்றுக் கிடைத்தது அல்ல. இன்னுமொன்று இவ்வளவும் தான் வளம் என்று அல்ல. அள்ளக் அள்ளக் குறையாத அத்தனை பொன்னும், மணியும், முத்தும் இரத்தினமும் தமிழில் கிடைக்கின்றன.



» Accountancy & Auditing
» Business Start up Advice
» Business Plans & Cash Flow Forecasts
» Personal tax Affairs & Self Assesment
» Company Tax Affairs & Company Tax Return (CT 600)
» Preparing VAT, Payroll for the Sole Trader
» Patrnership & Limited Companies
» Company Formation
» Attending VAT & PAYE visits
» CIS Voucher & Construction
» Industry Services
» Tax Investigations
» Solicitors Accounts & Accounts Reports

TAMSONS

Accountancy & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# பண்டிகைக் கொண்டாட்டம்

பண்டிகை என்றாலே உறவுகள், நண்பர்கள் ஒன்றுகூடிக் குதூகலிக்கின்ற கொண்டாட்டம் தான். இந்துக்களுடைய பொங்கல், புது வருடம், தீபாவளி போன்ற பண்டிகைகளை புலம் பெயர் நாடுகளில் கொண்டாட குறித்த தினங்களில் பொது விடுமுறை இல்லை. எனவே புலம்பெயர் நாடுகளில் எம்மவர்களின் ஒன்றுகூடல் கொண்டாட்டமாக கிறிஸ்மஸ் பண்டிகையின் விடுமுறை நாட்களே அமைகின்றன.

ஆங்கிலம் பொது மொழியாக எமக்குள் ஐக்கியமானதைப் போல, கிறிஸ்மஸ் பொதுப் பண்டிகையாக புலம் பெயர் தமிழ் சமூகங் களிடையே நிலைத்து விட்டது. தமிழ்ப் பாடசாலைகள் தோறும் இங்கு ஒளிவிழா கிறிஸ்மஸ் பண்டிகையை ஒட்டிய விழாவாக ஆண்டு நிகழ்ச்சி நிரலில் அமைந்து விடுகிறது.

உறவினர்கள் ஒன்றிணைந்து மதிய விருந்து உண்டு மகிழ்வதும் பல குடும்பங்களின் வழமையாக புலம் பெயர் நாடுகளில் உள்ளது.

மூத்தோரையும், தம் குடும்ப உறவுகளில் உயிர் நீத்தோரையும் தமக்கு வழமையாக உதவுவோரையும் நினைப்பதும், தரிசிப்பதும் பரிசில்கள் வழங்கி மகிழ்விப்பதும் ஆங்கி லேயரின் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் முக்கிய அம்சமாக அமைவதை அவதானிக்க முடிகிறது.

பாட்டன், பாட்டி, பேரன், பேர்த்தி, தாய், தந்தை என்று இருக்கும் உறவினர்களுடன் சந்திப்பதும், மகிழ்விப்பதும் வெள்ளையர் களின் கிறிஸ்மஸ் வழமை.

உயிர்நீத்த உறவுகளின் நினைவு கல்லறைக்குச் சென்று மரியாதை செய்வதும் அவர்களின் நித்திய கிறிஸ்மஸ் கடமைகளின் ஒன்று.

குடும்ப வைத்தியர், கணக்காளர், சட்டத் தரணி என்றும், உறவினர், நண்பர்கள் என்றும், உள்ளவர்களுக்கு பரிசில்கள் வழங்கி மகிழ்விப்பதும், வாழ்த்து மடல்கள் அனுப்புவ தும் கூட, இயந்திரம் போன்ற ஓட்டத்தில் வாழ்வியல் அமைந்த மேலை நாடுகளில் கிறிஸ்மஸ் வழமை என்பது பின்பற்றக் கூடிய ஒரு முன்மாதிரியான செயற்பாடு.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர் : ப.வை. ஜெயபாலன்

தீபாவளி என்றால் உறவுகளுக்கு புது உடுப்பு வாங்கி அன்பளிப்பதும், பொங்கல் என்றால் சிறுவர்களிற்கு வெடி, உறவுகளுக்கு பொங்கல் புக்கைப் பெட்டி, பரிமாறுவதும் புதுவருடம் என்றால் கைவிசேடம் என்று பணம் வழங்கல், பணியார பண்ட பரிமாற்றம், நல்ல நாட் பார்த்து உறவுகள் இல்லங்களுக்கு செல்லுதல் என்பதான கொண்டாட்ட முறை களும் எங்கள் தாயகத்தின் ஊர் வழமை.

அப்பம் தோசை, கொத்துரொட்டி, வடை, பிட்டு என்று ஒவ்வொரு உணவு வகைக்கும் ஊரில் ஒரு கடை பிரபலமாக அமைந்து நினைவில் நிலைப்பதைப் போல ஒவ்வொரு உறவுகளுக்குள்ளும் ஒவ்வொருவகை உணவுப் பொருட்களை ருசியாக செய்ய ஒவ் வொரு குடும்பங்கள் இருக்கும். ஒரு மாதத் துக்கு ஒரு முறையேனும் அந்த விசேட உணவு அங்கு சமைக்கப்படுவதும், அயல் உறவு களுக்குப் பரிமாறப்படுவதும் அந்த நாட்களில் ஊர் உறவுகளுக்குள் அமைந்த வழமை.

எங்கள் அயல்வீட்டு உறவான பாப்பா மாமிக்கு இட்லி சுடுவது கைவந்த கலை. பூப்போல மெதுமையான, ருசியான இட்லிக்கு தோதாக அவர் செய்யும் சட்னி என்ற சாம்பாறின் வாசனையில் கூட ஒரு மகிமை.

கண்ணறை விழகின்ற பால் அப்பம் சுடுவது இரத்தின மாமியின் கை வண்ணச் சிறப்பு, வன்னியின் கள்ளுச் சேர்க்கும் பனைக்கு கீழே இரத்தினமாமியின் பிள்ளைகளான மல்லியோ, மனோவோ நின்றால் அடுத்த நாள் அப்பச் சூட்டுக்கு ஆயத்தம் நடக்கிறது என எமக்கு தெரிந்து விடும். மா புளிப்பதற்கான சிறிதளவு கள்ளு வாங்கி விடுவதற்குத்தான் அவர்கள் வன்னியின் பனையால் இறங்கும்வரை பால் பேணியுடன் காத்திருப்பார்கள். கரை அளவாக கருகிய பொன்வண்ண நிறத்தில் மொத்தித்த நடுப்பக்கம் தேங்காய்ப்பால் ஊறி சுவைதர, மூடல் பெட்டிக்குள் அவ்வப்போது காலை உணவாக எம்வீட்டுக்கு பரிமாறப்படும். அப்பம் இரத்தினமாமியை என்றும் நினைக்க வைக்கும்.

**ஒவ்வொரு வகை உணவுப் பொருட்களை ருசியாக செய்ய ஒவ்வொரு குடும்பங்கள் இருக்கும். ஒரு மாதத்துக்கு ஒரு முறையேனும் அந்த விசேட உணவு அங்கு சமைக்கப்படுவதும், அயல் உறவுகளுக்குப் பரிமாறப்படுவதும் அந்த நாட்களில் ஊர் உறவுகளுக்குள் அமைந்த வழமை.**

தோசை சுடுவதில் எங்கள் அம்மா வல்லவர். மஞ்சள் நிறம் கமழ, கண்ணறைகள் பல அமைந்த கருகாத தோசையும், அம்மியில் அரைத்த அதற்கேற்ற சம்பலும் இணைந்து தரும் ருசி தனி, எள் எண்ணை விட்டு சுடும் எண்ணைத் தோசை, முட்டைத் தோசை என ஆளுக்கு ஒரு தனி விசேட தோசையும் ஒவ்வொரு சப்பாட்டுத்தட்டிலும் விழும்.

குண்டுத்தோசையும் உறவுகளுக்கு அம்மா பரிமாறும் இன்னொரு பண்டம். அதே தோசை மாவை நல்லெண்ணை கொதித்த குண்டுச் சட்டி குழிக்குள் வார்த்து சுடுவது குண்டுத் தோசை.

தூரப் பயணங்களுக்கு போகும் உறவுக ளுக்கு உகந்ததாக கருதப்பட்ட உணவுப் பண்டம், பால்பிட்டு, உழுத்தம்மா சேர்த்து அவித்த பிட்டுக்கு காய்ச்சிய தேங்காய்ப் பாலை விட்டுக் குழைத்து, வெங்காயம் காய் மிளகாய் கலந்த தாழித்ததில் போட்டு பிரட்டி செய்வது பாற்பிட்டு.

பொன்னுப்பிள்ளை குஞ்சியாச்சி வீட்டால் பரிமாறப்படும் சிறப்பு உணவுப் பண்டம் பனங் கிழங்கு துவையல், மிளகு பிற சில சேர்த்து அவித்த பனங்கிழங்கு துண்டுகளை உரலிலே இடித்து செய்வது இந்த பனங்கிழங்கு துவையல்.

இராசவள்ளிக்கிழங்கு, சீனி வத்தாளம் கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு என இடையி டையே உறவுவீடுகளுக்கு செல்லும்போது பரிமாறப்படுவதும் நினைவில் இனிக்கும் சுவைதான்.

வேலிக்கு அப்பால் அமைந்த வளவுகளின் உறவாக, சமூகமாக ஒன்றிணைந்து வாழ்ந்த ஊர் வாழ்வில் பண்டப் பரிமாற்றம் சாதரணமா கவும், பண்டிகை காலங்களிலும் இயல்பாகி விட்ட பழக்கம்.

ஒரு வீட்டில் அப்பா, அம்மா, பேரன், பேர்த்தி என திவசதிதி என்றாலே உறவு களுக்கு மதிய விருந்து அங்குதான் அமையும். சமையல் ஒத்தாசைக்கு எல்லா வீட்டு உறவு அம்மாக்களும் அந்த வீட்டில் ஒன்றிணைவார்கள்.

புலம்பெயர் நாடுகளில் இவ்விசேட உணவு களுக்கு கடைகளே தஞ்சம் என்றாகிறது. ஒன்றுகூடல், உறவுக்கலப்பு என்பதும் அருகி வருகிறது. கிறிஸ்மஸ் போன்ற பண்டிகை களிலேனும் இந்த உறவுக் கொண்டாட்டம் நிலைக்கட்டுமே.

SARU FINANCIAL SERVICES
DEBT MANAGEMENT

அனைவருக்கும் கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

கடன் சுமை குறைந்திட உதவி!

Credit card/ loanகளுக்கான மாதாந்தம் கட்டும் பணம் கட்டுப்படியாக வில்லையா ?

உதவக் காத்திருக்கிறோம்



❖ கடன் கொடுத்த நிறுவனங்களுடன் தொடர்பாடி
a] மிகக்குறைந்த கட்டுப் பணம் கட்ட வசதி செய்தல்
b] கடன் சம்மந்தமான தொலைபேசி அழைப்புக்கள், கடிதப் போக்குவரத்தை படிப்பயாக குறைத்து நாம் பொறுப்பேற்றல்
c] குறிப்பிட்ட காலத்தின் பின் குறைந்த தொகையோடு பூரண கடன் நிவர்த்தி
d] வட்டி வளராமல் நிறுத்தி வைத்தல்

❖ வேலை செய்பவராயினும் இல்லாதவராயினும் இத்திட்டத்தின் மூலம் உதவி பெறலாம்

❖ Credit check கிடையாது

❖ மேலதிகமாய் கடன் எடுக்கவேண்டிய அவசியம் கிடையாது

❖ வர்த்தக கடன் பிரச்சினைகளும் கையாளப்படும் சட்ட நுணுக்கம் தெரிந்த அனபவ சாலிகளால் அவரவர் நிலமைக்கேற்ப தனித்துவமான ஆலோசனைகள்

கடனிலிருந்து படிப்படியாய் மீள அழையுங்கள் சேவை செய்ய காத்திருக்கிறோம் !

தொடர்புகளுக்கு :
020 8509 0920
07961 364 918

98 B, HOE STREET, WALTHAMSTOW
LONDON, E17 4QS

# லெப். கேணல் அப்பையா அண்ணை



லெப்.கேணல் அப்பையா

புலிகள் இயக்கத்தின் தலைவரிலிருந்து புதிதாய் சேர்ந்த போராளிகள் வரை அவரை அழைப்பது அப்படித்தான். இயக்கங்கள் பல ஆரம்பித்த எண்பதுகளில் இயக்க பெடியள் என்றாலே இருபது வயது சார இளைஞர்கள் மட்டுமே என்கிற எல்லாரது எண்ணங்களையும் மாற்றியமைத்து புலிகள் இயக்கத்தின் ஆரம்ப காலத்திலேயே 50 வயதான ஒரு மனிதர் இருந்தார் என்றால் அது அப்பையா அண்ணை தான்.

ஈழப்போராட்ட வரலாற்றில் ஆரம்பங்களில் இலங்கையில் எங்கு கண்ணிவெடி தாக்குதல் நடந்தாலும் மக்களிற்கு புலிகள் இயக்கம் தான் ஞாபகத்திற்கு வரும். ஆனால் புலிகள் இயக்கத்தினரிற்கோ உடனே ஞாபகத்திற்கு வருபவர் அப்பையா அண்ணை. காரணம் அன்றைய காலகட்டத்தில் இலங்கை அரச படைகளிற்கு எதிராக நடாத்தப்பட்ட அத்தனை கண்ணி வெடித் தாக்குதல்களிலும் அப்பையா அண்ணையின் பங்கு இருந்தது.

1982ம் ஆண்டு யாழ் காரைநகர் வீதியில் பொன்னாலை பாலத்தில் வைத்து புலிகளால் நடாத்தப்பட்ட கண்ணிவெடித்தாக்குதல் ஒன்று சரியாக வெடிக்காததால் இலங்கை புலனாய்வு பிரிவினர் அந்த தாக்குதல் பற்றி புலனாய்வு செய்ததில் அதில் அப்பையா அண்ணையின் பங்கு இருந்ததை தெரிந்து கொண்டு அன்றிலிருந்து அவரும் அரசபடைகளால் தேடப்பட்ட அவரும் மற்றைய போராளிகள் போல தலைமறைவு வாழ்க்கைக்கு தள்ளபட்டார்.

புலிகள் மீண்டும் இன்னொரு கண்ணி வெடித்தாக்குதலிற்கு திட்டமிட்டு அதற்கான கண்ணிவெடி மற்றும் வெடிக்கவைக்கும் பொறி முறைகளை தயாரிக்கும் பணி அப்பையா அண்ணையிடம் ஒப்படைக்கபட்டது. அப்பையா அண்ணையும் அந்த பணியை செய்து முடித்து விட்டு மற்றைய போராளிகளிடம் அதை ஒப்படைக்கும் போது சொன்னார்.

'தம்பியவை இந்த முறை பிழைக்காது'. அவர் சொன்னது போலவே அந்த தடவை பிழைக்கவில்லை. 1983 ம்ஆண்டு யூலை மாதம் 23 ந் திகதி இரவு 11 மணியளவில் திருநெல்வேலி தபால் பெட்டி சந்தியடியில் இலங்கை வரலாற்றையே புரட்டிப் போட்ட அந்தக் கண்ணி வெடி வெடித்தது.

அந்தத் தாக்குதலில் அப்பையா அண்ணையும் பங்களித்திருந்தார். அதன் பின்னர் கண்ணிவெடிகள் செய்வது மட்டுமின்றி என்னென்ன வடிவங்களில் எல்லாம் வெடிபொருட்களை பயன்படுத்தி எதிரிக்கு இழப்பை ஏற்படுத்தலாம் என்று சிந்தித்து புதிது புதிதாய் ஏதாவது ஆராச்சிகளில் ஈடுபட்டு கொண்டேயிருப்பார்.

அது மட்டுமல்ல பல போராளிகளிற்கும் வெடிபொருட்கள் பற்றிய அறிவை ஊட்டி

## நிழலாடும் நினைவுகள்

எழுதியவர்: சிறி

பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்குவார். அது மட்டுமல்ல போராட்டத்தின் ஆயுத பாவனையில் புதியமுறைகளை புகுத்த வேண்டும் என்கிற ஆர்வமும் அவரிடம் இருக்கும்.

இன்று புலிகளின் இராணுவ அணியில் கிட்டு பீரங்கி படையணி, குட்டிசிறி மோட்டார் என்று தனிப் படைப் பிரிவுகள் இயங்குகின்ற வேளை இவற்றுக்கெல்லாம் மூல காரணமாக அப்பையா அண்ணை இருந்தார் என்றாலும் மிகையாகாது.

புலிகள் மோட்டார் செல்களை தயாரிக்க தொடங்கிய காலம் அப்பையா அண்ணை மானிப்பாய் பகுதிகளில் இரு ஆயுதத் தொழிற்சாலைகளை நிறுவி கண்ணி வெடிகள், மோட்டார் ஏவும் குழாய்கள், செல்கள் என்று தயாரிப்பில் இறங்கினார்.

அந்த காலகட்டங்களில் குறைந்தளவு தொழில் நுட்ப வசதிகளுடன் உள்ளூரில் கிடைக்கும் பொருட்களை கொண்டே இவைகளையெல்லாம் தயாரிக்க வேண்டிய கட்டாயம். எனவே எங்கு பழுதடைந்த (C.T.B ) இலங்கை போக்குவரத்து சபையின் பேரூந்து வண்டிகள் இருந்தாலும் அவற்றை கட்டியிழுத்து வந்து வெட்டி உடைத்து உருக்கி செல்லாக வடிவமைத்து கொண்டு போய் யாழ் கோட்டைப் பகுதியில் காவல் கடமையில் இருக்கும் போராளிகளிடம் கொடுத்துச் சொல்லுவார்

"இண்டைக்கு யாரோ சிங்களவனுக்கு காலம் சரியில்லை தம்பி அடியடா"

என்பார். போராளிகளும் அதை வாங்கி செல்லை குளாயில் போட்டு பின்பக்கம் திரியை கொழுத்தி விடுவார்கள் அதுவும் அவை உள் ஊரிலேயெ குறைந்தளவு தொழில் நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்டிருந்ததால் சீறியபடி எழுந்து அங்கும் இங்கும் ஆடியபடி போய் கோட்டை பகுதிக்குள் விழும்

விழுந்ததும் சில வினாடிகளில் வெடித்து சத்தம் கேட்கும் போராளிகளும் அப்பையா அண்ணையும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்து துள்ளி குதிப்பார்கள். சில நேரங்களில் அவை வெடிக்காமலும் போகும் ஆனாலும் சோர்ந்து போக மாட்டார் அடுத்த தடவை வெடிக்கும் என்று போராளிகளிற்கு நம்பிக்கையூட்டி விட்டு போவார்.

யாழில் புலிகளிற்கும் இலங்கை இராணுவத்திற்கும் முதன் முதலில் நடந்த கைதி பரிமாற்றம் ஒன்றின் போது அன்றைய புலிகளின் யாழ் மாவட்ட தளபதி கிட்டண்ணாவிடம் யாழ் கோட்டை முகாம் பொறுப்பதிகாரி கொத்தளாவளை சொன்னார் நீங்கள் அனுப்பிய அலுமினியம் கோட்டைக்குள் நிறைந்து கிடக்கிறது முடிந்தால் இரண்டு வாகனம் அனுப்புங்கள் ஏற்றி அனுப்பி விடுகிறேன் அதுமட்டுமல்ல உங்கள் செல்லுக்குப் பயந்து இருபத்தி நாலு மணி நேரமும் ஆமிகாரர் பாவங்கள் பங்கருக்குள்ளையே தான் வாழ்க்கை என்று சொல்லி சிரித்தார்.

ஒரு நாள் மானிப்பாய் வீதியில் தன்னுடைய 90 சிசி மோட்டார் சைக்கிளில் ஒரு போராளியுடன் போய்க் கொண்டிருந்தார். அங்கு ஒரு வாகனங்கள் திருத்துமிடத்தின் முன்னால் சில இரும்புக் கழிவுப் பொருட்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

அப்பையா அண்ணை பின்னால் இருந்த போராளியிடம் தம்பி டேய் ஓடிப் போய் கராச்காரரிட்டை அந்த இரும்புகள் தேவையா எண்டுகேள் தேவையில்லாட்டி ஒரு பையிலை அள்ளிக் கொண்டுவா என்றார். அந்த போராளியோ அண்ணை எதுக்கு அந்த கறள்பிடிச்ச இரும்புகள் பேசாமல் நடவுங்கோ என்றான். ஆனால் அவரோ விடுவதாய் இல்லை தம்பி அதுகளை வெட்டி பண்டிக்கை ( பண்டி என்பது ஒரு கண்ணிவெடியின் பெயர்) போட்டு அடிச்சா ஆமிகாரன் உடைனை சாகாட்டிலும் பிறகு ஏற்பாக்கி வருத்தம் வந்து சாவான் என்றார்.

இப்படி தமிழீழத்தின் பகுதிகளில் கிடைத்த சிறிய ஆணிகள், கம்பிகள், இரும்புகள் என்று எல்லாவற்றையுமே எதிரிக்கு எதிராய் எப்படி திருப்பலாம் என்று சிந்தித்து செயல்பட்டவர். அதுமட்டுமல்ல ஆரம்பத்தில் புலிகளிற்கு விமானப்படை ஒன்றை உருவாக்கும் கனவும் ஒன்று அவரிடம் இருந்தது அதற்கான தயாரிப்பு வேலைகளிலும் அவர் இறங்கி இரு விமானங்களையும் தயாரித்திருந்தார்.

அவையின் பரீட்சாத்தமான பறப்புகள் வெற்றியை தரவில்லை. பின்னர் இந்திய படையின் வருகை அவரின் தொடர் முயற்சிக்கு முட்டுகட்டையாக அமைந்து விட்டது மட்டுமல்ல மானிப்பாயில் அமைந்திருந்த இவரது தொழிற்சாலையும் இந்தியபடைகளால் தாக்கியழிக்கபட்டது. ஆனாலும் இவரது தொடர் முயற்சியின் பயனாக கிடைத்த பல கண்டு பிடிப்புகளான கண்ணி வெடிகள், கடல் கண்ணிகள், மோட்டார் செல்கள் என்று புலிகள் இயக்கத்தின் போராட்ட காலத்தில் அவைகளிற்கு பெரிதும் உதவியது.

பின்னர் 1997ம் அண்டு ஜெயசிக்குறு காலப்பகுதியில் அவரது தள்ளாத வயதில் மல்லாவி பகுதியில் வைத்து ஒட்டுக்குழுவினரால் கடத்திக் கொண்டு போய் கொலை செய்யப்பட்டார்.

இன்று புலிகளின் படையணியினர் ஏவியதும் சீறியெழுந்து சென்று கண்ணிமைக்கும் நேரத்தில் இலக்கு தவறாமல் துல்லியமாக எதிரியின் இலக்கை அழிக்கும் நவீன ஆட்லெறி செல்களை பார்க்கும் போது அன்று அப்பையா ண்ணை செய்து ஏவியதும் ஆகாயத்தில் ஆடியாடி போகும் அந்த அலுமினிய செல்களையும் அதன் பின்னால் இருந்த அவரது உழைப்பையும் அவரையும் ஒரு கணம் நினைவு கூருவோர் கட்டாயம் இருப்பர்.

## புரியவைத்த பிதாவே!

புனிதரே!
பூமி உருண்டையின்
ஒவ்வொரு புள்ளியும்
உன் மீள் வருகைக்கு
விழி பூத்திருக்கிறது.
இரண்டு போய்
புத்தாயிரம் வந்தபோதும்
இன்னும் இன்னுமாய்
இரத்தம் சொறிந்து
பாவம் கழுவிய
நன்றிப் பெருக்கு

இங்கேயுந்தான்
பிறப்பெடுத்த பாவிகள்
தங்கள் ரத்தம் சொறிந்து
உயிர்காக்கும்
பாவ விமோசனம் செய்கிறார்
இதுவே சின்னஞ்சிறு புள்ளியில்

வாழ்வாகிப் போனது

பாலன் யேசுவே
உன் பிறப்பைக் கொண்டாடும்
பெருநாளில் இங்குமட்டும்

இறந்தவர்களுக்கு மரணதண்டனை
மீண்டும் அளிக்கப்படுகிறது!
உம்மை வழிபடுவதற்கு
தடைவிதிக்கப்பட்டுள்ளதாம் எமக்கு
காரணம் சொல்கிறார்கள்
நீ சொறிந்ததும் நாம் சொறிவதும்
ரத்தந்தான்.
உமக்கு கொண்டாடப்படுவது
பிறந்தநாள், தீர்க்கப்படுவது
எமக்கு மரணதண்டனை.
உமக்கு நிகழ்ந்தவாறே
இன்று நாம் சிலுவை சுமந்து
சிலுவையில் அறையப்படுகிறோம்


எங்கள் வழக்கில்
தீர்ப்பு வழங்கும் தகுதி
இங்கே எவருக்கும் இல்லை
உனக்கு மட்டுந்தான்
புரியவை பிதாவே பூமிக்கு!

– ஹேமராஜ்

அனைவருக்கும் கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்கள்!

# Accounting & Elite Service

- Accountancy & Auditing
- Business Start up Advice
- Business Plans & Cash Flow Forecasts
- Personal tax Affairs & Self Assesment
- Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- Preparing VAT, Payroll for the Sole Trader
- Patrnership & Limited Companies
- Company Formation
- Attending VAT & PAYE visits
- CIS Voucher & Construction
- Industry Services
- Tax Investigations
- Solicitors Accounts & Accounts Reports



Accounting & Elite Service
177, KINGSLEY ROAD, HOUNSLOW, TW3 4AS

Tel: 020 8572 6447

# எப்பவோ முடிந்த ...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

உலகமயமாக்கலும், பொருளாதாரத்தில் நாடுகளுக்கிடையில் ஒன்றுடன் ஒன்று தங்கியிருத்தல் என்ற இரட்டைப் போக்கு, பனிப்போர் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட மற்றயதரப்பின் விஸ்தரிப்பை தடுக்கும் போக்கினை மாற்றி விட்டது. நாடுகள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலையானது வல்லரசுகளுக்கிடையிலான முறுகல் நிலையை வளர விடாமல் தடுத்துள்ளது. வல்லாதிக்க நாடுகள் அணிசேர்ந்து, தமது நலன்களினை ஒருகிணைத்து அதற்காக செயற்படுவதுதான் இப்போது நடக்கிறது. இங்கு அவற்றின் நலன் மேலோங்கியிருப்பதால், நாடுகளுக்கு இடையில் உள்ள வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.'

- பள்ளம்ராஜீ, இந்தியத்துணைப் பாதுகாப்பு அலைச்சர் சிங்கப்பூர் மாநாட்டில் கூறியவை.

அதாவது உல்கமயமாக்கல் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தியை தக்க வைத்துக் கொள்வதற்கு ஓர் போரற்ற ஸ்திரமான பிராந்தியமாக தென்னாசியப் பிரதேசம் விளங்க வேண்டும் என்பதே இந்தியாவின் பிரதானமான தேவையாகும்.

இறுதியாக ஜப்பானைப் பொறுத்த வரைக்கும், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார சக்தி என்பதற்கு ஏற்றளவில் அரசியல், இராணுவப் பலப் பிரயோகம் உலகில் குறிப்பாக ஆசியப் பிராந்தியத்தில் அதிகரிக்கபட வேண்டும் என்ற புதிய சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுப்பதே தற்போதைய மூலோபாயச் செல்நெறியாகும்.

இரண்டாம் உலகப்போரின் இறுதியிலிருந்து கடைப்பிடிக்கப்படும் தற்காப்பிற்கான இராணுவம் என்ற கொள்கை தற்போது தளர்த்தப்பட்டு அமைதி காக்கும் பணிகளுக்காக ஜப்பானிற்கு வெளியே ஜப்பானின் Self Defence Force எனப்படும் இராணுவம் செல்வதற்கு அநுமதியளிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் போர்நிறுத்த ஒப்பந்தத்திக்கான மேற்பார்வை செய்யும் இணைத்தலைமை நாடுகளில் ஒன்றாக ஜப்பான் வந்ததற்கும் இதுவே காரணமாகும்.

### ஆசியப்பிராந்தியத்தின் பாதுகாப்புச் சமநிலை

வியட்னாமிய யுத்தத்திற்குப் பின்னான ஆசியாவின் வலுச் சமநிலையை கவனித்தால், அமெரிக்காவானது தனது அபரிதமான பொருளாதார வலிமையினால் ஆசியாவின் முதன்மைச் சக்தியாக தொடர்ந்து விளங்கியது புலப்படும்.

> இலங்கைத்தீவு ஓர் போரற்ற ஓர் பிரதேசமாக இருக்க வேண்டும் என்பதைனையே சர்வதேசம் விரும்புகின்றது. இந்தப் போரற்ற அமைதியின் போது நியாய மான தீர்வு உருவாக வேண்டும் என்பதில் அவர்களுக்கு அக்கறையில்லை.

அத்துடன் வளர்ந்து வரும் பொருளாதார இராணுவச் சக்தியான சீனாவிற்கும், ஜப்பானிற்கும் இடையிலான சமநிலையைப் பேணும் சக்தியாகவும் அமெரிக்காவே விளங்கியது.

ஆனால் தற்போது சீனாவின் பலம் அமெரிக்காவினால் கட்டுப்படுத்தப்பட முடியாதளவிற்கு வளர்ந்துள்ள நிலைமையில், அமெரிக்காவினால் தொடர்ந்து ஆசியப் பிராந்தியத்தில் தனித்து முதன்மைச் சக்தியாக செயற்பட முடியாத காரணத்தினால், அமெரிக்காவானது பிராந்தியத்தில் உள்ள 'நட்பு' நாடுகளுடன் இணைந்து செயற்படுவதற்கு தள்ளப்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்க, இந்திய, ஜப்பானிய, அவுஸ்திரேலிய மூலோபாயக் கூட்டானது உருவாக்கப்பட்டு சீனாவின் அச்சுறுத்தலை எதிர் கொள்ளப்படுகின்றது. மேற்கூறிய அனைத்து நாடுகளுக்குமே இந்து சமுத்திரம் வழியான வடகிழக்கு ஆசியாவிற்கான கடல்வழிப் பாதையானது மிகவும் முக்கியமானதாகும்

### உலக ஒழுங்கும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்.

தாரண்மைப் பொருளாதாரக் கொள்கையினாலும், உலகமயமாக்கலினாலும் உந்தப்பட்டு ஓர் நுகர்வுக் கலாச்சாரத்தினுள் திளைத்திருக்கும் இந்தியா முதல், முதலாளித்துவத்தின் தாயகமான அமெரிக்காவரை சர்வதேசசமூகம் முழுவதுமாக, இலங்கைத்தீவு ஓர் போரற்ற ஓர் பிரதேசமாக இருக்க வேண்டும் என்பதைனையே விரும்புகின்றது.

இந்தப் போரற்ற அமைதியின் போது நியாயமான தீர்வு உருவாக வேண்டும் என்பதில் அவர்களுக்கு அக்கறையில்லை. இதுவே இராசதந்திரமாகும், இங்கே மனச்சாட்சிக்கு இடமில்லை. வவுனியா இராணுவத் தலைமையகத் தாக்குதல் மூலமாக இந்தியத் தொழிநுட்பவியலாளர்கள் சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்து வேலை செய்வது வெளிப்பட்டது.

சிறிலங்காவுக்கான அமெரிக்காவின் தொடர்ச்சியான இராணுவ உதவிகள் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். ஆயுத மோதல்கள் தொடர்பான IISS இன் வருடாந்த தரவுக்கோவையில்(Armed Conflict Database.) தற்போதைய ஈழப்போரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, சிறிலங்கா இராணுவம் பல வெற்றிகளைப்பெற்று முன்னேறிச் செல்கின்றது எனவும் இராணுவ ரீதியாக இப்பிரச்சினைக்கு முடிவு கட்டக்கூடிய ஒரு சூழல் உருவாகியுள்ளது 'எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை சர்வதேச சமூகம் கூறிவந்த 'ஆயுதம் மூலம் தீர்வு காணமுடியாது பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணமுடியும்' என்ற வாசகம் ஒரு பொய் என்பது இதன் மூலம் தெரிய வரும்.

உலக வல்லரசிகளின் மூலோபாய கிடக்கையை வெளிப்படுத்தி நிற்கும்IISS தான் ஈழத்தமிழர் விடயத்தில் உண்மையைத் தெளிவாகக் கூறியுள்ளது. அதாவது முழுச் சர்வதேச சமூகமும் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதற்கு முடியுமென்றால் அதற்கு ஆதரவளிப்பதில் தவறில்லை என்ற ஒரு நிலைப்பாட்டில்தான் உள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, வெளிநாட்டு இராணுவப்பிரதிநிதிகளின் வன்னிக்களமுனை விஜயத்தை ஏதோ திடீரென்று முளைத்த ஓர் விடயம் என்று அந்தரிப்பதில் எந்தப் பயனும் இல்லை.

பனிப்போர் காரணமாக இழுபறிக்குள்ளான எரித்திரிய விடுதலை, சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்பாக அமெரிக்காவுற்கு இதனால் பெரிதாக எந்தப் பிரயோசனமும் இல்லையென்ற பின்னர் தான், எரித்திரியர்கள் தமது சொந்தப் பலத்தில் போரிட்டு தமது விடுதலையைப் பெற்றனர்.

விடுதலைப் புலிகள் மீதான சர்வதேச நாடுகளின் தடையைத் தாங்கும் தமிழரின் சக்தி தான், ஓர் நடைமுறை தமிழீழ தனியரசு (defacto) ஒன்றை தமிழரினால் நடாத்தக் கூடிய சக்தியுமாகும். இந்த வகையில் தற்போதைய உலக ஒழுங்கில், தமிழர் தமது சொந்தப் பலத்தின் மூலமாக சர்வதேசத் தடையுடன் வாழத் தயாராகிக் கொள்ள வேண்டும்.


MARKANDAN & CO
Solicitors & Administrators for Oaths

*We are Specialised in....*

**Work Permit**
(புதிய விண்ணப்பங்கள், மீளப் புதுப்பித்தல், காலவரை நீடிப்பு)

**Student Visa**
(புதிய விண்ணப்பங்கள், காலவரை நீடிப்பு)

**Student Visa Appeal**
(மேல் முறையீடு)

**Asylum Appeal**
(அகதி அந்தஸ்த்துக்கான விண்ணப்பம், முறையீடு)

**Post Studies Work**

முக்கிய குறிப்பு

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோரி உள்ளவர்களுக்கு, பிரித்தானியாவின் 'LP' என்ற பிரபலமான இலங்கைத் தமிழரின் அகதி விண்ணப்பம் வெற்றி பெற்ற நிலையில் அதனை பிரித்தானிய நீதிமன்றம் (AIT) Country Guidance ஆக ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் இலங்கையில் குறிப்பிட்ட எந்தவொரு விதத்திலும் (12 விதமான Principle Risk Factors) பாதிக்கப்பட்டவர்கள் (Fresh Application) புதிய விண்ணப்பம் மூலம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

**European Court Appeals 100% success**

- House / Flat
- Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation
- Bankruptcy
- Divorce

பிற நாடுகளிலிருந்து பிரித்தானியாவிற்கு வருவதற்கான
**Sponsors (Entry Clearance Sponsorships)**

**Family Reunion**
(கணவன் அல்லது மனைவி பிரித்தானியாவில் வசிப்பவராயின் அவரது குடும்பத்திற்கான visa நடைமுறைகள்)

**Permanent Residency** (நிரந்தர வதிவிடவுரிமை)

**EEA Dependent Spouse Visa**
(ஐரோப்பிய வதிவிடவுரிமை உள்ளவர்களுடைய கணவன் அல்லது மனைவியிற்க்கான விண்ணப்பங்கள்)

**Same Day Visa Extension**
(ஒரே நாளில் visa மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள்)

**ECHR Application** (பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்த உள்ள ஒருவரின் நாடுகடத்தலுக்கு எதிரான விண்ணப்பம்)

**100% Success in refund from college and universities (College, University களிலிருந்து பணத்தை மீளப்பெறுவதில் 100% வெற்றி கிடைக்கும்)**

**Personal Injury**

*Have you been given Payment Protection Insurance by your bank (Lender)?* ***We may be able to reclaim the whole amount.***

**No Win – No Fee**
விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டாடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: **0208 514 8188** Fax: **0208 514 8303**
Mob: **07958 618 106**
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்...

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

# புலம் பெயர் தமிழர்களும் புலுடாப் பார்ட்டிகளும்!

**மெல்போர்ண் கமல்**
*(அவுஸ்திரேலியாவிலிருந்து)*

எந்த நேரமும் வேலை, படிப்பு என்று ஓயாது இயந்திர வாழ்க்கையில் சிக்கிச் சுழன்று கொண்டிருக்கும் எம்மைப் போன்ற புலம் பெயர் இளசுகளுக்கும், புலம் பெயர் தமிழர்களுக்கும் மனத்திற்கு மகிழ்ச்சி தரும் வகையில் அமைந்து கொள்வன எப்போதாவது மாசத்தில் ஒரு த=டவை அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு தடவை அல்லது வருசத்திற்கு ஒரு தடவை வருகின்ற கலை நிகழ்வுகள், சிறப்பு விழாக்கள் அல்லது நமது உறவுகளின் பார்ட்டிகள் தான்.

இங்க ஒஸ்ரேலியாவில தமிழ் ஆட்களின்ர தொகை என்பது ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவு. மொத்தமாய் உள்ள தமிழர்களின் தொகை என்பது ஐம்பதாயிரத்துக்கும் குறைவு என்றுதான் கூறப்படுகின்றது. இப்படி இருக்கையில் நான் இருக்கும் மெல்போனில் உள்ள தமிழர்களின் சனத் தொகை எவ்வளவு என்பது உங்களுக்கே புரியும். இப்படியான சூழலில் எமது மெல்போர்ன் வாழ் தமிழர்கள் பெரும்பாலும் தமது சுற்றத்தார், உறவினர்கள் கூட சேர்ந்திருப்பது என்பது அரிதிலும் அரிது. அப்படியான வாழ்க்கைச் சூழலில், நாங்கள் எப்போதாவது சந்தோசமாக இருக்க வழிகாட்டுபவை இந்தப் பார்ட்டிகள் தான். சரி என்று இங்கு வந்து ஒரு மாதிரி ஒரு சில தமிழ் நண்பர்களைத் தேடிப் பிடித்து அவர்களோடு பழகிக் கொண்டிருக்கும் போது நான் வந்து இரண்டு மாதத்தால ஒரு பார்ட்டிக்குப் போக அழைப்பு வந்தது.

ஒரு மாதிரியாக பார்ட்டிக்குப் போயாச்சு. எல்லாமே புதுமுகங்கள். எனக்கு உறவினர்கள் என்று யாருமே இங்கில்லை. ஒரு மாதிரியாக நண்பர்களுடன் ஆசனங்கள் இருக்கும் இடம் பார்த்து இருந்தாச்சு. என்னைப் பார்த்து ஒருவர் நலம் விசாரிச்சார். எனக்கு முன் பின் தெரியாத அவர் என்னைப் பார்த்ததும் என் பின் புலம் பற்றி நன்றாக ஊகித்திருப்பார் என்று தான் நினைக்கிறேன். ஏனெனில் ஊரில் இருந்து வந்தது போன்றே அம்மா இழுத்துப் பழக்கிய 'சைற்' உச்சித் தலை இழுப்பும், புலம் பெயர் இளைஞர்களை வேறுபடுத்திக் காட்டும் கடுக்கன் காதில் இல்லாமலும், தலை வெட்டில் ஏதாவது மாறுபாடு இல்லாமலும் மிகவும் சாதாரணமாய் இருந்த என்னைப் பார்த்து அவர் கேட்ட முதல் கேள்வி.

"தம்பி என்ன இப்பவே வந்தது??? நான் இல்லை என்று சொல்லியிருப்பன். என் நண்பர்கள் ஏதாவது சொல்லி நான் மாட்டுப் பட்டு முழி பிதுங்குவதிலும் பார்க்க ஒரே வார்த்தையில் ஓம் அங்கிள். இப்பத்தான் வந்தனான். அப்ப என்ன ஏஜென்சியாலயே??? எவ்வளவு முடிஞ்சுது என்றார்??? இல்லை அங்கிள். ஸ்டுடன் விசா. பெரிசா ஒன்றும் முடியல்லை. முதல் செமிஸ்ரர் கோர்ஸ் பீசும், இங்க வாற ரிக்கற் காசும் தான். அதை விடப் பெருசா ஒன்றும் முடியவில்லை என்றேன். அவர் அத்தோடு நிறுத்துவதாக இல்லை. "என்ன தம்பி ஜப்னாவோ என்றார்??? அப்ப நானும் "இல்லை அங்கிள் நாங்கள் வன்னி. ஆனால் இப்ப இங்கே வரும் வரைக்கும் அங்க இருந்தது ஜப்னா தான் என்றேன். "ஜப்னாவில எந்த இடம் என்றார்?? நானும் அங்க இருந்த ஊரின்ர பெயரைச் சொன்னேன். உடன அவர் ஏதோ புலத்திற்கு வந்த பிறகு தாயகத்தை மறந்த ஆள் மாதிரி அது எங்க தம்பி இருக்கு என்றார்?? ? நான் சொன்னேன்.

பருத்துறை றோட்டில அங்கிள் என்றேன். பருத் துறை றோட்டோ??? அது எங்க தம்பி இருக்கு என்றார்??? நான் சொன்னேன் என்ன அங்கிள் பருத்துறை றோட்டுத் தெரியாமல் இருக்குறீங் களோ?? என்று கேட்டேன். எனக்கு விளங்கிட் டுது. மனுசன் நல்லா நடிக்கிறார் என்று. அப்ப அவர் சொன்னார் அது தம்பி நாங்கள் வந்தாப் பிறகு வைச்ச பேர் தான் போல அந்த றோட்டுக்கு என்றார். நாங்கள் இருக்கேக்க அந்த றோட்டுக்கு வேறை பேர் என்று சொன்னார். இதுக்குப் பிறகும் அவரிட்டக் கதைக்க விருப்ப மில்லாத நான் ஒரு மாதிரி அவரிடமிருந்து மெல்ல நழுவி வேற இடத்துக்குப் போனேன்.

ஒருத்தர் வந்து தம்பி என்ன புது முகமாக் கிடக்குது... ஒரு நாளும் இங்க காணேல்லை. என்றபடி என்னடாப்பா "களத்துக்குப் போயிருக் கலாம் தானே... ஏனடாப்பா இங்க வந்தனீ... இங்க என்ன செய்யப் போகிறாய்?? ? இந்த நாட்டில உழைக்கவே ஏலாது... நீ என்னடாப்பா செய்யுறாய்.. உழைக்கிறியோ... படிக்கிறியோ? என்றார்... நான் படிக்கிறேன், என்னப்பு படிக்கிறாய் என்றார்... நானும் "எக்கவுன்டிங்" என்றேன். உடனே அவர் இங்க வந்து இப்பிடிப் படிச்சு என்ன வேலை செய்யலாம் என்றே நினைக்கிறாய்.. பேசாமல் ஊருக்குப் போய் களத்துக்குப் போனீர் எண்டாலும் தமிழீழம் கிடைக்குமெல்லோ என்றார்.. எனக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

இரண்டும் கெட்டான் நிலையில இருந்து கொண்டு மனதுக்க யோசிச்சன். அப்ப இவை மட்டும் ஏனாம் இங்க வந்தவை.. ஏன் இவையள் அதை முதலில செய்திருக்கலாம் தானே... இவை அதைச் செய்து போட்டெல்லோ எங்களிட்டச் சொல்ல வேணும். பிறகு எங்களுக்கு நியாயம் படிப்பிக்கீனமாம்... ம்... என்ற படி சொன்னேன். அண்ணை என்ன களத்தில நிற்கிறதென்றால் என்ன நீங்கள் சின்ன வயசில கிளித்தட்டு விளையாடுறது மாதிரி மறிச்சுக் கொண்டு நிற்கிறதோ? உந்தப் பல்குழல் ஒரே நேரத்தில 64 குண்டுகளையும் தள்ள மிக் வந்து குண்டு போட, ஆட்டிலறி ஷெல் வந்து சராமரியா விழ எப்பிடி என்னால நிற்க முடியும்? அதற்கெல்லாம் ஒரு மன உறுதி வேணும். என்னட்ட அந்த மன உறுதி இல்லை அண்ணை. அப்பிடி என்னட்டை மன உறுதி இருந்திருந்தால் நான் இங்க வந்திருக்க மாட்டேன் என்றேன். மனுசன் மூச்சுப் பேச்சில்லை.

இங்க உள்ள ஒரு சில விதண்டா வாதியள் புலியளும் ஆமியும் ஏதோ "கெற்றப்போல்" வைச்சுக் கல்லால எறிஞ்சு தான் சண்டை பிடிக்கினம் என்ற நிலையில போராட்டத் தையும், போராளிகளையும் வலு சிம்பிளா நோக்கும் போது எனக்கு பயங்கரக் கோபம் தான் வந்திச்சு. ஏதோ சமாளிச்சிட்டேன். "போராட்டம் என்பது பூப்பறிக்கிற வேலை" என்று நினைக்கிற ஆட்கள் இன்னும் எங்கட சமூகத்தில உள்ளது மிகவும் கவலைக்குரிய விடயம் தான். அந்தப் போராளிகளின் மன உறுதிக்கு நிகராக உலகத்தில வேறு எதையும் என்னால உவமிக்க முடியாது.

இதுக்குப் பிறகு ஒருவர் வந்து சமகால அரசியல் ஆய்வு பற்றிக் கதைச்சார். "எங்கட அரசியல் ஆய்வாளர்கள் ஊரில என்ன நடக்குதென்றே தெரியாமல் ஏதோ எல்லாம் தெரிஞ்சவையள் போல ஆய்வெழுதினம், அது மட்டுமில்லை ஊரை விட்டு வந்து பதினைஞ்சு, இருபது வருசமாயிருக்கும். ஆனால் அவையள் அதுவும் தாங்கள் களத்தில நின்றெல்லோ நிலமைகளை ஆய்வு செய்து எழுதுவது போல எழுதுகீனம் என்று' ஒரு நண்பர் சொல்ல மற்றவர் குறுக்கிட்டார். இல்லை மச்சான் அந்தாள் என்று... அவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர் வன்னியில பஸ் கொண்டக்ரராய் (பஸ் நடத்துனர்) இருந்தவரோ என்று கேட்டார்?? ஏனடாப்பா... இல்லை மச்சான்.. அந்தாள் வன்னியில உள்ள எல்லா வீதிகளின்ர பெயரையும் நீள அகலத்தோட சரியாச் சொல்லுறார் என்றார்.

"என்ன மச்சான்... ஏன் ஆய்வாளர்கள் மீது கோபப்படுறீங்கள் என்று கேட்டேன்... இல்லை மச்சான் ஒருத்தர் எழுதினார் சிங்கள இராணுவத்தில ஆயிரம் புலிகள் புலனாய்வு உறுப்பினர்களாக ஊடுருவி இருக்கினம் என்று எழுதினால் யாரும் நம்புவீனமோ... அது மட்டுமில்லை உவையள் எழுதுறது "இப்போது புலிகளுக்கு இரண்டு வழிகள் உள்ளது! ஒன்று முன்னேறும் இராணுவத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லை என்றால் அந்த இராணுவத்தின் முன்னேற்றத்தை முறியடிக்கும் வகையில் புலிகள் ஊடறுப்புத் தாக்குதலை நடாத்த வேண்டும்? என்று எழுதிப் போட்டுப் புலியள் இப்படி ஏதாவது தாக்குதல் நடாத்தினால் அடுத்த ஆய்வில் "நாங்கள் ஏற்கனவே கூறியிருந்தோம்... புலிகள் இப்படியொரு தந்திரோபாயத் தாக்குதலை நடத்துவார்கள் என்றும் அதன் படி தான் புலிகள் தாக்குதல் நடாத்தினார்கள் என்று தம்பட்டம் அடிக்கீனமெல்லோ என்றார்.

"பின்னப் பார்கப் போனால் புலிகளுக்குப் புலத்தில இருந்து கொண்டு இவை எல்லோ தாக்குதல் திட்டம் வகுக்கீனம்" என்று தாங்கள் எழுதினாலும் எழுதுவீனம் என்றார். அது மட்டுமில்லைப் "புலிகள் இயக்கத்தின்ர வெற்றியின் இரகசியம் அவர்களின் தாக்குதல் இறுதிவரை எவருக்கும் வெளியே தெரியாதவாறு செய்ய வேண்டியதைத் தக்க நேரத்தில் தகுந்த முறைப்படி செய்வது தான்". அப்பிடியிருக்கப் புலிகள் இனி அடுத்த படையெடுப்பு எங்கே நடாத்துவார்கள் என்று சும்மா இங்க இருந்து வாசிக்கிற சனத்தை ஏமாற்றுகிற அளவிற்கு எழுதுவது மிக மிக முட்டாள்தனம் என்று நண்பர்கள் புலம்பி முடித்தார்கள்.

இப்பிடி இருக்க ஒருத்தர் சொன்னார் மச்சான் என்ர பிறண்ட் ஒருவன் ரெண்டு மூன்று நாளாக ஒரே அழுகை. சாப்பிடக் கூடவே இல்லை. அது மட்டுமில்லை மச்சான் ஊருக்குப் போய் சந்நிதி முருகனுக்குக் காவடி எடுப்பதாகவும் நேர்த்தி வைச்சிருக்கிறான் என்றார். ஏனடாப்பா?? இல்லை மச்சான் "பூநகரி போயிட்டு என்று இங்க இவன்...........ன் ஒரே அழுகையடா மச்சான். ரெண்டு நாளாகச் சாப்பிடவும் இல்லை". என்றான். "அத்தோட புலிகள் ஏன் புதிதாக ஒரு முற்றுகைத் தாக்குதலையும் நடத்துகீனம் இல்லை என்று கேள்வி மேல கேள்வி கேட்டுக் கரைச்சல் பண்ணுறான் என்றார்.

நான் சொன்னன். இங்க உள்ள ஒரு சில ஆட்களுக்கு ஒவ்வொரு நாளும் வெற்றிச் செய்தி கேட்க வேணும் போல. "அநுராத புரத்தில 22 கரும்புலிகள் பாய்ஞ்ச மாதிரி ஒவ்வொரு நாளும் பாய வேணும் போல. அது மட்டுமில்ல புலிகள் தங்கட ஒவ்வொரு போராளியின் உயிரையும் எந்தளவு தூரம் பெரிதாக நினைக்கீனம் என்பது இங்க உள்ளவைக்குத் தெரியாது போலும்" என்று முடித்தேன்.

மற்றுமோர் நண்பன் சொன்னான். "நான் வாற வருசத்தோட என்ர படிப்பை விடப்போறேன்". ஏன் என்று கேட்டேன். இல்லை மச்சான். "என்ர அக்காவிற்கு கலியாணம் செய்து வைக்க வேணும். அதுவும் ஒரே ஒரு அக்கா. மாப்பிளை லண்டனில தான் இருக்கிறார். ஐம்பது இலட்சம் சீதனம் கொடுக்க வேணுமாம். என்றார். ஏன்ராப்பா... இந்தக் காலத்திலயும் சீதனம் கேட்கிற ஆட்கள் இருக்கினமோ என்றேன்... இல்ல மச்சான் மாப்பிளை வீட்டுக் காரர் சொன்னவை. நாங்கள் ஏதும் கேட்க மாட்டோம். உங்கட பிள்ளைக்கு உங்களால் முடிஞ்சால் ஏதாவது கொடுங்கோ என்று. அதான் நான் இங்க ஒஸ்ரேலியாவில இருக்கிறன். எங்கட ஊரில ஒருத்தர் தன்ர பிள்ளைக்கு ஒற்றை ஷிழச் சீதனம் கொடுக்க வேணும் என்பதற்காக 99 (தொண்ணூற்றொன்பது) இலட்சம் ரூபா கொடுத்தவர். ம்........ அப்பிடியென்றால் நானும் கொடுக்க வேணும் தானே, அதான் நானும் இப்ப ஒரு கொஞ்சக் காலத்திற்குப் படிப்பை விடுவதாக உத்தேசம் என்று சொன்னார்.

இவங்களை எல்லாம் எப்பிடித் திருத்துவது என்று சொல்லி யோசித்துக் கொண்டிருக்க இன்னுமொருவர் பெரியொரு குண்டைத் தூக்கித் தலையில போட்டார். யாரோ ஒருவர் தலைவரின்ர மாவீரர் நாள் உரைக்கு இப்ப விளக்க உரை கொடுக்கிறாராம், ஏனடப்பா உந்தாளுக்கு உந்த ஆசை என்று இழுத்தார்... அப்பாடா.... இதுக்கு என்னால விளக்கம் கொடுக்க முடியாது என்று சொல்லிப் போட்டு ஆளை விட்டாப் போதும் மச்சான் இனிமேல் உந்தப் "பார்ட்டிகளே" வேண்டாம் என்று ஒரே ஓட்டமாய் வந்து விட்டேன்.

இப்பத்தான் ஒன்று ஞாபகம் வருது. பிந்தி வந்த ஒஸ்ரேலியத் தமிழன் ஒருவர், ஆங்கிலம் நன்றாகத் தெரிந்தவர் போல நடிக்கும் முந்தி வந்த ஒருவரைப் பார்த்துக் கேட்டாராம். ஹவ் ஆயு கோயிங் என்று... அதுக்கு அவர் சொன்னாராம் ஐ ஆம் கோயிங் ரூ மாக்கற்.

உனக்கல்லடி உபதேசம்.... ஊருக்கடி என்றாராம் ஒருவர்...

SRI DURGA MATHA FACE READING & ASTROLOGY CENTRE



Pandit Arjun Raju & Mrs Subbamma

Indian Famous Scientific Palmistry and face reading Pandit stayed in your country. An expert Palmist at your service. You will come to know about your past, present and future by hand prediction, horoscope intending persons ,ay contact for job, family matters, husband and wife relationship, love, education, business. Choice of stones, sickness, promotions, family problems, children problems, visas, money, purification ceremonies for obtaining wealth etc. Wicth craft will be cleared by performing poojas and Devi Upasanas, Lakshmi Pooja, Prayers and protection from enemies. . Quick herbal remedies to: BP, Diabetes, Asthma, Cancer, Joint pains, Stomach problems, Sexual problems, Cold problems and all other types of diseases.

"Awhile of the rare and best opportunity" Spoken Lajnguages: Hindi, English, Tamil and Telugu
Pandit Arjun Raju FCC Super STORE 158, Green Street, Forest Gate, Upton Park E7 8JT (opp Dipesh Jewellers)
Opening hours: 10.am – 8.00pm 7 days a week
Conatct: 07529 426 891, 07529 301 752, 020 8548 4698



"வாழும் போதே உறுதிப்படுத்த "

# National Legal Services






## Wills



## Estate Planning

- Lifetime tax planning
- Life time tax planning through the use of trusts
- Making regular gifts out of income
- Utilising annual allowances
- Shared accomadation

## Client Welfare and Lasting Powers of Attorney



- Enduring / Lasting Powers of Attorney
- Court of Protection receivership
- Statutory wills

## Probate

We will take time to fully understand your particular circumstances and advise with sympathy and understanding.

Best service with your best interest in heart.



**So why not ask us for a no obligation consultation in the comfort of your own home?**

**நாம் கீழே குறிப்பிட்டுள்ள பிரச்னைகளுக்கு தகுந்த ஆலோசனை வழங்குகிறோம்.**

உங்கள் முதுமையின் நீண்டகால கவனிப்பிற்காக உள்ளூராட்சி உங்களது வீட்டினை அபகரித்தல்

எதிர்பாராத விதமாக மனநோய் பிரச்சனை ஏற்பட்டால் ஒரு நிலையான வருவாயை உண்டாகுதல்

உங்கள் பிள்ளைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய வருமானத்தைத் தவிர்த்தல்

உயில் இல்லாது மரணம் சம்பவிப்பதால் உண்டாகும் மன உளைவுகளையும், பணப் பிரச்சனைகளையும் தவிர்த்தல்.

அங்கவீனமான, மனநோயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை பணப்பிரச்சனைகளிலிருந்து காப்பாற்றல்

உங்களது வாரிசுகளுக்கு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்படும் வரிகளைக் குறைத்தல்

## The intestacy rules in a simplified form.

இலகு வடிவில் உயில் எழுதாநிலை விதிகள்

***Other things you should consider about the effects of the intestacy rules***

உயில் எழுதாநிலை விதிகள் ஏற்படுத்தும் விளைவு பற்றி நீங்கள் கவனிக்க வேண்டியவை.

If any of the following circumstances apply to you, the intestacy rules may not cater for your situation in the way that you would wish:

கீழுள்ள எந்தச் சூழலினுள் நீங்கள் அடங்கினாலும் உயில் எழுதாநிலை விதிகள் உங்கள் விருப்பிற்கு அமைய வழி வகுக்க மாட்டாது.

- You are living together but are not legally married or in a civil partnership but wish your partner to inherit some or all of your estate
நீங்கள் ஒருவருடன் வாழ்கிறீர்கள் ஆனால் தம்பதியாகவோ அல்லது சட்டப்படி திருமணமாகியோ இல்லை. அதே நேரம் உங்கள் சொத்தின் பகுதியோ அல்லது முழுவதுமோ அவருக்கு சேரவேண்டுமென்று விரும்புகிறீர்கள்.
- You are legally married or in a civil partnership and have children and you wish your spouse/civil partner to inherit all of your estate.
நீங்கள் சட்டப்படி திருமணமாகி அல்லது தம்பதியாக வாழ்ந்து குழந்தைகளும் உண்டு. உங்கள் சொத்து மனைவிக்கோ சகாவிற்கோ சென்றடைய வேண்டுமென்று விரும்புகிறீர்கள்.
- You have no living relatives and wish to leave your estate to your friends or to a charity (the Crown may take your estate if you die leaving no will and no surviving relatives).
உயிர்வாழும் உறவினர்கள் உங்களுக்கு எவருமில்லை. உங்கள் சொத்து உங்கள் நண்பர்களுக்கோ அல்லது தொண்டு நிறுவனங்களுக்கோ போவதை நீங்கள் விரும்புகிறீர்கள்.(நீங்கள் உயில் இல்லாது இறந்தால் உறவினர் இல்லாத பட்சத்தில் அரசு உங்கள் சொத்தை பாரம் எடுத்துவிடும்.)
- You are legally married or in a civil partnership and you don't wish your spouse/civil partner to inherit anything.
நீங்கள் சட்டப்படி திருமணமாகி அல்லது தம்பதியாக வாழ்ந்திருந்தாலும் உங்கள் மனைவியோ சகாவோ எதுவும் பெறக்கூடாது என்று விரும்புகிறீர்கள்.
- You are legally married or in a civil partnership but have no children.
நீங்கள் சட்டப்படி திருமணமாகி அல்லது தம்பதியாக வாழ்ந்திருந்தாலும் உங்களுக்கு குழந்தைகள் இல்லை.
- You are legally married or are in a civil partnership and have children from a previous relationship and you wish to ensure that your children receive something from your estate.
சட்டப்படி திருமணமாகி அல்லது தம்பதியாக வாழ்ந்திருந்த நீங்கள் உங்களுக்கு முன்பிருந்த தொடர்பால் உள்ள குழந்தைகளுக்கு உங்கள் சொத்தில் ஒரு பங்கு சேரவேண்டுமென்று விரும்புகிறீர்கள்.
- You have dependant relatives e.g. children under 18, elderly relatives or relatives with a disability who have special needs and you want to make sure that they are looked after and provided for.
உங்களில் தங்கியுள்ள உறவினர் உங்களுக்கு உள்ளார்கள். எடுத்துக்காட்டிற்கு 18 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அல்லது முதுமையடைந்த உறவினர் அல்லது விசேட கண்காணிப்பு தேவைப்படும் ஊனமுற்ற உறவினர்.
- Your estate is large and may be liable for Inheritance Tax and you may wish to make arrangements for tax planning.
உங்கள் சொத்து பெரிதாக அதாவது வழிமுறைவரி கட்டப்படவேண்டியதாக இருந்து நீங்கள் வரி செலுத்தும் ஒழுங்கு செய்ய விரும்பினால்.


. . . அடுத்த இதழில் பல முக்கிய தகவல்களுடன்

**National Legal Services**

150 Cheyneys Avenue
Edgware, Middlesex
HA8 6SE

t: **020 8952 2410**
m: **07931 794 809**
e: info@national-wills.co.uk
w: www.national-wills.co.uk

# லண்டனில் அரங்கேறும் "மரணத்துள் வாழ்வு"




'அப்ப நான் மருத்துவக் கல்லூரியில் மூண்டாவது வருசம் படிச்சுக் கொண்டிருந்தன்... அண்டு மத்தியானம் பெரிய கோயிலடியாலை வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தன்.. திடிரென வெள்ளை வான் ஒண்டு வந்து நிண்டுது. அதிலையிருந்து மூண்டு ஆம்பிளையள் குதிச்சு ஓடி வந்தாங்கள். அவங்களிலை ஒருத்தன் என்ரை முதுகிலை துவக்கை வைச்சு என்ரை காதுக்கிள்ளை துப்பிற மாதிரி பேசினான். சத்தம் போட்டாயோ முடிஞ்சாய் எண்டான். அவன் கொச்சைத் தமிழில் பேசினான்..'

இப்படி தன் கதையைக் கூறும் அரசியல் கைதியாகப் பிடிபட்ட மாலினி என்ற பெண்ணின் அனுபவங்களை மிகவும் இயல்பாக காட்டும் நாடகம்தான் 'மரணத்துள் வாழ்வு'. ஜனவரி 2ம் திகதி வடமேற்கு லண்டனின் புற நகர்ப் பகுதியான Ruislipல் அமைந்துள்ள Winston Churchil மண்டபத்தில் மேடையேற்றப்பட இருக்கும் இந்நாடகத்தை தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் க. பாலேந்திரா நெறியாள்கை செய்துள்ளார்.

மிக நீண்ட காலமாக ஈழத்திலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் நாடகங்களை நடாத்தி வரும் பாலேந்திரா மீது, அவர் திரும்ப திரும்ப ஒரே நாடகங்களையே மேடையேற்றி வருகிறார் என்ற விமர்சனமிருந்தது. தமிழ் நாடக இரசிகர்கள் குறைந்த அளவிலேயே காணப்படுவதினால் அந்த விமர்சனத்தில் ஒரளவு நியாயமிருந்தது. அதே சமயம் புதிதாக ஒரு நாடகத்தினை தயாரிப்பதில் உள்ள சிரமங்கள், பொருளாதார பிரச்சனைகளை போன்றவற்றை யாராலும் விளங்கிக் கொள்ள முடியும்.

இப்போது, நாடக இரசிகர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பினை நிறைவு செய்யும் வகையில், தற்போதைய தாயக நிலவரங்களை பிரதிபலிப்பதாக இந்தப் புதிய நாடகம் அரங்கேற்றப்படவிருக்கிறது.

இந்நாடகத்தில் மூன்று பாத்திரங்களே இடம்பெறுகின்றன. சித்தரவதையின் வடுக்களுடன் வரும் மாலினியாக பண்பட்ட கலைஞர் ஆனந்தராணி பாலேந்திரா, மனிதவுரிமை வாதியும், வழக்கறிஞருமான கணவர் குமாராக மனோகரன் மனுவேற்பிள்ளை, அவர்களது வீட்டிற்கு வரும் டொக்டர் இராஜரட்ணமாக க.பாலேந்திராவும் நடிக்கின்றனர்.

ஐ.நா.மனிதவுரிமை சாசனம் ஏற்படுத்தப்பட்டு 60 வருடங்களாகின்றன. ஆனால் இலங்கைத் தீவில் இன்னமும் மனிதவுரிமை மீறல்கள் தொடரந்த வண்ணமேயுள்ளன. இராணுவ ஆக்கிரமிப்பின்போது, ஆயிரக்கணக்கான பெண்கள் கைதிகளாக வதை முகாம்களில் கொடூரங்களை அனுபவித்தவர்களாக இருக்கிறார்கள் இவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு ஒருபோதும் நீதி வழங்கப்படுவதில்லை. மனிதவுரிமைகள் பற்றியும் வதை முகாம்கள் பற்றியும் கேள்விகளை எழுப்பும் நாடகம் 'மரணத்துள் வாழ்வு'.

மிகவும் உக்கிரமான உரையாடல்களுடன், விறுவிறுப்பாக நகரும் நாடகம் இது. இந்நாடகம் 12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு உகந்தது அல்ல எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த நேரத்திற்கு நாடகம் ஆரம்பிக்கப்படும் எனவும் அதன் பின்னர் வருபவர்கள் இடைவேளைக்கு பின்னரே அநுமதிக்கப்படுவர் எனவும், 12வயதுக்கு உட்பட்டவர்களுக்கு, அதே மண்டபத்தின் வேறுபகுதியில் வீடியோ காட்சி காண்பிக்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**Dec 27 SATURDAY**

**Jolly Vibe 2008**
Jaffna Hindu College OBA UK's Dinner and Dance
Colosseum, Rickmansworth Road, Watford
WD17 3EX
7:00PM - till 2:00 AM

**Jan 02 FRIDAY**

மரணத்துள் வாழ்வு
தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் 30 ஆண்டு நிறைவின் புதிய நாடகம்
Winston Churchil Theatre
Pinn way, Ruislip HA4 7QL
@7.30 PM

**Dec 25 SATURDAY**

**Tamils in Need**
Need your urgent humanitarian help. Fund raising event on Deepam, GTV, IBC and Sunrise Radio.
**To Donate please Call: 020 3393 6650**
25 Dec - 2 Jan

**Jan 18 SUNDAY**

பொங்கல் விழா - 2009
லண்டன் வெண்புறா அமைப்பு நடத்தும்
பொங்கல் விழா Mega Musical festival - 2009
FairField Hall, Park Lane
Croydon, Surrey, CR9 1DG
@ 5.00 PM

உங்கள் நிகழ்வுகள் தொடர்பான விபரங்களையும் பிரசுரிப்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

ஒரு பேப்பர்

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்கள்

Over 19 years of experience in the East London Property market.
Tilko states offers you a wealth of experience & insight

TILKO ESTATES

SALES
LETTINGS
MORTGAGES

Residential Sales/Residential Lettings arrangement / Construction & Development / Financial Services Investment Properties / Commercial and Business Transfers / Commercial mortgages Arranged

All types of commercial properties available Finance arranged for purchase of business.

Please call us for further information on 07957 400 777

East Ham
213 High Street North
London. E6 1JG
T: 020 8472 0029
F: 020 8503 5996
eastham@tilko.co.uk

Stratford
1 Leytonstone Road
London. E15 1JA
T: 020 8503 1999
F: 020 8503 0999
stratford@tilko.co.uk

Walthamstow
252 Hoe Street
London. E17 3AX
T: 020 8520 9968
F: 020 8503 7661
walthamstow@tilko.co.uk

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது
கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்கள்



Protect the one thing
That's important to you

*Your family.*

**Death Benefits** ✔

**Critical illness benefits** ✔

**Death or earlier critical illness benefits** ✔

**Unemployment benefits** ✔

**Disability income benefits** ✔

**Level term assurance** ✔

**Decreasing term assurance for mortgages** ✔

**Select**
*Life Care*


**0845 470 1500**

**www.select.gb.com**

Select life care is an introducer to Select Mortgage Solution. Select Mortgage Solution is directly authorised and regulated by the financial services authority.

# சீமான் கைது, ராஜீவ் காந்தி, பேச்சுரிமை

தமிழ் சசி
*(சசியின் டைரியில்)*



தமிழகத்திலே யாரைப் பற்றி வேண்டுமானாலும் விமர்சனம் செய்யலாம். மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு என யாரைப் பற்றி வேண்டுமானாலும் விமர்சனம் செய்யலாம். இந்திய ஜனநாயகம் அதனை தாங்கிக் கொள்ளும். இந்திய ஜனநாயகம் கொடுத்திருக்கிற அந்த அசாத்திய பேச்சுரிமை நம்மை புல்லரிக்க வைக்கும்.

ஆனால் ராஜீவ் காந்தியை மட்டும் 'தமிழகத்தில்' விமர்சனம் செய்து விட முடியாது. உடனே தமிழகத்தின் கதர்வேட்டிகள் வானத்திற்கும், பூமிக்கும் குதிக்க தொடங்கி விடுவார்கள். ஒரு மிக சாதாரண விமர்சனத்திற்கு கூட தேசிய பாதுகாப்பு சட்டத்தை பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எரிச்சலை ஏற்படுத்துகிறது. இந்திய ஜனநாயகம், பேச்சுரிமை என இனி யாராவது பேசினால் எரிச்சல் தான் ஏற்படும்.

இந்த விடயத்தில் சீமான் மீது எனக்கு சில விமர்சனங்கள் இருந்தாலும் சீமானை நான் பாராட்டியாக வேண்டும். தமிழகத்தின் அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், 'முற்போக்கு' எழுத்தாளர்கள், 'மாற்று' எழுத்தாளர்கள், சமுதாயத்தை புரட்டி போடும் சிந்தனையாளர்கள் என யாருக்குமே ராஜீவ் காந்தி மீது எந்த விமர்சனமும் வைக்க கூடாது என்ற தமிழகத்தின் காட்டு தர்பாரினை எதிர்க்க வேண்டும் என்ற தைரியம் வந்ததில்லை. சீமான் முதல் முறை கைது செய்யப்பட்ட பிறகும், இம்முறை பேசினால் 'மறுபடியும்' கைது செய்யப் படுவோம் என தெரிந்தும் ராஜீவ் காந்தியை விமர்சித்து பேசியுள்ளார். இது அவரது அசட்டு தைரியமா அல்லது கைது செய்யப்படுவோம் என தெரிந்தே பேசினாரா என தெரியவில்லை.

சீமான் விளம்பரத்திற்காக பேசினார் என்று சொன்னால் அதனை நம்புவதற்கில்லை. வைகோ, நெடுமாறன் போன்றோர் கைதினையே எந்த எதிர்ப்பும் இல்லாமல் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தான் தமிழர்கள். இவ்வாறு பேசுவதால் சீமானுக்கு எந்தப் புதிய விளம்பரமும் கிடைக்கபோவதில்லை.

ஆதாயங்கள் கூட இல்லை. பாதகங்கள் தான் அதிகம். சீமானின் கைதினை யாரும் எதிர்க்க போவதில்லை. இரண்டு நாள் அறிக்கைகள், பிறகு தங்கள் வழக்கமான வேலைகள் என அரசியல்வாதிகள் மாறி விடுவார்கள். காங்கிரஸ் கட்சியினர் கோரிக்கை வைத்திருப்பது போல தேசிய பாதுகாப்புச் சட்டம் வேறு சீமானை பயமுறுத்துகிறது.

கடந்த முறையும் சரி, இம் முறையும் சரி சீமான் இந்திய தேசியத்தை பிளவு படுத்தவோ, இந்திய தேசியத்தை மறுத்தோ கூட பேசவில்லை. ராஜீவ் படுகொலையை கடந்து ஈழப் பிரச்சனையை பார்க்க வேண்டிய தேவையை தான் சீமான் முன்னிறுத்தினார்.

ராஜீவ் காந்தி இந்திய அமைதிப்படையை அனுப்பிய நோக்கத்தினை தான் கேள்விக்கு உட்படுத்தினார். ராஜீவ் காந்தியின் அமைதிப்படை ஈழத்திலே செய்த போர் குற்றங்கள் ஏற்கனவே பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் இந்தியன் எக்ஸ்பிரஸ் தொடக்கம் லண்டன் பத்திரிக்கைகள் வரை இந்திய அமைதிப்படை ஈழத்திலே செய்த வெறியாட்டத்தை அம்பலப்படுத்தியுள்ளன. இந்தியப் பாராளுமன்றத்தில் இந்திய அமைதிப்படையின் வெறியாட்டம் விமர்சிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதனை தமிழகத்திலே பேசக்கூடாது, பேசினால் தேசிய பாதுகாப்பு சட்டம் பாயும், சிறையில் போடுவோம் என்பது ஜனநாயக நாட்டின் அறிகுறி அல்ல. சர்வாதிகாரத்தின் வெளிப்பாடு.

அது போல சீமான் பயங்கரவாத இயக்க தலைவரை ஆதரித்து பேசினார் என்பதாக மற்றுமொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. சீமான் அவ்வாறு பேசவில்லை. பிரபாகரன் மேல் தனக்கு இருக்கும் அபிமானத்தை வெளிப்படுத்தினார். ஒரு ஜனநாயக நாட்டில் இந்த பேச்சுரிமை கூட இல்லையா ? இந்திய அரசியல் சாசனம் அமைதியான வழியில் குரல் எழுப்ப அனுமதிக்கிறது. வைகோ கைது செய்யப்பட்ட வழக்கில் கூட நீதிமன்றம் பேச்சுரிமையை வலியுறுத்தியுள்ளது. பிரபாகரனுக்கு ஆதரவாக மட்டுமில்லாமல், விடுதலைப் புலிகளை ஆதரித்தும் கூட அமைதியாக தங்கள் கருத்துக்களை பேசலாம், எழுதலாம். அவ்வாறான சூழலில் காங்கிரஸ் கட்சியை அமைதிப்படுத்த சீமானை தமிழக காவல்துறை கைது செய்துள்ளது.

கலைஞர் குறித்து நாம் வைக்கும் எந்த விமர்சனத்தையும், ஜெயலலிதா ஆட்சியிலே இது போல பேசி விட முடியுமா என்ற வாதம் மூலம் தமிழகத்திலே திமுக ஆதரவாளர்கள் திமுகவின் ஜனநாயக, தமிழ் விரோதப் போக்கினை நியாயப்படுத்த முனைகின்றனர்.

ஜெயலலிதா ஆட்சியில் நடந்த சர்வாதிகாரப் போக்கினை காட்டி கலைஞர் செய்து கொண்டிருக்கும் ஜனநாயக விரோதப் போக்கினை நாம் நியாயப்படுத்தி விட முடியாது.

ஜெயலலிதா தமிழர் அல்ல என கலைஞரே கூறியிருக்கிறார். ஆனால் கலைஞரை 'தமிழினத்தலைவர்' என திமுகவினர் கூறுகிறார்கள் (திமுகவினர் மட்டும் தான் கூறுகிறார்கள்). தமிழினத் தலைவராக கூட தேவையில்லை. குறைந்த பட்சம் ஒரு தமிழராக தமிழகத்திலே ஈழத்தமிழர் பிரச்சனையை முழுமையாக விவாதிக்க/பேச ஒரு களம் அமைக்க திமுக ஏன் தொடர்ந்து மறுத்து வருகிறது?

காங்கிரஸ் கட்சியின் தங்கபாலு சீமானை கைது செய்ய வேண்டும் என்றவுடன் பாய்ந்து சென்று சீமானை கைது செய்யும் கலைஞர், தில்லிக்கு சென்று 'அவரே' முன்வைத்த கோரிக்கைகளை காங்கிரஸ் இது வரை நிறைவேற்ற வில்லையே என்ற கேள்வியை எழுப்பி இருக்கலாம். ஓ...அது கலைஞர்-காங்கிரஸ் கூட்டு நாடகம் அல்லவா. அதனால் தான் கலைஞர் அமைதியாக உள்ளார். டெல்லியின் எடுபிடிகள் தமிழக காங்கிரஸ் மட்டும் அல்ல. திமுக, பாமக உள்ளிட்ட கட்சிகளும் தான் என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது.

## வாசகர் கருத்துக்களம்

# புலம்பெயர் நாடுகளில் முதியவர்களின் நிலை

புலம் பெயர் நாடுகளில் எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிக்கல்கள், எம்மிடையே மறைந்துள்ள மூட நம்பிக்கைகள், இவற்றிற்கான தீர்வுகள் போன்ற விடயங்கள் குறித்து ஒரு பேப்பர் வாசகர்களிடையே ஆக்க பூர்வமான கருத்துப் பரிமாறல்களுக்கான களமாக வலம் வர இருக்கிறது வாசகர் கருத்துக் களம் என்ற இந்தப் புதிய பகுதி.

இந்தப் பகுதி மூலம் நீங்களும் குறித்த விடயம் சம்பந்தமான உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதோடு அடுத்து அலசப்பட வேண்டிய தலைப்பினையும் பிரேரிக்கலாம்.

வாசகர் கருத்துக் களத்தின் முதல் தலைப்பாக புலம்பெயர் நாடுகளில் முதியவர்களின் நிலை என்பது குறித்து உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன

இன்றைக்கு தாயகத்திலிருந்து பல்வேறு காரணங்களால் புலம்பெயரும் எங்கள் முதியவர்கள் இந்தத் தேசங்களில் எப்படி வாழ்கிறார்கள்? அவர்கள் சந்தோசமாக இருக்கிறார்களா? தாயகத்தில் இருந்திருந்தால் இதை விட மகிழ்ச்சியாக இருந்திருப்பார்களா? அவர்களுக்கு இங்கு இருக்கின்ற குறைகள் எவை? இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு குடும்பம் என்ற முறையிலே குடும்ப அங்கத்தவர்கள் என்ன செய்யலாம்? சமூகம் என்ற முறையிலே சமூக அங்கத்தவர்கள் என்ன செய்யலாம்? இதுபோன்ற இன்னோரன்ன கேள்விகளுக்கு உங்கள் ஆக்கங்கள் பதில் தரும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

*- ஆசிரியர்*

## என்றேனும் நினைத்ததுண்டா?

புலம்பெயர்ந்து வந்திங்கே புதுவாழ்வு பெற்றாலும்
பிறந்தஎம் மண்நினைவாய் என்றென்றும் வாழ்கின்றோம்
எல்லோர் முன்னாலும் எடுப்பாகப் பேசும்பலர்
எம்மண்ணின் குறைகளைய எதனையுமே செய்ததில்லை

பசியெடுக்க வில்லையெந்தன் பிள்ளைக்கு எனச்சொல்லி
பரிகாரம் செய்வதற்காய்ப் பகலிரவாய் அலைபவர்கள்
பசியெடுத்த போதெல்லாம் பச்சைத் தண்ணீரால்
பசிமாற்றும் எம்மீழக் குழந்தைகளை நினைப்பதில்லை

கிழங்குப் பொரியலுடன் குளிர்பானம் கொடுத்துத்தம்
குழந்தை இடையுணவுத் தேவையினைப் போக்கும்பலர்
கிழங்கை அவித்துத்தம் முழுநேர உணவாக்கும்
கண்மணிகள் பசியகற்ற உருப்படியாய்ச் செய்ததில்லை

பிறந்த நாளென்றும் பிறவென்றும் கொண்டாடிப்
புகைப்படப் பெட்டிமுன்னால் புன்னகைத்து நிற்கும்பலர்
போர்செய்த கொடுமையினால் பெற்றவரைப் பிரிந்திழந்து
புஞுதியிலே புரள்கின்ற பிள்ளைகளை நினைப்பதில்லை

உடல்மெலியும் வழிதேடி ஊரெல்லாம் அலையும்பலர்
உணவிற்கே வழியில்லா ஊரவரை நினைப்பதில்லை
தமிழுக்காய் உயிர்கொடுக்கத் தயங்காத தீரர்களை
தரணிக்குத் தந்திட்ட தாய்மாரை நினைப்பதில்லை

பெற்றவரை நினைப்பதற்கும் நாளொன்றை ஒதுக்கிவைத்த
பிறநாட்டார் வழக்கினையும் கடைப்பிடிக்கும் தமிழர்பலர்
பெற்றெடுத்த பிள்ளைகளை போர்க்களத்தில் இழந்துவிட்டு
புறக்கடையில் கலங்கிநிற்கும் பெற்றோரை நினைப்பதில்லை

*- ஜனார்த்தனி*



**Engine Tec Motors**

அனைவருக்கும் கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

*We Offer Facilities For:*

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre-MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken

உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்.

Ask for **Vel** or **Rajan**
Tel: **020 8640 8000** / **020 8640 1230**
Mob: **07860 226 476** / **07860 770 945**

Unit 5, 339 London Road,
Mitcham, Surrey CR4 4BE
Email: vel@etmluk.com
Web:www.etmluk.com



# உள்ளிருந்து ஒரு குரல்

அம்புலி
*(வெள்ளி நாதத்தில்)*

2008 யூலை மாதம், மன்னார்க் கட்டளைப் பணியகப் போராளிகளும், 2ஆம் லெப். மாலதி படையணியினரும் தேத்தாவாடியில் உடனடியாக ஒரு முன்னணிக் கோட்டை ஏற்பாடு செய்து அதில் காப்பிலீடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்த உடனடி ஏற்பாடு போதிய காப்பானதாக இருக்கவில்லை. வெள்ளமெனத் திரண்டு வரும் கடலலைகளுக்கு முன்னால் சிறு சிறுகற்களைத் தூக்கிப் போட்டுத் தடுப்புச் செய்வது போல, மூர்க்கமும் போர்வெறியுங்கொண்டு முன்னேறும் சிங்களப் படைகளுக்கெதிராக மனத் திடத்தை மட்டும் காப்பாக முன்னிறுத்தியபடி புலிகள் சண்டை செய்து கொண்டிருந்தனர்.

தேத்தாவாடியில் அரண்களைப் போட்டு பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்வதற்குச் சிறிய கால அளவேனும் தேவையாக இருந்தது. இந்தக் கால அவகாசத்தைப் பெறுவதற்காகவும் வேலைசெய்து கொண்டிருக்கும் போராளிகள் மீது தாக்குதல் நடத்த வரும் எதிரியின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவும் ஒரு அணி முன்னே ஊடுருவி தீக்கழிக்குச் சென்றது.

மன்னார்க் கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த போராளிகள் ஆறு பேரும் மாலதி படையணிப் போராளிகள் ஆறு பேரும் வேவு அணியில் நான்கு பேருமாகப் பதினாறு பேர் கொண்ட அந்த அணி மூன்று நாட்களுக்குத் தேவையான உலருணவுடனும் தாக்குதலுக்குத்தேவையான வெடிபொருட்களுடனும் நகர்ந்தது.

முன்னே மூன்று கிலோ மீற்றர்கள் நகர்வு. நகரும் இடமெங்கிருந்தும் அடி கிடைக்கும் என்ற காரணத்தால் விழிப்புடனேயே அனைவரும் சென்றனர். இவர்களுக்கான கட்டளையை வழங்குவதற்காக மன்னார்க் கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த ஜானும் உடன் சென்றார். போகுமிடமெல்லாம் படையினர் அவ்விடங்களில் நடமாடியதற்கான அடையாளங்கள் இருந்தன. காலணித்தடம், நெகிழப்பைகள், குருதித் தடுப்புப் பஞ்சணைகள், தீப்பெட்டி போன்ற இன்ன பிற அங்கே காணப்பட்டன.

சென்ற இடத்தை அவதானித்து இரண்டு நிலைகளைப் போட்டுக் காப்பில் ஈடுபட்டவாறே அவ்விரவைக் கழித்தனர். அடர்காடு, மையிருட்டு அடுத்தவரைத் தொடுகையின் மூலமின்றி இனங்காண முடியாத இருள். அந்த இரவு ஒருவாறு விடிந்துவிட்டது.

அடுத்த நாட்காலை வேவுப் போராளிகளும், இவர்களுமாகச் சேர்ந்து தடயம் பார்த்துப் பொறி வெடிகளைப் புதைத்தனர். நிற்கும் இடத்துக்குச் சற்றுப் பின்னே புதிய முன்னணிக் கோட்டை அமைப்பதற்கான திட்டம் உருப்பெறுவதற்காக பின்னிருந்து ஊர்தியொன்று தருவிக்கப்பட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டது. ஊர்தியின் சத்தத்தை இனங்கண்ட படையினர் தமது தொலைத்தொடர்பு உரையாடல்களில் அவ்வூர்தியையும், போராளிகளையும் சுற்றிவளைத்துப் பிடிப்பதற்குத் திட்டமிட்டனர்.

இந்த உரையாடல் ஒற்றாடலின் மூலம் தெரியவந்ததால் ஊர்தி உடன் பின்னுக்கு அனுப்பப்பட்டது. அன்று மதியம் ஊர்தி நின்ற இடத்தைக் குறிவைத்து எறிகணைகள் மழைபோல வந்து பொழியத் தொடங்கின. இதனால் ஊடுருவிச் சென்று நிலைகொண்ட அனைவரும் தமது நடமாட்டத்தை நிறுத்திக் காப்பில் இருந்தனர். அன்றிரவு அவ்விடத்தை விட்டுப் பின்னகர்ந்து வேறிடத்தில் நிலைகொள்ளுமாறு அவர்களுக்குக் கட்டளை கிடைத்தது. எப்படியும் இவர்களை மோப்பம் பிடித்துப் படையினர் வந்து தாக்குவார்கள் என்பதை இவர்களும் அறிந்திருந்ததால் கட்டளைக்கேற்ப பக்கவாட்டாக இடம்மாறி அதற்குப் பின்னே நகர்ந்து வேறோரிடத்தில் அந்த அணி காவலில் நின்றது.

முக்கோண வடிவத்தில் ஒருபுறம் வேவு அணியும், இன்னொரு பக்கம் பெண் புலிகளும், மறுபுறம் மன்னார்க் கட்டளைப் பணியகத்தினருமாக நிலையைப் போட்டு விடிய விடிய மாறி மாறி விழித்திருந்தனர். ஒருபுறம் நிற்பவர்களுக்கும் மறுபுறத்தில் நிற்பவர்களுக்கும் நாற்பது மீற்றர்களே இடைவெளி. அதிகாலை நான்கு மணிக்குக் காடுமுறிக்கும் சத்தம் கேட்டது. பெண் புலிகளின் பக்கம் காவலில் நின்ற வசியரசி புதியவர் என்பதால் சான்மொழியைத் துணைக்கு எழுப்பினார். சத்தங் கேட்டு அனைவருமே விழிப்பு நிலைக்குச் சென்று தகுந்த காப்புக்களில் நின்றனர்.

படையினர் பன்னிரண்டு பேரளவில் நகர்ந்து வருகின்றனர் என்பது அவதானிக்கப்பட்டது. நகர்ந்து வருபவர்கள் இவர்கள் போட்ட முக்கோணக் காப்பை அவதானித்தால் அந்த முக்கோணத்தின் மூன்று புறமிருந்தும் புலிகள் தமது எதிர்ப்பைக் காட்டத் தயாராக நின்றனர். கண்டமேனிக்குப் பரவலாக நகர்ந்த சிங்களப்படைகள் இவர்களுக்கு கிட்டவாக நகர்ந்து இவர்களது முக்கோண நிலையின் உட்புறத்தே வந்துவிட்டனர். சான்மொழி எழுந்து காப்பில் நிற்க ஜான்மாதிரி ஒரு உடற் பருமனானவர் அவரது உடையமைப்புடனேயே அவர்களுக்கு அருகில் வருவது தெரிந்தது. வந்தவர் A.K சுடுகருவி வைத்திருப்பதைப் பார்த்தவுடன் இவர் ஜானல்ல என்பதைச் சான்மொழி இனங்கண்டார்.

எனினும் உள்ளே வந்த படையினரை ஒரு பகுதியினரும் சுட முடியாது. சண்டை வெளிப்புறமாகவே நடைபெறலாமென எதிர்பார்க்கப்பட்டது. இப்போது முக்கோணத்தின் உள்ளே எதிரிகள் தாக்கினால் மறுபுறத்திலிருக்கும் எம்மவர்களே பலியாகக் கூடும். இதையுணர்ந்த போராளிகள் முக்கோணத்தை விட்டுப் படையினர் வெளியேறு மட்டும் மறைவாக இருந்தனர். உள்ளே வந்தவர் கொற்றவையின் தலையை எட்டிப் பிடிக்கும் தூரத்துக்கு வந்துவிட்டார். மூன்று மீற்றரில் இப்போது எதிரி. மன்னார்க் கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த பாலு சடுதியாகச் செயற்பட்டு கொற்றவைக்கருகே வந்தவனை விழுத்தி விட்டார்.

விழுந்தவன் தனது துப்பாக்கியால் கொற்றவைக்குச் சுட அதைக் கண்ட பரணிதா விழுந்தவனுக்கு மறுபடியும் சுட்டு அவனைச் செயலிழக்கப் பண்ணினார். இப்போது அனைவரையும் அனைவரும் இனங்கண்டு விட்டனர். உள்ளே வந்தவர்களை ஒருவாறு முக்கோணத்தின் வெளியே தள்ளியாகிவிட்டது. வெளிப்புறமாக எல்லோரும் தாக்கத்தொடங்கினர். 'மகே அம்மே' என்ற சத்தம் வெளிப்புறமிருந்து கேட்கத் தொடங்கியது. முக்கோணத்தில் நின்ற போராளியொருவருக்குப் பாதக்காலில் பெரிய காயம்.

> படைச்சிப்பாய் கொற்றவையின் தலையை எட்டிப் பிடிக்கும் தூரத்துக்கு வந்துவிட்டான். பாலு சடுதியாகச் செயற்பட்டு கொற்றவைக்கருகே வந்தவனை விழுத்தி விட்டார்.

கட்டளைப் பணியகத்துடனான தொடர்பு சீராக இருக்க, நின்ற இடத்திலிருந்து இவர்களைப் பின்வாங்கி வருமாறு கட்டளை கிடைத்தது. வந்தவர்கள் இவர்களிடம் வாங்கிக் கட்டிக் கொண்டு 'மகே அம்மே' சொல்லிக் கொண்டு பின்வாங்கி விட்டனர். எறிகணைகள் துரத்திவந்து விழுவதற்கிடையில் காயக்காரரையும் தூக்கிக்கொண்டு அந்த ஊடுருவல் அணி பின்வாங்கியது. சற்றுப் பின்னே சென்று தடிவெட்டிக் காவு படுக்கை செய்து அவரைத் தூக்கலாமென்று சுற்றிலும் அவதானித்தால் விடத்தல் பற்றைகளே எங்கும் தென்பட்டன. வேறு வழியின்றி விடத்தல் தடிவெட்டி முள்ளைச் சிராய்த்து விட்டு காயக்காரரை காவு படுக்கையில் தூக்கிக்கொண்டு தேத்தாவாடிக்கு வந்து சேர்ந்தனர்.

அந்த இரண்டு நாட்களும் போதிய உணவும், நீரும், ஓய்வுமின்றி இருந்ததால் ஏற்கெனவே இரத்த அழுத்தம் இருந்த ஜானுக்குக் களைப்பாக இருந்தது. அவர் தனது நோயையும், இயலாமையையும் அதுவரை வெளிக்காட்டவில்லையெனினும் முன்னணிக் கோட்டுக்கு அண்மித்த வழியில் மயங்கிக் கீழே சரிந்தார். தனது தந்தையைப் போன்ற அகவையிலிருந்த அவரை சான் மொழியும் இன்னுமொருவருமாகத் தூக்கிச் சென்று அவருக்குரிய இடத்தில் விட்டனர். இவர்கள் ஊடுருவிச் சென்ற கால இடைவெளியைப் பயன்படுத்தி தேத்தாவாடி முன்னணிக்கோடு சண்டைக்குத் தயாரான முன்னேற்பாடுகளைச் செய்திருந்தது. அந்த ஏற்பாடுகள் நிறைவடையும் முன்னரே அந்த முன்னணிக் கோட்டின் ஒருபுறம் தனது அணியை காவலில் நிறுத்தியிருந்த அமர்வாணத்தின் பகுதியில் சண்டை தொடங்கி விட்டிருந்தது.

பாப்பா மோட்டையில் நின்ற 2ஆம் லெப்.மாலதி படையணியின் முறியடிப்பு அணியில் ஒருவராகத் துளசியும் நின்றார். அடிக்கடி படையினர் முன்னகர்வதால் அடிக்கடி முறியடிப்புச் சமர்களும் நடந்து கொண்டிருந்தன. காலை, நண்பகல், மாலை, இரவு என்று காலவேறுபாடுகளற்றுச் சண்டைகள் தொடர்ந்தன. முன்னணிக் கோட்டுக்கும், அதற்கான முதன்மைத் தளத்துக்கும் ஐம்பது மீற்றர் இடைவெளியே இருந்தது. ஒவ்வொரு நாளும் டாங்கிகளின் சூடுகள் இவர்களைத் தேடிவந்தன. முதன்மைத் தளத்துக்கருகே வீதி இருந்ததால் அவ்வீதி வழி டாங்கியுடன் படையினர் முன்னேற முற்பட்டனர்.

முதன்மைத் தளத்திலிருந்து எதிரிகளை இனங்கண்டதால் இவர்களும் பக்கவாட்டாகவே அடிக்கத் தொடங்கி விட்டனர். டாங்கிச் சூடுகள் பற்றை பறுகுகளையெல்லாம் கிளப்பியெறிந்ததால் எங்கோ நிம்மதியாகக் கூடு கட்டியிருந்த குளவிகள் தமது இருப்பிடத்தையிழந்து சினங்கொண்டு பறந்து படையெடுத்து வந்தன. ஈழமங்கை முதன்மைத் தளத்திலிருந்து முன்னணி நிலைகளுக்குக் கட்டளை வழங்கிக் கொண்டிருந்தார். அருகே நடைபெறும் சண்டையையும் வழிப்படுத்திக் கொண்டிருந்தார்.

குளவிகளின் கோபம் ஈழமங்கையை நோக்கித் திரும்பியது. கட்டளை வழங்க முடியாது குளவிகள் அவரைக் கொட்டித் தள்ளின. புவிநிலைகாண் தொகுதியுடன் நின்ற பிருதுவி ஈழமங்கை மயங்கிச் சரிய அவரது நடைபேசியை எடுத்துத் தானே கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தார். ஈழமங்கையைப் பின்னுக்கு அனுப்பிவிட்டு அவ்விடத்தைப் பொறுப்பெடுக்க அகமதி வந்தார். சிறிது நேரத்துக்குள் அவ்விடம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. முன்னே, பின்னே பக்கவாட்டாக என்று எங்கும் சிங்களப் படைகள்.

கப்டன் மல்லிகாவுடனான முறியடிப்பு அணிமட்டும் அவ்விடத்தில் நிற்க ஏனையோர் அனைவரும் பகுதிப் பொறுப்பாளர் சத்தியாவின் கட்டளைக்கமைவாகப் பின்வாங்கிச் சென்றனர். அன்றைய நாள் இவர்களுக்கு உணவு கொடுக்க வந்து படையினரிடம் மாட்டிக் கொண்ட உழுபொறியை மீட்கும் பணி இரவிரவாகத் தொடர்ந்தது. உழுபொறியின் ஓட்டுநருடன் தேவா தலைமையில் சென்ற முறியடிப்பு அணி உழுபொறியை மீட்பதற்கான சண்டையைச் செய்தது. AKயும், 50 கலிபருமாக அடித்துக் கொடுக்க, ஆண், பெண் போராளிகளடங்கிய முறியடிப்பு அணி அன்றிரவே சண்டையிட்டு உழுபொறியை மீட்டு வந்தது.

ஓயாது சண்டை, ஓயாது வேலை, ஊணுறக்கமில்லை, ஒழுங்கான குளிப்பு, முழுக்கில்லை, சேற்று வாடை, ஈரஆடை, குளவிகளும், நுளம்புகளும், பாம்புகளும் உறையுமிடத்தில் வாழ்க்கை என்றிருந்தாலும் போராட மறுப்பதில்லை புலிகள். சிங்களப் படைகளுக்கு இது அந்நியமண் புலிகளுக்கோ இது உரிமை மண். வாழ்ந்தாலும்,வீழ்ந்தாலும் இதுதான் நமது நிலம். இந்த நிலத்தில் நெருப்பெரித்து மக்களைக் கலைத்து அந்த நெருப்பிலே குளிர்காய வருகின்றான் எதிரி. அவன் மூட்டிய நெருப்புக்குள்ளேயே அவனைத் தள்ளி விழுத்திவிடக் கானகமெங்கும் காத்திருக்கின்றனர் புலிகள். நெருப்பு கொழுந்துவிட்டு எரிகின்றது. அதன் பசியின்னும் அடங்கவில்லை. புலிகளின் பணியும் இன்னும் முடியவில்லை.

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்கள்

* இணையத்தளத்தின் மூலம் திறமையானதும் மிகக்குறைந்த செலவிலும் Property Insurance, life insurance போன்ற சேவைகளை பெற்றுக்கொள்ள உதவுவோம்.

* வயது வரையறையற்ற காப்புறுதி திட்டத்திற்கு உதவுவோம்.

இலவச Mortgage சேவைகள்

- Property Sales / Lettings
- Mortgage / Re- Mortgage
- Commercial Loans / Bridging Loans
- Building Insurance
- Life / Critical Illness
- Accident / Sickness
- Planning Permission
- Autocad Design / Drafting

THALAM PROPERTY & FINANCIAL SERVICES

t: 020 8689 1533 m: 07766 337 927 f: 020 8689 1533

www.thalam.co.uk

554 Mitcham Road, Croydon, Surrey, CR0 3AA

# வெண்ணிலா

## சிறுகதை

எழுதியவர்: காவலூர் கண்மணி

வானத்தில் முழுமதி ஒளிவீசிக் கொண்டிருந்தது. அன்று போயா விடுமுறை. எங்கும் கடைகள் மூடப்பட்டிருந்ததால் வீதி வெறிச் சோடிக் கிடந்தது. அந்த அகலமான வீதியில் தன்னந்தனியாக நடந்து கொண்டிருந்த அருணிற்கு சொந்த மண்ணின் காற்றைச் சுவாசிப்பது சுகமாகவே இருந்தாலும் சுதந்திரக் காற்றை எப்போ சுவாசிக்கப் போகிறோம் என்று அங்கலாய்ப்பாகவே இருந்தது.

ஐந்து வருடங்களாக திரைகடலோடித் திரவியம் தேடிவிட்டு நேற்றுத்தான் அருண் நாடு திரும்பி இருந்தான். தன் சொந்த மண்ணில் நடைபெற்று வரும் அவலங்களை அப்பப்போ செய்திகள் மூலம் அறிந்த அருணிற்கு மனதுக்குள் இனம் புரியாத ஏதோ ஒரு உணர்வு.

ஒரு விதமாக ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு தனது நாட்டிற்குத் திரும்பி வந்தாலும் தன் அன்னையையும் தங்கைகளையும் பார்க்க இன்னும் வழி கிடைக்கவில்லை. தலைநகரில் உறவினர் வீட்டில் தங்கி இருந்த அருணிற்கு ஒவ்வொரு நிமிடமும் வருடங்களாக இருந்ததில் ஆச்சரியமில்லை.

அருணிற்கு தாய் தந்தை எல்லாமே அவன் அம்மாதான். சிறு வயதிலேயே அருண் தந்தையை இழந்து விட்டான். அருணிற்குப் பின் மூன்று தங்கைகளைப் பரிசாகக் கொடுத்து விட்டு அப்பா ஓர் நாள் நெஞ்சுவலியில் உலக வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.

அப்பா இருக்கும்பொழுது அவனது குடும்பம் ஓகோ என்று வாழாவிட்டாலும் பசி பட்டினி இல்லாமல் சந்தோசமாக வாழ்ந்தார்கள். அப்பாவின் திடீர் முடிவுக்குப் பின் அம்மா எவ்வளவோ கஸ்ரப்பட்டு அனைவரையும் வளர்த்து ஆளாக்கி உறவினர் உதவியுடன் அருணையும் வெளிநாடு அனுப்பி வைத்தார்.

அருணிற்கு அடுத்ததாக மூன்று தங்கைகளும் அழகிலும் அறிவிலும் வளர்ந்து மூத்த தங்கை நிலா தன் இருபதாவது பிறந்ததினத்தை எட்டி இருந்தாள். அம்மாவுக்கோ நெருப்பை மடியில் கட்டி வைத்திருப்பது போன்ற உணர்வு.

எந்த நேரமும் அருணிற்குக் கடிதம் எழுதும் போதும் எப்படியாவது இந்த வருடத்திற்குள் நிலாவிற்கு திருமணம் முடித்து விட வேண்டுமென்றே கோரிக்கை விட்டிருப்பாள்.

அருணிற்கும் இதுபற்றி நெருடல் இல்லாமல் இல்லை. அவனும் தன் தங்கையின் திருமணம் பற்றி தீவிரமாக சிந்திக்கத் தொடங்கினான்.

அருணுடன் சிறுவயது முதல் படித்த நண்பன் பிரபு வெளிநாட்டில் இருந்து தாய்நாடு போய் இருந்தான். அவர்கள் குடும்பத்தில் பெண் சகோதரிகள் இல்லாதபடியால் அவனுக்கு பொறுப்புக்கள் இருக்கவில்லை. எனவே பெற்றோர் பெண்பார்க்க ஆரம்பத்திருந்தனர். அருண் தன் தங்கைக்கு நண்பனைத் திருமணம் செய்யும் எண்ணத்தை வெளிப்படுத்தியதும் அவனுக்கோ பரம சந்தோசம்.

இருபக்கமும் சாதகமான சூழ்நிலை இருந்ததாலும் பிரபு ஆறுமாதத்திற்குள் வெளிநாடு செல்ல வேண்டுமென்ற காரணத்தினாலும் அருண் நாடு திரும்ப முன்பே நிலாவின் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அருண் தன் தங்கையின் திருமணத்தை நேரில் பார்க்க முடியாவிட்டாலும் வீடியோவிலும் போட்டோக்களிலும் பார்த்து சந்தோசமும் பெருமிதமும் அடைந்தான்.

நாட்களின் சுழற்சியில் நான்கு மாதங்கள் உருண்டோடின. தனது எண்ணக் கனவுகளை இனிமைகூட்ட தனக்கு ஒரு மருமகனோ மருமகளோ வர இருக்கும் செய்தியும் மடலில் வந்தது. அருணிற்கோ விண்ணில் பறக்கும் பரவசம். ஓடிச்சென்று தன் தாயையும் சகோதரிகளையும் நண்பனையும் அணைத்து மகிழ ஆசை இருந்தாலும் பொறுப்புக்களை எண்ணி தன் ஆசைகளை அடக்கிக் கொண்டான்.

பிரபுவும் தன் குழந்தையைப் பார்த்துவிட்டு வெளிநாடு செல்லும் ஆசையில் பயணத்தைப் பின்போட்டு விட்டான். ஆண்துணை இல்லாத வீட்டில் சில காலம் அவனின் துணை தேவை என்பதால் அருணும் நிம்மதியாக இருந்தான்.

நிலாவின் பிரசவ நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது.

நிலாவோ அண்ணாவுக்கு எழுதும் கடிதங்களில் எல்லாம் 'அண்ணா உன் மருமகனைப் பார்க்க எப்போ வரப்போகிறீர்கள்?' என வேண்டுதல் விடுத்தபடியே இருந்தாள். அருணின் ஒப்பந்த நாளும் முடிந்து ஓடோடி வந்துவிட்டான்.

எப்போ நாளை விடியும் எப்படியாவது வவுனியா போய் எப்பாடுபட்டாவது கிளாலிக் கடல் தாண்டி எந்த வண்டியிலாவது பயணம் செய்து தன் உறவுகளைச் சந்திக்கும் இனிய உணர்வுடன் அருண் கண்ணயர்ந்தான்.

விடிந்தது. எத்தனையோ தடைகளையெல்லாம் தாண்டி பயணத்தைத் தொடர்ந்து யாழ்நகர் வந்து விட்டான். யாழ்நகரில் இருந்து அருணின் பகுதிக்குச் செல்லும் பாதைகள் எல்லாம் உடைந்த நிலையில் இருந்ததால் படகு மூலம்தான் ஊருக்குள் செல்லமுடியுமென அறிந்த அருண் ஏமாற்றத்துடன் காத்திருந்தான். அன்றிரவு ஒரு நீண்ட பொழுதாகக் கழிந்தது.

இரவுமுழுவதும் ஒரே செல் வீச்சுக்களும் விமானக் குண்டுவீச்சுக்களும் காதைப் பிளந்தன. எங்கும் போர் முழக்கம் கேட்டபடி இருந்ததால் விடியும்வரை நித்திரையின்றி நண்பனின் வீட்டில் முடங்கிக் கிடந்தான்.

விடிந்ததும் செவியில் விழுந்த செய்திகள் அருணைத் திகைக்க வைத்தன. தன் ஊருக்குள் இராணுவம் புகுந்து விட்டதாகவும் மக்கள் பல திசைகளிலும் ஓடிக்கொண்டிருப்பதாகவும் பேசிக்கொண்டனர். அருணின் இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. உடம்பில் ஏதோ நடுக்கம். மூன்று நாட்களுக்கு ஊருக்குள் போகமுடியாமல் அந்த மூன்று நாட்களும் மூன்று யுகங்களாகக் கழிந்தன. நான்காவது நாள் இராணுவம் ஊரிலிருந்து பின்வாங்கிச் சென்றுவிட்டதாக அறிந்ததும் அருண் முதல் ஆளாக தன் ஊர்மக்கள் தங்கி இருந்த இடங்களுக்குச் செல்லும் முயற்சியில் இறங்கினான்.

போகும் வழியெங்கும் இராணுவத்தினரின் அட்டகாசங்களைப் பற்றி மக்கள் கதைத்தபடியே இருந்தனர். அருணிற்கு எதுவுமே காதில் விழவில்லை. எப்படியோ விசாரித்து தெரிந்தவர்களின் உதவியுடன் தன் தாயும் தங்கைகளும் தங்கி இருந்த ஆலயத்தை அடைந்தான். ஆலய வளவு முழுவதும் அகதிகள் கூட்டம் தன் மக்களுக்கும் இப்படி ஒரு நிலையா என மனம் அங்கலாய்த்தது.

அருணைக் கண்டதும் உறவினர்கள் ஓடி வந்தனர். எல்லோரின் அனுதாப அலைகளும் தன் மேல் வீசுவதை உணர்ந்தவனாகச் சென்று கொண்டிருந்தவனை ஓடி வந்து கட்டிக் கொண்டு அழும் அம்மாவின் அலறல். ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது. உள் மனது எச்சரித்தது. சுற்றுமுற்றும் பார்த்தான். ஒருபடியாக மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு 'தங்கச்சிமார் எங்கே?' என்று கேட்டான். 'நிலாவுக்கு பெண் குழந்தை பிறந்திருக்கு' என்று கண்ணீருடன் பதில் வந்தது. அருண் ஆவலுடன் இரண்டு ரெண்டு எட்டாக வைத்து ஆலய மண்டபத்துள் நுழைந்தான்.

அங்கே சுவர் ஓரமாக விரிக்கப்பட்டிருந்த ஓலைப் பாயில் தங்கை சாய்ந்தபடி உட்காந்திருந்தாள். அவள் மடியில் பால் மணத்துடன் பச்சிளம் குழந்தையாக அவன் இத்தனை நாட்களாக கற்பனையில் கதைபேசிய ஆசை மருமகள். சுற்றும் முற்றும் பார்த்தான். அவன் நண்பனைக் காணவில்லை.

'நிலா பிரபு எங்கே?' என்று கேட்டான். அவளின் காதில் அண்ணாவின் கேள்வி விழுந்ததாகத் தெரியவில்லை. அவளின் கண்கள் எங்கோ சூனியத்தை வெறித்தபடி இருந்தன. முகத்தில் வெறுமை. அருணிற்கு எங்கோ உண்மை இடிக்கத் தொடங்கியது.

அவனின் மற்றைய தங்கைகள் தம் அத்தானை இராணுவம் பிடித்துச் சென்றதையும் மறுநாள் பிணமாக வீதியில் வீசிச் சென்ற உண்மையை வேதனையுடன் வெளிப்படுத்தினர்.

அருணிற்குள் பூகம்பம் வெடித்தது போல உணர்ந்தான். தன் தங்கையை இந்தக் கோலத்தில் பார்ப்பதற்கா இத்தனை கஸ்ரப் பட்டான். அவன் நண்பனை நினைக்க இதயத்தை யாரோ பிசைவது போன்ற வேதனை. எப்படி என் தங்கை இதைத் தாங்கிக் கொண்டிருக்கிறாள் என்று நினைக்கவே வேதனை இன்னும் பல மடங்காகியது.

யன்னலின் ஊடாக வெளியே நோக்கினான். வானத்தில் வெண்ணிலவு தேய்நிலவாகத் தேய்ந்து கொண்டிருந்தது அவன் தங்கையைப் போல. அவன் தங்கை வாய்விட்டு அழவில்லை. அவளின் விழிகளில் இருந்து சொட்டுச் சொட்டாக விழுந்த கண்ணீரின் வெப்பம் தாங்க மாட்டாமல் மடியில் இருந்த மழலை சிணுங்கத் தொடங்கியது.



## நீ அறிந்திருக்காத சிலுவைகள்....

வாழ்வுக்கு தவிக்கிற குழந்தைகள்
மறைந்திருக்கிற தரையில்
சிலுவைகள் புதைக்கப்பட்டிருக்க
யேசுவே நீர் இங்கு பிறக்க வேண்டாம்.

உமக்கான மாட்டுத்தொலுவங்கள்
எம்மிடம் இல்லை.
வைக்கோல் பட்டறைகளும் இல்லை.

நீர் அறிந்திருக்காத சிலுவைகளை
நாம் சுமக்கிறோம்.

மழைக்காலத்தில் ஏணைகள்
இல்லாமல் தடிகளில் உறங்குகிற
குழந்தைகளை
வெட்டிப்போட கத்திகளுடன் திரிகின்றன
ஏரோது மன்னின் படைகள்.

குதிரைகள் அலறுகிற இரவில்
குழந்தைகளை நாம் கட்டுக்குள்
கொண்டு வைத்திருக்கிறோம்.

படுக்கைகளில் குருதி வழிந்தோடுகிறது
தூக்கத்தில் ப்றி எடுத்த
குழந்தையை விமானம் தின்று
வீசிவிட்டுப் போகிறது.

நீர் மீண்டும் ஒரு சிலுவையை
இங்கு விட்டுச் செல்ல வேண்டாம்.

உம்மால் தாங்கிக் கொள்ள முடியாத
வலிகளான தொலுவங்களில்
போரிடம் பலியிடப்பட்டுக்
கொண்டிருக்கின்றன
நமது தேசத்தின் குழந்தைகள்.

நீர் இந்த தேசத்தில்
இப்போது பிறக்க வேண்டாம்.

கத்திகள் அலைகிற காடுகளில்
நம்முடன் எங்கு வரப் போகிறீர்?
வெட்டுப்பட்ட சொற்களுடன்
நாம் ஒரு பாடலை தேடுகிற போரில்
நீர் சுமந்திராத
சிலுவைகளை சுமக்கிறோம்.

ஏராது மன்னன்
பெரும் பசியுடன் வாளுக்கு
இரை தேடுகிற நாட்களில்
இங்கு எண்ணிக்கையற்ற மரியாள்கள்
தமது குழந்தைகளை கொண்டு
ஒளிகின்றனர்.

*– தீபச்செல்வன்*



NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ***ஒரு பேப்பர்*** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. Post Graduate Student in Australia, planning to settle down there, 30 years, 5' 7" tall, seeking a suitable bride. Ref: 1350

2. British Citizen, 35 years, 5' 4" tall, A/L qualified, willing to settle down in Canada, seeks a matching bride. Ref: 1349

3. In UK since 1997, now on 'leave to remain' status, 35 years, 5' 7", accounting student, seeks a matching bride in Europe or Canada with permanent residence. Ref: 1348

4. On work visa, 5 years in UK, a post-graduate, 32 years, 5' 7" tall, seeks a matching bride with permanent residence status, in an European country. Ref: 1347

5. கொழும்பில் தொழில்புரியும் ஏ எல் படித்த 31 வயது 5' 6" உயரமுள்ள மணமகனுக்கு வெளிநாடுகளில் Sponsor பண்ணக் கூடிய தகுந்த மணமகள் தேவை. Ref: 1346

6. 10 ஆண்டுகளாக லண்டனில் வசிக்கும் 32 வயது 5' 9" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref 1345

7. விசிற் விசாவில் கனடாவில் தங்கியுள்ள 36 வயது 5'7" உயரமுள்ள BSc Multimedia Production படித்த மகனுக்கு Sponsor பண்ணக்கூடிய மணமகளை பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1344

8. Dubai யில் Software Engineer (Senior Programmer) ஆக தொழில் புரியும் 30 வயது 5'11" உயரமுள்ள மகனுக்கு இலண்டனில் அல்லது ஐரோப்பாவில் மணமகளை பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1343

9. ஜேர்மன் குடியுரிமை உள்ள 28 வயது 5'8" உயரமுள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref. 1342

10. இலங்கையில் தொழில் புரியும் 5'5" உயரமுடைய 45 வயதுடைய, மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். விவாக இரத்துச் செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம். கனடிய/ஐரோப்பிய வதிவிட உரிமையுள்ளவர்கள் விரும்பத் தக்கது. Ref. 1341

11. கனடியப் பிரஜையும் 6' உயரம் 45 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் தேடுகிறார்கள் இலங்கையும் விரும்பத் தக்கது. Ref. 1340

12. லண்டனில் 10 ஆண்டுகளாக வசிக்கும் 30 வயது 5' 8" உயரமும் கொண்ட நல்ல தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1336

13. லண்டனில் 10 ஆண்டுகளாக வசிக்கும் 31 வயது 5'5" உயரமும் கொண்ட நல்ல தொழில் புரியும் மணமகனுக்கு நல்ல குணமான மணமகளைப் பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1337

14. பிரித்தானியப் பிரஜையும் 28 வயது 5' 10" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறார்கள். Ref. 1338

15. கனடாவின் பிரஜையும் 30 வயது 5' 8" உயரமும் கொண்ட கடந்த 10 ஆண்டுகளாகக் கனடாவில் வசிக்கும் நல்ல, நிரந்தர வேலையில் உள்ள மணமகனுக்கு தோதான மணமகளைத் தேடுகிறார்கள். Ref. 1339

16. British citizen, in the UK since 5 years of age, MSc qualified and well employed, 28 years and 5' 10" tall, seeks a matching bride. Ref: 1335

17. லண்டனில் மாணவ விசாவில் படிக்கும் 27 வயது 5" 7" உயரமுள்ள மணமகனுக்கு கனடாவில் அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிரந்தரவ வதிவிட உரிமை உள்ள தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். சுநக: 1334

18. பிரித்தானியாவில் நிரந்தர வதிவட உரிமையுள்ள 38 வயது 5" 7" உயரமுள்ள கணக்கியல் பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். விவாக ரத்து செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம். சுநக: 1333

19. ஐக்கிய இராச்சியத்தில் 7 ஆண்டுகளாக வசிக்கும் குடியுரிமை உள்ள 34 வயது 5' 5" உயரமுள்ள A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1332

20. ஐக்கிய இராச்சியத்தில் 18 ஆண்டுகளாக வசிக்கும் குடியுரிமை உள்ள 37 வயது 5' 11" உயரமுள்ள படித்த மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். விவாக ரத்துச் செய்தவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும். Ref: 1331

21. ஐக்கிய இராச்சியத்தில் 2007ல் இருந்து மாணவ விசாவில் இருக்கும 22 வயது 5' 10" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1330

22. கொழும்பில் தொழில்புரியும் A /L படித்த 32 வயது 5' 5" உயரமுள்ள மணமகனுக்கு கனடாவில் வதிவிட உரிமை உள்ள தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1329

23. London இல் 16 வருடங்களாய் வசிக்கும், படித்து நல்ல தொழிலில் இருக்கும் 38 வயது, 5'3" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பார்க்கின்றனர். Ref: 1328

24. மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்யும் A/L படித்த 32 வயது 5' 9" உயரமுள்ள மணமகனுக்கு, வெளிநாடுகளில் வதிவுடமை உள்ள மணப்பெண்ணை பார்க்கின்றனர். Ref: 1327

25. In the UK, since 2000 on holiday working visa, 28 years, 5' 9" tall, a graduate from the East London Uni., and well-employed, seeking a bride in Europe with permanent residence status. Ref: 1326

26. In Norway since 1996 on 'Leave to remain status', 42 years, 5' 7" tall, A/L educated, seeks a bride in EU or Canada with permanent residence status. Ref: 1325

27. வவுனியாவில் அரச பணியாற்றும் 30 வயதுடைய 5' 7" உயரமுள்ள மணமகன், கனடாவில் அல்லது பிரித்தானியாவில் தகுந்த மணமகளைத் தேடுகிறார். Ref:1324

28. பிரித்தானியக் குடியுரிமை உள்ள 31 வயதும் 5'7" உயரமும் உடைய A/L படித்த மணமகனுக்கு கனடாவில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகள் தேவை. Ref:1323

29. பிரித்தானிய குடியுரிமையுடைய பட்டதாரி, 47 வயது 5'8" உயரம் உள்ள தாரமிழந்த மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref:1322

30. UK qualified professional, on 5 year-work-visa, 30 years, 6' tall, looking for a suitable bride. Ref: 1321

31. British born professional, 32 years, 5' 4" tall, seeking a matching bride. Ref: 1320

32. லண்டனில் 14 ஆண்டுகளாக வசிக்கும் 41 வயது 5'10" உயரமுள்ள படித்த மணமகனுக்கு UK யில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகளை எதிர்பார்க்கின்றார். Ref: 1319

33. Living in the U.K on Permanent Resident status, diploma holder and in permanent employment, 34 years old, 5' 7" tall, seeking an educated bride living in India. Ref: 1318

34. Canadian Citizen, over there since 1993, 32 years, 5' 8" tall, Software engineer seeking a matching Bride. *Ref: 1316*

35. In the UK since 2000 on student-visa, Graduate in Accountancy, 34 years, 5' 10" well employed, seeking a suitable bride with permanent resident status. *Ref: 1315*

36. Software Engineer, working in India, 30 years, 5' 7" inches tall seeking a suitable bride in Canada or EU countries with permananant residence status. Ref: 1312

37. Senior Manager, with Master's degree, a citizen of USA, 36 years, 5' 9" tall, seeking a matching professional bride in USA, or one willing to migrate to USA. Ref: 1307

## மணமகன் தேவை

38. நோர்வேயில் வளர்ந்த, ஐரோப்பிய ஒன்றிய குடியுரிமை உள்ள 26 வயது 5'5" உயரமுள்ள பட்டதாரி மணமகளுக்கு தகுந்த வரனை UK ல் பெற்றோர் தேடுகிறார்கள். Ref. 1691

39. In the UK since 2004, on student/work visa, 28 years, 5' tall, advanced diploma qualified and well employed bride, seeks a matching groom. Ref. 1690

40. இலங்கையில் வசிக்கும் ஏஎல் படித்த 20 வயது 5' 7" உயரமுள்ள பெண்ணிற்கு பெற்றோர் வரன் தேடுகின்றனர். Ref: 1689

41: In the UK since 1998, a graduate from London Uni., 35 years, 5' 6" tall, seeking a suitable bride with permanent residence state. Ref: 1306

42. கனடா குடியுரிமை உள்ள 30 வயது 5'4" உயரமுள்ள Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனை பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1687

43. பிரித்தானிய குடியுரிமை உள்ள 32 வயது 5'7" உயரமுள்ள திருமணமாகி இரண்டு ஆண்டுக்குள் விவாகரத்துப் பெற்ற Medical Engineer ருக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர்.Ref. 1686

44. இலங்கையில் வசிக்கும் 31 வயது 5'3" உயரமுள்ள B A பட்டதாரியான பெண்ணுக்கு தகுந்த மணமகனை கனடாவில் வசிக்கும் பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1688

45. In the UK since 2001 on student-visa, 34 years, 5' 6", doing Master, in Law, seeking a suitable bride from Sri Lanka or UK. Ref: 1198

46. British citizen, 35 years, 5' 7", Financial Accountant, well employed, seeking a matching bride. Ref: 1196

47. French citizen, graduate in Accountancy from UK-Uni, presently working in England, 30 years, 5' 7", seeking a matching bride. Ref: 1195

48. கனடாவின் பிரஜையும் 35 வயது 5' 7" உயரமும் கொண்ட நன்கு படித்த பெண்ணுக்குத் தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். Ref. 1681

49. கொழும்பில் தொழில் புரியும் 24 வயது 5'2" உயரமுள்ள பெண்ணுக்குத் தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள Ref. 1682

50. நெதர்லாந்துப் பிரஜையும் 22வயது 5' 2" உயரமுள்ள Administration படித்து முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள் 1683

51. பிரித்தானியப் பிரஜையும் 25 வயது 5' 5" உயரமுள்ள Administration படித்து முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். 1684

52. பிரன்சுப் பிரஜையும் 32 வயது 5' 2" உயரமுள்ள Accountancy Diploma முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். 1685

53. 11ஆண்டுகளாக கனடாவில் வசிக்கும் பட்டதாரி 30 வயது 5" 3" உயரமுள்ள மணமகளுக்குத் தகுந்த வரனை கனடா, அமெரிக்கா அல்லது லண்டனில தேடுகின்றனர். Ref: 1680

54. யாழ் பல்கலைக் கழகப் பட்டதாரி, 25 வயது 5" 1" உயரமுள்ள மணப் பெண்ணுக்கு கனடா அல்லது லண்டனில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள கத்தோலிக்க மணமகனை தேடுகின்றனர் Ref: 1679

55. கொழும்பில் வசிக்கும் 31 வயது 5அடி உயரமுள்ள படித்த மணமகளுக்கு லண்டனில் அல்லது அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவீட உரிமையுள்ள மணமகனை தேடுகின்றனர் Ref: 1678

56. லண்டனில் தொழில் விசாவில் வசிக்கும் கணக்கியற் பட்டதாரி 34 வயது 5" 2" உயர மணமகளுக்கு தகுந்த வரனை தேடுகின்றனர். Ref: 1677

57. கொழும்பில் வசிக்கும் 30 வயது 5" 6" உயரமுள்ள ஓ எல் படித்த மணமகளுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref: 1676

58. Graduate in Accountancy, 26 years old 5' 5" tall, born and brought up in the U K looking for a matching groom, a professional. Ref: 1675

59. Chartered Financial Analyst, well employed, UK born, 33 years, 5' 2" tall, seeks UK educated professional groom. Ref: 1674

60. கொழும்பில் தொழில் புரியும் 23 வயது 5' 1" உயரமுள்ள CIMA பட்டதாரி பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref: 1673

61. Top professional, in the UK since childhood, 35 years, 4' 9" tall, seeks a matching groom. Ref: 1672

62. In the UK since 1999, British Citizen, a Graduate and well employed, 26 years, 5' 4" tall, seeks a matching groom. Ref: 1671

63. யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் A/L படித்த 28 வயது, 5'3" உயரமுள்ள மணப்பெண்ணுக்கு, வெளிநாடுகளில் sponsorபண்ணக்கூடிய வரனை தேடுகின்றனர். Ref: 1670

64. இந்திய வம்ச, படித்து இந்தியாவில் வேலை செய்யும் 23 வயது 5'4" உயரமுள்ள தமிழ் மணப்பெண்ணுக்கு படித்த வரனை வெளிநாடுகளில் பார்க்கின்றனர். Ref: 1669

65. Canadian citizen, a graduate from Uni. of Toronto, well employed, 26 years old, 5' 3" tall, seeking a matching bride. Ref:1668

பிரித்தானிய குடியுரிமையுடைய, யாழ் பல்கலைக் கழகத்தின் கணிதப் பட்டதாரியான 44 வயது, 5' 4" உயரமுள்ள சைவ போஜன விதவைப் பெண்ணுக்கு சைவபோஜன மணமகனைத் தேடுகிறார்கள்.. Ref:1667

66. கொழும்பில் வேலை செய்யும் 29 வயதுடைய 5' 6" உயரமுள்ள படித்த மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த மணமகனை தேடுகிறாகள் Ref:1666

67. In Canada since 1990, a canadian citizen, A Graduate, well employed, 28 years, 5' 1" tall seeking a suitable groom. Ref: 1665

68. A graduate, 28 years, 5' 4" tall, born in the U.K, seeking a matching groom. Ref: 1664

69. Sri Jayewardenepura Accountancy Graduate, 27 years, 5' 4" tall, well employed in Colombo, seeks a matching groom, abroad. Ref: 1663

70. இலங்கையில் வசிக்கும் A/L படித்த 23 வயது 5' 3 " உயரமுள்ள மணப்பெண்ணுக்கு நிரந்தர வதிவுடமை உள்ள தகுந்த வரனைத் EU நாடுகளில் தேடுகின்றனர் Ref: 1662

71. Professional, in USA on 5 year student visa, 32 years, 5' 3" tall, seeking a matching professional groom in Canada or USA Ref: 1660

72. British citizen, MSc (Hon) from one of the top universities, 34 years, 5' 3" tall, seeks a professional groom from the UK. Ref: 1659

73. கொழும்பில் தொழில் புரியும் CIMA கணக்கியல் படித்த 29 வயது, 5' 3" உயரமுடைய மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. சாதி கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. Ref: 1658

74. Professional qualified bride working in Colombo, 27 years, 5' 3" tall, seeking a matching educated groom, a UK / USA citizen. *Ref: 1657*

75. In Canada since her 12 years, a Science Graduate and a teacher in a public school, 33 years, 5' 1" tall, seeks a matching groom. *Ref: 1656*

76. 8 வருடங்களாக இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி 27 வயது 5'7", மணப்பெண்ணுக்கு தகுந்த வெளிநாட்டு வதிவிடவுரிமை உள்ள வரனை தேடுகின்றனர். Ref: 1654

77. Canadian citizen, in Canada since 1991, 30 years, 5' 6" tall, Maths Graduate, well employed seeking a matching groom. *Ref: 1653*

78. கனடா பிரஜையும் 37 வயது 5'6" தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1652*

79. Canadian citizen, over there since 1996, Engineering Graduate, 29 years, 5' 6" tall, seeking a matching groom in Canada. Ref: 1650

80. Working in Colombo, ICMA Final, 24 years, 5' 1", looking for a well educated, matching groom in Sri Lanka or abroad. Ref: 1647


81. கனடாவிற்குப் 10 வயதில் வந்த 24 வயது 5'3" உயரமுள்ள பொறியியலாளராகப் பணிபுரியும் மணப்பெண்ணுக்கு கனடா அமெரிக்காவில் படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றனர் Ref: 1645

82. In USA on HI Work visa since 2000, 31 years, 5' 2" tall, a Master's degree holder seeking a matching groom in USA. Ref: 1642

## வலைப்பதிவுகள் - அறிமுகம்

### எழுதுவது: யாழ்பாடி

## லோஷன் எழுதும் வலைப்பதிவு




தாயகத்திலிருந்து வலம் வரும் இன்னோர் சிறந்த வலைப்பதிவு தான் லோஷன் அவர்கள் எழுதும் வலைப்பதிவு. லோஷன் அவர்களை இது வரை இலங்கை வானொலிகளின் ஓர் அறிவிப்பாளராகத்தான் பலருக்கும் தெரிந்திருக்கும் ஆனால் அவர் இப்போ சிறந்ததோர் வலைப்பதிவரும் கூட ! தாயகத்தில் பத்தாண்டு காலமாக ஒலிபரப்புத்துறையில் தனக்கென தனியிடம் பிடித்துள்ள இவர் கடந்த பல மாதங்களாக வலைப்பதிவுகளில் எழுதி வருகிறார் இவர் தன்னைப்பற்றிய அறிமுகத்தில் "வானலைகளில் ஒவ்வொரு நாளும் உங்களை சந்திக்கும் நான் உங்களை என் இந்த வலைப்பூவினூடாகவும் சந்திக்க எண்ணம் கொண்டுள்ளேன். எப்போதோ எனக்கு இந்த வலைப்பூ எண்ணம் உதித்தாலும் பிறவியிலேயே என்னோடு தொற்றி கொண்ட சோம்பலும் என்னுடைய வானொலி வேலைப்பளுவும் என்னை வலைப்பூ எழுத்தாளனாக வர முடியாமலேயே செய்திருந்தன. இன்று முதல் ஏதோ என்னால் முடிந்ததை எழுதிக் கிழித்து எழுத்துப் பணி செய்யலாம் என்று முடிவெடுத்துள்ளேன்.தமிழுலகமும் வலைப் பதிவுலகம் வரவேற்குமா அல்லது வேண்டாமப்பா என்று சொல்லுமா ? ஒரு தடவையாவது வாசித்துவிடுங்கள்.! என் எழுத்துக் குழந்தைகள் அனைத்துமே என் உயிரின் அவதாரங்கள்! அவற்றின் மீதான பாராமுகம் என் மீதானதே! என்று பொறுத்து இருந்து பார்ப்போம் என்று அறிமுகமாகிறார்

தனது பதிவுகளில் ஒலிபரப்புத்துறையில் தான் கண்ட அனுபவங்கள் தாயகத்தின் தற்போதைய நிலமை தொடர்பான கட்டுரைகள் என்பவற்றை எழுதி வருகிறார். அறிவிப்பாளர் என்ற வகையில் அவரது பதிவுகள் சாதாரண மொழிநடையில் இருக்கிறது. அதுவே அவரது பலமாகவும் இருக்கிறது. சமூகத்தில் தான் கொண்டுள்ள அக்கறை கோபம் என்பவற்றை பல்வேறு சுவையான நிகழ்வுகளுடன் கோர்த்து எழுதும் அவர் உலக நாடுகளைப் பற்றிய தனது கருத்துக்களை எழுதுவதையும் தொடர்கிறார். அதுமட்டுமல்லாது விளையாட்டுச் செய்திகளுக்கெனவும் தனது நேரத்தை ஒதுக்கி எழுதிவருகிறார்.அவைமட்டுமல்லாது அவரது பதிவில் கவிதைகள் பலவற்றையும் காணக் கிடைக்கிறது. அவ்வாறான கவிதைகளில் அனேகராலும் வாசிக்கப்பட்ட ஊடகவியளாளர் தொடர்பான கவிதையொன்றின் வரிகள் உங்களுக்காக . .

" இலத்திரன் ஊடகம் என்றால் - அங்கே
இலக்கியம் இல்லை
எம் தமிழும் நாளை இல்லாதொழியும் என்போரே-
அஃதெனின் களப்பிரர் காலத்தில்
தமிழ் காணமலன்றோ போயிருக்கும்!
கால் மேல் கால் போட்டு A/C போட்டு
9 மணிக்கு ஒரு Sign உம் - டாணென்று
மணி 5 அடிக்க மற்றொரு Sign இட்டு
பஸ்பிடித்து, காரெடுத்து சென்று
உடைமையையும் தொழிலையும்
கழற்றிப்போட்டு ஒய்வெடுக்க
ஊடகவியலாளர் ஒன்றும்
பத்தோடு பதினொன்றாகத் தொழில் புரிவோரன்று!
படுத்தாலும் விழித்தாலும் பசித்தாலும் நசித்தாலும்
கழுத்தின் மேல் நாள் முழுதும்
கத்தி தொங்குதென்றே தெரிந்து கொண்டே
பேனா பிடித்தோ - மைக் பிடித்தோ
உண்மை விதைப்பவர்!
பின் அறுவடை செய்யப்படுபவர்!
உண்மை விதைப்பதால்
உயிர்கள் அறுவடை செய்யப்படுபவர்!

அவரது வலைப்பூவினைக்காண http://loshan-loshan.blogspot.com/ குச் செல்லுங்கள்

வலைப் பதிவுகளை அறிமுகப்படுத்தவிரும்பின் blogs@orupaper.com என்ற முகவரிக்கு மின்னஞ்சலைத் தட்டி விடுங்கள்.அவை இங்கே அடுத்துவரும் இதழ்களில் அறிமுகப்படுத்தப்படும்.

## சமாதி கோவிலடியும் சாகாத நினைவுகளும்.



பெஞ்சன் வடலி
பெரிய இலுப்பை
பிள்ளையார் வாசல்
பிரியமான நாவல்...

பேச்சியம்மன் கோவில்
பேய் வருமென்றாலும்
போய்வர விரும்பிய
இலந்தைக் கூடல்....

பசுமையாய்
பச்சையம் உலராப்
பத்துமணியிரவு.
பாலூறும் இரவுப்
பௌர்ணமி ஒளி.
விசாகப்படையலுக்கு
வீடுவீடாய் பொருள் சேர்த்து
விரித்த பாயில் பரப்பிய தானிய
வகைகள்
பரந்த சமாதிகோவில் மடம்.

பாடலபாடம் படித்த
வீட்டு முற்றம்
பலா மா பழவகை தந்த தோட்டம் துரவுகள்
பகலிலும் கொள்ளையடித்த
பலட்டன் பனைவெளிப்
பனங்காயின் இனிப்பு

பால் தந்தே எமை வளர்த்த
பசுவும் அதன் சிசுவும்
பால்யகாலப் பலகதை நினைவும்
பாதிவாழ்வில் பயணம் முடிந்தும்
பசுமையின் இனிப்புடன்....

பிரியமாய் வளர்த்த செடிகொடி
பிரியாது எப்போதும் தொங்கிய
பீத்தல் வேலி.
பருவ மழையிலும்
பாறையாய் நின்ற பெரிய வேம்பு....
பேயறை அறையும்
வைகாசிக் காற்று
வளர்பிறை தேய்பிறை
முன்னிலா பின்னிலா
முழுவட்டம் அழித்த
பிறைநிலா
நினைவுகள் தேங்கிய மனசு.....

"எள்" என்று சொல்ல முதல்
எண்ணையாய் உருகிக்
குஞ்சியப்புவின் ஆணையை முடிக்கும்
சம்பரப்பேத்தியின்
ஒற்றைச் செல்வி குஞ்சி
ஓயாது அரைத்த அம்மியின் உடைவு
என்ன நிகழ்ந்தது எங்களுக்கு ?

அம்மம்மாவும் அரியமலர் அன்ரியும்
சின்னன்ரியும் சின்னமாமாவும்
பெரியமாமாவும் கடைசிமாமாவும் - என்
அம்மையும் அப்பனும் உலவிய வீடும்
என் தம்பியும் தங்கையரும்
அளைந்த செம்புழுதி நிலமும்
சொந்தமில்லையாம்
சொன்னவர் யார் ?

இரவு நொருங்கி அதிகாலை நெருங்கி
அலாரம் தலைதடவி
அதிகாலையை அறிவிக்க எழுகிறேன்
இன்னும் கொஞ்சம் உறங்கி
என் ஊரோடு கரைந்து
உலாத்த இயலாமல் எழுப்பிய
மணிக்கூட்டை எறியவா முடியும் ?!

- சாந்தி ரமேஷ் வவுனியன்

## நான் வாழ விரும்புகிறேன்

எல்லாம் சரியாய் அமைதியாய்
அழகாய்த்தானிருக்கின்றன..
சுயத்தினை நோக்கிய தேடல்களும்,
உள்ளார்ந்த தொலைதல்களும்
என்றும் சுவாரசியமானவைதான்..,
தடுத்து நிறுத்தி
எதிர்க் கேள்வி கேட்க
எவரும் முன்வராத வரையிலும்.

தெருவில் தற்செயலாய்க்
கடந்து போகுமொரு சைக்கிள்,
அறிச்சையாய் எதிர்கொள்ளுமொரு
பாடசாலைச் சிறுவன்,
போதிமரம் தேவைப்படுவதில்லை...
இவை போதும் எனக்கும்,
தூசி படர்ந்த மூலைக்குள்
மீளாத் துயில்கொள்ளும்
என் புத்தருக்கும்..

நான் வாழ விரும்புகிறேன்
அவர்கள் அனைவருக்கும் மத்தியில்,
என் சுயம்
காணாமல் போயினும்,
அடையாளம் தொலைப்பினும்..
அனைத்தையும் ஏற்றுக்கொண்டு..,
மரண பயத்தினையும் கூட..

மனிதர்களை என் நேசத்துக்குரியவர்கள்...
வேறெதனையும் விட..


- நிவேதா

மிகத் துல்லிய ஒளி/ஒலித் தெளிவுடன் தமிழ் தொலைக்காட்சிகளை கண்டு களிக்க...
நீண்ட காலம் பாவிக்க கூடிய...ஒரு வருட உத்தரவாதத்துடன்...
அழகான றிசீவர்!
இலவசமாக
பூட்டித் தரப்படும்
viaccess
CERTIFIED RECEIVER
REPAIR
RECEIVER
£125
RECEIVER
+
DISH
24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்
அழையுங்கள்:
தாஸ்: 07885 987 857 றாம்: 07861 371 837 டயஸ்: 07960 225 850 பிரகாஸ் : 07968 960 666 சுபாஸ் : 07869 290 162



# அறுவைப் பக்கம்

## குருப்பெயர்ச்சி பலன்களை அறிய ஓடி வாங்க ம(ா)க்களே!



மேஷ ராசி மாக்களே!

உங்களுக்கு ரெண்டாவது மாடியிலிருந்து, மூணாவது மாடிக்கு குரு பெயர்ச்சி ஆகறதால, நீங்க 2ல இருந்தா 1க்கும், 1ல இருந்தா 0க்கும், 0ல இருந்தா, அதான் கீழ் மாடீல இருந்தா பூமிக்கடியில போய் ஒளிஞ்சிக்கோங்க! மேலும் நீங்க இங்கிலீசுல a,e,i,o,u எழுத்துக்களிலை தொடங்குற வார்த்தைகளையும் தமிழில 'கசடதபற'ல ஆரம்பிக்கிற வார்த்தைகளை 126 நாள் பேசக் கூடாது. ஜோடி நம்பர் ஒன்னோ, மானாட மயிலாடவோ மாங்கு மாங்குன்னு பார்த்தா கல்யாணம் ஆகாதவங்களுக்குக் கூட விவாகரத்து நடக்க வாய்ப்பிருக்கு.

ரிஷப ராசி மாக்களே!

நீங்க அடுத்த ஆறு மாசத்துக்கு நேரா நிமிர்ந்து நடக்கக் கூடாது. 98.3டிகிரி சாய்ஞ்சாப்ல நடக்கறது நல்லது. நடக்கறப்போ முக்கியமா உங்க வலது காலும், இடது காலும் உரசவே கூடாது. அப்படி நடக்காலேன்னா என்ன ஆகும்னு கேக்கறீகளா, நடக்கக் கூடாததெல்லாம் நடந்துரும். யோகாதிபதியான குரு, பாதகாதிபதியான சனியோட வீட்டுல வலுக்கட்டாயமா தொடர்வதால, உங்க புள்ளைக்கு எந்தக் கல்லூரியில இடம் கிடைக்கலைன்னாலும், சட்டக் கல்லூரியிலயாவது இடம் கிடைக்கும்.

மிதுன ராசி மாக்களே!

எஸ்.எம்.எஸ் அனுப்பி அனுப்பியே, முடக்குவாதம் வந்த மிதுன மக்களே, அடுத்த குருபெயர்ச்சிவரை நீங்க செல்லைக் கையால தொடக் கூடாது, காதாலயும் தொடக்கூடாது..

குரு ஆறுல இருந்து பாஸாகி ஏழுக்கு வந்தாலும், சனி எட்டாம் பாதத்துலயிருந்து தொடர்ந்து 'நோக்கியா'. அதனால செல்லோட யாரும் பக்கத்துல வந்தாக் கூட கல்லைக் கண்ட நாய் மாதிரி தறிகெட்டு ஓடுறது நலம். இல்லாட்டி சனி ரிங்டோனா 'சங்கு சவுண்டை' அனுப்பி வைக்கும்.

கடக ராசி மாக்களே!

சன் டிவிக்கும் கலைஞர் டிவிக்கும் வித்தியாசம் தெரியாம திரியுற நீங்க, இன்னும் ஏழரை மாசத்துக்கு, டி.விப் பொட்டியில, நியூஸே பார்க்கக் கூடாது. அதுவும் அடியில் ப்ளாஷ் நியூஸ் ஓடிச்சுன்னா, தெறிச்சு தெற்குப் பக்கமா ஓடுறது நல்லது.

டேபிள்ல குரு இருந்தாலும் வீட்டுக்குள்ள வர்ற கேபிள்ல சனி இருக்கறதால, உங்க வீட்டு ரிமோட்டை உடனடியா எடுத்துட்டுப் போய், பேங்க் லாக்கர்ல வைச்சிருங்கோ!

சிம்ம ராசி மாக்களே!

குருவும் ராகுவும் ஒரே நேரத்துல நாலாம் பாதத்துக்கு 'Login' ஆகியிருக்கறதால, இன்னும் 222 நாளுக்கு நீங்க இமெயில் செக் பண்ணக்கூடாது. சாட் ஆகவே ஆகாது. 'facebook' பக்கம் தலை, கை, கால் எது வைச்சும் படுக்கக் கூடாது.

கன்னி ராசி மாக்களே!

ஹைக்கூ.. பைக்கூ.. கொக்கரக்கூ.. இப்படி எந்தவித கவிதைகளையும் உங்க வாழ்க்கையில நீங்க இன்னும் அரை வருசத்துக்கு நுழைய விடக் கூடாது. வைரமுத்து, வாலி வகையறாக்களை பாத்தா நீங்க எஸ்கேப் ஆகிறது நல்லது. முக்கியமா பின் நவீனத்துவக்காரங்ககிட்ட முன்னெச்சரிக்கையா இருக்கறது நல்லது. இதையெல்லாம் மீறி நீங்க காதல் கவிதை படிச்சீங்கன்னா, குருவே தடுத்தாலும் உங்க கண்ணை 'சனி பகவானோட' காக்கா வந்து கொத்திரும்.

துலாம் ராசி மாக்களே!

கார்ப்பரேட் கம்பெனிகள் எடுக்குற எந்த சினிமாவுலயும் கதையே இல்லாததால உங்க வாழ்க்கைக் கதையில எதிர்பாராத U-டர்ன் வர வாய்ப்பிருக்கு. ஆகவே நீங்க இன்னும் நாலேகால் மாசத்துக்கு நயன்தாராவைப் பார்க்கக்கூடாது. ஸ்ரேயா ஆகவே ஆகாது. மல்லிகா ஷெராவத்தை மனசால நினைச்சா கூட எதிர்த்த வீட்டு ஆயா, ஆப்பக் கரண்டியால அடிக்க வாய்ப்பிருக்குது. முக்கியமா, தியேட்டர், டி.வி, விசிடி இப்படி எதுல சினிமா பாத்தாலும் உங்களுக்கு சனிமா!

விருச்சிக ராசி மாக்களே!

யார் எதைச் சொன்னாலும் கேட்காத விருச்சிக மக்களே, நான் இப்ப சொல்லுறதையும் நீங்க கேட்கப் போறதில்ல. அதனால நானும் எதுவும் சொல்லப் போறதில்ல!

தனுசு ராசி மாக்களே!

நீங்க A,B,C,D,E,F,G,H,I,J,K,L,M,N,P,R,S,T,U,V W,Y ஆகிய எழுத்துகளில ஆரம்பிக்கிற பேங்குல அக்கௌண்ட் வைச்சிருந்தா உடனே அதை வேற எங்கேயாவது மாத்திடுங்க. இன்னும் 8 மாசத்துக்கு A,B,C,D,E,F,G,H,I,J,K,L,M,N,P,R,S,T,U,VW,Y யோட சகவாசமே ஆகாது. இவ்ளோ நாள் ஒஸாமா லக்கினத்துல இருந்த குரு இப்போ ஒபாமா லக்கினத்துக்கு கம்பி நீட்டியிருக்கிறதால உங்களுக்கு கார்டுல கண்டம். கிரெடிட் கார்டை கிழிச்சுப் போடுங்க. டெபிட் கார்டை டிலிட் பண்ணுங்க.

மகர ராசி மாக்களே!

வாஸ்துப்படி குரு உங்களுக்கு குண்டக்க மண்டக்க பெயர்ச்சி அடைஞ்சிருக்கறதால, இன்னும் 7 மாசத்துக்கு நீங்க உங்க வீட்டுக்குள்ள முன்வாசல் வழியா நுழையக் கூடாது. பின்வாசலும் ஆகாது.

அதனால சன்னல் வழியா போனா இன்னல் இருக்காது. டு பாத்ரூம் டாய்லெட்ல போகாதீங்க. கோலத்தை வாசல்ல போடாதீங்க. மீறினா, தேற மாட்டீங்க.

கும்ப ராசி மாக்களே!

இப்ப 'கரண்ட்'ஆ நடந்திருக்கிற குரு பெயர்ச்சியால, உங்களுக்கு 'கரண்டுல' கண்டம்.

அதனால வீட்டுல உள்ள எலெக்ட்ரிக் ஐயிட்டத்தையெல்லாம் வித்துடுங்க. ஜீரோ வாட்ஸ் பல்பு கூட இருக்கக் கூடாது. சொல்லப் போனா, பேப்பர்ல வர்ற 'கரண்ட்' நியூஸைக் கூட படிக்கக் கூடாது.

மீன ராசி மாக்களே!

குரு நார்த் ஈஸ்ட்டுக்கும், சௌத் வெஸ்ட்டுக்கும் இடையில ஈஸ்ட்வெஸ்ட்டுல ரெண்டு டிகிரி நகர்ந்து இருக்கிறதால, நீங்க அடுத்த பஸ்ஸையோ, ட்ரெயினையோ அல்லது அடுத்த சந்திராயனையோ புடிச்சு வியாழன் கெரகத்துக்கு போயிடுறது நல்லது.

கடமையைச் செய் பலனை எதிர்பாருன்னு பகவத் கீதையில சொல்லாததால, மஞ்சக் கலர்ல முண்டா பனியன் போட்டுக்கிட்டா, கலைஞர்கள் வாழ்வில் விடிவு ஏற்படும்.

*- ஜோதிடப் புயல் பண்டிட் குரங்கானந்தா*

### ஜோதிடர் பண்டிட் குரங்கானந்தா!

எமது அறுவைப் பகுதி ஆஸ்தான ஜோதிடர் பண்டிட் குரங்கானந்தா அடுத்த இதழ் முதல் உங்கள் ஜோதிட சந்தேகங்களுக்கு தொலைபேசி மூலம் பதிலளிக்க இருக்கிறார். அத்துடன் தகுந்த பரிகாரங்களையும் தர இருக்கிறார். கேள்விகளுடன் தயாராயிருங்கள்.

## கேள்வி பதில் போட்டி

இப்பெல்லாம் தொலைக்காட்சிச் சானல்கள் கூடி விட்டது. ஆ என்றால் ஒரு சனல். ஆ, ஊ என்றால் ஒரு சனல் ஆரம்பிக்கப்பட்டு விடுகிறது. தொலைக்காட்சிச் சனல்களை ஆரம்பித்தால் மட்டும் போதுமா? நிகழ்ச்சிகளும் வேண்டுமல்லவா?

மக்களது பொது அறிவுத் திறனை வளர்ப்பதற்காக (?) சில போட்டி நிகழ்ச்சிகள் எல்லா சானல்களையும் ஆக்கிரமித்து விட்டன. இதோ சாம்பிளுக்கு ஒன்று

தொகுப்பாளினி: ஹாய் நேயரே, சௌக்கியமா?

நேயர் : ஆமா நான் சவுக்கியமுங்க. நீங்க

தொகுப்பாளினி : ஆமா நான் சவுக்கியமா இருக்கேன். உங்க விட்டிலை எல்லாரும் சௌக்கியமா?

நேயர் : (அவங்களை எல்லாம் கவனிக்க நமக்கெங்க நேரம். நான் தான் ரீவிப் பெட்டிக்கு முன்னுக்கு நாள் முழுக்க கிடக்கிறனே) ஆமா ஆமா எல்லாரும் சௌக்கியம். உங்க ஸ்டுடியோவிலை எல்லாரும் சௌக்கியமா?

தொகுப்பாளினி: எல்லாரும் சௌக்கியமா இருக்காங்க. சரி நாங்க போட்டிக்குப் போவோமா? (அப்பாடா)

நேயர் : போவோம் மேடம். பரிசெல்லாம் இருக்கு தானே

தொகுப்பாளினி : ஆமாம். ஆமாம். சரி நான் உங்ககிட்ட ஒரு கேள்வி கேப்பேன், அதுக்கு கரக்ட்டான விடை தரனும். சரியா?

நேயர்: சரி மேடம். சின்ன கேள்வியா கேளுங்க மேடம்.

தொகுப்பாளினி : இந்தியாவின் முதல் பிரதமர் யாரு?

நேயர் : ரொம்ப கஷ்டமா இருக்கே! ஒரு க்ளூ குடுங்க ப்ளீஸ்!

தொகுப்பாளினி : சரி, அவருக்கு ரோஜான்னா ரெம்ப பிடிக்கும்.

நேயர் : எனக்கு தெரிஞ்சு போச்சு! டைரக்டர் செல்வமணி தானே விடை?

தொகுப்பாளினி இல்லீங்க, அவருக்கு குழந்தைங்கனா கூட ரெம்ப பிடிக்கும்.

நேயர் : கண்டுபிடிச்சிட்டேன்! மைக்கல் ஜக்சன்

தொகுப்பாளினி : இல்லீங்க, இன்னொரு க்ளூ தரேன். முதல் எழுத்து நே. கடைசி எழுத்து ரு. முதல் எழுத்துக்கும் கடைசி எழுத்துக்கும் நடுவுல ஒரு எழுத்தும் கிடையாது.

நேயர்: ஐயோ! இது ஒரு க்ளூவா? இன்னும் கொஞ்சம் க்ளூ ப்ளீஸ்!

தொகுப்பாளினி : (கடுப்புடன்) நேரு என்ற சரியான விடையை நீங்க யோசிச்சிடீங்கன்னு எனக்கு தெரியுது. வெரி குட். நாம இப்ப ஒரு நல்ல பாடலை பாக்கலாமா?

இது எப்படி இருக்கு ??????????????

*- அம்பி*

## கல்லூரிக் கீதை

எதை நீ படித்தாய் . . . அது மறந்து போவதற்கு
எதை நீ புரிந்து கொண்டாய்
பரீட்சையில் கேள்விகள் புரிவதற்கு
என்று நீ ஒழுங்காக காலேஜ் வந்தாய்
பாடங்கள் புரிவதற்கு
எந்த ஃபிகரை நீ காதலித்தாயோ
அவளிடமே நீ செருப்படி வாங்குவாய்
எந்த ஃபிகரை நீ மகா மட்டமாக திட்டினாயோ
அவளிடமிருந்தே காதல் கடிதம் பெறுவாய்
எந்த ஃபிகர் இன்று உன்னுடையதாய் இருக்கிறதோ
அது நாளை மற்றொருவனுடையதாகிவிடும்
மற்றொரு நாள் அது வேறொருவனுடையதாகிவிடும்
இதுவே கல்லூரி நியதி அதனால் கவலையின்றி வாழ். . .

## காணாமல் போனோர் பற்றிய அறிவித்தல்



பெயர்: பிரணாப் முகர்ஜி

உயரம்: 3 அடி 32 அங்குலம்


அடையாளம்:

சரிந்த தொந்தியை சற்றுத் தூக்கி கழிசான் போட்டிருக்கிறார். தலையின் முன் பக்கத்தில் மூளை வந்து தேங்கியதால மயிர்கள் கொட்டுண்டு இருக்கிறது.

இறுதியாகக் கண்டபோது அக்கம் பக்கம் பார்த்து சற்று ஏமலாந்தியார் போல் இருந்தார்.

இவரைக் கண்டால் உடனடியாக கருணாநிதி அவர்களுக்கு தெரிவிக்கவும். கோப்பியுடனும் விசுக்கோத்துடனும் கலைஞர் காத்திருக்கின்றார்.

# நாகேஷின் வித்தியாச வேடங்கள்



தமிழ்திரையுலகம் கண்ட மாபெரும் கலைஞர்களில் முக்கியமானவர் நாகேஷ். நகைச்சுவை நடிகராகவே பெரும்பான்மையானோர் மனத்தில் இடம் பெற்றிருக்கும் நாகேஷ் ஆரம்ப காலத்தில் கதாநாயகனாகவும் சில படங்களில் நடித்தவர். பதினாறு வயதினிலே படத்திற்கு கூட பாரதிராஜா சப்பாணி வேடத்திற்கு நாகேஷைத்தான் மனதில் வைத்திருந்தார். தயாரிப்பாளரின் விருப்பத்தின் பேரிலேயே கமலிடம் கதை சொல்ல சென்றார். படம் முழுவதும் வராமல் நான்கு காட்சிகளில் நடித்தாலும் அதை மறக்க முடியாத அனுபவமாக மாற்றக் கூடியவர். பிணமாக (மகளிர் மட்டும்) நடித்து கூட கைதட்டல் வாங்கமுடியும் என காட்டியவர். இவர் நடித்த நகைச்சுவை வேடங்களை பட்டியலிடமுடியாது, புத்தகமாகத்தான் எழுதமுடியும் என்பதால் அவர் ஏற்று நடித்த நகைச்சுவை அல்லாத வித்தியாச வேடங்களைப் பற்றிய ஒரு பார்வை.

*தில்லானா மோகனாம்பாள்*

பெரிய மனிதர்களுக்கு பெண்களை ஏற்பாடு செய்து தரும் வைத்தி என்னும் வேடம். கையில் எப்போதும் ஒரு எழுமிச்சம் பழத்துடன் அலைவதும், பெரிய மனிதர்களை கண்டவுடன் அதை கொடுத்துவிட்டு கேள்விக்குறியாய் வளைந்து பேசுவதும், தன்னை விட அந்துஸ்து குறைந்தவரிடம் ஆச்சரியக்குறியாய் நின்று பேசுவதுமாய், பாடி லாங்குவேஜில் பின்னியிருப்பார். அந்த வேலைக்குத் தேவையான அத்தனை கல்யாண குணங்களையும் பிரதிபலிப்பார்.

*திருவிளையாடல்*

ஏழைப் புலவன் தருமி வேடம். இந்த படத்தில் இவர் பேசிய ஒவ்வொரு வசனமும் பள்ளி, கல்லூரி விழா நாடகங்களிலும், மிமிக்ரி நிகழ்ச்சிகளிலும் கணக்கிலடங்கா முறை மறுசுழற்சி செய்யப்பட்டது. சாகாவரம் பெற்ற காட்சி இது.

*தாமரை நெஞ்சம்*

தாழ்வு மனப்பான்மையால் அவதிப்படும் வேடம். சரோஜா தேவி நாயகியாய் நடித்த இப்படத்தில், தன் பர்சனாலிட்டி மற்றும் நோய் காரணமாக காதலை நாயகியிடம் சொல்லாமல் தவிக்கும் வேடம். நாயகனாக ஜெமினி கணேசன். தன் மனத்தை தைரியப் படுத்திக்கொண்டு ஒவ்வொரு முறை நாயகியிடம் காதலை சொல்ல முயற்சிப்பதும், பின்னர் பின் வாங்குவதுமாய் அசத்தியிருப்பார். பாலசந்தர் இயக்கிய இந்தப்படத்தில் நாயகனை விட அதிக கவனிப்பு பெற்றவர் நாகேஷே.

*எதிர்நீச்சல்*

சிறு சிறு வேலைகளை அக்கம் பக்கத்தாருக்கு செய்து கொடுத்து, படித்து முன்னேறும் வேடம். இடையில் ஒரு காதல். முறைவைத்து சாப்பாடு கொடுக்கும் வீடுகளுக்கு சென்று நான் மாது வந்திருக்கேன் என்று சொல்லும் போது அவர் முகத்தில் தோன்றும் உணர்ச்சியை விவரிப்பது கடினம்.

*மக்கள் என் பக்கம்*

கடத்தல்காரனிடம் பணிபுரியும் வழக்கறிஞர் வேடம். ஒரு சிக்கலான வழக்கில் வழி சொல்ல முடியாமல் இவர் தவிக்க, மற்றொரு பெண் வழக்கறிஞர் அதற்கு தீர்வு சொல்கிறார். இதனால் அவமானப்படும் அவர் கடத்தல்காரனுக்கு எதிரான அரசியல்வாதியிடம் தஞ்சம் புகுகிறார். பெண் வழக்கறிஞர் தீர்வு சொல்லும் காட்சியில், மற்றவர்கள் ஏளனமாக பார்க்க அதை தாங்க முடியாமல் தன் உணர்ச்சிகளை மறைக்கும் காட்சியிலும், எதிரியிடம் சரணடையும் காட்சியிலும் நடிப்பில் அசத்தியிருப்பார்.



*அபூர்வ ராகங்கள்*

பாடகி பைரவிக்கு மாரல் சப்போர்டராக இருக்கும் குடிகார டாக்டர் வேடம். தன் நிழலுடன் அவர் பேசும் காட்சியிலும், சியர்ஸ் சொல்லும் காட்சியிலும் டைமிங் பிரமாதமாக இருக்கும்.

*அபூர்வ சகோதரர்கள்*

வில்லனாக நடிக்க வேண்டுமென்றால் அஜானுபாகுவான உடலமைப்பு வேண்டும் இல்லையென்றால் மிரட்டும் குரல் வேண்டும். இவை எதுவும் இல்லையென்றாலும் புதுமுகமாக இருந்தால் கூட போதும், தேவையான எபெக்டை கொண்டுவந்து விடலாம். காமெடியனாக மனதில் பதிந்து போனவரை கொடூர வில்லனாக மாற்ற முடியுமா?. முடியும் அது நாகேஷாக இருந்தால். பிரதான வில்லனாக மிரட்டியிருப்பார் இந்த படத்தில்.

*மைக்கேல் மதன காம ராஜன்*

எட்டு பெண்களின் தந்தை, அவர்களின் திருமணத்திற்காக பொய்கணக்கு எழுதி முதலாளியின் பணத்தை சுருட்டும் அவினாசி என்னும் கேரக்டரில் அதகளப் படுத்தியிருப்பார். தூக்கி எறிந்தால் கூட பந்து போல் திரும்பிவரும் போதும் சரி, எல்லா சிக்கல்களையும் சமாளிக்கும்போதும் சரி அனாயாசமாக நடித்திருப்பார்.

*சேரன் பாண்டியன்*

தன்னை மதிக்காவிட்டாலும் தன் மகன் ஊர் போற்ற வர வேண்டும் என துடிக்கும் தந்தை, அதற்க்காக ஊர் பெரிய மனிதர்களான சகோதரர்களை மேலும் சண்டைக்காரர்களாக தன் குயுக்தியால் மாற்றுகிறார். காட்சிக்கு தகுந்தவாறு பாடி லாங்வேஜ், வாய்ஸ் மாடுலேஷனை மாற்றி அசத்துவார்.

*கட்டபொம்மன்*

தன் மகனை வில்லனின் சூழ்ச்சிக்கு இழந்திருப்பார். அவரின் நம்பிக்கை பேரன் தான். அந்த ஊரிலேயே இருக்கும் வில்லனை ஒன்றும் செய்ய முடியவில்லையே என தன் கையாலாகாதனத்தை எண்ணி மறுகுவார். ஒருமுறை வில்லனை நேரில் பார்க்கும் போது அவனை அடித்து நொறுக்குவது போல மனக்கண்ணில் பார்ப்பார். அந்த காட்சியில் அவர் நடிப்பை பார்த்தால் தான் புரியும்.

*நம்மவர்*

இந்த வேடத்திற்காக சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருதை பெற்றார். கல்லூரி பேராசிரியர் வேடம். ஆசையாய் வளர்த்த மகள், சக மாணவனின் பழி வாங்கலால் (விபச்சார குற்றச்சாட்டு) தற்கொலை செய்துகொள்ள அதை தாங்க முடியாமல் தினறும் வேடத்தில் எல்லோரையும் அழ வைத்திருப்பார். இறந்த மகளுக்கு லேசான தலையனை வையுங்கள் என்று சொல்லும் போதும், அவள் உடன் ஆடுவதாக எண்ணி பாலே ஆடும் போதும் அழாதவர் தியேட்டரில் இல்லை.

*- முரளிகண்ணன்*

# விமர்சனம்: திண்டுக்கல் சாரதி



நடிப்பு: கருணாஸ், கார்த்திகா, நாசர்
இசை: தினா
இயக்கம்: சிவசண்முகன்
தயாரிப்பு: சன் பிக்சர்ஸ் ரூ ட்ரீம் டவர்ஸ்

நல்ல கதையிருந்தால் போதும். யாரும் நாயகனாக நடிக்கலாம். எப்படிப்பட்ட மந்தமான சூழலிலும் வெற்றிக் கொடி கட்டலாம் என்பதற்கு உதாரணமாக வந்துள்ளது திண்டுக்கல் சாரதி திரைப்படம்.கதாநாயகனாக கருணாஸ் நடித்துள்ள முதல் படம். ஒரு அர்த்தமுள்ள கதையின் நாயகனாக கருணாஸ் தனது புதிய பாதையை துவங்கியிருக்கிறார்.

அச்சகம் நடத்தும் சாரதி நிறத்தில் கருப்பு. அந்தக் கறுப்பு மனதிலும் தங்கிவிடுகிறது, தாழ்வு மனப்பான்மை உருவில். தரகர் வெயிட் கமிஷனுக்காக எப்படியோ சிவப்பான, அழகான ஒரு பெண்ணை காட்டுகிறார். யாரும் எதிர்பாராவண்ணம் அந்தப் பெண்ணும் சாரதியை கட்டிக்கொள்ள சம்மதிக்கிறார். அவளது வருகையால் அவனுக்குள் விழையும் மாற்றங்கள். அவனது குடும்பத்துக்குள் பிரச்சனைகள். மனைவி மேல் சந்தேகம். அதனால் மன உளைச்சல் . பைத்தியம் பிடிக்கிறது . மனைவி பிரிந்து தந்தை வீட்டிற்கு போகிறார். சாரதி குணமாகிறான் . சேரவிட மறுக்கிறார் தந்தை. சேர்ந்தனரா? இல்லை பிரிந்தனரா? என்பது தான் கதை.


கருணாஸ் படம் முழுக்க வியாபித்திருக்கிறார் . இய்லாமையையும் தாழ்வு மனப்பான்மையையும், ஒரு மிடில்கிளாஸ் அப்பாவியாய் இவரை விட வேறு யாரும் தமிழில் இந்த பாத்திரத்தை சிறப்பாக செய்து விட இயலாது என்ற அளவுக்கு நடித்திருக்கிறார் முதல்பாதியில் நகைச்சுவை இரண்டாம் பாதியில் அளவான ஆனால் சிறப்பான நடிப்பு . கிளைமாக்ஸில் பைத்தியமாக என வித்யாசமான உடல்மொழியும் அதற்கேற்ற வசன உச்சரிப்பும் அசத்தல். படத்தின் ஆரம்பத்தில் அது தேவையில்லாததைப்போல தோன்றினாலும் படத்தின் நகர்தலில் அது அப்பாத்திரத்தின் தன்மையை விளக்க உதவுகிறது. படத்தின் நாயகி கார்த்திகா இயல்பாக நடித்திருக்கிறார். நடிக்க நிறைய வாய்ப்பு அதை நன்றாகவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.தமிழ்க் கதாநாயகிகளைவிட ஒரு பங்கு அதிகமாகவே நடித்திருக்கிறார். கருணாஸின் அம்மாவாக சரண்யா. இயல்பான நடிப்பில் தன் மகனை பிரித்துவிடுவாளோ புதுமனைவி என்கிற ஆதங்கத்தோடு சண்டை போடும் தாயாக வித்யாசம் காட்டியிருக்கிறார். படத்தின் இன்னும் பல பாத்திரங்கள் அளவோடு நடித்து மனதில் பதிகின்றனர். நாசர், வெண்ணிற ஆடை மூர்த்தி உள்பட, மற்ற நடிகர்கள் எல்லாருமே அருமையாகச் செய்திருக்கிறார்கள்.

படத்தின் இசை தீனா, திண்டுக்கல்லு பாடல் மனதில் படம் முடிந்து வந்த பின்னும் ஓடிக்கொண்டே இருக்கிறது, மற்ற பாடல்கள் சுமார் ரகம். பிண்ணனி இசை எரிச்சல் இல்லை. காமராவும் எளிமை. அடிதடி, வெட்டுக்குத்து, இரட்டை அர்த்த வசனம் எதுவும் இல்லாமல் அழகான குடும்ப கதையை தந்த இயக்குனரைப் பாராட்டலாம். ஒவ்வொரு காட்சியிலும் இயக்குனரின் அபார நம்பிக்கை தெரிகிறது. மூலக்கதையான மலையாளக் கதை "வடக்கி நோக்கி யந்திரம்" தந்த தெம்பு அது. இப்படி படத்தில் நிறைய விடயங்கள் இருந்தாலும் சில குறைபாடுகளும் இல்லாமல் இல்லை. பல இடங்களில் தேவையில்லாத நாடகத்தனம் எரிச்சலூட்டுகிறது . பாடல்கள் படமாக்கிய விதம் நன்றாக இருந்தாலும் ஏனோ அதிலும் அதே நாடகத்தனம். படத்தில் பல பாடல்கள் தேவையில்லாமல் சேர்க்கப்பட்டுள்ளது.

படம் பார்க்கும் ரசிகன் ஒவ்வொருவனுக்கும் படத்தின் முடிவு தன்னம்பிக்கையை ஊட்டுகிறது. சுயபச்சாதாபம் எவ்வளவு மோசமானது என்பதை திரையில் தெளிவாகக் காட்ட முயற்சி செய்த இயக்குனர் சிவசண்முகனை பாராட்டாமல் இருக்கமுடியாது.

*-இணையம்*


Fancy a website?



Stand out from the crowd!

Call: 020 7043 4316

## WALL-E இன்னும் பார்க்கவில்லையா ?



உலகம் 2800ல் உலகம் எப்படியிருக்கும் ரோபோவுக்கும் ரோபோவுக்கும் காதல் வந்தால் எப்படியிருக்கும்? அதுதான் WALL-E படத்தின் கதை.

2800ம் ஆண்டுகளில் உலகம் முழுவதும் குப்பையாகி மனித இனமே இல்லாமல் வெறிச்சோடிப்போய் எல்லோரும் பூமியை விட்டே வெளியேறி வானவெளியில் ஒரு தனிஉலகம் அமைத்துக் கொண்டு வசிக்கிறார்கள். குப்பை என்றால் கொஞ்ச நஞ்ச குப்பை அல்ல. அனைத்தும் எலக்ட்ரானிக் குப்பை. மருந்துக்குக் கூட மரங்களே கிடையாது. எனவே குப்பைகளை எல்லாம் செங்கல்களை போல மாற்றி கோபுரம் கோபுரமாக அடுக்கி வைத்திருக்கிறார்கள். அப்படி குப்பைகளைச் சேகரித்து அமுக்கி சதுரமாக, செங்கல்லாக மாற்றிக் கோபுரத்தில் ஏற்றும் பணி செய்யும் ஒரு குட்டி ரோபோட் தான் WALL-E

மனிதர்கள் எல்லாம் பூமியை விட்டு வெளியேறி விட்டாலும் ஆளே இல்லாத கடையில் டீ ஆத்துவது போல் தனக்கு இட்ட குப்பை பொறுக்கும் பணியை WALL-E தொடர்ந்து செய்து வருகிறது. சுயமாக சிந்திக்கும் அறிவும் நன்றாகவே உள்ளது. WALL-E சூரியஒளி பேட்டரியால் இயங்கக் கூடியதால் அதற்குப் பகலில் மட்டுமே பணி. பணிக்குச் சென்று திரும்பியதும் ஓய்வெடுக்க ஒரு குப்பைலாரி கன்டெய்னர். அதைத் தன் வீடாகப் பயன்படுத்துகிறது. குப்பை பொறுக்கும் போது தனக்குப் பிடித்தமான அழகான பொருட்களை எல்லாம் சேகரித்து வீடு முழுவதும் அலங்கரித்து வைக்கிறது.

அப்படி ஒரு நாள் குப்பை பொறுக்கும் போது தான் திடீரென்று வானத்தில் இருந்து ஒரு ராக்கெட் வந்து பூமியில் வெள்ளை நிறத்தில் யாரையோ இறக்கி விட்டு விட்டுச் செல்கிறது. வேறு யார் கதாநாயகி தான். ஆம் அதுவும் ஒரு அழகான ரோபோட். WALL-Eயைப் போல அல்லாமல் கொஞ்சம் பெரிய டால்பின் போன்று அழகான நடக்கும் (மிதக்கும்) ரோபோட். அதன் பெயர் ஈவா(Eva). ரொம்ப புத்திசாலி.

ஈவாவை WALL-E மறைந்து மறைந்து நோட்டம் பார்க்கிறது. WALL-E தன்னைப்பின் தொடர்ந்துவருவதைக் கவனித்து விட்ட ஈவா டமால் என்று சுட்டுவிட பாவமாக WALL-E ஈவா முன் வந்து நிற்கிறது. WALL-E முந்தைய நூற்றாண்டு ரோபோட். ஈவா நவீன ரோபோட். எனவே WALL-Eயைப் பற்றி தானே ஸ்கேன் செய்து அறிந்து கொள்கிறது ஈவா. இக்கட்டத்தில் WALL-Eக்கு ஈவாவின் மேல் விருப்பும் காதலும் வந்துவிட அதைத் தன் வீட்டுக்குக் கூட்டிச் செல்கிறது. தான் சேகரித்து வைத்திருக்கும் எல்லாப் பொருள்களையும் அதற்குக் காட்டுகிறது. அப்படித் தான் எடுத்து வைத்த ஒரு குட்டிச் செடியையும் WALL-E ஈவாவுக்குக் காட்டுகிறது. அவ்வளவு தான் ஈவா அதைத் உடனடியாகப் பறித்து தன் உடலுக்குள் வைத்துப் பூட்டிவிட்டு அந்த இடத்திலேயே தியானம் செய்வது போல் நின்றுவிடுகிறது. அசையவே இல்லை. WALL-Eக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஈவா ஈவா' என்று கூப்பிட்டுப் பார்க்கிறது. ஈவாவின் உடலில் ஒரு பச்சைவிளக்கு மட்டும் எரிந்து கொண்டிருக்கிறது.

திடீரென ஜடமாகிவிட்ட ஈவாவை WALL-E வெயில், புயலிலிருந்து பாதுகாக்கிறது. சிலநாட்களில் ஈவாவைத் தேடி அதை விட்டுச்சென்ற ராக்கெட் வந்து அதை அழைத்துச் செல்கிறது. ஈவாவைப் பிரிய மனமில்லாத WALL-E ராக்கெட்டில் புட்போர்ட் அடித்துத் தொங்கிக் கொண்டு செல்கிறது.

அந்த ராக்கெட் ஒரு கோள் மாதிரி இருக்கும் விண் கலத்தின் உள்ளே செல்கிறது. அங்கே தான் மனிதர்கள் இருக்கிறார்கள் அதாவது பூமியிலிருந்து சென்றவர்கள். அவர்கள் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் இல்லை பரிணாம வளர்ச்சியில் எலும்புகள் எல்லாம் தேய்ந்து ரப்பர் ட்யூப் போன்ற கை கால்களை உடையவர்கள் (பரிணாமத் தேய்ச்சி) . நடப்பதைக் கூட மறந்து போன எப்பவும் நாற்காலியில் அமர்ந்து உயிர் வாழ்பவர்கள். அவர்கள் உலகமே மிக மிக நவீன மானது. எல்லா வேலைகளுக்கும் ரோபோக்கள்தான்.

அந்த விண்கலத்திற்கும் ஒரு கேப்டன் உண்டு. அவருக்கு இடப்பட்டிருக்கும் பணி பூமிக்கு ரோபோக்களை அனுப்பி அங்கே மனிதர்கள் உயிர்வாழ சூழ்நிலை திரும்பிவிட்டதா என அறிவது. தலைமுறை தலைமுறையாக ரோபோக்கள் அனுப்பியும் இதுவரை பாசிட்டிவ் ரிசல்ட் இல்லை. ஆனால் இந்த முறை ஈவா அதைச் செய்திருக்கிறது. அதாவது பூமியிலிருந்து ஒரு தாவரத்தை அது எடுத்து வந்திருக்கிறது. எப்போது பூமியில் மனிதன் உயிர் வாழும் சூழ்நிலை வருகிறதோ அப்போது இவர்கள் எல்லோரும் பூமிக்குத் திரும்பிவிடவேண்டும் என்பது தான் கேப்டனுக்கு இடப்பட்டிருக்கும் கட்டளை.

தாவரங்கள் இருந்தால் கண்டிப்பாக மனிதர்கள் உயிர் வாழமுடியும் எனவே பூமிக்குத் திரும்பலாம் எனக் கட்டளை பிறப்பிக்க எண்ணும் வேளையில் அந்த விண் கலத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு பெரிய ரோபோட் அதைத் தடுக்கிறது. அதை எப்படி கேப்டன், ஈவா, WALL-E சேர்ந்து முறியடித்தார்கள் என்பது தான் மிச்சக்கதை. (இப்பவே முக்கால்வாசி சொல்லியாச்சு, மிச்சத்தை DVDயில் பாருங்க)

படம் முழுவதும் காட்சிகள் நகைச்சுவையாக உள்ளன். WALL-E யின் அப்பாவித்தனமான செயல்கள் கலக்கல். ராக்கெட் பூமியை விட்டு வெளியே செல்லும் போது செயற்கைக்கோள் குப்பைகளை உடைத்துக் கொண்டு செல்லும் காட்சி சூப்பர். வால்-ஈ விண்கலம் முழுவதும் குப்பையாக்கி விட அதைத் துடைத்துக் கொண்டே துரத்தும் ரோபோ காட்சிகள் நல்ல நகைச்சுவை. இவையனைத்தும் ஒரு கார்ட்டூன் படத்தைப் பார்க்கின்றோம் என்பதை மறக்கடித்து விடுகின்றது. .

டிஸ்னி தயாரிப்பில் இவ்வருட நடுப்பகுதியில் வெளிவந்த இந்தப்படம் குழந்தைகளை மிகவும் கவரும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

- *பொன்வண்டு*

## சினித்துளி

### 'சிங்கம்' சூர்யா, 'சிறுத்தை' கார்த்தி



கட்சி சின்னம்போல தாங்கள் நடிக்கும் படத் தலைப்புகளில் கவனத்தை ஈர்க்கின்றனர் சூர்யாவும், கார்த்தியும்.ஒரே வீட்டில் இரண்டு பெரிய ஹீரோக்கள் என ஊர், கண் படுமளவிற்கு வெற்றி நாயகர்களாக வலம் வருகின்றனர். சூர்யாவும் கார்த்தியும். பல நிகழ்ச்சிகளில் இருவரும் ஒன்றாகவே வருகின்றனர். இப்படி ஒற்றுமையின் உதாரண புருஷர்களாக இருக்கும் இருவரும் தங்கள் படத்தின் தலைப்பு விஷயத்திலும் ஒரே மாதிரியாகத்தான் யோசிக்கிறார்கள்.

ஹரி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படத்திற்கு 'சிங்கம்' என பெயரிடப்பட்டுள்ளது. இதுபோல் கார்த்தி இன்னோர் படத்தில் இருவேடங்களில் நடிக்கிறார்.இப்படத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் என மண்டையைபிய்த்துக் கொண்டிருந்தவர்கள் கடைசியாக.'சிறுத்தை' என பெயரிட்டுள்ளனர். 'சிங்கம்', 'சிறுத்தை' இரண்டுமே ஜெயிக்குமா ?

### விஜயசாந்தி இயக்குகிறார் !



இன்றைய தேதிவரை லேடி சூப்பர் ஸ்டார் என்றால் விஜயசாந்தியை தவிர வேறு ஆளில்லை. ஆந்திராவையும், தமிழகத்தையும் மாறி மாறி கலக்கிய இந்த ஆக்ஷன் புயல், அரசியல் அது இதுவென்று கொஞ்சகாலமாய் கலையுலகில் கவனம் செலுத்தவில்லை. இனிமே சினிமாவில் நீங்க அவ்வளவுதான் என யார் உசுப்பேற்றிவிட்டதோ தெரியவில்லை மீண்டும் சினிமாவில் விஸ்வரூபம் எடுக்கும் ஆசை வந்துவிட்டதாம் விஜயசாந்திக்கு. எனவே அவசர அவசரமாக ஒரு கதையை எழுதி முடித்துள்ள விஜயசாந்தி, அந்த கதையை தானே இயக்கி, நடித்து தயாரிக்கவும் முடிவெடுத்துள்ளாராம்.

### அஜீத்தின் அடுத்த படம் 'அசல்'!




நடிகர் அஜீத்துக்கும், இயக்குனர் சரணுக்கும் எப்போதும் நல்ல ராசி தான். இருவரது கூட்டணியில் வந்த 'அமர்க்களம்', 'அட்டகாசம்' படங்கள் வெற்றியடைந்தன. அந்த வரிசையில், சிவாஜி புரொடக்சன் தயாரிக்கும் அடுத்த படத்தில் அஜீத், இயக்குனர் சரணுடன் மீண்டும் கைகோர்த்துள்ளார். படத்துக்கு 'அ' என்ற எழுத்து தொடங்கும் வகையில் 'அசல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. முதலில் படத்தை கௌதம் இயக்குவதாக திட்டம். ஆனால், கதை சொல்லாமல் கௌதம் நாட்களை கடத்தியதால் அவரை படத்திலிருந்து நீக்கியது. சிவாஜி புரொடக்சன். இப்போது அந்த இடத்தில் சரண்.

### குழப்பத்தில் மாயாண்டி குடும்பத்தார் !



பத்து இயக்குனர்களை வைத்து இராசு மதுரவன் இயக்கும் படம் மாயாண்டி குடும்பத்தார். இதில் மாயாண்டியாக மணிவண்ணன் நடிக்கிறார். அவரது மகன்களில் ஒருவராக சீமான் நடிப்பதாக இருந்தது. இதற்காக வத்தலகுண்டு வந்தவரைத்தான் காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். மாயாண்டி குடும்பத்தாரை பொறுத்தவரை, சீமானை மனதில் வைத்து பல காட்சிகளை எழுதியிருக்கிறார் இயக்குனர் இராசு மதுரவன். சீமான் நடித்தால் மட்டுமே பேசப்படும் காட்சிகளாம் அவை. சீமானின் திடீர் கைது காரணமாக இயக்குனரின் திட்டத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டுள்ளது. சீமானுக்காக காத்திருப்பதா? வேறு நடிகரை சீமான் கதாபாத்திரத்தில் நடிக்க வைப்பதா? இரண்டுமே சிக்கல்தான் என்றாலும் காத்திருக்கும் முடிவையே எடுத்திருக்கிறது மாயாண்டி குடும்பத்தார் குழுவினர்.


SRI ANJANEYA ASTROLOGY CENTRE



ஆஞ்சனேய ஜோதிடம்

ஜோதிடர் : வெங்கடேஸ் சாஸ்திரிகள்
Astro-Palmist

KALAI VANEE VIDEO
307, Mitcham Road, Tooting, London,
SW17 9JQ (Near Tooting Police Station)
Opening Hours: 9.00 a.m – 8.00p.m all 7 days.

உலகத்தில் உள்ள சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை, தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார்.இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை.ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுவார்.கணவன் மனைவி சண்டை, பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை, தொழில், உத்தியோகம், விசா பிரச்சனைகள், இப்படி பல்வேறான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார்.செய்வினை, பில்லி, சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் , பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் ஓட்டப்படும். கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகிய வற்றிற்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் எப்போதும் கொழிக்க உதவும் லட்சுமி பூஜை செய்து தருகிறோம்.



Would you like your future ?

We resolves life's problems like love, Family, Marriage, business , money & health,Work,Court,Case and any other Problems

SPOKEN LANGUAGES: TAMIL,HINDI, & ENGLISH.
Your Secret matters will be maintain confidently

Contact :- Mob : 07507 752 696 / 07507 760 448

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்

# HYPERTECH
SHOPFITTERS

எமது கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்கள்

## ELECTRIC WIRING
## PLUMBING &
## CENTRAL HEATING
DOMESTIC AND
COMMERCIAL



## REFRIGERATION







INSTALLATION
MAINTENANCE
REPAIRS
& PARTS

## CCTV
ACCESS CONTROL &
NETWORKING
(DOMESTIC/COMMERCIAL)






FINANCE
OPTIONS AVAILABLE

CONTACT
DETAILS:

T: 0845 006 1166
M:078 3366 7905
F: 020 8711 3145

TECH.CITITECH@GMAIL.COM

60 TORRINGTON WAY,
MORDEN, SURREY SM4 5QA


என்எஸ்ஆர்
வாடிக்கையாளர்களுக்கு
எமது
நத்தார், புதுவருட
நல்வாழ்த்துக்கள்
X-MAS
PAR
BOILED
ENESAR
N.S.R.
என்எஸ்ஆர்
JAFFNA SPECIAL
Roasted
CURRY
POWDER
NSR
என்எஸ்ஆர்
நல்லெண்ணெய்
For Tasty & Healthy
NSR
GINGELLY OIL
CINNAMON
Tel:
+44(0) 7958 903 748
+44(0) 20 8686 0873
Email:
info@nsrstore.com
நியாய விலை நிறைவான தரம்.
http://nsrstore.com